மைக்கேல் காலின்ஸ்

ப. ராமஸ்வாமி

தமிழ்ச் சுடர் நிலையம்
சென்னை—5

மைக்கேல் காலின்ஸ்

[1890–1922]

ஈமன் டி'வேலரா

ஆர்தர் கிரிபித்

வில்லியம் காஸ்கிரேவ்

டப்ளின் நகரத்துப் பிரதான வீதி

[அயர்லாந்தின் விடுதலைக்காக 19-ம் நூற்றாண்டில் அரும் பாடுபட்ட ஓகானல் என்பவருடைய சிலையும், அவர் பெயரால் விளங்கும் பாலமும் படத்தின் முன்னணியில் இருக்கின்றன.]

'நாமும் ஆங்கிலேயரும் அண்டை வீட்டுக்காரர்கள். ஆயினும், அவர்கள் நமது வீட்டில் குடி புக ஒருநாளும் சம்மதிக்க மாட்டோம்.

'இந்தியா, எகிப்து, அல்லது எந்த நாடாயினும் சரி—ஒரு சமூகத்தை அடக்கியாள வேண்டுமானல், அந்தச் சமூகத்தில் சிலர் அந்நியனுக்கு உதவிசெய்து தம் சகோதரர்களை அடிமைப்படுத்த முன்வந்தால்தான் சாத்தியமாகும்.

'அயர்லாந்தின் நிலைமையைத் தெரிந்து கொள்ள விரும்புகிறவர்கள், அது பிரிட்டிஷ் தீவுகளில் ஒன்றன்று என்பதை முதலாவது அறிந்துகொள்ள வேண்டும்.

'ஆங்கிலேயர் எவனைக் கலகக்காரன் என்று அழைக்கின்றனரோ அவனே உண்மையான ஐரிஷ்காரன்.

'அயர்லாந்துக்குப் பூரண சுதந்திரம் வேண்டும் என்று சொல்லாதவர்கள் ஆங்கில அதிகாரிகளே.

'பிரிட்டிஷார் நம்மைத் தங்கள் சிறைகளிலே தள்ளட்டும்; நமது உள்ளத்தை மட்டும் அவர்களால் அடைக்க முடியாது. நமது மானிட உள்ளம் எழுந்து நின்று, டெரென்ஸ் மாக்ஸ்வினி கர்ஜித்தது போல், "முடியாது! நாங்கள் அடிமைப் பிரஜைகளாக இருக்க முடியாது!" என்று பிரிட்டிஷ் பிரதமமந்திரி லாயிட் ஜார்ஜிடத்தில் சொல்லும்.'

—டி'வேலரா

பொருளடக்கம்

1.	இளமைப் பருவம்	பக்கம்	17
2.	போர்க் கோலம்	...	26
3.	ஈஸ்ட்டர் கலகம்	...	37
4.	சிறைக்கோட்டம்	...	51
5.	கட்டாய ராணுவச் சட்டம்	...	65
6.	டெயில் ஐரான்	...	78
7.	மீட்சிப் படலம்	...	90
8.	முன்னேற்பாடுகள்	...	115
9.	போர் முழக்கம்	...	129
10.	ஆட்சியின் வீழ்ச்சி	...	149
11.	'கறுப்புக் கபிலர்'	...	173
12.	பழிக்குப் பழி	...	202
13.	சமாதான முயற்சி	...	220
14.	போர் நிறுத்தம்	...	233
15.	உடன்படிக்கை	...	246
16.	சோதரர் பூசல்	...	259
17.	அழியாச் சுடர்	...	276

முன்னுரை

அயர்லாந்தின் விடுதலைப் போரில் மைக்கேல் காலின்ஸின் வீர சரித்திரம் விசேஷமான ஒரு தனிப் பகுதி. கடைசி முறையாக இங்கிலாந்துடன் போர் தொடுத்து வெற்றி பெற்று, அயர்லாந்தில் சுயராஜ்ய ஸ்தாபனம் செய்த தலைவர்களில் முக்கியமானவர் மூவர். இவர்கள் ஆர்தர் கிரிபித், ஈமன் டி'வேலரா, மைக்கேல் காலின்ஸ். கிரிபித் சுதந்திரப் போரின் ஹிருதயம், டி'வேலரா அதன் மூளை, காலின்ஸ் அதன் புஜங்கள் என்று சொல்லலாம்.

கிரிபித் (1872—1922) வயது, அறிவு, அநுபவங்களில் மற்ற இருவரைக் காட்டிலும் முதிர்ந்தவர். வாழ்நாள் முழுதும் அயர்லாந்தின் விடுதலைக்காகவும், மறுமலர்ச்சிக்காகவும் அவர் உழைத்து வந்தார். அவர் பத்திரிகைகளில் எழுதிய வீர வசனங்களும், சரித்திரக் காட்சிகளும், அரசியல் ஆராய்ச்சிகளுமே பல்லாயிரம் வீரர்களைச் சிருஷ்டித்துவிட்டன; உறங்கிக் கிடந்த ஜனங்களை உஷாராக்கிவிட்டன. பல வருஷங்களாக அரும்பாடு பட்டு அவர் நிறுவிய அடிப்படையைப் பயன்படுத்திக் கொண்டு ஐரிஷ் வீரர்கள் போராடுவது எளிதாயிருந்தது. தாய்நாடு சுதந்திரம் அடையும்வரை அவர் உயிரோடிருந்தார்.

டி'வேலரா (1882) அயர்லாந்தின் சுதந்திரப் போரில் தாமே துப்பாக்கி ஏந்தித் தேசீயத் தொண்டர் படை ஒன்றுக்குத் தலைமை தாங்கி நின்று போராடிய தீரர். 1916–ம் ஆண்டு, மற்றும் பல தளகர்த்தர்கள் அரசாங்கத்திடம் சரணடைந்த காலத்தில் கட்சிக் கட்டுப்பாட்டை மதித்துக் கடைசியாகச் சரணடைந்த தளகர்த்தர் அவரே. அவரைப் பிடிக்க முடியாமல் திண்டாடிய அரசாங்கம், அவர் தாமாக வந்து ஆஜரானதும், அவருக்கு மரண தண்டனை விதித்தது. பின்னால் இத்தண்டனை ஜன்ம தண்டனையாக்கப்பட்டது. 1917-ல் ஒரு சமாதான உடன்படிக்கை ஏற்பட்டதால், அவர் சிறையிலிருந்து விடுதலை அடைந்தார். அதன் பின்பும், வெற்றி காணும்வரை அவர் இடைவிடாமல் உழைத்து வந்தார்; மீண்டும் மீண்டும் சிறை புகுந்தார். தீர்க்கமான யோசனை, எடுத்த கொள்கையில் உடும்புப் பிடி போன்ற உறுதியான பிடி,

வீரம், வினைத்திட்பம் ஆகியவை அவருடைய விசேஷ குணங்கள். அவருடைய உண்மையான பெருமைகளையெல்லாம் அயர்லாந்து விடுதலை அடைந்த பிறகுதான் உலகம் தெரிந்துகொள்ள முடிந்தது. இன்றும் அவரே அயர்லாந்துக்கும் அதன் அரசாங்கத்திற்கும் தலைவராக விளங்குகிறார்.

காலின்ஸ் (1890-1922) கிரிபித்தைப் போன்ற தத்துவஞானி அல்லன்; டி'வேலராவைப் போன்ற படிப்பாளியும் அல்லன். அவன் கர்ம வீரன், மகா புத்திசாலி. கிரிபித்தைப் போல் நெடு நாள் வாழ்ந்து சுயராஜ்ய மாளிகைக்கு அவன் அஸ்திவாரம் போடவில்லை; டி'வேலராவைப் போல் பிற்காலச் சீரமைப்புகளுக்குத் தலைமை வகித்து நடத்தவுமில்லை. ஆனால், 1916 முதல் கொந்தளித்துப் பெருகி வந்த சுதந்திரப் புரட்சி வெள்ளத்தில் நடுநாயகமாய் நின்றவன் அவன்தான். அதனால்தான் அவனைப் பிடித்துக் கொடுப்பவருக்குப் பதினாயிரம் பவுன் பரிசளிப்பதாக அரசாங்கம் விளம்பரம் செய்தது!

அந்தக் காலத்திலே அயர்லாந்தின் நிலைமை மிகப் பயங்கரமாயிருந்தது. நகரங்களில் எல்லாம் ஊரடங்குச் சட்டம்; பெரிய கட்டிடங்களை எல்லாம் அரசாங்கப் படைகள் எரித்து வந்தன; மூக்கியமான தேசியத் தலைவர்களை ரகசியமாகக் கொலை செய்து வந்தன; தொண்டர்களும் மற்ற இளைஞர்களும் சிறைகளிலும் போலீஸ் தாணக்களிலும் சித்திரவதை செய்யப்பட்டனர். எங்கும் பயங்கர ஆட்சி நிலவி வந்தது. அப்போது ஐம்பதினாயிரம் பிரிட்டிஷ் துருப்புகள் அயர்லாந்தில் இருந்தன. அவைகளுக்கு உதவியாக, மேற்கொண்டு நாற்பதினாயிரம் துருப்புகளும் சேர்க்கப்பட்டிருந்தன. புதிதாக மேலும் ஒரு லட்சம் விசேஷத் துருப்புகள் தேவை என்று சர்ச்சில் துரை கூறிவந்தார்! இத்தனை விஷயங்களையும் ஒன்று சேர்த்துப் பார்த்தால், அயர்லாந்தில் நடந்தது பிரிட்டிஷ் **ஆட்சியா,** அல்லது பிரிட்டிஷ் **யுத்தமா** என்பது தெளிவாகத் தெரிந்துவிடும். ஆட்சி என்ற பெயரால், உள்நாட்டில் ஏற்பட்ட குழப்பத்தை அடக்குவதாகக் காரணம் சொல்லி, வெளி உலகத்தை ஏய்த்துக்கொண்டு, பிரிட்டன் அயர்லாந்தின்மீது ஒரு கோர யுத்தத்தையே தொடுத்து நடத்தி வந்தது. 1939-ல் ஹிட்லர் போலந்தின்மீது பாய்ந்ததற்கும் இதற்கும் அதிக வித்தியாசம் இல்லை. ஆனால், 'பல நூற்றாண்டுகளாக அயர்லாந்தில் இப்படித்தானே செய்து வந்தேன்!' என்று பிரிட்டன் ஒரு சமாதானம் சொல்லலாம். உண்மைதான்: அயர்லாந்தில் மட்டுமா? இந்தியாவிலும், எகிப்திலும், தனக்கு ஒண்டுவதற்கு இடம் கிடைத்த ஒவ்வொரு நாட்டிலுமே, பிரிட்டன் இப்படித்தானே செய்து வந்தது!

அந்தக் கோர யுத்தத்தையும் எதிர்த்து நின்று சமாளித்தனர் ஐரிஷ் தொண்டர்கள். போருக்குப் போர், கொலைக்குக் கொலை, நெருப்புக்கு நெருப்பு என்று, சுடச் சுட உடனுக்குடன் பதில் கொடுத்தார்கள் அந்த வீர வாலிபர்கள். அரசாங்கமே உருக்குலைந்து விழும்படி சிறு சிறு கூட்டங்களாகப் பிரிந்து சென்று தாக்கினார்கள். ஒற்றர்களும் போலீஸ்காரரும், உடைகள் அணிந்து ஒய்யாரமாக நடந்துவந்தது மாறி, 'காட்டிக் கொடுத்த துரோகிகள்' என்ற அட்டைகள் கழுத்திலே தொங்க, ரஸ்தாக்களில் பிணங்களாகக் குவிந்து கிடந்தார்கள். தொண்டர்கள் அவர்களைப் படையெடுத்து வந்த பகைவர்களாகவே கருதினார்கள். புரட்சிக் காலம் முழுதும் தொண்டர்களுக்குத் தலைமை தாங்கி வெற்றியுடன் நடத்தி வந்தவன் காலின்ஸ். அதனால்தான் அவன் சரித்திரம் துப்பறியும் நாவலைப் போல் வியப்பும் திகைப்பும் நிறைந்திருக்கிறது. காலின்ஸ், டிவேலரா, கிரிபித் போன்ற தலைவர்களும், பல்லாயிரம் தொண்டர்களும், பொது மக்களும் இடைவிடாது செய்த போராட்டத்தினால், 1921-ல் அயர்லாந்து விடுதலை பெற்றது.

ஆதியில் இங்கிலாந்து அயர்லாந்தின்மீது முதன்முதல் படையெடுத்தது 1172-ல்; அயர்லாந்துக்கு விடுதலை அளித்து விலகிக் கொண்டது 1921-ல். 1921-ம் வருடம், டிசம்பர் 6உ காலையில்தான் 'ஆங்கில-ஐரிஷ் ஒப்பந்தம்' பூர்த்தியாயிற்று. அதன்படி இங்கிலாந்து அயர்லாந்தை விட்டு விலகும்போது, அரசாங்கத்தைக் காலின்ஸின் கையிலேயே ஒப்படைக்க நேர்ந்தது. கிரிபித்தின் மரணத்திற்குப் பின், காலின்ஸே அரசாங்கத்திற்கும் ஐரிஷ் பட்டாளத்திற்கும் தலைவனானான்.

வாழ்விலும் வீரனாய், சாவிலும் வீரனாய் விளங்கிய காலின்ஸின் வரலாற்றை அவன் தோழரான **பீஸ்லேய்** எழுதி வெளியிட்டிருக்கிறார். அந்நூலை ஆதாரமாய்க் கொண்டே நான் இதை எழுதியுள்ளேன். அது மிகப் பெரிதாய், இரண்டு பாகமா யிருப்பதால், கூடியவரை முக்கிய சம்பவங்கள் விட்டுப் போகாமல் இங்கே சுருக்கமாக எழுதியிருக்கிறேன்.

1916-முதல் 1921-வரை நடந்த ஐரிஷ் சுதந்திரப் புரட்சியையும், அந்தப் புரட்சியை நடத்திய காலின்ஸ் போன்ற தலைவர்களின் வரலாற்றையும் நன்கு உணர்ந்து கொள்வதற்கு, அயர்லாந்தின் பூர்வ சரித்திரப் போக்கையும், அந்நாட்டுக்கும் இங்கிலாந்துக்கும் இருந்துவந்த தொடர்பையும் கொஞ்சமாவது

தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். பழைய சரித்திரத்தைப் பகைப்புலமாக வைத்துக்கொண்டே இந்தப் புரட்சியை நாம் காணவேண்டும்.

ஐரிஷ் தேசபக்தர்கள் ஐந்து பேர்கள் ஓரிடத்தில் கூடிப் பேசிக் கொண்டிருந்தால், அந்த இடத்தில் அவர்கள் பல பழைய வீரர்கள், பெரியார்களைப் பற்றிப் பிரஸ்தாபிக்கக் கேட்கலாம். ஒருவர், '**ஓ'கானல்** மாதிரி உழைக்க வேண்டும்!' என்பார். '**வுல்ப் டோன்** இரண்டு காதல்கள் கொண்டிருந்தார்; ஒன்று அருமை மனைவியிடத்தில், மற்றது அருமை அயர்லாந்திடத்தில்!' என்பார் மற்றொருவர். '**ஓ'நீல்! ஓ'நீல்!**' என்பார் மூன்றாமவர். '**தாமஸ் டேவிஸு**க்குப் பின்பு அவரைப் போன்ற மகாவீரர்களைக் காணவில்லையே!' என்பார் நான்காமவர். ஐந்தாமவர், **பார்னலை**ப் பற்றியோ, **டெரென்ஸ் மாக்ஸ்வினி**யைப்பற்றியோ, **டி வேலரா, கிரிபித்,** அல்லது **காலின்ஸை**ப் பற்றியோ பேசுவார். வீடு வாசல், கடைச் சரக்குகள், நிலவரி, உலக நிலைமை ஆகிய எதைப்பற்றி அவர்கள் பேசுவதாயினும், இடையிடையே மேலே கூறிய பெரிய மனிதர்களின் பெயர்கள் அடிக்கடி கூறப்படுவது நிச்சயம். அவ்வளவு தூரம் அந்தப் பெரியார்களின் வாழ்க்கையும் செயல்களும் நவீன அயர்லாந்தின் சரித்திரத்தில் ஊடும் பாவுமாய்ப் பின்னியிருக்கின்றன. அயர்லாந்தின் சரித்திரத்தில் அவர்கள் தோன்றிய கட்டங்கள் முக்கியமானவை.

* * *

அயர்லாந்து பசுமையான சிறு தீவு; ஜாவாவைவிடச் சிறியது. அதன் நிலப்பரப்பு சுமார் இரண்டு கோடி ஏக்கர்; ஜனத்தொகை அரைக் கோடிகூட இல்லை—சுமார் 45-லட்சம்தான். இங்கிலாந்துக்கு மேற்கே அது மிகவும் சமீபத்தில் இருக்கிறது. அதன் ஸ்தானமே அதற்கு உலகத்தில் ஒரு முக்கியத்தை அளிப்பதோடு, அதன் சரித்திரத்தையும் ஓரளவு உருவாக்கியிருக்கிறது. கிழக்கே ஐரோப்பா கண்டத்துடனும், மேற்கே புது உலகமான அமெரிக்கா கண்டத்துடனும் அது தொடர்பு கொண்டிருக்கிறது. ஐரிஷ் ஜனங்களில் பலர் அமெரிக்காவில் குடியேறியும் வசித்து வருகிறார்கள். ஐரோப்பிய நாகரிகமும் அமெரிக்க நாகரிகமும் அயர்லாந்தைப் பல வழிகளிலும் பாதித்து வருகின்றன. அதே சமயத்தில், அது ஒதுக்கமாக இருப்பதால், இரண்டு கண்டங்களின் நிகழ்ச்சிகளிலிருந்தும் ஓரளவு விலகியிருக்கவும் வசதி ஏற்படுகிறது.

ஐரிஷ் மக்கள் பெரும்பாலும் விவசாயிகள். வடபகுதியான அல்ஸ்டர் மாகாணத்தில் **பெல்பாஸ்ட்** நகரில் மட்டுமே கப்பல் கட்டும் தொழிலை மேற்கொண்ட பெரிய தொழிற்சாலைகள் உண்டு. தெற்கே, அயர்லாந்தின் தலைநகரான **டப்ளி**னில் மட்டுமே சில தொழிற்சாலைகள் உண்டு. மற்றப்படி நாடு முழுதும் விவசாயமும் குடிசைத் தொழில்களுமே நிறைந்திருக்கின்றன. இவைகள் எல்லா மக்களுக்கும் போதிய ஊதியம் அளிக்க முடியாததாலும், பெரிய தொழிற்சாலைகள் இல்லாததாலும் ஜனங்கள் நாளடைவில் வெளிநாடுகளில் குடியேற விரும்புவது இயற்கை. வட அயர்லாந்தில் உள்ளவர்கள் இருக்கிற தொழிற்சாலைகளில் புகுந்து வேலை பார்த்துக் கொள்கின்றனர்; தென் பகுதியிலுள்ளவர்களே அதிகமாக அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் குடியேறியுள்ளனர்.

உலகத்தின் கலைச் செல்வத்திலும் ஐரிஷ் மக்கள் போதிய அளவு பங்கு கொண்டுள்ளனர். **கோல்ட்ஸ்மித், டீன் ஸ்விப்ட், ஷெரிடன், ஆஸ்கார் ஓயில்ட், ஸ்டீபன்ஸ்** போன்ற ஐரிஷ் ஆசிரியர்களும் கவிஞர்களும் ஆங்கிலத்தில் எழுதிப் பெரும் புகழ் பெற்றவர்கள். 'ஆசியாவின் ஆஸ்தான கவிஞர்' என்று உலகம் புகழும் நம் கவிஞர் ரவீந்திரநாத் டாகுரின் நண்பரான **ஈட்ஸ்** (1865—1939) என்ற ஐரிஷ் தேசியக் கவிஞர் ஏராளமான கவிகள் எழுதியிருக்கிறார். நம் கவிஞரின் '**கீதாஞ்சலி**'யை ஆங்கிலத்தில் படித்து அநுபவித்து, அதை வெளியிடுவதற்கு அவரே காரணஸ்தரா யிருந்தார் என்பதும் இங்கே குறிப்பிடத் தக்கது. ஐரோப்பாவும் அமெரிக்காவும் டாகுரின் பெருமையை அறிவதற்கு முன்பே அவர் தெரிந்துகொண்டுவிட்டார். ஆங்கில மொழியில் நவீன எழுத்தாளராகச் சிறந்து விளங்கிய **ஜேம்ஸ் ஜாயிஸ**ும் (1882-1941), சர்வதேசப் புகழ்பெற்று விளங்கும் நாடக ஆசிரியரான **பெர்னர்ட் ஷா**வும், 'பஞ்சம்,' 'நிலம்' முதலிய பிரசித்தமான நாவல்களும் பல கதைகளும் எழுதியுள்ள **லியாம் ஓ'பிளாஹர்ட்டி**யும் அயர்லாந்தின் புதல்வர்கள். மேலும், இசைவாணர், விஞ்ஞானிகள், சைத்திரிகர் முதலிய கலைவாணர் பலருக்கும் அந்நாட்டில் குறைவில்லை.

* * *

அயர்லாந்தின் பூர்வ சரித்திரத்தை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். முதலாவது மிகப் புராதன காலம், அதாவது கிறிஸ்தவ மதம் அங்கு பரவுவதற்கு முன்னால் வீர காவியங்களும் போர்வீரர்களைப் பற்றிய பரணிகளும் ஏற்பட்டிருந்த

காலம்; இரண்டாவது கிறிஸ்தவ மதம் தீவிரமாய்ப் பரவிய 5-முதல் 9-வது நூற்றாண்டுவரை; மூன்றாவது காலம் இங்கிலாந்தின் நார்மன் மன்னர்கள் அயர்லாந்துமீது படையெடுத்து ஆதிக்கம் செலுத்திய 12-முதல் 14-ம் நூற்றாண்டுவரை. இவற்றில் மூன்றாவது பிரிவில், ஆங்கில நாட்டு நார்மன் வமிசத்தார்கள் அயர்லாந்தை ஜயித்தார்களே அன்றி, 'அந்நியர்களாக விலகியிருந்து அதைக் கசக்கிப் பிழியவில்லை. நார்மன் மக்களில் பலரும் அங்கு குடியேறி, நாளடைவில் ஐரிஷ் ஜனங்களின் நடை, உடை, பாவனைகளை மேற்கொண்டு, அவர்களோடு இரண்டறக் கலந்துவிட்டதால், ஜயித்தவர்—தோற்றவர் என்ற பாகுபாடு நீடித்திருக்கவில்லை. மேலும், இங்கிலாந்திலேயே இருந்துகொண்டு, நார்மன் மன்னர்கள் அயர்லாந்தின் ஆட்சியை இடைவிடாது கவனித்துவரவும் முடியவில்லை. இதனால், அயர்லாந்து சுதந்திரம் இல்லாமலும், பூரணமான அடிமைப் படுகுழியில் ஆழ்ந்துவிடாமலும், சொந்தமாக வல்லமை மிகுந்த மத்திய அரசாங்கம் ஒன்றை அமைத்துக்கொள்ள முடியாமலும், திரிசங்கு நிலையில் இருந்து வந்தது.

நார்மன் மன்னர்களுக்குப் பின்னால் வந்த ட்யூடர் மன்னர்கள் 1494-95 ல் அயர்லாந்தை மறுபடி பூரணமாக ஜயித்து ஆட்சி புரிய ஆரம்பித்தார்கள். 1494-ம் வருஷக் கடைசியில் அயர்லாந்தின் தலைநகரான டப்ளினில் ஒரு 'பொம்மை'ப் பார்லிமென்டு அமைக்கப்பட்டது. இங்கிலாந்தில் அதற்கு முந்திய சமீபகாலத்தில் இயற்றப்பட்ட சட்டங்கள் எல்லாம் அயர்லாந்திலும் அமலில் இருக்கும் என்றும், ஆங்கில மன்னரும் அவரது பிரிவி கவுன்சிலும் அநுமதிக்காத எந்தச் சட்டத்தையும் நிறைவேற்ற டப்ளின் பார்லிமென்டுக்கு அதிகாரம் கிடையாது என்றும் அந்தப் பார்லிமென்டில் சட்டங்கள் செய்யப்பட்டன. அதாவது, ஆங்கில அதிகாரிகள், இச்சட்டங்களைத் தயாரித்து, டப்ளின் பார்லிமென்டு என்ற போலிச் சட்டசபை இவைகளை ஏற்றுக் கொள்ளும்படி செய்தார்கள்! 'ஐரிஷ் பார்லிமென்டு' என்ற பெயரால், அந்நாட்டின் மீது இவ்வாறு கடுமையான அடிமை விலங்குகள் பூட்டப்பெற்றன. சுதந்திரம்—சொந்த அரசு—என்பது பெயரளவுகூட இல்லாமல், ஒரேயடியில் அழிக்கப்பட்டுவிட்டது. நாளடைவில் ஜனங்கள் அடிமைத்தனத்திலும், நீங்காத வறுமையிலும் ஆழ்ந்து போனார்கள். ஆனால், நார்மன் வமிசத்தார் சிலரும், பெரிய ஐரிஷ் மிராசுதார்கள் சிலரும், 'பிரபுக்கள்' என்ற பட்டத்துடன், அடிமை ஜனங்களுக்குக் கொஞ்சம் மேம்பட்ட அடிமைகளாக

இருந்து கொண்டிருந்தார்கள். அவர்களுடைய அதிகாரமும் செல்வாக்கும் வளர்ந்து வந்தன.

பின்னல், எலிஜபெத் மகாராணியின் காலத்தில், அயர்லாந்தைச் சம்பூரணமாக அடிமைப்படுத்தும் வேலை பூர்த்தியாயிற்று. அக்காலத்தில் இரண்டு பெரிய ஐரிஷ் தலைவர்கள் தோன்றினார்கள். அவர்களில் ஒருவரான **ஜேம்ஸ் பிட்ஜ்மாரிஸ்** என்பவர் ஆங்கில ஆட்சியை எதிர்த்து, சரித்திரத்திலேயே முதல் முறையாகப் பல போராட்டங்களை நடத்தினர். அவர் காலத்தில்தான் ஐரிஷ் தேசிய இயக்கம் பிறந்தது என்று சொல்லலாம். ஜனங்களுக்குள் ஒற்றுமை வளர ஆரம்பித்ததும் அப்போதுதான். பிட்ஜ்மாரிஸ் காட்டிய வழியிலே இரண்டாவது தலைவரான **ஓ'நீல்** மேலும் பல போராட்டங்களுக்குத் தலைமை வகித்து நடத்தினர். ஆரம்பத்தில் அவர் ஆங்கில அரசாங்கத்திற்கு உதவியாயிருந்த போதிலும், பின்னல் ஐரிஷ் மக்களின் உணர்ச்சியையும் கொதிப்பையும் மதித்து, அவர்களின் தலைமைப் பதவியை ஏற்றுக் கொண்டார். அவர் மகா சூரராக விளங்கியதால், பற்பல போராட்டங்களில் ஆங்கிலத் தளகர்த்தர்களை ஒருவர்பின் ஒருவராக முறியடித்து வெற்றிகொள்ள முடிந்தது. அவருடைய வெற்றிகளால், ஜனங்கள் தேசிய வெறியும், சுதந்திர வேட்கையும் மிகுந்து விளங்கினார்கள். ஆனல், ஓ'நீலுடன் அடிமைத்தனத்தின் இழிவான சகாப்தம் முடிந்து போவதாயில்லை. கடைசி முறையாக, அவர் தென்னட்டில் இருந்த ஐரிஷ் பிரபுக்களின் உதவிக்காகச் சென்று ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடியதில், அவர் தோல்வியடைய நேர்ந்தது. வெற்றி கிடையாது என்று தெரிந்திருந்தும், ஆபத்து வேளையிலே அவர் தம் சகாக்களை ஆதரிக்க முன்வந்தார். 1603-ம் ஆ, கௌரவமான நிபந்தனைகளின் பேரில், அவர் எதிரிகளிடம் சரணடைந்தார். அப்பால், நான்கு வருஷம் கழிந்து, அவரும் அவருடைய சகாக்களும் இத்தாலியிலுள்ள ரோம் நகருக்குத் தப்பி ஓடிவிட்டனர். மேற்கொண்டு அவர்கள் தாய் நாட்டில் தங்கியிருந்திருந்தால், அதிகாரிகள் அவர்களைப் பல வகையில் துன்புறுத்தி ஆயுள் பரியந்தம் சிறைவைத்திருப்பார்கள்.

ஓ'நீல் ஓடிச் சென்றதே அரசாங்கத்திற்கு அதிர்ஷ்டமாயிற்று. தட்டிப் பேச ஆளில்லை. எதிர்த்துக் கிளம்பினல் என்ன நேரும் என்பதை அரசாங்கம் பலமுறை தன் தண்டப் பிரயோகங்களால் காட்டியிருந்தது. 'ஊர் இரண்டுபட்டால்தான் கூத்தாடிக்கு எளிது' என்றபடி அயர்லாந்தைப் பிளவுபடுத்தி

வைக்க அதுவே தக்க சமயம் என்று அதிகாரிகள் ஏற்பாடு செய்ய முன்வந்தனர். வடமாகாணமான அல்ஸ்டரில் தென்பகுதியிலுள்ள கத்தோலிக்கருக்கு எதிராக ஏராளமான பிராடெஸ்டாண்டு மதத்தினரைக் குடியேற்றிவைத்தனர். தோட்டங்களைப் பயிர் செய்வதற்காக ஏராளமான மூலதனத்துடன் பல ஆங்கில முதலாளிகளும் அங்கு வந்து சேர்ந்தார்கள். வடக்கும் தெற்கும் வம்பில் மாய்ந்து கொண்டிருக்க வேண்டும் என்று ஆங்கில ராஜதந்திரிகள் அக்காலத்திலிருந்தே ஏற்பாடு செய்ததுதான் அவர்கள் அந்த மரகதப் பசுந் தீவுக்கு இழைத்த மாபெருங் கொடுமையாகும்.

17-ம் நூற்றாண்டிலும் ஆங்கில ஆட்சியை எதிர்த்து இரு பெருங் கலகங்கள் ஏற்பட்டன. அவைகளில் ஜனங்கள் ஜாதி மத பேதமின்றிக் கலந்து கொண்டனர். இரத்தத்தை ஆறாய்ப் பெருக்கி அரசாங்கம் இக் கலகங்களை அடக்க வேண்டியிருந்தது. விடுதலை வெறிகொண்ட கத்தோலிக்கர்களை அடக்கி நசுக்குவதற்காகத் தனியாகக் கொடுஞ் சட்டங்கள் இயற்றப்பட்டன. ஜனங்கள் முதுகெலும்பு ஒடிந்து உணர்ச்சி மழுங்கித் தவிக்க ஆரம்பித்தார்கள்.

பின்னால் '**தேசாபிமானிகள் கட்சி**' ஒன்று தோன்றியது. அதன் வேலைகளின் மூலம் தேசத்திற்குச் சிறிதளவு சுதந்திரம் கிடைத்தது. 1782-ல் டப்ளின் பார்லிமெண்டுக்குக் கொஞ்சம் அதிகாரம் அளிக்கப்பட்டது. 1791-ல் பெல்பாஸ்ட் நகரில் '**ஐக்கிய ஐரிஷ்காரர் சங்கம்**' அமைக்கப்பெற்றது மிக முக்கியமான சம்பவமாகும். அச்சங்கம் ரகசியமாகப் புரட்சிக்கு வேலை செய்ய முன்வந்தது. அதன் மூலம் குடியரசுக் கொள்கை பிரசாரம் செய்யப் பெற்றது. அச்சங்கத்திற்கு **வுல்ப் டோன், பிட்ஜெரால்டு** என்ற தீரர்கள் தலைவர்களாயிருந்தார்கள். இவர்கள் பிரான்ஸ் தேசத்தின் உதவிபெற்று, அந்நாட்டுப் படைகளைக் கப்பலில் அழைத்துவந்து அரசாங்கத்தை எதிர்க்கச் செய்யவேண்டும் என்று மூன்று முறை பகீரதப் பிரயத்தனங்கள் செய்தார்கள். ஆனால், மூன்று முறையிலும் வெற்றி கிடைக்கவில்லை; எதிரிகள் உஷாராக இருந்துவிட்டார்கள். கடைசி முறையில், பிரான்ஸிலிருந்து திரும்பி ஐரிஷ் கடற்கரையில் ரகசியமாக வந்து இறங்கிய வுல்ப் டோன் அரசாங்கத்தின் கையில் சிக்கிவிட்டார். அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால், பிரிட்டிஷ் கயிறு தம் கழுத்தில் ஏறுவதற்கு முன்னதாக, அவர் சிறு கத்தியால் தம் கையாலேயே கழுத்தை அறுத்துக் கொண்டு

உயிர் துறந்தார். இந்தத் தேசபக்த வீரசிகாமணி ஏழை ஜனங்களைப் பற்றி, 'அளவில் பெரியராய், கௌரவத்தில் சிறந்தவராய், சொத்துப் பற்றற்றவராய் விளங்கும் மகாஜனங்கள்' என்று குறிப்பிடுவாராம். இன்றைக்கும் இந்த வாக்கியம் ஐரிஷ் மக்களிடையே வழங்கிவருகிறது.

பிரிட்டிஷ் அரசாங்கத்தார், தக்க சமயம் கிடைத்தது என்று, டப்ளின் பார்லிமெண்டு அங்கத்தினர்களுக்குப் பட்டங்கள், லஞ்சங்கள், பதவிகள், நிலங்கள் முதலியவை கொடுத்து அவர்களைக் கைக்குள் போட்டுக்கொண்டு, அந்தப் பார்லிமெண்டுக்கே சாவு மணி அடித்துவிட்டனர். அயர்லாந்தைப் பிரிட்டனோடு சேர்த்து ஒரே அரசாங்கத்தின் கீழ் இருக்கும்படி செய்துவிட்டனர். இது 1801-ம் ஆண்டு நடந்தது. இது முதல் அயர்லாந்து பிரிட்டிஷ் தீவுகளில் ஒரு தீவு என்றாகிவிட்டது. பிரிட்டிஷ் பார்லிமென்டே அயர்லாந்துக்கும் பார்லிமென்டாயிற்று. பிரிட்டிஷ் கொடியில் அயர்லாந்தின் சின்னமும் சேர்க்கப்பெற்று 'யூனியன் ஜாக்' என்ற பொதுக் கொடி இரண்டு நாடுகளிலும் பறக்க ஆரம்பித்தது. இந்த 'யூனியன் ஜாக்'கைப் பற்றித்தான் பிற்காலத்தில் **எட்வர்டு கார்ப்பெண்டர்** என்ற ஆங்கில ஞானி,

'கொடியே! நீ சென்ற இடமெல்லாம்
பஞ்சமும் உன்னைத் தொடர்ந்து வருகுதே!'

என்று பாடினார்.

'யூனியன் ஜாக்'கையும், இங்கிலாந்தோடு அயர்லாந்து 'யூனியன்'ஆகச் சேர்க்கப்பட்டதையும் எதிர்ப்பதற்காக **டேனியல் ஓ'கானல் (1775—1847)** என்ற தலைவர் கிளம்பி வந்தார். 1807—முதல் அவரே ஐரிஷ் மக்களின் அரும்பெருந் தலைவராக விளங்கினார். அவருடைய அறிவு, திறமை, ஊழியங்களைக் கவனித்தால், அவரை நமது லோகமான்ய திலகருக்கு ஒப்பிடலாம் என்று தோன்றுகிறது. 'கத்தோலிக் சங்கம்' என்ற சாதாரணமான ஒரு சங்கத்தின் மூலமாகவே அவர் தொண்டாற்றினார். வல்லவர் கையில் புல்லும் ஆயுதமாவது போல், அச்சங்கம் அவர் கருதிய காரியங்களை நிறைவேற்றி வந்தது. அவர் மிகுந்த ஆற்றலுடையவர், சட்ட நுணுக்கங்கள் தெரிந்தவர், கட்டுப்பாடும் தன்னம்பிக்கையும் உடையவர், பிரசங்க மாரி என்றால் மாரியாகவே பொழியக்கூடிய வாக்குவன்மை உள்ளவர், எல்லாவற்றிற்கும் மேலாகச் சிறந்த ராஜதந்திரி. அவரைப் போன்ற கிளர்ச்சிக்காரர்

உலகத்திலேயே தோன்றியதில்லை என்று ஐரிஷ் ஆசிரியர் ஒருவர் கூறுகிறார். பல வருஷ உழைப்பினால், கத்தோலிக்கரை நசுக்கி வந்த சட்டங்கள் ரத்தாகும்படி அவர் செய்து வைத்தார். பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு உள்ளேயும், வெளியே தேசத்திலும், அல்லும் பகலும் பிரசாரம் செய்து, அயர்லாந்தை இங்கிலாந்தோடு பிணித்த 'யூனியன்' முடிச்சை அறுத்துவிட வேண்டும் என்று அவர் மிகவும் முயன்றார். அக்காலத்தில் அயர்லாந்தில் நீடித்த பஞ்சம் தோன்றியதால், லட்சக்கணக்கான ஜனங்கள் மடியவும், லட்சக்கணக்கானவர் நாட்டை விட்டு வெளியேறவும் நேர்ந்தது. ஓ'கானல் தமது மரணம் வரை ஜனங்களுக்காகவே உழைத்து, அவர்களுக்கு வீரமும் நம்பிக்கையும் உண்டாகுமாறு செய்து வந்தார். அவருடைய லட்சியம் முழுதும் உடனே கைகூடவில்லை என்றாலும், அந்த லட்சியத்தை விரைவில் அடையக்கூடிய வல்லமை ஜனங்களுக்கு ஏற்பட்டுவிட்டது என்பதுதான் அவருடைய பெருமை. மேலும் மக்கள், தங்களுடைய அபார சக்தியை அறிந்துகொண்டு விட்டனர். 'எவர்களோ, எங்கிருந்தோ ஆட்சி செய்ய வேண்டியதில்லை, நாமே நம் யஜமானர்கள்' என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டனர்.

ஓ'கானலுடன் உழைத்து வந்த **தாமஸ் டேவிஸ், ஜான் மிச்செல்** போன்ற தலைவர்கள் **'வாலிப அயர்லாந்து இயக்கம்'** என்ற அதிதீவிர தேசீய இயக்கத்தை ஆரம்பித்தார்கள். பஞ்சத்தால் துடித்துக்கொண்டிருந்த அயர்லாந்திலிருந்து அரசாங்கம் ஏராளமான கோதுமையை இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்தது. (1848-ல்) இதை எதிர்த்துக் கலகம் செய்ததற்காக, 'வாலிப அயர்லாந்து இயக்க'த்தினர் பலரை அரசாங்கம் கைதி செய்து, நாடு கடத்தி, இயக்கத்தையே நசுக்க முயன்றது. ஆனால், தேசீய இயக்கம் உண்மையாக வேரூன்றிய பின் அடியோடு அழிந்துவிடுமா? வெகு சீக்கிரத்தில் 'பீனியன் சங்க'மும், 'ஐரிஷ் குடியரசுச் சகோதரத்துவ சங்க'மும் தோன்றிவிட்டன. பின்னால் ஆர்தர் கிரிபித்தின் தலைமையில் தோன்றிய 'ஸின்பீன்' இயக்கத்திற்கு இவையே உரமும் நீருமாய் விளங்கின.

சீமையிலுள்ள பார்லிமெண்டில் அயர்லாந்தின் பிரதிநிதிகளாக இருந்து அரிய தொண்டாற்றிய தலைவர்களில் தலைசிறந்தவர் **பார்னல் (1846—1891)**. பொருளாதாரத் துறையிலும், அரசியல் அந்தஸ்திலும் அவரால் அயர்லாந்து மிகுந்த லாபம் அடைந்தது. அவர் மரணமடையு முன்பே அயர்லாந்து வெகு சீக்கிரத்தில் சுதந்திரம் அடைந்தேதீரும் என்ற நிலை ஏற்பட்டிருந்தது. நாட்டில்

தேவையான தேசீயக் கலாசாலைகளும், சர்வகலாசாலைகளும் ஏற்படுத்தப்பட்டன. காலின்ஸ்—டிவேலரா காலத்தில் சுதந்திர சூரியன் உதயமாயிற்று என்றால், அவர்களுக்குச் சற்று முந்திய பார்னல் காலத்தை உஷாகாலம் என்று கருதலாம்.

1914-ம் ஆடு முதலாவது உலக மகாயுத்தம் தோன்றிய சமயத்திலே, அயர்லாந்துக்குச் சுய ஆட்சி கொடுப்பதற்காக ஒரு மசோதா நிறைவேறியிருந்தது. யுத்தம் முடிந்த பிறகே அது அமலுக்கு வரவேண்டும் என்று குறிக்கப்பட்டிருந்தது. ஆனால், அக்காலத்தில் தேசீயத் தலைவர்களாக விளங்கிய ஆர்தர் கிரிபித், டி'வேலரா, காலின்ஸ் போன்றவர்கள், யுத்த காலமே சுதந்திரப் போருக்கு ஏற்ற காலம் என்று கண்டு, சுயராஜ்யக் கொடியை உயரே தூக்கி, ஜனங்களை ஒற்றுமைப்படுத்திச் சங்கநாதம் செய்தார்கள். கூலிப் பட்டாளத்தில் சேர்ந்து ஆங்கிலேயருக்காக ஐரோப்பியப் போர்க் களங்களில் மடிவதைக் காட்டிலும், அவர்களை எதிர்த்து அயர்லாந்திலேயே அயர்லாந்துக்காக மடிவது மேல் என்று பெரும்பாலான ஐரிஷ் இளைஞர்கள் கருதினார்கள். 1916—ஈஸ்ட்டர் வாரம் முதல் பல போராட்டங்கள் தொடர்ச்சியாக நடந்து வந்தன. அவைகளின் முடிவாக அயர்லாந்து 'ஓரளவு சுய ஆட்சி' பெற்றது. அந்த 'ஓரளவு சுய ஆட்சி' யையே பின்னால் டி'வேலரா பூரண சுயராஜ்யமாக மாற்றிக்கொண்டுவிட்டார்.

* * *

இந்நூலை நான் எழுதும்படி தூண்டியவர்கள் 1932-34 ல் என்னோடு சிறையிருந்த நண்பர்கள். அவர்கள் என்னை ஊக்கப்படுத்தியதையும் பாராட்டியதையும் நினைத்தால், இன்றுகூட உக்களிப்பு ஏற்படுகிறது. ஆங்கிலம் தெரியாத பாவத்தினால் (அல்லது புண்ணியத்தினால்!) அவர்கள், இரவில் நான் நெடுநேரத்திற்குப் பிறகு எழுத எழுத, ஒவ்வொரு தாளாக வாங்கிப் படிப்பார்கள்.

அந்த நண்பர்கள் பாராட்டிப் படித்த இந்த 'மைக்கேல் காலின்ஸ்' சரித்திரத்தை 1938, பெப்ரவரி 16உ, முதல் பதிப்பாக வெளியிட்டேன். அச்சிட்ட 3,000 பிரதிகளும் விரைவிலே விற்றுவிட்டன. வாசகர்களும் பத்திரிகாசிரியர்களும் புத்தகத்தை மிகவும் பாராட்டினார்கள். இந்நூலின் பிரபலத்திற்குக் காரணம் என்ன என்பதைப் பற்றி நானும் சிந்திக்க நேர்ந்தது.

நாள்தோறும் பெருகிவரும் நம் தேசிய இயக்கம் காரணமாக நாடெங்கும் அறிவுத்தாகம்—இலக்கியப் பசி—ஏற்பட்டிருக்கிறது. ஆங்கிலம் தெரிந்த பலர், அதிலுள்ள அவசியமான புது நூல்களைப் படியாமல், தமிழையும் புறக்கணித்து, எல்லாம் தெரிந்ததாக ஒரு மயக்கமும் கொண்டு, ஆங்கிலமும் தமிழும் கலந்த மணிப்பிரவாள மொழியில் பேசிக்கொண்டு திரிகிறார்கள். ஆனால், கல்லூரி வாயிலையே எட்டிப் பாராது, ஆங்கிலம் படிக்காத லட்சக் கணக்கான இளைஞர்கள்—தொண்டர்கள், பெண்கள், கடைக் கணக்குப்பிள்ளைகள், தொழிலாளர்கள், குமஸ்தாக்கள், இளம் மாணவர் முதலியோர்—தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அறிவுத் தாகத்தினால், கிடைத்ததை எல்லாம் அள்ளி விழுங்கிவருகிறார்கள். கவைக்கு உதவாத 'கற்கோட்டை ரகசியங்கள்,' 'ஆபத்பாந்தவா! அநாத ரக்ஷகா!' என்று ஓலமிடும் நாவல்கள், பெயர் ஊர் தெரியாதபடி ஆங்கிலத்திலிருந்து தமிழில் தழுவல்களாக வரும் சப்பைக் கதைகள் ஆகியவை அவர்கள் மனத்தைக் கவர்வதில்லை. நாம் ஒரு யுக-சந்தியில் இருக்கிறோம் என்பதை உணர்ந்து, 'புது யுகத்திற்கு ஏற்ற புது நூல்களைத் தாருங்கள்! தாருங்கள்!' என்று அவர்கள் எழுத்தாளர்களைக் கேட்கிறார்கள். அந்த முறையில் இந்த நூல் கொஞ்சம் உதவி செய்வதாலேயே இதற்கு வரவேற்புக் கிடைப்பதாக நான் கருதுகிறேன்.

நம் நாடு வெகு சீக்கிரத்தில் பூரண சுயராஜ்யம் அடையப் போகிறது. இந்த நிலையில் உயர்ந்த தியாகியாகிய காலின்ஸின் இந்தச் சரித்திரத்தை, ஒன்பது வருஷங்களுக்குப் பின், இரண்டாம் பதிப்பாக இப்போது வெளியிடுகிறேன். 1932–34 ல் சிறையில் என்னைச் சூழ்ந்து உட்கார்ந்து, நான் எழுதிக் கொடுத்த தாள்களை ஆவலோடு படித்துக்கொண்டிருந்த சைலப்ப பிள்ளை, சேதுப் பிள்ளை, திருமலைக்கொழுந்து *, முத்தையா தொண்டைமான், ராஜம்பிள்ளை, கைலாசத் தேவர் *, நடராஜபிள்ளை முதலிய நண்பர் பலருடைய ஆசை முகங்கள் எல்லாம் அன்று போல் இன்றும் என் கண்முன்பு மலர்ந்தேயிருக்கின்றன.

இந்த இரண்டாம் பதிப்பைத் தாமே வெளியிட வேண்டும் என்று உறுதிகொண்டு, உயர்ந்த முறையில் இதை அச்சிட்டுத் தயாரித்துள்ள தமிழ்ச் சுடர் நிலையத்து அதிபர் நண்பர் ஸ்ரீ. கோபாலனுக்கு நான் எவ்வளவு நன்றி சொன்னாலும் தகும்.

சென்னை,
7—3—'47

ப. ராமஸ்வாமி

---

* இப்போது சுவர்க்கவாசிகள்.

இளமைப் பருவம்

அயர்லாந்தின் தென்பாகத்தில், ஸாம்ஸ் கிராஸ் என்னுமிடத்தில், ஒரு கிழவரும் குமரியும் கருத்து ஒருமித்து இன்பகரமாக இல்வாழ்க்கை நடத்திவந்தனர். மற்றையோர் பழுத்து உதிரவேண்டிய வயதில் அக்கிழவர் திடகாத்திரத்துடன் விவசாயம் செய்து வந்தார். அவருக்குக் கொற்று வேலையும் தச்சு வேலையும் மிக நன்ருய்த் தெரியும். அத்துடன் அவர் பெரிய கல்விமான். கிரேக்க பாஷை, லத்தீன், பிரெஞ்சு முதலிய பாஷைகளில் அவருக்குத் தேர்ச்சியுண்டு. அவருடைய மூளையைப் பல விஷயங்கள் அடங்கிய ஓர் புத்தகசாலையென்னலாம். வயது முதிர்ந்த பின்னும் அவர் படிப்பை நிறுத்தவில்லை. அவருடைய சொந்த பாஷையாகிய கெயிலிக் பாஷையையும், ஆங்கிலத்தையும் தண்ணீர் குடிப்பதுபோல் தாராளமாய்ப் பேசக்கூடிய ஆற்றல் அவருக்கு உண்டு. 'அயர்லாந்து எனது அருமைத் தாய் நாடு. தொன்றுதொட்டு இந்நாட்டை ஆண்டுவந்த—இந்நாட்டுச் சொந்தக்காரராகிய—உண்மையான கெயிலியர் வழிவந்தவன் நான்!' என்று அவர் அடிக்கடி பெருமிதங் கொண்டு பேசுவார்.

உண்மையில் அப் பெருங் கிழவரான மைக்கேல் காலின்ஸ் அயர்லாந்தின் பழம்பெருங் குடிகளின் வழித் தோன்றல். அவருடைய வாழ்க்கைத் துணையாக விளங்கியவள் மேரி ஆன் ஒபிரியன். மேரி தன் இருபதாவது வயதில் அறுபது வயதாயிருந்த காலின்ஸை மணந்து

கொண்டாள். இக் காதலரிடையே வயதும் பருவமும் வேற்றுமையையும் விகற்பத்தையும் உண்டாக்கவில்லை. மேரி, பசுமையும் அழகும் கொண்டு, நாயகருக்குப் பேருதவியாய் வாழ்ந்துவந்தாள்.

இந்தத் தம்பதிகளுக்கு எட்டுக் குழந்தைகள் பிறந்தார்கள். எட்டாவது குழந்தைதான் இச்சரித்திரத்தின் வீரனை **மைக்கேல் காலின்ஸ்.** *1890*-ல் பிறந்த இக்கடைசிக் குழந்தைக்குத் தந்தையின் பெயரே வைக்கப்பட்டது. குழந்தைகள் யாவரும் திடகாத்திரமும் புத்திக் கூர்மையும் பெற்றிருந்தார்கள். காலின்ஸ் கடைசிக் குழந்தையாதலால் பெற்றோருடைய அன்பையும், உடன் பிறந்தார் வாஞ்சையையும் கொள்ளைகொண்டு வாழ்ந்தான். அவன் அழகும் குணமும் ஒருங்கே அமையப் பெற்றிருந்ததால், அவனுடைய மூத்த சகோதரிகள் அவனைக் கவலையுடன் கவனித்து வந்தனர். வேறு எந்தக் குழந்தைக்கேனும் அவ்வளவு அன்பு காட்டப்பட்டிருந்தால், அது பின்வாழ்க்கையில் பயனற்றுப் போயிருக்கும்.

நாலரை வயதில் காலின்ஸ் சுவடிகளைத் தூக்கிக் கொண்டு தேசியப் பள்ளிக்கூடத்திற்குச் சென்றான். அவனுடைய உபாத்தியாயர் 'ஐரிஷ் குடியரசுச் சகோதரத்துவ சங்க'த்தைச் சேர்ந்தவர். அவர் அயர்லாந்து பூரண சுதந்திரம் அடையவேண்டும் என்ற நோக்கமுடையவர். அவ்வாசிரியரிடம் கல்வி பெற்றது காலின்ஸின் பாக்கியமேயாகும். அவர் 'அடியாத மாடு பணியாது' என்ற கொள்கையுடையவர். என்றைக்குக் குழந்தைகளை அடிப்பதை நிறுத்துகிறோமோ அன்று முதல் உலகம் பாழாகும் என்று கருதும் பழைய ஆசிரியர் கூட்டத்தைச் சேர்ந்தவர். எனினும்,

அவருடைய கண்டிப்பும் தண்டனைகளும் காலின்ஸின் உள்ளத்தில் வெறுப்பை உண்டாக்கவில்லை. அவரிடத்தில் அவனுக்கு அளவற்ற அன்புண்டு.

பள்ளிச் சிறுவர்கள் யாவரும் காலின்ஸை நேசித்துப் பாராட்டி வந்தார்கள். இவ்வாறு, சுற்றிலும் அன்பு வெள்ளத்திலே, காலின்ஸ் படிப்பிலும் விளையாட்டுகளிலும் தேர்ச்சிபெற்றுப் பிரகாசித்து வந்தான். ஒழிந்த நேரத்திலெல்லாம் அவன் வயது முதிர்ந்த பெரியவர்களிடம் சென்று பழம் பெருங் கதைகளைக் கேட்டு ஆனந்திப்பது வழக்கம். பள்ளிப் படிப்பு மட்டும் அவனுடைய வளம் பொருந்திய உள்ளத்திற்குப் போதியதா யில்லை. அவன் தந்தை கல்விக் களஞ்சியமாக விளங்கியதால், வீட்டிலிருந்த குழந்தைகள் யாவரும் படிப்பில் ஆர்வம் கொண்டிருந்தார்கள். அவர்கள் சாதாரண நவீனங்களேயன்றி மிகப் பெரிய நூல்களையும் படித்துவந்தார்கள். காலின்ஸ் இளம் பிராயத்தானயினும், தாமஸ் டேவிஸ் போன்ற பெருந் தலைவர்களின் தேசீய இலக்கியத்தைப் பன்முறை கற்று வந்தான். தாய்த் திருநாட்டிற்காகச் சொல்லொணுத் துயருற்றுப் பெருந் தியாகங்கள் செய்த உல்ப் டோன், எம்மெட் முதலிய வீரர்களைப் பற்றிய பாடல்களைக் கேட்பதில் அவனுக்குப் பிரியம் அதிகம். ஏராளமான ஆங்கில நூல்களையும், இனிய காவியங்களையும், கணித நூல்களையும், சிற்ப நூல்களையும் அவன் படித்து வந்ததுடன், வீரச் சரித்திரங்கள், துப்பறியும் கதைகள் முதலியவற்றையும் சலிப்பின்றிப் படித்துவந்தான்.

அவன் படித்துவந்த நூல்களிலே தேசாபிமானத்தையும் சுதந்திர வெறியையும் ஊட்டக்கூடியவை பல இருந்தன. சின்னஞ் சிறு வயதிலேயே அவன் பல

அரசியல் உண்மைகளைத் தெரிந்துகொண்டான். சுக்கு மிளகு வாங்குவதுபோல் தேசத்தின் சுதந்திரத்தை வாங்க முடியாதென்று அறிந்தான். வெறும் கிளர்ச்சிகள் அவன் உள்ளத்தைக் கவரவில்லை. ஆர்தர் கிரிபித் என்ற தேசாபிமானச் செல்வர் நடத்திவந்த 'ஐக்கிய ஐரிஷ் காரன்' என்று பொருள்படும் 'யுனைட்டெட் ஐரிஷ்மென்' என்ற வார சஞ்சிகை வீரத் தொனியோடு விளங்கியதால், அவன் அதை மட்டும் இடைவிடாது படித்து வந்தான். நாளுக்கு நாள் பாதிரிமார்களிடத்தில் அவனுக்கு அளவற்ற வெறுப்பு ஏற்பட்டு வளர்ந்து வந்தது. இதற்கு ஒரு காரணம் அவனுடைய விசேஷப் படிப்பு. ஆனால், இவ்வெறுப்பு வெகுநாள் நிலைக்கவில்லை.

திண்ணமான உடலும், ஊக்கமும் உற்சாகமும் பொருந்திய மனதும் காலின்ஸ் பெற்றிருந்ததால், இளமையில் தோன்றும் பல நோய்கள் அவனைப் பீடிக்கவில்லை. மல் யுத்தம், ஓட்டம், தாவுதல், குதிரையேற்றம் முதலிய விளையாட்டுகள் பலவற்றிலும் அவன் கலந்துகொண்டு உடற்பயிற்சி பெற்றான். குதிரைகளிடத்தில் அவனுக்கு விசேஷப் பிரியமுண்டு. ஒரு சமயம் மூன்று வயதான பழக்கப்படாத குதிரை ஒன்றின்மேல் ஏறிக்கொண்டு, அது தானாகக் களைத்து நிற்கும்வரை சவாரி செய்திருக்கிறான். சாரத்தியம் செய்வதிலும் அவன் சமர்த்தன்.

இன்சொல்லும் சுமுகமும் படைத்திருந்ததால், பலர் அவனுக்கு நண்பர்களாயினர். இளைஞர், முதியோர், பெண்கள்—யாவருடைய கூட்டத்திலும் அவன் சஞ்சலப் படுவதில்லை. இயற்கையழகு செறிந்த நதிப்பக்கத்திலும் கடற்கரை ஓரத்திலும், அவன் தன் உடன்பிறந்தார், நண்பர்களுடன் ஓடுவதும், உலவுவதும், விளையாடுவதும்,

கதை சொல்லுவதுமாகப் பொழுது போக்குவது வழக்கம்.

சிட்டுக் குருவியைப்போல் எங்கும் பறந்து திரிந்து வாழும் வாழ்வு குழந்தைப் பருவத்திலேதான் அமையும். காலின்ஸ் அப்பருவத்தைத் தாண்டி மேலெழுந்து வந்ததைக் கண்ட அவன் அன்னை, அவனுடைய பிற்கால வாழ்வைப்பற்றிச் சிந்திக்கலானாள். அவனுடைய உற்சாகமும் அடங்காக் குணமும் அவனை அற்ப வேலைகளுக்கு லாயக்கில்லாமற் செய்துவிட்டன. ஆயினும், அன்னைக்கு நாளுக்கு நாள் பலவீனம் அதிகரித்து வந்ததால், தன் கண்ணுள்ளபோதே கடைசிக் குழந்தையை ஒரு பதவியில் வைத்துப் பார்க்கவேண்டும் என்ற ஆசை மிகுந்தது. ஆங்கிலத் தபால் இலாகாவிலே அவனைச் சேர்த்துவிட வேண்டும் என்று முடிவுசெய்தாள். அதன்படி காலின்ஸ் தபால் காரியாலயக் குமஸ்தா வேலைக்குரிய பரீட்சைக்குப் படிப்பதற்காக குளோனகில்டி நகருக்குச் சென்றான். அப்பொழுது அவனுக்கு வயது பதின்மூன்றரை. அங்கே அவனுடைய மூத்த சகோதரியின் வீட்டில் தங்கிப் படித்துவந்து, பரீட்சையிலும் தேறினான். பின், தன்னுடைய பதினைந்தாவது வயதில் லண்டன் தபால் காரியாலயத்தில் வேலை பார்ப்பதற்காகப் புறப்பட்டான். அங்கே அவனுடைய மற்றொரு சகோதரியான ஜோஹன்னு அதே காரியாலயத்தில் வேலை பார்த்து வந்தாள்.

மேற்கு கென்ஸிங்டன் தபால் காரியாலயத்திலுள்ள ஸேவிங்ஸ் பாங்கில் அவனுக்கு ஒரு குமஸ்தா வேலை கிடைத்தது. கென்ஸிங்டன் லண்டன் நகரின் ஒரு பாகம். அங்கு சென்றபின் அவன் விரைவாக உருவத்தில் வளர்ந்து வந்ததால், சிறுவன் என்ற பெயர் மாறி

விட்டது. ஆனால், குமஸ்தா வேலைக்கு லாயக்கற்றவன் ஒருவன் இருப்பானாகில், அவன் மைக்கேல் காலின்ஸ் தான். பழங் காகிதத்தில் மைகொட்டிப் பிழைப்பது அவனுக்குப் பிடிக்காது. அவனுடைய அபார சக்திக்கு அது ஏற்றதன்று. ஆயினும், தொழில் ஒன்று வேண்டுமே என்ற கவலையினால், அதைப் பற்றிக்கொண்டிருந்தான்.

வேலைநேரம் தவிர மற்ற நேரங்களில் அவன் தாய் நாட்டின் சேவையில் ஈடுபட்டு வந்தான். அக்காலத்தில் அயர்லாந்துக்கு மிக அவசியமாயிருந்த விஷயங்கள் இரண்டு. ஒன்று அதன் பாஷையாகிய கெயிலிக் மொழி வளர்ச்சி; மற்றது அதன் வாலிபரின் உடல் வளர்ச்சி. மொழி வளர்ச்சியே மற்றைக் கலை வளர்ச்சிக்கு அடிப் படை. ஒரு நாட்டார் அந்நிய பாஷையிலே சிந்திக்கவும், பேசவும், எழுதவும் செய்வது இயற்கைக்கு மாறுபாடு. ஒரு நாட்டு இளைஞர் தோல் சுருங்கி, நரம்பு தளர்ந்து, கண்கள் குழிவிழுந்து கிடப்பாரானால், அவர்களுடைய உடல்களினுள்ளே வயிரமுடைய நெஞ்சத்தைக் காண்பது அரிது. ஆதலால், காலின்ஸ் மொழி வளர்ச்சியிலும், இளைஞர் உடல் வளர்ச்சியிலும் சிரத்தை கொண்டான். கெயிலிக் பாஷைச் சங்கத்திலும் கெயிலிக் தேகப்பயிற்சிச் சங்கத்திலும் சேர்ந்து உழைத்துவந்தான்.

தபால் காரியாலயத்திலுள்ள வேறு பல ஐரிஷ் வாலிபர்கள் அவனுக்கு நண்பரானார்கள். அவர்களுடன் சேர்ந்து அவன் தாய்மொழியைக் கற்றுவந்தான். அயர்லாந்தில் பிறந்த அவன், சொந்த நாட்டில் பிற மொழியைப் பயின்று, வெளிநாட்டில் சொந்த மொழியைப் பயிலவேண்டியிருந்தது. எதையும் செய்து, எவ்வகையாலும் தாய்மொழியை மடியவிடாது வளரச் செய்ய

வேண்டும் என்று அவன் உறுதிகொண்டான். ஆனால், அவன் ஸிவில் ஸெர்விஸ் பரீட்சைகளுக்குப் படிக்க வேண்டியிருந்ததால், தாய்ப் பாஷையைக் கற்பதற்குப் போதிய ஓய்வு கிடைக்கவில்லை. ஐரிஷ் பாஷையான கெயிலிக் மொழியைப் பேசக்கூடிய ஒரு ஜில்லாவில் தங்கி அப்பாஷையில் பாண்டித்யம் பெறவேண்டும் என்பது அவனுடைய பேராவல். வாழ்நாள் முழுதும் போர்க் களத்திலே நின்று போராடவேண்டிய இந்த இளைஞன், இளமையில் தாய்மொழியைக் கற்க முடியாமல், பின்னால் கற்றுக்கொள்ள நேரம் எப்படிக் கிடைக்கும்! ஆனால், பிற்காலத்தில் அவன் மன்னர்பிரானின் விருந்தினனாய்ச் சிறைக்கோட்டம் புகுந்த காலத்தில், தாய்மொழியைக் கொஞ்சம் கற்பதற்குச் சௌகரியம் கிடைத்தது.

விளையாட்டுகளிலும் அந்நிய முறைகளை ஒழித்து விடவேண்டும் என்பது அவன் எண்ணம். அவனும் அவன் நண்பர்களும் அமைக்கும் விளையாட்டுச் சங்கங் களிலே அந்நியச் சங்கங்களில் அங்கத்தினரா யிருந்தவர் கள் சேரமுடியாது என்று விதி செய்தான். ஆங்கிலேயர் பந்தாடும் முறையைக்கூட ஐரிஷ் வாலிபர் பின்பற்றக் கூடாது என்று அவன் போராடி வந்தான்.

அக்காலத்தில் அயர்லாந்தின் பூரண சுதந்திரத்திற் காக இரகசியமாய் உழைத்துவந்த சங்கம் 'ஐரிஷ் குடி யரசுச் சகோதரத்துவ சங்கம்'. அது 1865-ல் ஸ்தாபிக் கப்பட்டது. பிற்காலத்தில் அச்சங்கம் ஒன்று இருப்ப தாகவே பொதுஜனங்களுக்குத் தெரியாது. ஆனால், பாஷையையும் உடல் வலிமையையும் வளர்க்கவேண்டும் என்ற இயக்கங்கள் தோன்றிய பொழுது அச்சங்கமும ஊக்கமாய் வேலை செய்ய முற்பட்டது. ஆர்தர் கிரிபித்

போன்ற பெருந் தலைவர்கள் அச்சங்கத்தின் அங்கத்தினரா யிருந்தனர். பொதுஜனங்களிடையே வெளிப்படையாகப் பிரசாரஞ் செய்வதற்கு ஆர்தர் கிரிபித் 'ஸின்பீன்' கட்சியையும் ஆரம்பித்தார்.

1909-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் காலின்ஸ் 'ஐரிஷ் குடியரசுச் சகோதரத்துவ சங்க'த்தின் உறுதிகள் அனைத்தையும் மேற்கொண்டு அங்கத்தினனாகச் சேர்ந்தான். சிறிது காலத்தில் அதில் சில பதவிகளும் பெற்றான். 1914-ல் லண்டனுக்கும் தென் இங்கிலாந்துக்குமாக அமைக்கப்பட்ட கிளைச் சங்கத்திற்கு அவன் பொக்கிஷதாரராக நியமிக்கப் பெற்றான். மிகுந்த பொறுப்புள்ள இவ்வேலைகளினிடையே, அவன் தன் படிப்பையும் நிறுத்துவதில்லை. சகோதரியுடன் சேர்ந்து புத்தகங்கள் படித்தும், ஆசிரியர்களைப் பற்றி விவாதங்கள் செய்தும் வந்தான். இரவில் வெகு நேரம்வரை தூங்குவதில்லை.

லண்டன் நகரில் காலின்ஸுக்கு நண்பர் பலர் உண்டு. ஒரு நண்பனின் கடமைகள் எவை என்பதை அவன் நடத்தையிலேயே கற்றுக்கொள்ள முடியும். அவன் ஒருபோதும் நண்பர்களை மறப்பதில்லை. எங்கு எத்தொழிலில் இருந்தாலும், அடிக்கடி நண்பர்களின் சுக சௌகரியங்களை விசாரித்து எழுதுவது வழக்கம். தாராள சிந்தையுடையவனாதலால், தான் ஏழைமையில் இருப்பினும், கஷ்டப்படும் நண்பர்களுக்கு அவன் தன்னால் இயன்ற உதவியைச் செய்துவந்தான். நண்பர்களுடைய கூட்டங்களில் அவன் தாய்ப்பாஷையில் பல இனிய கீதங்களைப் பாடி அவர்களை மகிழ்விப்பான். அவன் முகத்தில் எப்பொழுதும் புன்னகை தவழும். நண்பர்கள் அவனை 'மிக்' என்ற செல்லப் பெயரால்

அழைப்பது வழக்கம். பிற்காலத்தில் இப்பெயர் பிரசித்தமாகிவிட்டது.

1910-ம் வருஷத்திற்குப் பின் காலின்ஸ் கம்பெனிகளில் வேலைபார்க்கலானான். முதலில் ஹார்னர் கம்பெனியிலும், பின்னர் காரண்டி டிரஸ்ட் கம்பெனியிலும் அமர்ந்தான். இரண்டாவது கம்பெனியில் 1915-ம் ஆு முடிவு வரை வேலை பார்த்தான். அப்பொழுதுதான் சர்வதேசப் பொருளாதார விஷயங்களைப்பற்றி அறிந்துகொள்ள அவனுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அந்தக் கம்பெனி நியூயார்க் நகரைச் சேர்ந்தது. அதில் வேலை செய்தவர்களிற் பலர் ஸ்காட்லந்து வாலிபர்கள். காலின்ஸ் அவர்கள் எல்லோருடனும் இனிமையாக நெருங்கிப் பழகிவந்தான். கம்பெனியில் எவ்வளவு வேலையிருந்தாலும் அவன் சலிப்பதில்லை. சிரித்த முகத்துடன் வேலைகளை முடித்துவிடுவான். அவனுடைய அருமைத் தாய்நாட்டை யாராவது பழித்துக் கூறினால் மட்டுமே, முகத்திலுள்ள புன்னகை மறையும், முகம் கடுகடுக்கும். இவ்வுண்மையை அவனுடன் வேலைபார்த்து வந்த ஒருவரே வெளியிட்டிருக்கிறார்.

2

போர்க் கோலம்

ஏழு நூறு வருஷ காலமாக இங்கிலாந்து பக்கத்திலிருந்த தன் சகோதரத் தீவான அயர்லாந்தை அடக்கியாள்வதில் கண்ணும் கருத்துமாக இருந்துவந்தது. அது அயர்லாந்தைப் பிடித்ததும் ஆண்டதும் உண்மையேயாயினும், அதைப் பூரணமாக அடக்கிவைக்க முடியவில்லை. அயர்லாந்தின் ஆன்மா அடிமைத்தனத்தால் அழுகிப்போகாமல் இருந்தது. அயர்லாந்தைப் பார்த்து, 'நீ அடிமைப்பட்டதால் இழிவடைந்தாய்' என்று நாம் சொன்னால், அது, 'நான் அடிமைப்பட்டபோதிலும், எந்நாளிலும் அதற்கு இசைந்து பணிந்து இருக்கவில்லை. ஒவ்வொரு தலைமுறையிலும் என் விடுதலைக்காக என் மக்கள் போராடிவந்தார்கள். அதுவே எனக்கு ஆறுதல்!' என்று விடையளிக்கும்.

ஐரோப்பா யுத்தம் ஆரம்பமான காலத்தில், இரண்டரை நூற்றாண்டாக அடிமையாக அல்லலுற்ற அயர்லாந்து, சிறிது தலைதூக்கிப் பார்த்தது. ஒளிமழுங்கிய அதன் கண்களில் சிறிது ஒளி வீசிற்று. அதன் அடிமைத் தளைகளைத் தகர்த்துச் சுதந்திரக் கொடியை நிலைநாட்டத் தொண்டர்படை என்னும் சுதந்திரப் படை தோன்றியது. அப்படை பழைய குடியரசுச் சகோதரத்துவ சங்கத்தின் வழித் தோன்றலாகும். குடியரசுச் சங்கத்தின் அங்கத்தினர் பலர் இளைஞர். அவர்கள்

பூரண சுதந்திரத்தையே வேண்டி நின்றனர்கள். அவர்களில் ஒருவனாகிய டாம் கிளார்க் பதினாறு வருடம் சிறையிலிருந்து விடுதலையாகி வெளிவந்தவன். இளமைப் பருவத்தை யெல்லாம் வெய்ய சிறையிடையே கழித்த அவ்வாலிபனின் கொள்கையை ஆதரிக்கும் இதர இளைஞர்களும் ஒன்றுகூடி 'ஐரிஷ் சுதந்திரம்' என்ற மாதப் பத்திரிகையை ஆரம்பித்தனர். அப்பத்திரிகை, 'பிரிவு, பிரிவு! இங்கிலாந்தினிடமிருந்து பிரிவு! ஏகாதிபத்தியத்திலிருந்து வெளிப்படல்!' என்ற கொள்கையை எங்கும் பரப்பிவந்தது. அந்தப் பத்திரிகையின் ஆதிக்கம் யார் கையில் இருக்க வேண்டும் என்பதைப்பற்றித் தொண்டர்களுக்குள் பூசல் ஏற்பட்டதால், தீவிரவாதிகள் சங்கத்தை விட்டு வெளியேறினர். அவர்கள் வேறு பல கட்சிகளையும் கலந்து கொண்டு ஐரிஷ் தொண்டர் படையை அமைத்தனர். தேர்ந்த நிபுணர்கள் அவர்களுக்குப் போர்ப் பயிற்சி கொடுத்துவந்தனர். அக்காலத்தில் ஐரிஷ் பொதுஜனங்கள், புரட்சியிலும் போரிலும் நம்பிக்கையற்று, அமைதியான முறையிலே ஆங்கில ராஜதந்திரிகள் கொடுத்ததே போதும் என்று அடங்கிக் கிடந்தார்கள். முன் அடைந்த தோல்விகளால் அவர்கள் மனம் முறிந்திருந்தனர். ஆதலால் தொண்டர்கள், 'காலம் மாறும்; அப்போது யாவரும் கூடக் காண்போம்!' என்று, நம்பிக்கையை இழக்காமல் பணியாற்றிவந்தனர்.

அயர்லாந்துக்குச் சுயாட்சி கொடுப்பதே தங்கள் நோக்கம் என்று பறைசாற்றி வந்த ஆங்கிலத் தாராளக் கட்சியார், ஆதிக்கத்திற்கு வந்தவுடன், பழைய வாக்குறுதிகளை மறந்தனர். ஆங்கில ஆதிக்கத்தை ஆதரிக்கும் ஐரிஷ் அரசியல்வாதிகளுக்கு அவர்கள் பட்டங்களும் பதவிகளும் கொடுத்து மழுப்பிவந்தனர். அவர்களிடம்

நம்பிக்கை கொண்ட 'ஐரிஷ் கட்சியார்' பற்பலவிதமாக விலேக்கு வாங்கப்பட்டனர். அதுமட்டுமன்று. அயர்லாந்துக்குள் ஆயுதங்களை இறக்குமதி செய்யக்கூடாது என்று தடை செய்யப்பட்டது. ஆனால், வட அயர்லாந்தில் அல்ஸ்டர் வாசிகள், ஸர் எட்வர்ட் கார்ஸன் என்பவரின் தலைமையின் கீழ், ஐரிஷ் சுயாட்சியை எதிர்ப்பதற்காக எல்லாவித ஆயுதங்களையும் வைத்துக்கொண்டு படையாகத் திரண்டு பயிற்சி பெறுவதற்கு அரசாங்கம் அனுமதித்து வந்தது.

தொண்டர் படை சேர்க்கும் விஷயமாக முதன் முதலில் டப்ளின் நகரிலுள்ள மாபெரும் மண்டபம் ஒன்றில் பெருங்கூட்டம் கூட்டப்பட்டது. பல்லாயிரம் வாலிபர்கள் தொண்டர் படையில் சேர முன்வந்தனர். தொண்டர் படையின் நோக்கங்களாவன:

i. அயர்லாந்திலுள்ள சகல மகாஜனங்களுக்கும் பொதுவான உரிமைகளையும் சுதந்திரங்களையும் பெற்றுப் பாதுகாத்தல்.

ii. மேற்கண்ட காரியத்திற்காக ஐரிஷ் தொண்டர் படை ஒன்றைப் பயிற்சி செய்து, ஒழுங்குபடுத்தி, ஆயுதம் கொடுத்து நிறுவுதல்.

iii. இந்தக் காரியத்திற்காக வெவ்வேறு கொள்கையுடையவர்களும், கட்சியினரும், வகுப்பினருமான சகல ஐரிஷ்காரர்களையும் ஐக்கியப்படுத்தல்.

இந்த நோக்கங்களை ஆதரித்து நாடெங்கும் தொண்டர் படைகள் தோன்றின. மாஜி யுத்த வீரர்கள் தொண்டர்களுக்குப் பயிற்சி கொடுத்து வந்தார்கள். ஸின்பீன் சங்கத்திலிருந்தும் கெயிலிக் சங்கத்திலிருந்தும் பலர் தொண்டர்களாய்ப் பதிவு செய்துகொண்டார்கள்

அக்காலத்தில் அரசியல் உலகில் புகழ்பெற்றிருந்த ரெட்மண்டு என்னும் தலைவர் தம் சகாக்களுடன் தொண்டர் படையில் சேர்ந்து, அதை உள்ளிருந்தே உடைத்து விட வேண்டும் என்று வேலை செய்துவந்தார். சிறிது காலத்திற்குப் பின்னால், அதிதீவிரவாதிகள் அவரை விட்டுப் பிரிந்து தனிப் படை ஒன்றை ஏற்படுத்திக் கொண்டனர்.

ரெட்மண்டு பிரிட்டிஷ் பார்லிமெண்டில் அங்கத்தினர். ஐரோப்பா யுத்த ஆரம்பத்தில் பார்லிமெண்டு ஐரிஷ் சுயாட்சி மசோதா ஒன்றை நிறைவேற்றும்படி அவர் கட்டாயப்படுத்தி யிருக்கலாம். அந்த அரிய சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்திக் கொள்ளவில்லை. அவர், சுதந்திரம் வேண்டுவதற்குப் பதிலாக, ஐரோப்பா யுத்தத்தில் அயர்லாந்து தங்கு தடையின்றி இங்கிலாந்தை ஆதரிப்பதாக காமன்ஸ் சபையில் உறுதி கூறினர். ஜனங்களில் பெரும்பாலோர் அவரையே தலைவர் என்று நம்பி யிருந்ததால், நாடெங்கும் ஆங்கிலேயருக்கு அநுகூலமான உற்சாகம் காணப்பட்டது. ஆனல் முக்கியமான ஒரு சிறுபான்மைக் கூட்டத்தார் மட்டும் மிக்க உறுதியுடன் விலகி நின்றனர். அவர்களுடைய கொள்கையை ஆர்தர் கிரிபித்தின் 'ஸின்பீன்' பத்திரிகை உள்ளங்கை நெல்லிக் கனிபோல் பிரகடனப்படுத்தியது. அந்தப் பிரகடனம் வருமாறு :

'அயர்லாந்து ஜெர்மனியோடு யுத்தஞ் செய்ய வில்லை. அதற்கு ஐரோப்பா கண்டத்திலுள்ள எந்த வல்லரசினிடத்திலும் சண்டை இல்லை. இங்கிலாந்து ஜெர்மனியோடு போராடுகிறது. திரு. ரெட்மண்டு அயர்லாந்தைப் பாதுகாப்பதற்குத் தேசீயத் தொண்டர்களின் ஊழியத்தைக் கொடுக்க இசைந்திருக்கிறர். அயர்லாந்து

ஐதப் பாதுகாக்க வேண்டியிருக்கின்றது? மேலும், அது யாருக்கு விரோதமாய் நின்று பாதுகாக்கவேண்டும்? அது பாதுகாப்பதற்கு ஒரு சொந்த அரசியலமைப் பையோ அல்லது தேசீய அரசாங்கத்தையோ பெற் றிருக்கவில்லை என்பதை யாவரும் அறிவர். திரு. ரெட்மண்டு எந்த வல்லரசுக்குத் தேசீய அயர்லாந்தின் ஊழியர்களை அளிப்பதாய்க் கூறுகிறாரோ, அந்த வல்லர சால் அவை இரண்டும் (சொந்த அரசியலமைப்பும் தேசீய அரசாங்கமும்) அயர்லாந்திடமிருந்து பறிக்கப்பட் டிருக்கின்றன. தேசத்தின் சம்மதத்தைப் பெறாமலே ரெட்மண்டு வாக்களித்துவிட்டார் என்பதை எல்லோரும் அறிவர். எந்த ஐரோப்பிய வல்லரசும் அயர்லாந்தின்மேல் போர் தொடுக்கவில்லை. டப்ளின் மாளிகையில் இருந்து கொண்டு அயர்லாந்தின்மேல் ஆதிக்கம் செலுத்தும் ஆங்கிலேயர் பேரில் இரண்டு ஐரோப்பிய வல்லரசுகள் படையெடுத்திருக்கின்றன. தொண்டர்களை அயர்லாந் தைப் பாதுகாக்க அழைப்பதானது அம் மாளிகையி லேயே நிலைபெற்றிருக்கும் அதிகார வர்க்கத்தைப் பாது காக்கவே யாகும்......

'ஐரிஷ் தொண்டர்கள் அயர்லாந்தைப் பாதுகாக்க வேண்டுமானால், அவர்கள், அயர்லாந்துக்காக, அயர்லாந் தின் கொடியின் கீழ், ஐரிஷ் தளகர்த்தர்களின் உத்தர வின்படி, பாதுகாக்க வேண்டும். இல்லாவிடில் அவர்கள் தங்கள் தேசத்தின் அடிமைத்தனத்தை நிலைபெறச் செய்தவர்களாவார்கள்.'

ஆங்கில ராஜதந்திரிகள் தங்கள் தந்திரம் முழுவதை யும் காட்டி அயர்லாந்தைத் திருப்திப்படுத்த முன்வந்த னர். கருவிலேயே சிதைந்துபோன குழந்தையைப் போன்ற ஒரு சுயாட்சி மசோதாவை அவர்கள் பார்லி

மெண்டில் நிறைவேற்றி வைத்தார்கள். அம் மசோதாவும் யுத்தத்திற்குப் பிறகே அமுலுக்கு வரவேண்டும் என்று நிபந்தனையும் செய்யப்பட்டது. இவற்றைக் கண்ட ஐரிஷ் தொண்டர்கள் உள்ளம் கொதித்தார்கள். அந்நியர் தம் சந்தைகளில் அயர்லாந்தின் பிறப்புரிமை விலை கூறப்படுவதாக எண்ணினார்கள். ரெட்மண்டு தேசீயத் தொண்டர் படையை இங்கிலாந்துக்கு உதவியாக அனுப்ப இசைந்ததால், அயர்லாந்தின் சுதந்திரப் போருக்காகத் தயாரிக்கப்பட்ட படை தங்களை அடக்கி யாளும் அந்நியருக்கு உதவி செய்யப்போவதை எண்ணிப் பதைத்தார்கள். தங்களுடைய ஐரிஷ் தொண்டர் படையைப் பலப்படுத்தினார்கள். அப்படையினர் வெகு விரைவாகத் தங்களுடைய பிரதிநிதிகளைக் கொண்ட மகாநாடு ஒன்றையும் கூட்டினர். அயர்லாந்தின் பாது காப்புக்காக நிரந்தரமான ஆயுதம்தாங்கிய தேசீயப் படையை வைத்துக்கொள்ள அதற்குள்ள உரிமையை நிலைநாட்டவும், ஐரிஷ் மகாஜனங்களை ஒரு தேசீய சமூக மாக நிர்மாணிக்கவும், சுயராஜ்ய அரசாங்கம் ஏற்படும் வரை ஐரிஷ்காரர்களைப் பட்டாளத்தில் பலவந்தமாய்ச் சேர்ப்பதை எதிர்க்கவும், ஆங்கில ராணுவத்தின் மூலமும் டப்ளின் மாளிகை மூலமும் அயர்லாந்தை ஆள்வதை மாற்றி சுயராஜ்ய ஸ்தாபனம் செய்யவும் அவர்கள் தீர்மானித்து அறிக்கை வெளியிட்டனர். மேலும் ராணுவப் பயிற்சியையும் நிறுத்தாது நடத்தி வந்ததுடன் புதிய தொண்டர்களையும் சேர்த்து வந்தார்கள்.

1899-ல் போயர் யுத்தம் நடக்கும்பொழுது இங்கிலாந்து ஆப்பிரிகாவில் போர் செய்யவேண்டியிருந்ததால், அதே சமயத்தில் அயர்லாந்தில் கலகஞ் செய்யவேண்டும்

என்று பூரணசுயேச்சைவாதிகள் கருதியிருந்தனர். ஆனால் அந்த எண்ணம் நிறைவேறவில்லை. 1914-ல் இங்கிலாந்து ஜெர்மனியோடு பொருதும் பொழுதாவது அயர்லாந்து அடிமைத்தனத்தை எதிர்த்துத் தன் 'ஆயுதம் தாங்கிய ஆட்சேப'த்தைத் தெரிவிக்க வேண்டும் என்று தொண்டர்கள் தீர்மானித்தார்கள். ஒவ்வொரு தலைமுறையும் அந்நிய அரசுக்கு எதிராகப் போரிட்டிருக்கையில்,அவர்கள் தலைமுறைமட்டும் வீணாய்க் கழியக்கூடாது என்று கருதினார்கள். ஜெர்மானியரை அயர்லாந்தின்மேல் படையெடுத்து வரும்படி அவர்கள் கேட்கவில்லை. ஆனால் அவர்களிடமிருந்து ஆயுத உதவி கோரினர். அச்சமயத்தில் மகத்தான தியாகங்களைச் செய்யாவிட்டால், பூரண சுயேச்சைக் கொள்கையை ஜனங்கள் மறந்துவிடக்கூடும் என்று அவர்கள் துணிந்தார்கள். அதே சமயத்தில் ஜனங்கள் எப்படி இருந்தார்கள் என்றால், ஆங்கிலக் கொடியின் சின்னங்களை அணிந்து ராஜ வாழ்த்துப் பாடிக்கொண்டிருந்தார்கள்! அரசியல் தலைவர்கள் யுத்தத்தில் இங்கிலாந்துக்கு வெற்றி வாங்கிக் கொடுப்பதே அயர்லாந்தின் மதக் கடமை என்று பறை சாற்றி வந்தனர்! பத்திரிகைகளிலெல்லாம் ஆங்கிலப் படைகளையும் ஆங்கில ஜனங்களையும் பற்றி பத்திபத்தியாகப் புகழுரைகள் வெளிவந்தன. இந்த இருள்-பிழம்பினூடே தொண்டர்கள் மட்டும் உறுதி கலையாமல் இருந்தனர். தொழிற் சங்கத்திலிருந்து இருநூறு தொண்டர்கள் அவர்களுக்கு உதவியாக வந்தனர். தொண்டர்களுக்குள்ளே எழுச்சியைப்பற்றி மிகுந்த பரபரப்பு ஏற்பட்டது. ஆனால், அவர்கள் தலைவர்களுக்குக்கூட என்ன நடக்கப்போகிறது என்பதை அறிவிக்கவில்லை. எல்லாம் இரகசியமாகவே இருந்தது.

அமெரிக்க ஐக்கிய மாகாணம் அக் காலத்தில் யுத்தத்தில் கலந்துகொள்ளாமையாலும், சுதந்திர வெறி கொண்ட ஐரிஷ்காரர் பலர் அங்கு இருந்தமையாலும், தொண்டர்களுக்குப் பல சௌகரியங்கள் கிடைத்தன. அங்கிருந்த ஐரிஷ் சங்கத்தின் மூலம் அவர்கள் ஜெர்மனியுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொண்டனர். ஜெர்மானிய ஸ்தானீகரும் அதற்கு உதவி புரிந்தார். அதே சமயத்தில் ஸர் ரோஜர் கேஸ்மென்டு என்னும் தேசபக்தர், ஆங்கிலேயரின் கையில் அகப்படாமல் ஜெர்மனிக்குத் தப்பிச் சென்று, அங்கு ஆங்கிலப் பட்டாளத்திலிருந்து ஜெர்மானியரால் கைதி செய்யப்பட்ட ஐரிஷ் யுத்தக் கைதிகளைப் புரட்சிப் படையில் சேருமாறு தூண்டிவந்தார்.

தொண்டர் படையின் விரோதிகள், பூரண சுதந்திரம் வேண்டுவோர் ஜெர்மனியுடன் சதியாலோசனை செய்வதாயும், ஜெர்மன் பணத்தை லஞ்சமாகப் பெற்று வேலை செய்வதாயும் கூக்குரல் கிளப்பினார்கள். பத்திரிகைகளும் அவர்களைப் பழித்தன. அங்கியேயில் உண்மையான விஷயங்களை வெளியிட்டுப் பொதுஜன அபிப்பிராயத்தை ஒழுங்குபடுத்தவேண்டியது அவசியமாயிற்று. கிரிபித், நூற்றைம்பது பவுனை மூலதனமாகக் கொண்டு, ஒரு சிறு தினசரிப் பத்திரிகையை ஆரம்பித்தார். வெகு சீக்கிரத்தில் அரசாங்கம் அதையும், 'ஐரிஷ் சுதந்திரம்', 'ஸின்பீன்' போன்ற பத்திரிகைகளையும் நசுக்கிவிட்டது. கிரிபித் ஊக்கம் தளராது 'கத்தரியும் பசையும்' என்ற பத்திரிகையைத் தொடங்கி, வாரம் இருமுறை வெளியிட்டுவந்தார். வேறு பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளைக் கத்தரித்து ஒன்றுசேர்த்து ஒட்டி, அதைப்

பார்த்து அப்படியே அச்சிட்டுப் பத்திரிகையாக வெளியிட்டுவந்தார். இதர பத்திரிகைகளில் வரும் செய்திகளே அதில் வெளியிடப்படினும், அச்செய்திகள் தொகுக்கப்பட்ட முறை தேசீயப் பிரசாரத்திற்கு ஏற்றதாயிருந்தது. இரண்டு மாத காலத்தில், அரசாங்கம் அதன்மேலும் சீறிப் பாய்ந்து, அதையும் விழுங்கிவிட்டது. தொண்டர்கள் அதிலிருந்து தங்கள் பத்திரிகைகளை பெல்பாஸ்டில் அச்சிட்டுக் கொண்டுவந்தனர். பெல்பாஸ்ட் மிகுந்த ராஜவிசுவாசமுள்ள பிரதேசமான வட அயர்லாந்தின் தலைநகர். ஐரிஷ் வாலிபர்கள் பட்டாளத்தில் சேரக்கூடாது என்பதைப்பற்றியும் தொண்டர்கள் பல வழிகளில் பிரசாரம் செய்தனர். இவற்றையெல்லாம் கண்ட சர்க்கார் முக்கியமான தொண்டர்களைக் கைதிசெய்யவும் நாடுகடத்தவும் முற்பட்டது. அதுகாறும் சிறிது சிறிதாக வளர்ந்துவந்த தொண்டர் படை அடக்குமுறையின் உதவியால் விசேஷ வளர்ச்சியை அடைந்தது.

1915-ம் ஹு, ஆகஸ்டுமீ, அமெரிக்காவிலிருந்த ஐரிஷ் தேசாபிமானி ரோஸ்ஸா என்பவர் முதிர்ந்த வயதில் காலமானார். அவருடைய பூதவுடலைத் தாய்நாட்டுக்குக் கொண்டுவரவேண்டும் என்று தொண்டர்கள் தீர்மானித்தனர். அவ்வாறே, அயர்லாந்துக்காகவே வாழ்ந்து, அதற்காகவே போராடி, அதற்காகவே மடிந்த ரோஸ்ஸாவின் உடல் தாய்நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டது. பல்லாயிரக் கணக்கான ஜனங்கள், ஆங்கிலச் சிறைகளிலே பல்லாண்டுகள் கிடந்து புழுங்கிய அவ்வுடலைக் கண்டு வணக்கஞ் செய்தனர். தொண்டர்கள், ராணுவத் தோரணையில் அணிவகுத்து நின்று, தங்கள் ஒப்பற்ற தலைவருக்கு மரியாதை செய்தனர். கல்லறைக்கு அருகே

பிரசங்கங்கள் செய்யப்பட்டன. ஒருவர், 'மரணத்திலிருந்து வாழ்வு தளிர்க்கின்றது; தேசாபிமானிகளாகிய ஆடவர் பெண்களுடைய கல்லறைகளிலிருந்து ஜீவசக்தி பெற்றுள்ள சமூகங்கள் தோன்றுகின்றன.........இத்தகைய கல்லறைகளைக் கொண்டிருக்கும்வரை சுதந்திரமில்லாமல் அயர்லாந்து சமாதானமாக இருக்கப் போவதில்லை!' என்று பிரசங்கித்தார்.

தேசத்தில் நடந்த காரியங்களையும் யுத்தத்தால் நேர்ந்த குழப்பத்தையும் லண்டனில் இருந்த காலின்ஸ் உணராமலில்லை. அவன் தன் நண்பர்கள் பலரைத் தொண்டர்படையில் சேர்த்து யுத்தப் பயிற்சி கொடுத்து வந்தான். லண்டனிலிருந்த தொண்டர் கூட்டத்தைப் போல் ஐரிஷ் சுதந்திரத்திற்காக அந்தரங்க விசுவாசத்துடன் உழைத்த குழாத்தைக் காண்பதரிது. அக் கூட்டத்திற்குத் தாய்நாட்டில் வெகு சீக்கிரத்தில் ஏற்படவிருந்த போராட்டத்தைப்பற்றி ஒன்றுமே தெரியாது. ஆனால், ஏதோ ஓர் பெருங் காரியம் நடைபெறப் போவதாக மட்டும் தெரியும். அக்காலத்தில் இங்கிலாந்தில் சகல வாலிபர்களையும் கட்டாயமாய் ராணுவத்தில் சேர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஐரிஷ் தொண்டர்கள், தாய்நாடு சென்று, கட்டாய ராணுவச் சட்டம் அங்கு அமலுக்கு வராத முறையில், தங்கள் நண்பர்களுடன் தோளோடு தோள் சேர்த்து நின்று போராடவேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

காலின்ஸ், தன்னுடைய விசேஷ வல்லமைக்கு ஏற்றதாக இங்கிலாந்திலும் அயர்லாந்திலும் ஒரு தொழில் கிடைக்காது என்று எண்ணி, அமெரிக்க ஐக்கிய மாகாணத்திற்குச் செல்லலாம் என்று முன்னர் நினைத்திருந்தான். இங்கிலாந்திலிருந்தால், கட்டாய ராணுவச்

சட்டக் கொடுமை! ஐக்கிய மாகாணத்திற்குச் சென்ருல், வாழ்வு முழுவதையும் சூதாட்டமாகக் கருதி, ஆயிரம் ஆயிரமாகப் பொருள் சேர்க்கலாம்! ஆனல் தாய்நாட்டிற்குப் பெரியதோர் அபாயம் ஏற்படப்போகின்ற வேளையிலே, கருமேகங்கள் இடியும் மின்னலும் கொண்டு வானத்தில் காணப்படும் பொழுது, அவன் அன்னையை மறக்கத் துணியவில்லை. பிறந்த நாட்டில் போர்ப் பறை ஒலித்தது. அன்னம் ஊட்டி வளர்த்த அன்னையின் மணிக் கை ஆணை காட்டி அழைத்தது! தொண்டர் படையிலிருந்து ஆணையும் பிறந்தது! இளைஞன் காலின்ஸ் துடித்துக்கொண்டு நின்ருன். ஆனல் கம்பெனித் தொழிலை எப்படி விடுவது? 'ஐரிஷ் படையில் சேரச் செல்கிறேன்; விடை கொடுக்க வேண்டும்' என்று காரியஸ்தரை வேண்டினன். ஐரிஷ் படை என்பது அயர்லாந்தின் சுதந்திரப் படையா, அன்றி அரசாங்கப் படையா? காரியஸ்தர் அரசாங்கப் படை என்றே கருதிக் கொண்டார். அவர், மிகுந்த களிப்படைந்து, காலின்ஸைப் பாராட்டி, கூட ஒரு மாதச் சம்பளமும் கொடுத்து அனுப்பிவிட்டார். காலின்ஸ் அந்தப் பணத்தைப் போர் நிதிக்குச் சேர்த்துக்கொண்டான். இங்கிலாந்தில் மேற்கொண்டு அவனுக்கு வேலையில்லை. அவன், போர்க் கோலம் பூண்டு, 1916-ம் ஆண்டு, ஜனவரி மீ மத்தியில் தாய்நாட்டுக்குப் புறப்பட்டுச் சென்ருன்.

3

ஈஸ்ட்டர் கலகம்

மைக்கேல் காலின்ஸுக்கு வயது இருபத்தாறு ஆயிற்று. போரை எதிர்நோக்கி அவனுடைய தோள்களும் உள்ளமும் துடித்துக்கொண்டிருந்தன. தொண்டர்கள் காலங் கருதிக் காத்திருந்தனர். லண்டனில் காலின்ஸுடன் கூடிவாழ்ந்த நண்பர்கள் பலரும் அவனைப்போலவே தாய்நாடு திரும்பிவந்தனர். லண்டன், லிவர்பூல், மாஞ்செஸ்டர், கிளாஸ்கோ முதலான நகரங்களிலிருந்து பலர் அயர்லாந்துக்கு வந்து, டப்ளின் நகருக்கு அருகேயுள்ள கிம்மேஜ் என்னுமிடத்தில் குடியேறினர். பட்டாளத்தார் போல அவர்கள் பாதுகாப்புக்குத் தலைவர்களை நியமித்துக்கொண்டிருந்தனர். பகைவர்கள் அங்கு புகுந்தால், எதிர்த்துப் போராடவேண்டும் என்று தளவாடங்கள் சேர்த்துவைத்துக் கொண்டிருந்தனர். ஆங்கில நாட்டில் கட்டாயமாய்ப் படையில் சேர்த்துவிடுவார்களே என்று அவர்கள் அஞ்சி வரவில்லை. ஆனால், தங்கள் நாட்டின் பிறப்புரிமையைப் பறித்தவர்களும், பல ஐரிஷ் தேசபக்தர்களை வதைத்தவர்களுமான அந்நியர்க்காகப் போராடவோ, போரில் மடியவோ, அவர்கள் விரும்பவில்லை. அவ்வாறு செய்தல் தேசத் துரோகம் என்பது அவர்கள் கருத்து.

காலின்ஸ் வெளிப்படையாகத் தான் வேலைபார்த்து வருவதாகக் காட்டிக்கொள்வதற்கு, 'கிரெய்க்-கார்ட்னர்'

கம்பெனியில் அமர்ந்திருந்தான். ஆனால், நாள் தவறாது கிம்மேஜுக்குச் சென்று நண்பர்களைச் சந்தித்து வந்தான். **கீட்டிங்** என்ற இடத்திலிருந்த கெயிலிக் சங்கத்துக்கும் அவன் அடிக்கடி போவதுண்டு. அங்கிருந்த **ஸீன் மாக் டயர்முடா** என்னும் வீரசிகாமணியையும் அவன் அடிக்கடி சந்தித்து, அந்தப் பழைய நண்பனுடன் அளவளாவி வந்தான். அங்கு வேறு பல நண்பர்களும் அவனுக்கு அறிமுகமானார்கள். அவனுடைய வீரப் பார்வையும், அன்பும், ஆதரவும், ஒட்டுவாரை ஒட்டிக் கொள்ளும் உற்சாகமும் நண்பர்களைப் பரவசமாக்கி வந்தன. பெண்களின் கூட்டத்தில் அவனுக்கு அதிகக் கூச்சம் எற்படும்; ஆனால், தன்னையொத்த இளைஞர்கள் மத்தியில் மட்டற்ற மகிழ்ச்சியுடன் இருப்பான்.

அவன் சீமையிலிருந்து படையில் சேராமல் தப்பி வந்தவனாதலால், எந்த நேரத்திலும் கைதி செய்யப் படக்கூடியவனா யிருந்தான். ஆதலால் தலைமறைவாக வாழ நேரிட்டது. பின்வாழ்வு முழுதும் பற்பல இடங்களில் மறைந்து வாழவேண்டியிருந்த அவன் அப்பொழுதுதான் அவ்வாழ்க்கையில் இறங்கிச் சிறிது பழகிக்கொள்ள நேர்ந்தது. அடிக்கடி அவன் இருப்பிடத்தை மாற்றிக்கொண்டான். கடைசியாக அவன் வசித்துவந்த இடம் ராத்டௌன் ரஸ்தாவிலிருந்தது.

1914-ம் ஆு யுத்த ஆரம்பத்திலேயே அயர்லாந்தின் சுதந்திரத்திற்காக ஒரு பெரும் போர் தொடுக்கவேண்டுமென்று தொண்டர்கள் தீர்மானித்திருந்த போதிலும், அதற்குரிய சமயம் வாய்க்கவில்லை. முன்னர் 1848-லும் 1865-லும் செய்த தவறுகளும், அடைந்த தோல்விகளும், மறுபடி தோன்றக்கூடாவே என்று பலருக்குக் கவலை.

தொழிலாளர் இயக்கத்தின் தலைவனாயிருந்த **ஜேம்ஸ் கன்னோல்லி** அப்படிக் கவலைப்பட்டவர்களில் ஒருவன். ஆனால், அரிய சந்தர்ப்பம் வாய்க்கும் பொழுது அதைக் கைநழுவ விடக்கூடாது என்று அவன் கருதினான். வெற்றி தோல்வி ஒருபுறமிருக்க, ஆட்சிமுறையின் கொடுமையை ஆயுதந் தாங்கி ஆட்சேபித்துக் கொண்டிருக்க வேண்டும் என்பது அவன் நோக்கம். தொண்டர்களுடைய கருத்தும் அவனுடையதற்கு மாறு பட்டதன்று. இவர்கள் பலரும் கூடிக் கலந்தபின், எழுச்சிக்கு வேண்டிய தேதி குறிப்பிடப்பட்டது. ஆயு தங்கள் வேண்டி ஜெர்மனிக்கு வேண்டுகோள் அனுப்பப் பட்டது. அதன்படி ஜெர்மனியும் எழுச்சி ஏற்படும் தினத்தில் கப்பலில் ஆயுதங்களை அனுப்ப இசைந்தது. இவ்விஷயங்களைப்பற்றித் தொண்டர்களிலேயே அநே கருக்கு முழு விவரமும் தெரியாது. அங்கிலேயில் அதி காரிகள் எங்ஙனம் அறியக்கூடும்? அவர்கள் ஆயுதங்கள் இல்லாமையால் புரட்சி யொன்றும் தோன்ருது என்ற திடநம்பிக்கையுடன் பேசாதிருந்தனர்.

எழுச்சிக்குக் குறிக்கப்பட்ட தினம் ஏப்ரல் மீ 23உ ஞாயிற்றுக்கிழமை. தொண்டர் படையின் தலைமைக் காரியாலயத்தார் அன்று தினம் தேசம் முழுதும் தொண்டர்கள் அணிவகுத்துச் சென்று சாதுரியமான வீரச் செயல்கள் புரியவேண்டும் என்று அறிக்கை வெளி யிட்டனர். அந்த 23உ ஈஸ்ட்டர் விழாவாகும். ஈஸ்ட்டர் திருநாள் கிறிஸ்துபெருமான் கல்லறையிலிருந்து உயிர்த்து எழுந்ததன் ஞாபகார்த்தமாகக் கொண்டாடப் படுவது. அயர்லாந்து உயிர்த்து எழுவதற்கும் அதே தினம் குறிக்கப்பட்டது! டப்ளின் நகரில் மட்டும் 3,000 தொண்டர்கள் இருந்தனர். தேசம் முழுதிலும் 18,000

தொண்டர்கள் குழுமியிருந்தனர். அவர்கள் துணையால் சுதந்திரப் போரில் வெற்றி கொள்ளலாம் என்று வாலிப அயர்லாந்து துணிந்து நின்றது. அதிகாரிகள் உண்மையில் விழித்துக்கொள்ளாவிடினும், இடையிடையே சிற்சில தொண்டர்களைக் கைதிசெய்து வந்தார்கள். தொண்டர்கள் ஆயுதங்களைப் பெற முடியாதபடி தடுத்தும் வந்தார்கள்.

அமெரிக்காவிலிருந்து ஒரு ஜெர்மன் கப்பலில் ஆயுதங்கள் வருவதாயும், அக்கப்பல் 21, 22-ம் தேதிகளில் அயர்லாந்தை அடையக்கூடும் என்றும், ஈஸ்ட்டர் விழாவன்று ஓர் எழுச்சி ஏற்படலாம் என்றும், ஏப்ரல் மாதம் 16-ம் தேதி அயர்லாந்திலுள்ள பிரிட்டிஷ் படையின் சேனாதிபதிக்குத் தகவல் கிடைத்தது. அதனால் கடற்கரை முழுதும் காவல் செய்யப்பட்டு வந்தது. என்னவாயினும், எழுச்சியைப்பற்றி சர்க்காருக்கு நம்பிக்கை ஏற்படவே யில்லை.

எழுச்சிக்குச் சில இன்னல்களும் நேர்ந்தன. முதலாவதாகத் தொண்டர்படைப் பஞ்சாயத்தின் தலைவனான மாக்னீல் எழுச்சிக்கு விரோதமா யிருந்தான். முக்கியமான சில தொண்டர்கள் தங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்குமாறு அவனைப் பணிந்து வேண்டினர். அவன் இசையவில்லை. இத்துடன் வேறொரு கவலையும் ஏற்பட்டது. ஜெர்மனிக்குச் சென்றிருந்த ஸர் ரோஜர் கேஸ்மென்டு, போதிய ஆயுதங்கள் இல்லாமையால் எழுச்சி பயனற்றதாகும் என்று எண்ணி, அதை அறிவிக்க ஒரு நீர்மூழ்கிக் கப்பலில் அயர்லாந்துக்கு வந்தார். அவருடன் வந்த இரு நண்பர்கள் உள் நாட்டில் புகுந்துவிட்டனர். ஆனால், ஸர் ரோஜர் மட்டும் போலீஸாரால் கைதியாக்கப்

பட்டார். அயர்லாந்துக்கு உதவியாக ஆயுதங்களைத் தாங்கி வந்துகொண்டிருந்த 'ஔட்' என்னும் ஜெர்மன் கப்பல், தந்திரமாக நார்வே தேசத்துக் கொடியைப் பறக்கவிட்டுக்கொண்டிருந்தபோதிலும், ஆங்கிலக் கப்பல் ஒன்று அதைக் கண்டுபிடித்து கோப் துறைமுகத்தை நோக்கித் துரத்திக்கொண்டு வந்தது. 'ஔட்' கப்பலில் 20,000 துப்பாக்கிகளும், பல யந்திரத் துப்பாக்கிகளும் இருந்தன. இத்தனை ஏராளமான ஆயுதங்களும் வெடி மருந்தும் ஜெர்மனியின் பகைவர்கள் கையில் சிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டது. ஆனால், ஜெர்மன் மாலுமிகள் அப்படி விட்டுவிடவில்லை. கப்பல் துறைமுகத்தை நண்ணியதும், அவர்கள் வெடிமருந்தைக் கொளுத்திக் கப்பலைக் கடலுக்குள் ஆழ்த்திவிட்டார்கள்! பிறகு அலைகளின் மேலே மிதந்துகொண்டிருந்த அந்த மாலுமிகளை ஆங்கிலேயர் பிடித்துக் கைதிசெய்து கொண்டு போயினர்.

தொண்டர்களுக்கு இத்தனை இடர் போதாதென்று டப்ளின் நகரிலிருந்து முக்கியமான ஏற்பாடுகளின் பொருட்டுச் சென்றுகொண்டிருந்த மூன்று தொண்டர்கள் கடலில் விழ்ந்து மடிந்தார்கள். அவர்கள் சென்று கொண்டிருந்த மோட்டார் கார் தவறுதலாகத் திருப்பப் பட்டுத் தலைகீழாகக் கடலுக்குள் பாய்ந்துவிட்டது! காரின் சாரதி மட்டும் உயிர்தப்பினான்.

இந்தச் சம்பவங்களால் தொண்டர்கள் கலங்க வில்லை. ஆனால், மாக்னீல் எப்படியாவது எழுச்சியைத் தடுத்துவிட வேண்டும் என்று முயன்றான். 22உ, எழுச் சிக்கு ஏற்பாடு செய்தவர்களைக் கலந்துகொள்ளாது, அவன் 'ஞாயிற்றுச் சுதந்திரன்' என்னும் பத்திரிகையில் கீழ்க்காணும் அறிக்கையை வெளியிட்டான்:

'நெருக்கடியான நிலைமையினல், நாளை ஈஸ்டர் ஞாயிற்றுக் கிழமைக்காக ஐரிஷ் தொண்டர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் எல்லா உத்தரவுகளின்படி ஊர்வலங்கள் அணிவகுத்துச் செல்லல் முதலியவற்றில் ஒன்றும் நடைபெருது. ஒவ்வொரு தனிப்பட்ட தொண்டனும் இவ்வுத்தரவின் ஒவ்வோர் அம்சத்திற்கும் கண்டிப்பாகக் கீழ்ப்படிய வேண்டியது.'

இந்த அறிக்கை தொண்டர்களுக்குள்ளே பெருங் கலக்கத்தை யுண்டாக்கிவிட்டது. மாற்ற முடியாத சில காரியங்கள் முன்கூட்டியே நிகழ்ந்திருந்தன. டப்ளின் நகரில் போராட்டத்தைத் துவக்கவேண்டிய ஊர்வலம் மறுநாள் மாலை நான்கு மணிக்கு ஏற்பாடா யிருந்தது. ஆதலால், எழுச்சியை நடத்தித்தீரவேண்டும் என்று துணிந்த முக்கியஸ்தர்கள் அதற்கு விரோதமாயிருந்த தொண்டர் படையின் பொதுக் காரியதரிசியைக் கைதி செய்து, போராட்டம் ஏற்படும்வரை காவலில் வைத்து விட்டார்கள். தொண்டர் படையின் பல பிரிவுகளுக்கும் பலவித உத்தரவுகள் பறந்தன. அதே சமயத்தில் மாக்னீல்-கூட்டத்தாரின் எதிர் உத்தரவுகளும் பறந்தன. மறுநாள் காலை எட்டு மணிக்குத்தான் எழுச்சி நிச்சயமென்று முடிவு கூறப்பட்டது.

அச்சமயம் காலின்ஸ் ஒரு பெருந் தேசபக்தருக்கு மெய்காப்பாளனுக நின்ருன். அவர்தான் **ஜோஸப் பிளங்கெட்** என்பவர். அவர் மரணப் படுக்கையிலே கிடந்து உழன்றுவந்தார். தாய்நாட்டின் விடுதலைப் போரிலே கலந்துகொள்ளும் பெருமை தமக்கும் வேண்டும் என்று அவர் பிடிவாதம் செய்து எழுச்சியில் கலந்து கொண்டார். அன்றுதினம் முழு விவரமும் அறியாத தொண்டர்கள் பலர் நாட்டுப்புறத்திற்கும், கடற்கரைக்

கும், பந்தய ஓட்டங்களுக்கும் சென்றுவிட்ட
பேர்களே தலைமைக் காரியாலயத்தை அ
அவர்களை வைத்துக்கொண்டு நண்பகலில
ஆரம்பமாகிவிட்டது. டப்ளின் நகரத்திலுள்ள
தபால் காரியாலயமும் வேறு பல கட்டிடங்களும் தொண்டர்களால் பிடிக்கப்பட்டன. தபால் காரியாலயமே குடியரசுப் படையின் தலைமை ஸ்தலமாக்கப்பட்டது. அங்கிருந்து பின்கண்ட விளம்பரம் வெளியிடப்பட்டது:

ஐரிஷ் குடியரசின் தாற்காலிக அரசாங்கம்

அயர்லாந்தின் மகாஜனங்களுக்கு

'கடவுளின் பெயராலும், பழைய சமுதாய உணர்ச்சியைக் கொடுக்கும் கழிந்துபோன தலைமுறைகளின் பெயராலும், அயர்லாந்து, எங்கள் மூலமாக தன் கொடியைப் பாதுகாக்கத் தன் குழந்தைகளை அழைத்துச் சுதந்திரத்திற்காகப் போராடுகின்றுள்.

* * * *

'அயர்லாந்தைச் சொந்தமாக்கிக் கொள்வதற்கு அவள் மக்களுக்கே உரிமை உண்டு என்பதையும், அயர்லாந்தின் கதியைத் தீர்மானிப்பதற்கு அவர்களே தவிர்க்க முடியாத-தடையில்லாத முழு உரிமையும் - உடையவர்கள் என்பதையும் நாங்கள் விளம்பரப் படுத்துகின்றேம். நீண்ட காலமாக அந்நிய ஜனங்களும் அந்நிய அரசாங்கமும் அவ்வுரிமையை அபகரித்துக் கொண்டிருப்பினும், அவ்வுரிமையை அழிக்கவில்லை; ஐரிஷ் மகாஜனங்களை அழித்தாலொழிய அவ்வுரிமையை அழிக்க முடியாது. ஒவ்வொரு தலைமுறையிலும் ஐரிஷ் மகாஜனங்கள் தேசீய சுதந்திரத்திற்கும் அதிகாரத்திற்கும் தங்களுக்குள்ள உரிமையை நிலைநாட்டி வந்திருக்கிறுர்கள். சென்ற 300

வருஷங்களுக்கிடையில் அவர்கள் ஆறு முறை தங்கள் உரிமையை ஆயுத பலத்தினுல் நிலைநிறுத்தி யிருக்கிருர்கள்.

'அந்த ஜீவாதார உரிமையை அடிப்படையாகக் கொண்டு, அதை உலகத்தின் முன்னிலையில் உறுதி செய்து, ஐரிஷ் குடியரசை ஒரு தனிப்பட்ட சுதந்திரமுள்ள ராஜாங்கமாக நாங்கள் இதன்மூலம் பிரகடனம் செய்கிருேம். அதன் சுதந்திரத்திற்காகவும், நன்மைக்காகவும், அது மற்ற நாட்டாரின் நடுவே புகழடையவும், நாங்கள் எங்கள் உயிர்களையும், எங்களுடன் ஆயுதம் தாங்கி நிற்கும் தோழர்களுடைய உயிர்களையும் பிணையாக வைக்கின்ருேம்.

'ஐரிஷ் குடியரசு ஒவ்வோர் ஐரிஷ்காரனுடைய விசுவாசத்தையும் பெறுவதற்கு உரிமையுடையதாதலால் அதை வேண்டுகின்றது. குடியரசு மத சுதந்திரத்தையும், பிரஜா சுதந்திரத்தையும், எல்லா மக்களுக்கும் வேண்டிய சம உரிமைகளையும் சந்தர்ப்பங்களையும் கொடுத்துப் பாதுகாப்பதாக உறுதி கூறுகின்றது. அந்நிய அரசாங்கம் முற்காலத்தில் பெரும்பான்மையோரிடத்திலிருந்து சிறுபான்மையோரைப் பிரித்துவைத்துக் கவனமாய் வளர்த்து வந்த வேற்றுமைகளை மறந்து, தேசத்தின் சகல மக்களையும் ஒன்ருகக் கருதி, அவர்களின் சந்தோஷத்தையும் செழிப்பையும் பெருக்குவதாகக் குடியரசு உறுதி கூறுகின்றது. நம்முடைய ஆயுத பலத்தினுல் ஐரிஷ் மகாஜனங்களின் பிரதிநிதித்துவமுள்ள ஆடவர் பெண்டிர் யாவருடைய வாக்கினுலும் தேர்ந்தெடுக்கப்படும் நிலையான தேசிய அரசாங்கம் ஏற்படும்வரை, இந்தத் தாற்காலிக அரசாங்கமே குடியரசின் ஸிவில் நிர்வாகத்தையும் ராணுவ நிர்வாகத்தையும் ஜனங்களின் சார்பாக நடத்திவரும்......'

தாமஸ் ஜே. கிளார்க்

ஸீன் மாக் டயர்முடா   தாமஸ் மாக்டோனுக்

பி. எச். பீயர்ஸ் ஈமன் ஸியாண்ட்
ஜேம்ஸ் கன்னேல்லி ஜோஸப் பிளங்கெட்

தொண்டர்கள் போராட்டத்தில் இறங்கிய பொழுது முன் பின் போர்ப் பயிற்சியற்ற பலரும் உற்சாக மிகுதியினுல் அவர்களுடன் சேர்ந்துகொண்டார்கள். இவ்வாறு சுமார் 1,200 பேர்கள், கிடைத்த ஆயுதங்களையெல்லாம் கைக்கொண்டு, டப்ளின் நகரின் பல பாகங்களிலும் வெளிப்பட்டார்கள். ஆயுதங்கள் சுருக்கம். இருந்த துப்பாக்கிகள் சிலவற்றிற்கும் போதுமான குண்டுகளில்லை. துப்பாக்கிகளும் பல வகையானவை. கையினுல் எறியப்படும் வெடிகுண்டுகளும் தக்க முறையில் செய்யப்பட்டிருக்கவில்லை. இத்துடன் தொண்டர்களிடையே, வயோதிகர்களும் வாலிபர்களும், செல்வர்களும் ஏழைகளும், பல வகுப்பார்களும் காணப்பட்டனர். சாரணர் படையிலிருந்தும் சிறுவர் பலர் வந்து கலந்துகொண்டனர். இச்சிறுவர் கடிதங்கள் கொண்டு செல்லவும் உத்தரவுகளை அறிவிக்கவும் பயன்பட்டார்கள். குண்டு மழையினூடே அவர்கள் துணிந்து பாய்ந்து வந்தார்கள். போர்க் கோலம் பூண்டு நின்ற தொண்டர்களுக்கு உணவு சமைக்கவும், உடைகள் வெளுக்கவும், காயப்பட்டவர்களுக்குச் சிகிச்சை செய்யவும் பல ஸ்திரீகள் முன் வந்தனர்.

முதன்முதலாகச் சில தலைவர்களும் தொண்டர்களும் தபால் காரியாலயத்திலிருந்த ஆங்கிலப் படை வீரரைத் துரத்திவிட்டு, அதைக் கைப்பற்றிக் கொண்டார்கள். குடியரசுக் கொடி அதன்மேல் பறக்கவிடப்பட்டது. தாற்காலிக அரசாங்கத்தின் அங்கத்தினருள் இருவர் நீங்கலாக மற்ற யாவரும் அங்கே சென்று தங்கினார்கள். ஜேம்ஸ் கன்னேல்லி படைகளுக்குத் தலைமை வகித்து

நடத்தினன்: ஒகானல் பாலத்தின் இருபுறங்களிலும் இருந்த கட்டிடங்கள் யாவும் தொண்டர்கள் கைவசமாயின. தொழிற்சங்கத் தொண்டர்கள் சுமார் 24 பேர்கள் டப்ளின் மாளிகையைப் பிடிப்பதற்கு விரைந்து சென்றார்கள். அம்மாளிகை மட்டும் அவர்கள் கையில் சிக்கியிருந்தால், தேசம் முழுதும் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டிருக்கும். ஆனல் அங்கிருந்த காவற்காரன், தொண்டர்கள் உள்ளே புகுமுன்னல், இரும்புக் கதவை அடைத்துவிட்டான். ஒரு போலீஸ்காரன் கொல்லப்பட்டான். தொண்டர்கள் வெளியேறி நகர மண்டபத்தையும் வேறு பல கட்டிடங்களையும் பிடித்துக்கொண்டு அங்கிருந்து மூன்று நாள் அரும் போர் செய்தார்கள். தொண்டர்களிற் பலரும் அவர்கள் தலைவனும் களத்தில் மடிந்தனர். சாரணர்கள் சிலர் பீனிக்ஸ் தோட்டத்திலிருந்த வெடிமருந்துச்சாலையில் தீவைக்க ஓடினர். மருந்தைப் பற்றிக்கொள்ளு முன்னல் எதிரிகள் தீயை அணைத்துவிட்டார்கள். பல தண்டவாளங்களும் பாலங்களும் வெடிமருந்தினல் தகர்க்கப்பட்டன. முதலாவது படை மாதாகோவில் தெருவிலும் அதன் பக்கத்திலும் பலவிடங்களைப் பிடித்துக்கொண்டது. இரண்டாவது படை ஒரு தொழிற்சாலையையும் பல மாளிகைகளையும் பிடித்துக்கொண்டது. மூன்ருவது படைக்கு, இப்பொழுது பெரும் புகழுடன் ஐரிஷ் குடியரசின் தலைவராக விளங்கும் ஈமன் டிவேலரா தலைமை வகித்திருந்தார். அந்தப் படை ஒரு ரயில் ஸ்டேஷனையும், ரயில் பாதையின் பெரும் பாகத்தையும், பல ரஸ்தாக்களையும், வீடுகளையும் கைப்பற்றியது. நான்காவது படையில், பின்னல் ஐரிஷ் சுதந்திர அரசாங்கத்தின் தலைவராக வந்த காஸ்கிரேவ் பணியாற்றி வந்தார். அதே படையில்தான் கதல் புருகா என்னும் அசகாய சூரன்

உபதளகர்த்தனுக நின்று போராடிவந்தான். போரில் அவன் உடலிலே குண்டுகள் பட்டு இருபத்தைந்து காயங்கள் ஏற்பட்டன. அத்தனை காயங்களுடனும் அவன் சண்டையை நிறுத்தவில்லை.

கலக நெருப்பைப் பற்றவைத்துவிட்டால் ஜெர்மன் ஆயுதங்களை இறக்குமதி செய்யலாமென்பதும், அதன் பின் தேசம் முழுதும் போரில் குதித்துவிடும் என்பதும் தொண்டர்களுடைய நோக்கம். ஆனால், எதிர்பாராத விதமாக ஆயுதக் கப்பல் பிடிக்கப்பட்டுவிட்டது. மாக்னீல் எழுச்சிக்கு எதிராக உத்தரவுகள் பிறப்பித்தான். தேசத்தின் சில பாகங்களில் தொண்டர்கள் போராடிவந்த போதிலும் மொத்தத்தில் அவர்களுடைய ஏற்பாடுகளில் பெருங் குறைகள் இருந்தன. எனினும், டப்ளின் நகரில் சந்திகளிலும் வீதிகளிலும், மிக்க வலிமையுள்ள ஆங்கிலத் துருப்புக்களைச் சிறு சிறு கூட்டத்தாரான தொண்டர்கள் பல நாள் எதிர்த்துப் போராடிவந்தது ஆச்சரியமாகும். தொண்டர்களுடைய செய்கைகளைப் பார்த்தால், வெற்றி எவ்வாருயினும், தாங்கள் தியாகம் செய்யும் பாக்கியம் பெறவேண்டும் என்ற நோக்கமே கொண்டிருந்தார்கள் என்று புலனுயிற்று. ஆனல் போரில் தியாகபுத்தியும் வீரமும் மட்டும் இருந்தால் போதுமா? யுத்த தந்திரம் இல்லாவிட்டால் இவை விழலுக்கு இறைத்த நீரல்லவா! தபால் காரியாலயத்தைப் பிடித்தவர்கள் அதிலே தாற்காலிக அரசாங்கத்தின் தலைவர்களை நிறுத்திவைத்தது பெரும் பிழையாயிற்று. இதுபோலவே, தேவையில்லாத பல கட்டிடங்களைப் பிடித்ததால், அவற்றைப் பாதுகாப்பதற்குத் தொண்டர்களைப் பல விடங்களிலும் சிதறி நிறுத்த

வேண்டியதாயிற்று. எதிரிகளும் சும்மா இருக்கவில்லை. குர்ராக், பெல்பாஸ்ட் முதலிய இடங்களிலிருந்து அவர்கள் ஏராளமான படைகளை வரவழைத்துக் கொண்டார்கள். இங்கிலாந்திலிருந்தும் உதவிப் படைகள் வந்தன. தொண்டர்களைக் காட்டிலும் இருபது மடங்கு அதிகமான பட்டாளத்தார் அவர்களை எதிர்த்து நின்றனர்!

தபால் காரியாலயம் எதிரிகளால் முற்றுகையிடப் பட்டது. தொண்டர்கள் துப்பாக்கிகளால் சுடுவதும் வெடிகுண்டுகள் எறிவதுமாகத் தங்களால் இயன்ற முயற்சிகளைச் செய்து போராடினார்கள். இரண்டு மூன்று தினங்கள் கோரமான யுத்தம் நடந்தபின், கட்டிடம் தீப்பற்றிக்கொண்டது. தாற்காலிக அரசாங்கத்தின் தலைவர்கள், உயிர் தப்பி, அவ்விடத்தைவிட்டு வெளியேறினர்.

ஆரம்பம் முதலே வழிதவறிப் போய்விட்ட அப் போராட்டத்தை நிறுத்தி, தொண்டர்கள் எதிரிகளுக்குப் பணிந்துவிடவேண்டும் என்று தலைமைக் காரியாலயத் தார் தீர்மானித்தனர். ஆங்கிலத் தலைமை அதிகாரிக்கும் இச்செய்தியைச் சொல்லியனுப்பினர். ஏப்ரல் 29-ம் தேதி மாலை 4-மணியிலிருந்து ஆங்கிலத் துருப்புக்கள் சுடுவதை நிறுத்தின. தாற்காலிக அரசாங்கத் தலைவருள் ஒருவராகிய பீயர்ஸ் சகல தொண்டர் படைகளும் போராட்டத்தை நிறுத்தவேண்டும் என்று உத்தரவிட்டார். டப்ளின் ஜனங்கள் அநியாயமாய் மேற்கொண்டு வதைசெய்யப்படாமல் பாதுகாக்கவும், அதிகாரிகளிடம் அடைக்கலம் புகுந்தவர்களுடைய உயிர்களைக் காக்கவும், நிபந்தனையில்லாமல் அதிகாரிகளிடம் சரணடைந்துவிடவேண்டும் என்று அவர் அறிவித்தார்.

நாட்டுப்புறத்தில் வெக்ஸ்போர்டு, மீத், கார்க் முதலான இடங்களில் சிறு சிறு எழுச்சிகளுக்குப் பின்னால் தொண்

டர்கள் அரசாங்கத்திடம் சரணடைந்தார்கள். டப்ளின் நகரத் தொண்டர்கள் பலரும், தங்கள் ஆயுதங்களைச் சமர்ப்பித்து விட்டு, அவ்வாறே சரணடைந்தனர். குடியரசு விளம்பரத்தை வெளியிட்ட தாற்காலிக அரசாங்கத் தலைவர்கள் எழுவரும் அரசாங்கத்திடம் அடைக்கலம் புகுந்தனர். அவ்வெழுவரையும் தொண்டர்களுடைய தலைவர்கள் எழுவரையும் சுட்டுத் தள்ளவேண்டும் என்று **ஜெனரல் மாக்ஸ்வெல்** கொடூரமாக உத்தரவிட்டான். அவ்வாறே அவர்கள் நிறுத்திவைத்துச் சுடப்பட்டனர். வேறு பலருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு, பின்னால் ஜன்ம தண்டனையாக மாற்றப்பட்டது. 122 மனிதர்களும் **மார்கீவிக்ஸ்** என்னும் ஒரு மாதும் ஜன்ம தண்டனையும் பிற தண்டனைகளும் பெற்றனர். மற்றும் கைதி செய்யப்பட்ட பலர் ஆங்கிலச் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டார்கள். ஜெர்மனியிலிருந்து திரும்பி வருகையில் சர்க்காரால் கைதிசெய்யப்பட்டார் என்று மேலே சொன்ன ஸர் ரோஜர் கேஸ்மென்டுக்கும் இங்கிலாந்தில் மரண தண்டனை அளிக்கப்பட்டது.

ஈஸ்டர் கலகம் முழுவதிலும் காலின்ஸ் தபால் காரியாலயப் போராட்டத்தில் கலந்து நின்றான். பிளங்கெட்டின் மெய்ப் பாதுகாப்பு அவனிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது. தபால் காரியாலயம் தீப்பற்றி எரியும் பொழுது அவனுடைய கால்களிலும் எரியுங் கட்டைகள் விழுந்தன. அவனுடைய தலைவர் பிளங்கெட் மரணத் தருவாயில் இருந்தார். அவரைத் தூக்கிக்கொண்டு சென்று, ஒரு வாரப் போராட்டத்திற்குப் பின்னால் அவன் மூர் தெருவை யடைந்து, பின்னர் அரசாங்கத்திடம் ஆஜரானன். அவனும் மற்றக் கைதிகளும் **ரொதுண்டா**

ஆஸ்பத்திரியின் முன்னுலிருந்த மைதானத்தில், ஆடு மாடுகளைப் போல், அடைத்துவைக்கப்பட்டனர். தாய் நாட்டின் பணியே செய்தவம் என்று கருதிய இவ்வீரர் களைச் சூழ்ந்து நாலு பக்கத்திலும் ஆங்கிலத் துருப்பு களின் சனியன் மாட்டிய துப்பாக்கிகள் நீட்டப் பட்டிருந்தன.

நொந்த புண்ணிலே கோல்கொண்டு குத்துவது போல், அயர்லாந்தில் பிறந்தவனுன காப்டன் லீ வில்ஸன் என்பான், சில தொண்டர்களை நிர்வாணமாக்கியும், அவமானப்படுத்தியும், துன்புறுத்தியும் வந்தான். அதைக் கண்ட காலின்ஸ் கரை பொங்கி யெழுந்த வெஞ் சினத்தை அடக்கிக்கொண்டு குமுறினன். அந்த வில் ஸன் நான்கு வருஷங்களுக்குப் பின்னுல் காலின்ஸின் தொண்டர்களால் விண்ணுலகுக்கு அனுப்பப்பட்டான்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை காலையில் கைதிகள் யாவ ரும் ரிச்மண்டு படைவீடுகளின் முன்னுல் கொண்டு வந்து நிறுத்தப்பட்டார்கள். டப்ளின் நகரப் போலீஸ் ஒற்றர்கள் அக் கைதிகளைப் பார்ப்பதற்காக வந்து கூடி நின்றனர். அவர்கள், வளைய வளைய அங்குமிங்கும் சுற்றித் திரிந்து, ஒவ்வொரு கைதியையும் உற்றுப் பார்த்து, ஆங் காங்கே சிலரைப் பொறுக்கி யெடுத்தார்கள். பொறுக்கு தல் என்பது ஆங்கிலத் துப்பாக்கிகளுக்கு இரையாகக் குறிப்பிடுவதாகும். அச் சமயம் காலின்ஸ் கைதிகளின் முன்னணியிலே வீற்றிருந்தான். கழுகுகள் ஆட்டுக் குட்டியின் மேல் பாய்வதுபோல் சுற்றித் திரிந்த ஒற்றர் கள் அவனை நூறு முறை உற்றுப் பார்த்தார்கள். எனி னும், அவன் ஒரு பாவமும் அறியாத இளைஞன் என்று விட்டுவிட்டார்கள். அன்று அவன் பொறுக்கப்பட்டிருந்

தால், அயர்லாந்தின் சரித்திரம் வேறு விதமாக மாறி யிருக்கும். அன்று உயிரோடு விடப்பெற்ற காலின்ஸ் தான், பிற்காலத்தில் ஒற்றர்களின் வர்க்கத்தையே கருவறுத்து, போலீஸ் ஆட்சியையும் ஒழித்துவிட்டான். அப்பொழுது கொலை வெறியுடன் அவனை ஏறிட்டுப் பார்த்த ஒற்றர்கள் பிற்காலத்தில் அவன் பெயர் கேட்கவே அஞ்சினார்கள்.

குண்டுக்கு இரையாவதற்காகச் சுமார் 100 பேர் அனுப்பப்பட்டனர். வேறு சுமார் 300 பேர் நாடுகடத்தப்பட்டு, ஆங்கிலச் சிறைகளிலே தள்ளப்படுவதற்காக இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டனர். காலின்ஸ் முதலில் ஒரு சிறையில் அடைக்கப்பட்டு, பின்னால் பிராங் கோச் என்னுமிடத்திற்கு மாற்றப்பட்டான்.

4

சிறைக்கோட்டம்

இங்கிலாந்தின் வடபாகத்தில் வேல்ஸ் என்பது ஒரு பகுதி. அதில் பிராங்கோச் என்னும் கிராமம் இருக்கிறது. அங்கே விஸ்கி வடிக்கும் தொழிற்சாலை யொன்று கைதிகளை அடைத்து வைப்பதற்காகச் சிறைச்சாலையாக மாற்றப்பட்டிருந்தது. ஐரோப்பா யுத்தத்தில் நேச தேசப் படைகளால் கைதி செய்யப்பட்ட ஜெர்மன் கைதிகள் அங்கே அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். இடையில் அயர்லாந்தில் ஈஸ்டர் கலகம்

என்ற குட்டி யுத்தம் தோன்றிவிட்டதால், அதில் கைதி யாக்கப்பட்டிருந்தவர்களையும் அடைக்கவேண்டி யிருந்தது. ஆதலால் ஜெர்மன் கைதிகள் வேறிடங்களுக்குக் கொண்டு போகப்பட்டு, அதேயிடத்தில் ஐரிஷ் கைதிகள் வைக்கப்பட்டார்கள். சுற்றிலும் முள் கம்பியால் வேலி போடப்பட்டிருந்தது. ஈஸ்ட்டர் கலக சம்பந்தமாய்க் கைதி செய்யப்பட்ட 1,800 ஐரிஷ்காரர்கள் அங்கே இருந்தனர்.

ஐரிஷ் கைதிகளில் பலர் ஒரு குற்றமும் செய்யாதவர்கள். ஸின்பீன் இயக்கத்தில் அனுதாப முள்ளவர்கள் என்று யார் யாரைப்பற்றி போலீஸாருக்குச் சந்தேகம் ஏற்பட்டதோ அவர்கள் அனைவரையும் கைதி செய்து சிறையிட்டது அதிகாரிகளின் பெருந் தவறாக முடிந்தது. நிரபராதிகள் துன்புறுத்தப்பட்டதைக் கண்ட ஜனங்கள் ஆத்திரங்கொண்டு ஆட்சிமுறையை வெறுக்க ஆரம்பித்தார்கள். தொண்டர்களிடம் முன்னால் அநுதாபமில்லாதவர்கள் படிப்படியாக அவர்களை நேசிக்கத் தொடங்கினார்கள்.

சிறைக்குள்ளேயும் அதிகாரிகளின் நினைப்புக்கு நேர் மாறாக முடிந்தது. தீவிரமான புரட்சிக்காரர்களும், மிதவாதிகளும், ஒன்றுமே அறியாத இளைஞர்களும் தேசத்தின் பல பாகங்களிலிருந்தும் கைதி செய்யப்பட்டு ஒரேயிடத்தில் அடைக்கப்பட்டதால், அவர்களுக்குள்ளே நேசப்பான்மையும் ஒற்றுமையும் வளர்ந்துவந்தது. உணர்ச்சியற்றவர்கள் உணர்ச்சி மிக்கவர்களுடன் பழக நேர்ந்ததால், தாங்களும் ஊக்கமடைந்தார்கள். எல்லோரும் கருத்தொருமித்து, எதிர்காலத்தில் சுதந்திரத்துக்காகப் பெருமுயற்சி செய்வதற்கு அடிப்படையான ஒரு

ஸ்தாபனத்தை அமைத்துக் கொள்வதற்கும் அரிய சந்தர்ப்பம் கிடைத்தது. சிறைச்சாலை அந்தத் தேசிய வீரரின் உள்ளத்தை உடைப்பதை விட்டு, அவர்களுடைய ஊக்கத்தையும் உறுதியையும் இடைவிடாது சோதனை செய்து பெருக்கி வந்தது. அது அவர்களின் தேச பக்திக்கு உரைகல்லாய் விளங்கியது. சிறைக் கோட்டையையும், தனியறைகளையும், இருட்டறைகளையும், கால் விலங்கு, கை விலங்கு, கடப்பாரை விலங்கு, நிலை விலங்கு முதலான விலங்குகளையும், இரக்கம் என்பதே இல்லாமல் பசையறக் காய்ந்த மனத்தினரான காவலர்களையும் கண்டு நெஞ்சில் உரமில்லாதவர்களே கலங்குவார்கள். ஆனல் உள்ள வலியுடையார் இவற்றையெல்லாம் பொருட்படுத்த மாட்டார்கள். இடுக்கண் வரும் காலத்தில் அவர்கள் நகுவார்கள். ஆதலால், ஐரிஷ் கைதிகள் சிறைப்பட்டதனல் அவர்களுடைய உள்ளக் கிளர்ச்சி வெதுப்புண்டது. அமைதியாகவும் ஆழமாகவும் அவர்கள் சிந்தனை செய்து, விடுதலையை எப்படி எட்டிப் பிடிக்கலாம் என்று திட்டங்கள் போட ஆரம்பித்தனர். பிராங்கோச் சிறைச்சாலை அவர்களுடைய சதியாலோசனை மணிமண்டபமாக மாறியது.

அந்தச் சிறை இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தது. தென் பாகத்தில் தொழிற்சாலையின் அறைகளிலும், வட பாகத்தில் புதிதாய் அமைக்கப்பட்ட மரக் குடிசைகளிலும் கைதிகள் அடைக்கப்பட்டிருந்தனர். இரண்டு இடங்களுக்கும் நடுவே ஒரு ரஸ்தா இருந்தது. கைதிகள் தங்கள் விஷயங்களைத் தாங்களே கவனித்துக்கொள்ள அநுமதிக்கப்பட்டார்கள். அவர்கள் தங்களில் சிலரைத் தலைவர்களாக நியமித்துக் கொண்டார்கள். மிகுந்த

கட்டுப்பாட்டுடன் தங்கள் காரியங்களை நடத்தி வந்தார்கள்.

காலின்ஸ் வட பாகத்தில் அடைக்கப்பட்டிருந்தான். அவன் பிரிவுக்கு ஒரெய்லி தலைவன். 1916-ல் இங்கிலாந்திலிருந்து தாய்நாட்டுக்குத் திரும்பிய பல வாலிபர்கள் அவனுடன் இருந்தனர். அவர்களுடன் காலின்ஸ் மிகுந்த தோழமை கொண்டான். சிறைவாசம் உடலை வருத்தி உள்ளத்தை மெலிவிப்பதாயினும், அவன் அதைப் பொருட்படுத்தவில்லை. எந்த நேரமும் குதூகலத்துடன் துள்ளி விளையாடி வந்தான். நண்பர்களுடன் பற்பல விளையாட்டுகளிலும் ஈடுபட்டான். அவன் தான் இருந்தது சிறை என்பதையே மறந்துவிட்டான். மற்றொருடைய கவலைகளையும் அவன் மாற்றி வந்தான். விளையாட்டுகளுடன், தினந்தோறும் பல மணி நேரம் தனியாக உட்கார்ந்து புத்தகங்கள் பலவற்றைப் படித்தும் வந்தான். ஐரிஷ் பாஷையையும் தேச சரித்திரத்தையும் கற்பதற்கு அவன் மிகுந்த காலத்தைச் செலவிட்டான்.

கைதிகளிலே ஈஸ்டர் கலகத்தைக் கண்டித்தவர்களும் ஆங்கில ஏகாதிபத்தியத்தில் ஆசை கொண்டவர்களும் சிலர் இருந்தார்கள். சிலர், கலகத்தில் ஏற்பட்ட தோல்வியினல் உள்ளம் உடைந்து, மேற்கொண்டு அயர்லாந்துக்குக் கதிமோட்சமே இல்லையென்று கருதினார்கள். வேறு சிலர், போர் வெறி சிறிதும் குன்றாதவராய், எதைச் செய்தாகினும் விடுதலை பெறவேண்டும் என்று கருதினார்கள். அவர்கள் தங்கள் நோக்கத்தை ஈடேற்றிக் கொள்வதற்கு ஒரு தனிச் சங்கத்தை அமைத்துக் கொண்டார்கள். காலின்ஸ் அச் சங்கத்தில் இருந்தான் என்பதைச் சொல்லத் தேவையில்லை. அவனுடைய

தீவிரவாதம் சில கிழவர்களுக்கும் பிற்போக்காளருக்கும் பிடிக்கவில்லை. அவன் அவர்களைப் 'பழங்கம்பளிகள்' என்று ஒதுக்கி வந்தான். அவர்கள் அவனைக் 'கிறுக்கன்' என்றும் 'தீக்கொளுத்தி' என்றும் பழித்தார்கள்.

பிராங்கோச்சில் அடைக்கப்பட்டிருந்த ஐரிஷ்காரர் மீது குறிப்பிட்ட எந்த வழக்குமில்லை. ஆதலால் அவர்களில் விடுதலையை விரும்பினவர்கள் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஓர் ஆலோசனைச் சபையாரிடம் விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. வெறும் விண்ணப்பம் அனுப்பினால் விடுதலை கிடைத்துவிடும். ஆனால், யார் மனுப் போடுவது? ஒருவரும் முன்வரவில்லை. அதிகாரிகள் கைதிகளுக்கு அடங்கிவிடுவார்களா? விண்ணப்பம் போடாவிட்டாலும், போட்டதாக அவர்களாகவே பாவித்துக்கொண்டு, கைதிகளை லண்டனிலிருந்த ஆலோசனைச் சபையார் முன்பு கொண்டுபோய் நிறுத்தினார்கள். காலின்ஸ் உள்ளிட்ட பெரும்பாலோரும் யாதொரு வாக்குமூலமும் கொடுக்க மறுத்துவிட்டனர். அந்த விசாரணை மிகுந்த தமாஷாக இருந்தது. கைதிகள் சிறைகளுக்கு உள்ளேயோ வெளியேயோ தள்ளப்படும் உரிமை அதிகாரிகளுக்குத் தானே உண்டு. ஆதலால், தாங்கள் சிறையை விட்டு வெளியேற முடியாது என்று கைதிகள் பிடிவாதஞ் செய்தால், அவர்களை வெளியேற்றுவதுதானே தக்க தண்டனை! அவ்வாறு பலர் உடனே விடுதலை செய்யப்பட்டார்கள். மூன்றில் ஒரு பாகத்தினரே மீண்டும் சிறைக்கு அனுப்பப்பட்டார்கள்.

இதற்குப் பின்பு சிறைக்குள்ளே குழப்பமும் கொடுமையும் அதிகரித்துவந்தன. கைதிகளில் 1916-ல்

இங்கிலாந்துக்குப் போன வாலிபர்கள் யார் யார் என்று பார்த்து அவர்களை ஆங்கிலப் படையில் சேர்க்க வேண்டும் என்று அதிகாரிகளுக்குத் தோன்றிற்று. முதலில் அவர்கள் ஸீன், எர்னஸ்ட் என்ற இரு சகோதரர்களைத் தனியே பிரித்து, ராணுவத்தில் சேரும்படி கட்டாயப்படுத்தினார்கள். இருவரும் அதை எதிர்த்து நின்றனர். தனியறை வாழ்க்கை, விலங்குகள், பட்டினி, சித்திரவதைகள், மானக்கேடுகள் ஆகியவற்றில் ஒன்றும் அவர்களைப் பணியவைக்க முடியவில்லை. தாமஸ் என்ற வாலிபனும் இவ்வாறு கட்டாயப்படுத்தப்பட்டுத் தைரியமாக எதிர்த்து நின்றான். இவற்றை அறிந்த ஐரிஷ் ஜனங்கள் வெகுண்டெழுந்து கிளர்ச்சி செய்தார்கள். அதிகாரிகள் அக்கைதிகளை விடுதலை செய்வதைத் தவிர வேறு வழியில்லாமற் போயிற்று.

கட்டாய ராணுவ சேவை ஐரிஷ் கைதிகளுக்குள்ளே மிகுந்த பரபரப்பை உண்டாக்கிவிட்டது. அவர்கள் சுமார் 600 பேர்கள் தென் பக்கத்துச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களில் 8 பேரைச் சிறை அதிகாரிகள் சிப்பாய்களுடைய வீடுகளைச் சுத்தஞ் செய்யும்படி கூறினார்கள். அவர்கள் மறுக்கவே, அவர்களுக்குச் சாதாரணமாய்க் கொடுத்திருந்த சகல உரிமைகளையும் பறித்து, அவர்களை வடபக்கத்துச் சிறைக்கு அனுப்பினார்கள். மறுநாளும் 8-கைதிகள் மறுக்கவே, அவர்களும் வடபக்கத்துக்கு அனுப்பப்பட்டனர்கள். நாள் தோறும் வடபக்கம் போகின்றவர் எண்ணிக்கை அதிகரித்தது. தாமாகவே சில கைதிகள் அங்கே போய் வேலை செய்ய இசைந்தனர். எதற்காக என்றால், இருபக்கத்துச் செய்திகளையும் நன்கு தெரிந்துகொள்ளவும், உரிமை

பறிக்கப் பட்டவர்களுக்கு அவசியமான பொருள்களைத் தாங்கள் கொடுத்து உதவுவதற்காகவுமே. காலின்ஸ் அவர்களுடைய காரியங்களையெல்லாம் முன்னெச்சரிக்கையுடன் கவனித்து ஏற்பாடு செய்துவந்தான்.

அதிகாரிகள் மேற்கொண்டு சில ஐரிஷ் கைதிகளைப் பிடித்து ராணுவத்தில் சேர்க்க முயன்றார்கள். அதனால் சிறைச்சாலை முழுதும் குழப்பமாயிற்று. இங்கிலாந்திலிருந்து முன்னால் தப்பிச் சென்ற வாலிபர்களைக் கண்டு பிடித்து ராணுவத்தில் சேர்க்கவேண்டும் என்றும் அதிகாரிகள் எண்ணினார்கள். அதனால் காலின்ஸும் அவன் தோழர்களும் தங்கள் பெயர்களையும் அங்க அடையாளங்களையும் அதிகாரிகளுக்குச் சொல்லுவதில்லை என்று சங்கற்பஞ் செய்துகொண்டனர். சிறையில் கைதிகளுடைய பெயர்களும் எண்களும் வாசிக்கப்படுவது வழக்கம். அவை வாசிக்கப்படும் பொழுது ஐரிஷ் கைதிகளில் எவரும் பதில் கொடுப்பதில்லை. பல நூறு கைதிகளில் யார் என்ன பெயருடையவர் என்ற விஷயத்தை அதிகாரிகள் அறிய முடியாமலே போயிற்று. ஒருவன் பெயரைக் கூவி அழைத்தால், வேறு சிலர் தாங்கள்தான் அப் பெயருடையவர்கள் என்று முன்வந்தனர். சில சமயங்களில் ஒருவருமே முன்வருவதில்லை. எனவே அதிகாரிகள் ஒரு யுக்தி செய்தார்கள். பின்டன், மைக்கேல் என்ற இரு வாலிபரை எப்படியாவது பிரித்துப் பிடித்துவிட வேண்டும் என்று தீர்மானித்தார்கள். பின்டனுக்கு விடுதலை உத்தரவு வந்திருப்பதாயும், மைக்கேலின் மனைவி நோயுற்றிருப்பதால், அவன் அவளைக் கவனிப்பதற்காகச் சிறிதுகாலம் வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டிருப்பதாயும் அவர்கள் கூறினார்கள். இரண்டு வாலிபர்

களுடைய பெயர்களையும் வாசித்தார்கள். ஒருவரும் முன் வரவில்லை. ஏனெனில், மைக்கேலுக்கு மணம் முடிய வில்லை என்றும், அதிகாரிகளாகக் கற்பனையாக அவனுக்கு ஒரு மனைவியைச் சிருஷ்டித்து அவளை நோயுறச் செய்திருக்கிறார்கள் என்றும் எல்லாக் கைதி களுக்கும் தெரியும். இந்தச் சூழ்ச்சி பயனற்றுப் போகும் வேளையில், சில அதிகாரிகளுக்குப் பின்டனின் உருவம் தெரிந்திருந்ததால், அவனை மட்டும் பிடித்துக் கொண்டு போனார்கள். பின்னர் அதிகாரிகள் தங்களுக் குப் பெயர் தெரிந்தவர்களைச் சிறையின் வடபாகத்திலும், மற்றும் 200 பேர்களைத் தென் பாகத்திலும் அடைத்து வைத்தார்கள். தென் பாகத்திலிருந்த 200 பேர்களும் உடனே உண்ணாவிரதம் ஆரம்பித்தனர். மூன்று நாள் உண்ணாவிரதத்திற்குப் பின்பு, அவர்கள் வட பாகத்தா ரோடு சேர்க்கப்பட்டனர். இதனால் காலின்ஸ் சிறையில் நிரந்தரமான சமாதானம் ஏற்படமுடியாதென்று தெரிந்து கொண்டான். வெளியே செய்வதுபோல், சிறைக்குள்ளும் போராடவேண்டியது அவசியம் என்று உணர்ந்தான். பெயர் வாசிக்கும்பொழுது வழக்கம்போல் தகராறு ஏற்பட்டுக்கொண்டே யிருந்தது.

பிராங்கோச்சில் அடைக்கப்பட்டிருந்த தேசபக்தர் களைத் தவிர, ஈஸ்ட்டர் கலகத்தின் தலைவர்களாகக் கரு தப்பட்ட 122 பேர்கள் வேறு சில ஆங்கிலச் சிறை களில் கொடுந் துன்பங்களிடையே புழுங்கிக்கொண்டிருந் தார்கள். சிறையில் வாடிய தேசபக்தர்களைக் குறித்து அயர்லாந்து முழுவதிலும் பெருங் கிளர்ச்சி ஏற்பட்டது. அமெரிக்கப் பொதுஜனங்களிடையேயும் தீவிரமான பிரசாரம் செய்யப்பட்டது. அமெரிக்கா தன்னுடன்

யுத்தத்தில் சேரவேண்டும் என்று இங்கிலாந்து விரும்பியதால், அதன் அபிப்பிராயத்தை அலட்சியஞ் செய்ய முடியவில்லை. அமெரிக்க ஜனங்கள் ஐரிஷ் தேசபக்தர்களுக்கு அநுதாபம் காட்டினார்கள். இதனால் ஆங்கில அரசாங்கம் திடீரென்று பிராங்கோச் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்ய உத்தரவிட்டது. அதன்படி காலின்ஸூம் அவன் தோழர்களும் விடுதலை செய்யப்பட்டு, டிசம்பர் 24-ம் தேதி டப்ளின் நகரை அடைந்தனர்.

ஜனங்கள் தங்களுக்காகச் சிறை புகுந்த வீரர்களை மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்றார்கள். எட்டு மாதங்களுக்கு முன்னால் இதே ஜனங்கள்தான் தொண்டர்களைப் பழித்தும், அவர்கள் ஜெர்மனியின் ஒற்றர்கள் என்றும், வீண் கலகக்காரர்கள் என்றும் எதிர்த்து நின்றார்கள். அவர்களே இப்பொழுது தொண்டர்களை அன்புடனும் ஆதரவுடனும் எதிர்கொண்டு அழைத்து வந்தார்கள். அடக்குமுறையின் கொடுமை ஜனங்களைத் தொண்டர்களுக்கு ஆதரவாகத் திருப்பிவிட்டது. அதிகாரவர்க்கம் நிதானமாக நடந்திருக்குமானால் தேசிய எழுச்சி வலுவடைந்திருக்க முடியாது. ஆனால் அது அவ்வாறு செய்யாமல், பழிக்குப் பழி வாங்கவேண்டும் என்று முனைந்துவிட்டது. தலைவர்கள் பலரும் தொண்டர்கள் பலரும் சிறையிடப்பட்டார்கள். பலர் துப்பாக்கி முன்னால் நிறுத்திவைத்துச் சுடப்பட்டனர். யாதொரு குற்றமும் செய்யாத நிரபராதிகள் கைதி செய்யப்பட்டும் பலவாறு துன்புறுத்தப்பட்டும் வந்தனர். தாய்நாட்டின் பொருட்டுத் தொண்டர்கள் வீரத்துடன் போர் செய்ததையும், ஆனந்தத்துடனே தூக்குமேடை ஏறிய காட்சிகளையும் கண்ட ஜனங்கள், உள்ளக் கொதிப்படைந்து,

உணர்ச்சி பெற்று, அயர்லாந்தைப் பாதுகாக்கக் கூடியவர்கள் தொண்டர்களே என்று நம்பியதில் ஆச்சரியமில்லை.

ஈஸ்டர் கலகத்தினால் பூர்ண சுதந்திரம் வந்துவிடாது என்பது தலைவர்களுக்கும் பல தொண்டர்களுக்கும் தெரிந்துதானிருந்தது. ஆர்தர் கிரிபித் போன்றவர்கள் அக் கலகத்தினால் அயர்லாந்துக்குப் பெருங்கேடே விளையும் என்று நம்பியிருந்தார்கள். ஆனால், பதினாறு வருடம் ஆங்கிலச் சிறையில் கிடந்துழன்ற டாம் கிளார்க் என்னும் தொண்டர் திலகம், வெற்றி ஏற்படாது என்றாலும் எழுச்சி அவசியம் என்று ஆரம்பத்திலேயே வற்புறுத்திப் பேசினான். அவன் சொன்னதாவது: 'இந்த எழுச்சி தோல்வியுற்றதாயினும், தேசத்தில் ஓர் ஆச்சரியமான மாறுதலை உண்டாக்கும். நாங்கள் மடிவோம்; ஆனால் எங்களுக்குப் பின் ஒரு புதிய அயர்லாந்து உண்டாகிவிடும்.' கலகத்தின் காரணமாக உயிர்ப்பலி வாங்கப்பட்ட ஸீன் மாக் டயர்முடாவும் இதுபோலவே கூறியிருந்தான்: 'பலர் தூக்கில் போடப்படுவார்கள். நான் சுடப்படுவேன். இந்தக் கொலைகளெல்லாம் ஆங்கிலேயருக்கு அநுகூலமான அடிமைப் புத்தியை அடியோடு தொலைத்துவிடக்கூடிய உணர்ச்சியை உண்டாக்கும்.' இத்தகைய மனப்பான்மை கொண்டவர்களால்தான் ஈஸ்டர் கலகம் தோன்றியது. பின்னால் அவர்கள் கூறியபடியே அயர்லாந்து விழித்துக் கொண்டதை உயிரோடிருந்த தொண்டர்கள் கண்ணாரக் கண்டார்கள்.

அயர்லாந்தின் ராஜீய வாழ்வில் பிரதான ஸ்தானத்தை வகித்துவந்த ஐரிஷ் பார்லிமெண்டுக் கட்சியார்

தங்கள் செல்வாக்கை இழந்து வீழ்ந்தனர். அரசாங்கத்தின் கொடுமைகளை அவர்களால் தடுக்க முடியவில்லை. அவர்கள் தலைவர் **ரெட்மண்டு** ஜனங்களால் வெறுக்கப்பட்டார். பார்லிமெண்டில் பிரதம மந்திரி **ஆஸ்குவித்** ஈஸ்ட்டர் கலகத்திற்குக் காரணஸ்தராயிருந்த **பியர்ஸ், மாக்டோனுக், டாம் கிளார்க்** முதலியோரைச் சுட்டுத்தள்ளியாகிவிட்டது என்ற செய்தியை அறிவித்த பொழுது, அங்கத்தினர் பலரும் கரகோஷம் செய்தனர். அப்பொழுது அங்கிருந்த ஐரிஷ் அங்கத்தினர் அரசாங்கத்தின் கொடுமையைக் கண்டிக்காது மௌனமாயிருந்தனர். இந்த விஷயத்தைப் பொதுஜனங்கள் மறக்கவேயில்லை.

பொதுஜனங்களைப் போலவே மத குருக்களும் புத்துணர்ச்சி பெற்று விளங்கினர். அவர்கள் தொண்டர்களைப் பழித்துவந்ததை நிறுத்திப் பாராட்ட முற்பட்டனர். அப்பொழுது **லிமரிக்** நகரில் **ஓட்வியர்** என்று ஒரு பிஷப் இருந்தார். அவருக்கு உதவியாயிருந்த இரண்டு பாதிரிமார்கள் அரசாங்க விரோதிகளாயிருப்பதாய்ப் புகார் செய்து, அவர்களை வேலையிலிருந்து நீக்க வேண்டுமென்று ஆங்கிலப் படைகளின் சேனாதிபதி **மாக்ஸ்வெல்** பிஷப்புக்கு ஒரு கடிதம் அனுப்பினான். அதற்குப் பிஷப் என்ன பதில் எழுதினார், தெரியுமா? தண்டிக்கப்படவேண்டியவர்கள் அதிகாரிகள்தான் என்று எழுதினார். அவருடைய கடிதத்தின் கடைசிப் பாகத்தைப் பாருங்கள் :

'டப்ளினில் உங்களிடம் சரணடைந்த துர்ப்பாக்கியரான வாலிபர்களின் உயிரைப் பாதுகாக்க இடங் கொடுக்கக் கூடாது என்று நீங்கள் எச்சரிக்கையாக இருந்துவிட்

டர்கள். அவர்களைப்பற்றி நாங்கள் முதலாவது கேள்விப் பட்ட செய்தி யாதெனில், அவர்கள் உயிரோடு நிறுத்தி வைத்துச் சுடப்பட்டார்கள் என்பதே. உங்கள் செய்கையை எண்ணும்பொழுது நான் திடுக்கிடுகிறேன். அது தேசத்தின் மனச்சாட்சியை உல்லங்கனம் செய்ததென்றே நம்புகிறேன். தவிரவும், ஒரு பாவமும் அறியாத நூற்றுக் கணக்கானவர்களையும், ஆயிரக்கணக்கானவர்களையும், எவ்வித விசாரணையுமின்றி நாடு கடத்தியது அதிகாரத்தைத் துர்வினியோகப்படுத்தியது என்றும், அறிவற்றதும், யதேச் சாதிகாரம் பொருந்தியதுமான செயல் என்றும் நான் கருதுகின்றேன். மொத்தத்தில் உங்களுடைய ஆட்சி இந்தத் தேசத்தின் அநீத ஆட்சியின் சரித்திரத்தில் மிகவும் இழிவானதும் இருளடர்ந்ததுமான ஓர் பாகமாகும்.'

ஈஸ்ட்டர் கலகத்திற்குப் பின்பு ஐரிஷ் மக்களிடையே பூர்ண சுயேச்சைக் கொள்கை வலுவடைந்து வந்ததை அறிந்த ஆங்கில அரசாங்கத்தார், சுய ஆட்சி மசோதாவை அமலுக்குக் கொண்டுவர முயற்சித்தனர். அயர்லாந்தின் சுதந்திரத்திற்கு ஜன்மப் பகைவரான ஸர் எட்வர்டு கார்ஸனும் அல்ஸ்டர் வாசிகளும் அதற்கும் தடையாக நின்றார்கள். இதனால் அரசாங்கத்தார் அயர்லாந்தை இரு கூறுக்கி, அல்ஸ்டர் நீங்கலாக மற்ற பாகத்திற்குச் சுய ஆட்சி வழங்கத் தீர்மானித்தார்கள். ஐரிஷ் பார்லிமெண்டுக் கட்சியாரும் அவர்கள் தலைவர் ரெட்மண்டும் நாட்டைப் பிரிவினை செய்ய இசைந்தார்கள். ஆனால் பொதுஜனங்களும் கத்தோலிக் மத குருக்களும் பிரிவினையை எதிர்த்து நின்றார்கள். எதிர்ப்பு அதிகரிக்கவே, பிரிவினை முறை கைவிடப்பட்டது. அத்துடன் ரெட்மண்டு கூட்டத்தாரின் சொற்பச் செல்வாக்கும் சிதைவுற்றது.

அக்காலத்தில், ஈஸ்டர் கலகத்தில் உயிரிழந்தும், நாடு கடத்தப்பட்டும், சிறையிடப்பட்டும் அவதியுற்ற தொண்டர்களின் குடும்பங்களைப் பாதுகாக்க இரண்டு சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. பின்னால் இவ்விரு சங்கங்களும் ஒன்றுசேர்க்கப்பட்டு, 'ஐரிஷ் தொண்டர்கள் சகாய நிதி' என்று ஒரு நிதி வசூலிக்கப்பட்டது. அந்நிதிக்கு மொத்தம் 1,38,000 பவுன் சேர்ந்தது. தீவிர தேசபக்தர்களெல்லாம் அந்நிதியை வசூலித்த 'ஐரிஷ் தேசிய உதவிச் சங்க'த்தில் வேலை செய்து வந்தார்கள். மைக்கேல் காலின்ஸ் விடுதலையடைந்த பின் மூன்று வாரம் வீட்டில் தங்கியிருந்து, டப்ளின் நகரை அடைந்து, பின் அச் சங்கத்தில் ஈடுபட்டு வேலை செய்து வந்தான். நண்பர்கள் பலரும் அவனுடன் ஒத்துழைத்தார்கள். காலின்ஸ் தொண்டர் படையையும் ஐரிஷ் குடியரசுச் சகோதரத்துவ சங்கத்தையும் புனருத்தாரணம் செய்தும் வந்தான். நாளுக்கு நாள் அவனுடைய செல்வாக்கு அதிகரித்துக்கொண்டே வந்தது.

காலின்ஸ் டப்ளினை அடைந்த காலத்தில் அந்நகரிலிருந்த ராஜவிசுவாசம் மிகுந்த 'ராயல் டப்ளின் சங்க'த்தார் கவுண்ட் பிளங்கெட் என்னும் தேசபக்தரை அங்கத்தினர் பதவியிலிருந்து நீக்கிவிட்டனர். இந்தப் பிளங்கெட் ஈஸ்டர் கலகத்தில் தாற்காலிக அரசாங்கத்தின் தலைவராயிருந்து சர்க்காரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஜோஸப் பிளங்கெட்டின் தந்தை. உயிர்ப் பலி கொடுத்த ஒரு தியாகியின் தந்தையா யிருந்த காரணத்தாலேயே அவர் சங்கத்திலிருந்து நீக்கப்பட்டிருந்தார்!

இந்த அநீதியை நீக்கி பிளங்கெட் குடும்பத்தின் பெருமையை நிலைநாட்ட வேண்டும் என்று காலின்ஸ்

கூட்டத்தார் தீர்மானித்தனர். அச்சமயம் வடக்கு ரோஸ்காமன் தொகுதிக்குரிய பார்லிமெண்டு அங்கத்தினர் ஸ்தானத்திற்குத் தேர்தல் நடைபெற விருந்தது. பிளங்கெட் அந்த ஸ்தானத்துக்கு அபேட்சகராக நிறுத்தப் பட்டார். தொண்டர்கள் தீவிரமாய் உழைத்து வந்தனர். உணர்ச்சி ததும்பும் அறிக்கைகள் வெளியிடப்பட்டன. 'நீங்கள் ஏன் கவுண்ட் பிளங்கெட்டை ஆதரிக்க வேண்டும்? ஏனென்றால், உங்களுடைய மக்களும், ஒவ்வொரு ஐரிஷ் தந்தையின் மகனும் உயிர்த்தியாகம் செய்ய வேண்டியதற்குப் பதிலாக, அவர் தம்முடைய மூன்று குமாரர்களையும் தியாகம் செய்திருக்கிறார்........அவரை, டப்ளின் சங்கம் செய்ததுபோல் நீங்களும், வடக்கு ரோஸ்காமனில் அவமானப்படுத்தி, அவர் உங்களுக்குத் தேவையானவரல்லர் என்று ஆங்கில அரசாங்கத்திற்குக் கூறுவீர்களோ? இல்லை! வடக்கு ரோஸ்காமனில் இன்னும் ஐரிஷ்காரர்கள் இருக்கிறார்கள்!' இவ்வாறெல்லாம் அவ்வறிக்கைகள் கூறின. முடிவில் பிளங்கெட்டே அபரிமிதமான வெற்றியடைந்தார். வெற்றிக்குப் பின், அக்கிழவர் தாம் இங்கிலீஷ் பார்லிமெண்டுக்குச் சென்று வீற்றிருக்க விரும்பவில்லை என்று அறிவித்துவிட்டார். இதனால் அவர் அடைந்த வெற்றி அதிகப் பிரகாசமடைந்தது.

தேர்தலுக்குப் பின் காலின்ஸ் 'ஐரிஸ் தேசிய உதவிச் சங்க'த்தின் காரியதரிசியானான். சங்கத்தில் முன்னிருந்த குறைகளையெல்லாம் நிவர்த்தி செய்தான். இவ்வேலையினால் அவன் பல அரிய ஊழியர்களின் நெருங்கிய நட்பைப் பெற்று வந்தான்.

அச்சமயம் அமெரிக்க ஐக்கிய மாகாணம் யுத்தத்தில் இறங்கிய செய்தி அயர்லாந்துக்கு எட்டியது. இங்கி

லாந்தே வெற்றி பெறுமென்று எங்கும் நம்பிக்கை ஏற்பட்டது. ஆதலால் யுத்த முடிவில் நடைபெறும் சமாதான மகாநாட்டில் அயர்லாந்தின் பிரதிநிதிகள் சென்று தங்கள் தேசத்தின் சுதந்திரத்திற்காக வாதாட வேண்டும் என்று பலரும் எண்ணினார்கள். தேசத்திலுள்ள எல்லாக் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து ஒரு பிரதிநிதிக் கூட்டத்தைத் தேர்ந்தெடுக்க வழியில்லாததால், ஸின்பீன், தொண்டர் படை, பிளங்கெட்டின் கட்சி, தொழிற்கட்சி முதலிய தீவிரக் கட்சிகள் மட்டும் ஐக்கியப்பட்டு வேலை செய்ய முன்வந்தன. அவற்றிற்குள்ளும் வேலை செய்வதற்கு இன்றியமையாத அளவுதான் ஒற்றுமை நிலவியிருந்தது.

5

கட்டாய ராணுவச் சட்டம்

பிராங்கோச் சிறையிலிருந்த கைதிகள் விடுதலை செய்யப்பட்டபொழுது ஈஸ்டர் கலகத்தின் தலைவர்களாகக் கருதப்பட்ட 122 பேர்களும் தண்டிக்கப்பட்டிருந்ததால் அவர்கள் சிறையிலேயே கிடந்து வாடினார்கள். அவர்களிற் பெரும்பாலோர் போர்ட்லாந்து, டார்ட்மூர் என்னும் ஆங்கிலச் சிறைகளிலே வைக்கப்பட் டிருந்தனர். அவர்கள் சிறைச்சாலைக்குப் புதிய விருந்தினராயிருந்ததால், அங்கு நடக்கும் கொடுமைகளை எப்படி எதிர்க்க வேண்டும் என்று தெரியாமல் இருந்தார்கள். கொலை

களவு செய்த குற்றவாளிகளைப் போலவே அவர்களும் நடத்தப்பட்டனர். அவர்கள் தங்களை யுத்தக் கைதிகளாக நடத்தவேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். இதனால் சிறைக்குள்ளும் போராட்டம் முற்றிவந்தது. முதலில் லியூஸ் சிறையிலிருந்த கைதிகள் ஒரு சங்கமாகக் கூடி வழிகாட்டினர். ஈஸ்ட்டர் கலகத்தில் அரும் போர் செய்து பெருமையடைந்த வீரரான டிவேலரா அவர்கள் தலைவராக இருந்தார். கைதிகள் அவருடைய தீர்மானங்களுக்குக் கீழ்ப்படிந்து மிகுந்த கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்டார்கள். அவர்களில் ஒரு கைதியை அதிகாரிகள் தண்டித்ததற்காக டிவேலரா வேலைநிறுத்தம் செய்ய ஏற்பாடு செய்தார். பலவிதத் தண்டனைகளையும் பொருட்படுத்தாது கைதிகள் உறுதியுடன் நின்று முடிவில் வெற்றியடைந்தனர்.

சிறைகளுக்குள்ளே புழுங்கிக்கொண்டிருந்த பல தொண்டர்களின் நிலைமையைத் தேச மக்களின் ஞாபகத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்று காலின்ஸ் முதலியோர் கருதினர். அதற்கேற்ற ஒரு சந்தர்ப்பமும் வாய்த்தது. லாங்போர்டு தொகுதியில் பார்லிமெண்டு அங்கத்தினர் ஸ்தானத்திற்குத் தேர்தல் நடக்க வேண்டியிருந்தது. காலின்ஸ் கூட்டத்தார் லியூஸ் சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஜோஸப் மக்கின்னஸ் என்பவனை அபேட்சகனாக நிறுத்திவைத்தனர். சிறைகளில் தேசபக்தர்கள் படுந்துயரங்கள் எங்கும் பிரசாரஞ் செய்யப்பட்டன. கைதியின் உடையோடுகூடிய உருவப்படம் ஒன்று ஆயிரக்கணக்கில் அச்சிடப்பட்டு எங்கும் ஒட்டப்பட்டது. அப்படத்தின் அடியில், 'இவனை வெளியே கொண்டுவர இவனை உள்ளே அனுப்புங்கள்!'* என்று எழுதப்பட்டிருந்தது. அந்த

* 'Put him in to get him out!'

வாலிபனைச் சிறைக்கு வெளியே கொண்டுவர வேண்டுமானால் அவனைப் பார்லிமெண்டுக்குள்ளே அனுப்பினால் தான் முடியும் என்பது இவ்வாக்கியத்தின் கருத்து. அந்தத் தேர்தலில் ஜோஸப்பே வெற்றி பெற்றான். இந்த வெற்றி ஈஸ்டர் கலகத்தின் காரணஸ்தனாயிருந்த ஒருவனுக்குக் கிடைத்து விட்டதால் ஜனங்களின் அபிமானம் எந்தப் பக்கம் திரும்பி நின்றது என்பது தெளிவாயிற்று. இதைக் கண்டு இங்கிலாந்து திடுக்கிட்டது.

ஆங்கிலப் பிரதம மந்திரி லாயிட் ஜார்ஜ் அயர்லாந்தின் நாடிகளைப் பிடித்துப் பார்த்துக்கொண்டேயிருந்தார். லாங்போர்டு தேர்தலுக்குப் பின் அதற்கு ஜுரம் தலைக்கேறிவிட்டதென்று உணர்ந்தார். உடனே ஏதாவது பசப்பு வார்த்தை கூறவேண்டுமென்று கருதி, சுயஆட்சி கொடுப்பதற்காகப் பல ஐரிஷ் கட்சிகளின் பிரதிநிதிகளையும் தாம் கூட்டிவைத்து முடிவு செய்யப் போவதாக அவர் அறிவித்தார். அப் 'பிரதிநிதிகள்' யாவர்? அவர்கள் வெறும் சுயநலப் புலிகளே தவிர ஜனங்களின் பிரதிநிதிகளல்லர். ஜனங்களை ஏமாற்றிச் சுதந்திர வெறியைக் குறைக்கவே மதி மிகுந்த மந்திரி முனைந்து நின்றார் என்பதைத் தீவிரவாதிகள் தெரிந்து கொண்டனர். வீரசுதந்திரம் வேண்டி யெழுந்தவர்கள் வேறு எதில் திருப்தி யடைவார்கள்? மீண்டும் சுதந்திரக் கிளர்ச்சி புயல்காற்றைப் போல் எங்கும் வீசிப் பரந்தது. அவிந்துபோகும் கங்குகளில் அனற்பொறி பற்றவைக்கப்பட்டது. தேசத்தில் ஒரு புதிய ஒளி சுடர்விட ஆரம்பித்தது.

லியூஸ் சிறையிலிருந்த ஐரிஷ் கைதிகள் சிறைக்கு உள்ளும் வெளியும் அதிகாரிகளுக்கு ஓய்வு கொடுக்கக்

கூடாதென்று தீர்மானித்தனர். தங்கள் சொந்த வேலைகளைத் தவிர வேறு வேலைகள் செய்யமுடியாது என்றும், தங்களை யுத்தக் கைதிகளாகவே நடத்தவேண்டும் என்றும் அவர்கள் அதிகாரிகளுக்கு அறிக்கை கொடுத்தனர். அதன் விளைவாக அவர்கள் தனியறைகளியே தள்ளப்பட்டனர். பல நாள் தனிக் கொட்டடிகளில் அடைக்கப்பட்டிருந்தும், தொண்டர்கள் கலங்காமல் உண்ணுவிரதத்தை மேற்கொண்டனர். நாளுக்கு நாள் போராட்டம் வலுத்துவந்தது. அயர்லாந்திலும் வியூஸ் கைதிகளின் சார்பாகப் பெருங் கிளர்ச்சி செய்யப்பட்டது.

ஆங்கிலப் பிரதம மந்திரி தாமாகவே அந்தக் கைதிகளை விடுதலை செய்யவேண்டும் என்று கருதினர். ஆனல் கைதிகளுக்குப் பயந்து விடுதலை செய்ததாக ஏற்படக் கூடாதே என்ற கவலையால், தாமதித்துவந்தார். கடைசியில் ஜூலை மீ 15-ம் தேதி, அயர்லாந்தின் நல்லெண்ணத்தைச் சம்பாதிப்பதற்காக, கைதிகளை விடுதலை செய்வதாக அரசாங்கம் அறிவித்தது. அதன்படி டிவேலரா முதலிய வாலிபச் சிங்கங்கள் யாவரும் தாங்கள் அடைக்கப்பட்டிருந்த குகைகளிலிருந்து வெளிப்பட்டுத் தாய்நாடு சேர்ந்தனர்.

விடுதலையான வீர சிகாமணிகளை டப்ளின் வாசிகள் ஆனந்தத்துடன் வரவேற்றனர். யாவர் மனத்திலும் அயர்லாந்தின் பண்டைப் பெருமையும், அதன் சுதந்திரத்திற்காக உயிரிழந்த தியாகிகளின் ஞாபகமும் கிளர்ந்தெழுந்தன. அறிவும் ஆற்றலும் மிக்க டிவேலரா ஜனங்களின் அளவற்ற அபிமானத்திற்குப் பாத்திரராக விளங்கினர். அவரும் அவர் தோழர்களும் சென்ற இடமெல்லாம் அன்பு அரும்பி, தியாக மணம் கமழ்ந்தது.

மக்கள் பரவசமடைந்து ஆடினர். 'ஒரு வருஷத்திற்கு முன்னுலிருந்த ஜனங்கள் இப்பொழுது எங்கோ மறைந்து விட்டார்கள்; இவர்கள் புதியவர்கள்!' என்று சொல்லக் கூடிய முறையில் அவர்கள் புத்துணர்ச்சி கொண்டு துடித்தனர். 'வாழ்க அடக்குமுறை!' என்று அவர்கள் களிப்புடன் வாழ்த்துவது போல் காணப்பட்டனர். ஏனெனில், நீரின் அளவாக நிற்கும் ஆம்பல் போல் அடக்குமுறையின் அளவுக்குத் தக்கதாகவே சுதந்திர எழுச்சி தோன்றுகிறதல்லவா?

டிவேலரா பார்லிமெண்டு அங்கத்தினர் ஸ்தானத்திற்கு அபேட்சகராக நின்று வெற்றி பெற்ருர். எதிரியைப் பார்க்கிலும் 2,975 ஓட்டுகள் அவருக்கு அதிகமாய்க் கிடைத்தன. வெற்றிக்குப் பின் அவர் பார்லிமெண்டுக்குப் போய்த் தாம் அங்கே அமரப் போவதில்லை என்று அறிவித்துவிட்டார். இந்தத் தேர்தலில் ஒரு விசேஷம் குறிப்பிடத்தக்கது. தொண்டர்கள் மறைவாயிருந்ததை விட்டு, தங்கள் படைக்குரிய உடைகள் அணிந்து, வெளிப்படையாகக் கூட்டங்களிலும் ஊர்வலங்களிலும் கலந்துகொண்டனர்.

காலின்ஸ், வழக்கம்போல், குன்ருத ஊக்கத்துடன் தொண்டர் படையிலும் ஐரிஷ் குடியரசுப் படையிலும் உழைத்துவந்தான். அவனும் அவன் தோழர்களும் 'வாகான் ஹோட்டல்' என்னும் விடுதியில் அடிக்கடி ரகசியமாகக் கூடிப் பேசுவதுண்டு. இந்த விடுதி ஐரிஷ் சுதந்திரப் போரில் ஒரு முக்கியமான ஸ்தானம் பெற்றிருக்கிறது. இங்குதான் காலின்ஸின் திட்டங்கள் பலவும் அரங்கேற்றப்பட்டன. டயர்மீட் லிஞ்ச், ஹாரி போலண்டு என்ற நண்பர்கள் காலின்ஸின் இரு கரங்களாக

நின்று பிரசாரம் செய்துவந்தனர். தேசம் முழுவதும் ஸின்பீன் பிரசாரமும், தொண்டர் படை நிறுவலும் தீவிரமாய் நடந்துவந்தன.

சிறையிலிருந்தவர் யாவரும் விடுதலை செய்யப்பட்டதுடன் அடக்குமுறை ஓயவில்லை. மழை விட்டதே ஒழியத் தூவானம் விடவில்லை. ஆகஸ்டு மாதத்தில் மூன்று தலைவர்கள் ராஜத்துவேஷக் குற்றத்திற்காகச் சிறையிடப்பட்டார்கள். வேறு 40 இளைஞர்களும் கைதி செய்யப்பட்டனர். மறுபடி சிறைக்குள் உண்ணாவிரதம் ஆரம்பமாயிற்று. வெளியில் தேசமெங்கும் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. அதிகாரிகள் கைதிகளுக்குப் பலவந்தமாய் உணவூட்ட முயன்றனர். தாமஸ் ஆஷ் என்ற வாலிபன் ஐந்து நாள் உண்ணாவிரதத்திற்குப் பின் மேட்டர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டான். அங்கு சில மணி நேரத்தில் அவன் ஆவி பிரிந்தது. வாலிபமும், கம்பீரமும், சௌந்தரியமும், சௌரியமும் வாய்ந்த அவ் வீரனுடைய உயிர் பலிகொடுக்கப்பட்டதைக் கண்டு மக்கள் யாவரும் திடுக்கிட்டனர். 30,000 மக்கள் மேட்டர் வைத்தியசாலைக்குச் சென்று அந்த ஷஹீதின் *திருமுகத்தைத் தரிசித்தனர். ஆஷின் உடல், தொண்டனின் உடை அணிவிக்கப்பட்டு, அலங்காரத்துடன் வைக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்தவர் எல்லாரும் உள்ளங் குழைந்து கண்ணீர் வடித்துக் கதறினர். ஒரு தொண்டனின் வீர மரணம் தேசத்தையே தட்டி யெழுப்பிவிட்டது. ஆஷின் இறுதிச் சடங்குகள் தொண்டர்களால் சிறப்புடன் நடத்தப்பட்டன. அவன் மரணத்தால், இரங்காத அரசாங்கமும் இரங்கியது;

* ஷஹீத்-உயிரைப் பலி கொடுத்த தியாகி.

ராஜீயக் கைதிகளுக்குப் புதிய அந்தஸ்துக் கொடுத்தது. ஆஷின் மரணத்தைக் குறித்து விசாரித்த பஞ்சாயத்தாரும் அதிகாரிகளின் நடத்தையைப் பலமாகக் கண்டித்தனர். 50-மணி நேரமாக ஆஷினுடைய படுக்கையும் பூட்ஸுகளும் பிடுங்கப்பட்டு, அவன் குளிர்ந்த தரையில் கிடக்கும்படி செய்ததும், பலவந்தமாய் உணவூட்டியதுமே அவன் மரணத்திற்குக் காரணம் என்று அவர்கள் முடிவு கூறினர். இதன் பின்பு சில கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

அக்காலத்தில் தேசப் புனருத்தாரணத்திற்கு ஏற்ற நிலைமை ஏற்பட்டிருந்தது. பார்லிமெண்டுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் அங்கு செல்லாமல் தவிர்ந்துவிட வேண்டும் என்றும், ஒரு தேசியச் சட்டசபையை அமைத்துக்கொள்ள வேண்டும் என்றும், ஐரிஷ் பாஷையை வளர்க்கவேண்டும் என்றும், தேசியக் கைத்தொழில்களைச் சீர்திருத்தவேண்டும் என்றும், அயர்லாந்தின் தேசியச் சட்டசபை சமாதான மகாநாட்டுக்கு விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும் என்றும் திட்டங்கள் வகுக்கப்பட்டன. இந்தத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு தேசீய இயக்கம் வளர்ச்சியடைந்தது. அமிதவாதமுள்ள தீவிரவாதிகளும் இயக்கத்தில் கலந்துகொண்டு இடைவிடாது கிளர்ச்சி செய்து வந்தனர். காலின்ஸ், லிஞ்ச் முதலியோர் அவர்களின் தலைவர்களாய் விளங்கினர்.

1917-ம௵ அக்டோபர்மீ 25-ந்தேதி ஸின்பீன் தேசீயவாதிகளின் வருஷாந்தர மகாநாடு கூடியது. தேசத்தின் பல பாகங்களிலிருந்தும் ஆயிரக் கணக்கான பிரதிநிதிகள் விஜயஞ்செய்திருந்தனர். மகாநாட்டின்

தலைமைப் பதவிக்கு கிரிபித், பிளங்கெட், டிவேலரா ஆகிய மூவருடைய பெயர்களும் பிரேரேபிக்கப்பட்டிருந்தன. கிரிபித் வீரத்துடன் எழுந்து, தம் பெயரை வாபஸ் வாங்கிக்கொண்டு, யுத்த வீரராயும் ராஜதந்திரியாயும் விளங்கிய டிவேலராவையே தேர்ந்தெடுக்கும்படி வேண்டினர். பிளங்கெட்டும் அதை ஆமோதித்தார். எனவே டிவேலரா தலைவராயும் கிரிபித் உபதலைவராயும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர் மகாநாட்டில் முக்கியமான ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அடுத்து வரக்கூடிய தேர்தலில் ஸின்பீன் அங்கத்தினர் சகல ஸ்தானங்களுக்கும் நின்று, தேர்ந்தெடுக்கப்பட்ட பின் பார்லிமெண்டுக்குச் செல்லாமல், 'டெயில் ஐரான்' என்ற பெயருடன் தேசீயச் சட்டசபையாகக் கூட வேண்டும் என்பதே அத்தீர்மானம்.

ஸின்பீன் மகாநாட்டைத் தொடர்ந்து ஐரிஷ் தொண்டர்கள் மகாநாடும் நடைபெற்றது. தொண்டர் படை எப்பொழுதுமே ஸின்பீன் சங்கத்திற்குக் கட்டுப்பட்டிருக்கவில்லை; ஆதலால் அது சுயேச்சையாகத் தீர்மானஞ் செய்ய உரிமை பெற்றிருந்தது. எந்தச் சமயம் அவசியமானலும் அரசாங்கத்தின்மேல் 'போர் தொடுக்க' நிர்வாக சபைக்கு அதிகாரம் கொடுத்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கட்டாய ராணுவச் சட்டம் என்னும் வாளாயுதம் அயர்லாந்தின் தலைமேல் தொங்கிக்கொண்டே யிருந்ததால், எந்த நிமிஷமும் அது அறுந்து தலைமேல் விழுந்துவிடும் என்ற காரணத்தாலேயே இவ்வாறு நிர்வாக சபைக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. நெருக்கடியான நிலைமையில் மகாநாடு கூட்ட முடியாது என்பதைக் கருதி, வெள்ளத்திற்கு

முன்பே ஆணைபோடப்பட்டது. நிர்வாக சபையில் காலின்ஸ், லிஞ்ச் முதலியோர் அங்கத்தினரா யிருந்தனர். தொண்டர் படை நிர்மாணம் காலின்ஸிடம் ஒப்படைக்கப்பட்டது.

படை நிர்மாணம் எளிய வேலையன்று. காலின்ஸ் முதலாவதாகப் படைக்கு வேண்டிய சட்ட திட்டங்களைப் புதுப்பித்து அமைத்தான். அவன் நிர்மாணித்த சாமர்த்தியத்தினுல்தான் பின்னர் அதிகார வர்க்கத்தின் கொடுமைகளையெல்லாம் தாங்கித் தொண்டர் படை பிழைத்து நிற்க முடிந்தது. அவன் முயற்சியால் புதிது புதிதாகத் தொண்டர்கள் சேர்ந்தனர். உள்ளம் நிறைந்த வீரத்துடன், தொண்டொன்றே குறியாய்க் கொண்ட இளைஞர்கள், கட்டாய ராணுவச் சட்டத்தை எதிர்க்க ஆவல் கொண்டு படையில் கூடி நின்றனர். தொண்டர்கள் வெளிப்படையாகவே யுத்தப்பயிற்சி செய்துவந்தார்கள். அதனுல் அரசாங்கமும் இடை யிடையே குறுக்கிட்டுப் பலரைக் கைதிசெய்து ராணுவச் சட்டப்படி தண்டித்து வந்தது.

1918-ம் ௵ ஏப்ரல் ௴ 3-ந்-தேதி காலின்ஸூம் கைதி செய்யப்பட்டான். ராஜத்துவேஷக் குற்றம் சாட்டப்பட்டு ஜாமீன் கேட்கப்பட்டது. அவன் ஜாமீன் கட்ட மறுத்துச் சிறைபுகுந்தான். அவனுடன் வேறு சில முக்கியமான தொண்டர்களும் சிறை சென்றனர்.

பிரதம மந்திரி லாயிட் ஜார்ஜ் கட்டாய ராணுவச் சட்டத்தைக் கொண்டுவர அதுவே சமயம் என்று பார்த்தார். ஏப்ரல் 13-ம்தேதி அச்சட்டம் பார்லிமெண்டில் நிறைவேறியது. பார்லிமெண்டின் ஐரிஷ் அங்கத்தினர்கள் முன்னதாக எவ்வளவு சொல்லியும் அவர்கள் சொல்

மந்திரி காதில் ஏறவில்லை. ஆதலால் சட்டம் நிறைவேறிய தினத்தில் அவர்கள் பார்லிமெண்டுக்குப் போகவேயில்லை.

அயர்லாந்தில் பிறந்த ஒருவனை வேற்று நாட்டுச் சண்டைக்காகப் போராடும்படி பலவந்தப் படுத்தினால் அவன் மனமுவந்து செய்யமாட்டான் என்பது பிரதம மந்திரிக்குத் தெரியாத விஷயமன்று. அவருடைய நோக்கம் வேறு. ஸின்பீன் இயக்கத்தையும் தொண்டர் படையையும் ஒரேயடியாய் நசுக்கி, ஆழங்காணாத அகழிக்குள் அமிழ்த்துவதற்கு ஓர் ஆயுதம் வேண்டுமல்லவா? அந்த ஆயுதந்தான் கட்டாய ராணுவச் சட்டம். அயர்லாந்தின் சுதந்திர உணர்ச்சியை நசுக்கும் பொழுது உலகத்தார் கட்டாய ராணுவச் சட்டம் அமுலிலிருப்பதால் தான் கொடுமைகள் நடப்பதாக எண்ணிக்கொள்ள வேண்டும் என்பது அதிகாரிகள் கருத்து. அச்சட்டத்தால் விளையவிருந்த எண்ணற்ற தீமைகள் அவர்கள் கண்ணுக்குப் புலனாகவில்லை. புலனானாலும், 'பார்க்கமாட்டோம்!' என்று இருந்துவிட்டார்கள்.

அந்தச் சட்டம் ஐரிஷ் மக்களுக்கு இரண்டு கேள்விகளை விடுத்தது. முதற் கேள்வி: 'நீங்கள் ஜெர்மனியுடன் போர் செய்து ஜெர்மானியர் கையால் மடிய விரும்புகிறீர்களா?' இரண்டாவது கேள்வி: 'அல்லது, எங்களுடன் போர் செய்து எங்கள் கையால் மடிய விரும்புகிறீர்களா?' ஐரிஷ் மக்கள் எவர் கையாலும் மடிய விரும்பவில்லை; வாழவே விரும்பினார்கள். அந்த வாழ்வு சுகவாழ்வு ஆகும்படி சுதந்திரம் வேண்டினார்கள். மடியத்தான் வேண்டும் என்றால், இரண்டாவது முறையில்

மடிவதே சுதந்திர லட்சியத்திற்கு மார்க்கம் என்று கருதினர்.

சட்டத்தை எதிர்த்து நிற்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கட்டாய ராணுவச் சட்டத்தினால் இங்கிலாந்து அயர்லாந்தின் மேல் போர் தொடுத்திருப்பதாகப் பிரசாரம் செய்யப்பட்டது. டப்ளினில் ஸின்பீன், ஐரிஷ் கட்சி, தொழிற்கட்சி முதலிய எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து மகாநாடு கூட்டி சட்டத்தை எதிர்த்து ஒழிக்கத் தீர்மானிக்கப்பட்டது. கத்தோலிக் குருக்களும் போராட்டத்திற்கு உதவியாக முன்வந்தனர். ஒவ்வொரு மாதாகோவிலிலும் கட்டாய ராணுவச் சட்ட எதிர்ப்புப் பத்திரங்களில் ஆயிரக் கணக்கான கையெழுத்துக்கள் வாங்கப்பட்டன. 'தேசப் பாதுகாப்பு நிதி' யொன்று வசூலிக்கப்பட்டது. தொழிலாளர்கள் தேசம் முழுவதிலும் ஒரு நாள் வேலைநிறுத்தம் செய்தனர். சுருங்கச் சொன்னால், அச்சட்டத்தினால் பகைமை கொண்ட சங்கங்கள் எல்லாம் ஐக்கியப்பட்டன; உறங்கினவர்கள் யாவரும் விழித்துக்கொண்டார்கள்.

இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்திலே லாயிட் ஜார்ஜ் நியமித்த ஐரிஷ் சர்வகட்சி மகாநாட்டின் முடிவு ஓர் அறிக்கையில் வெளியிடப்பட்டது. அயர்லாந்தைப் பிளவு செய்யவேண்டும், ஆனால் பல கட்டுப்பாடுகளையுடைய சுதந்திரமும் கொடுக்கவேண்டும் என்று அதன்படி கூறப்பட்டது. ஐரிஷ் தேசபக்தர்கள் அவ்வறிக்கையைக் கண்ணெடுத்துப் பார்க்கவில்லை. போர்க்களத்தில் நின்றவர்களுக்குப் பழைய பஞ்சாங்கம் எதற்கு? ராஜ விசுவாசமுள்ள ஐரிஷ் கட்சியார்கூட அதைத் தீண்டவில்லை. அறிக்கையைத் தயாரித்த கும்பல், 'சர்வ

கட்சி'யும் அன்று 'மகா்நாடு'ம் அன்று என்பது யாவருக்கும் தெரிந்த விஷயமேயாகும்.

ஐரிஷ் தொண்டர் படையின் நிர்வாக சபை தனியாகக் கூடி ஆலோசித்தது. போர் தொடங்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. காலின்ஸ் முதலியோர் ஜாமீன் தொகைகளைக் கட்டிவிட்டு வெளியே வந்தனர். காலின்ஸ் தொண்டர் படையின் உதவித் தலைவனாக நியமிக்கப்பட்டான். அதுமுதல், அவன் அரசாங்க ரகசியங்களை யெல்லாம் முன்கூட்டி அறிந்து, அவற்றிற்குத் தக்கபடி திட்டங்கள் வகுக்க முற்பட்டான். தேசபக்தியுடைய ஒற்றர்கள் சிலர் அவனுக்குத் தோழர்களாயினர். அவர்கள் சர்க்காரில் சம்பளத்தை வாங்கிக்கொண்டு அவனுக்கு ஊழியஞ் செய்துவந்தனர். மேலும், தனியாக உளவு விசாரிக்கவும் காலின்ஸ் சில தொண்டர்களைப் பயிற்சி செய்தான். ஒற்றர்களை வைத்துப் பரிபாலிப்பதில் அவன் இணையற்ற ஆற்றலுடையவனானான்.

மேமீ 15-ம் தேதி அவனுக்குச் சில ரகசியங்கள் வந்தன. அதிகாரிகள் முக்கியமான ஸின்பீனர் பலரைக் கைதிசெய்யப் போவதாகவும், அரசாங்கத் தலைமை ஸ்தலமான டப்ளின் மாளிகையில் தடபுடலாய் வேலைகள் நடந்து வருவதாயும் அவன் அறிந்தான். அன்றிரவு பார்னல் சதுக்கத்தில் 44-வது வீட்டில் ஐரிஷ் தொண்டர்களுடைய நிர்வாக சபை கூடியிருந்தது. காலின்ஸ் எல்லா அங்கத்தினருக்கும் அன்று நடக்கப்போகும் சோதனைகளைப்பற்றி அறிவித்து எச்சரிக்கை செய்தான். முக்கியமான தொண்டர்கள் அன்று வீடுகளுக்குப் போகாமல் மறைந்துகொண்டனர். அன்றிரவு டப்ளினில் பல முக்கியமான ஸின்பீன் தலைவர்களின் வீடுகள் ஏக

காலத்தில் சோதனையிடப்பட்டன. காலின்ஸ் மூலம் தகவல் தெரிந்த சிலர்மட்டும் தப்பித்துக்கொண்டனர். ஆயினும் டிவேலரா, கிரிபித், கவுண்ட் பிளங்கெட், காஸ்கிரேவ் முதலிய எண்பதுக்கு மேற்பட்ட தலைவர்கள் கைதி செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் நாடு கடத்தப்பட்டு, இங்கிலாந்தில் லிங்கன், டர்ஹாம், குளோஸெஸ்டர், ரீடிங், உஸ்க், பர்மிங்ஹாம், ஹாலோவே முதலிய இடங்களில் சிறைவைக்கப்பட்டனர்.

கைதி செய்யப்பட்டவர்களுக்கு ஏதாவது விசாரணை யுண்டா? சாட்சிகள் விசாரிக்கப்பட்டனரா? ஒன்று மில்லை. எல்லோரும் ஜெர்மனியுடன் சதியாலோசனை செய்ததாகச் சொல்லப்பட்டது!

மற்றையோர் கைதிசெய்யப்பட்ட பொழுது காலின்ஸ் தப்பிக் கொண்டான். இரவில் ரஸ்தாவில் போய்க் கொண்டிருந்த பொழுது பட்டாளத்தார் நிற்பதைக் கண்டு, அவன் வேறு தெரு வழியாக மறைந்து சென்று, தொண்டர் படைத் தலைவரைக் கண்டு எச்சரிக்கை செய்யவேண்டும் என்று கருதினன். அவன் பார்க்கு முன்பே அவரைக் கைதிசெய்து கொண்டுபோய் விட்டனர். அன்றிரவு முழுதும் போலீஸார் சோதனை செய்து கொண்டே யிருப்பார்களாதலால், தங்குவதற்குச் சௌகரியமான இடம் எது என்று யோசிக்கையில், கைதியான தொண்டர் படைத் தலைவர் வீடுதான் தக்கது என்று கருதி, அவன் அங்கேயே தங்கி இரவுப் பொழுதைக் கழித்தான்.

6

டெயில் ஜரான்

காலின்ஸுக்கு வயது இருபத்தெட்டாயிற்று. ஆயினும் இருபது வயதுள்ள இளைஞனைப் போலவே காணப்பட்டான். மெல்லிய உடலையும் குழந்தை முகத்தையும் பெற்றிருந்ததால், யாரும் அவன் வயதைக் குறைவாய்த்தான் மதிக்கவேண்டியிருந்தது. அவனுடைய உயரம் ஐந்து அடி பதினொரு அங்குலம். பண்பட்ட அவன் உள்ளத்தின் உணர்ச்சிகளெல்லாம் முகத்திலே மாறி மாறித் தாண்டவமாடின. எப்பொழுதும் அழகான தூய உடைகளையே அவன் அணிவது வழக்கம். சோர்வு ஓய்வு முதலியவை அவனை அணுக அஞ்சின. நின்றவிடத்திலே நிலையாக நிற்கமாட்டான். ஆடியும், பாடியும், ஓடியும் அவன் உழைப்பதைக் கண்ட நண்பர்கள், அந்த இன்ப ஊற்றில் தங்கள் துயரம் கவலையெல்லாம் விட்டொழித்து புதிய ஊக்கம் பெற்றுவந்தனர்.

மற்றெல்லா நண்பர்களைப் பார்க்கினும் காலின்ஸுக்கு மிகச் சிறந்த நண்பன் அவனுடைய சைக்கிள் தான். அநேகமாக அவனை அதனிடமிருந்து பிரிந்து காண்பது அரிது. 1918-ம் வருஷம் மே மாதம் 17-ந் தேதி இரவு அவன் நண்பர்கள் பலர் கைதி செய்யப்பட்டதிலிருந்து பின்னால் 1921-ம் வருஷம் ஜுலை மாதம் 11-ந் தேதி சமாதானம் ஏற்படும் வரை, அவன் நாட்டிலும் நகரத்திலும் அந்த சைக்கிளிலேயே பிரயாணம் செய்து

வந்தான். அவனுடைய அங்க அடையாளங்கள் ஒவ்வொரு போலிஸ்காரனுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தன. பல போலீஸார் அவனைத் தேடிக்கொண்டிருந்தனர். அவர்கள் யாவர்க்கும் நடுவே அவன் நினைத்த பொழுதெல்லாம் சைக்கிளிலே ஏறிக்கொண்டு சுற்றி வந்தான். பகலில் வெளியேற அவன் அஞ்சுவதில்லை. பொய் மீசை, போலி வேடம் முதலிய உதவிகள் இல்லாமலே, அவன் டப்ளின் தலைநகரிலும் மற்ற இடங்களிலும், பல்லாயிரம் போலீஸாரிடையிலும், ஒற்றர்களிடையிலும் திரிந்து வந்தான். தேசீய எழுச்சியை வேரோடு கல்லியெறிவதாகச் சபதஞ்செய்து நின்ற அதிகாரிகள், புரட்சிக்கு வித்தாய், அதிகார ஆணவத்தை உள்ளிருந்தே எரிக்கும் கனலாய் விளங்கிய காலின்ஸை மட்டும் கைதிசெய்யவோ சுட்டுத்தள்ளவோ முடியாமல் இருந்தனர்.

காலின்ஸ் தாய்ப்பாஷையில் இனிமையாகப் பேசுவதோடு ஆங்கிலத்திலும் மிக்க பாண்டித்தியம் பெற்றிருந்தான். அவன் ஆங்கிலத்தில் எழுதினால் அது தெள்ளத் தெளிவாயிருக்கும். அவனுடைய கருத்துக்களுக்கு யாரேனும் தக்க ஆராய்ச்சியுடன் மறுப்பு உரைத்தால் அவன் பொறுமையோடு கேட்பது வழக்கம். ஆனால், சோம்பலினாலோ, கவனக் குறைவாலோ, கோழைத்தனத்தாலோ, எவரேனும் ஆட்சேபித்தால், அவன் பொறுத்துக்கொண்டிருப்பது அபூர்வம். அச்சமயம் அவன் சீறிப் பாய்வான். அவனுடைய எல்லையற்ற ஊக்கமும், இடைவிடாத உழைப்பும், குன்றாத வீரமும் அவனைச் சோம்பேறிகளுக்குப் பணிய விடுவதில்லை. மற்றும் இளைஞர்களைப் பீடிக்கும் பல தீய வழக்கங்களிலிருந்தும் அவன் தப்பியிருந்தான். மதுவகைகளை அவன் மிதமிஞ்சிப்

பருகுவதே யில்லை. ஆனால், சிகரெட்டுகள் மட்டும் அடிக்கடி பிடித்துவந்தான். சில சமயங்களில் நாளொன்றுக்கு ஐம்பது சிகரெட்டுகள் கூடப் புகைத்துவிடுவான். பின்னால் இந்த வழக்கத்தையும் ஒழித்து விட்டான். குறித்த வேலையைக் குறித்த நேரத்தில் செய்துமுடிப்பதிலும், பல பதவிகளை வகித்துப் பல்வேறு கடமைகளை நிறைவேற்றுவதிலும் அவனை வெல்பவர் இல்லை.

அவன் நாளுக்கு நாள் 'அபாயகரமான' வேலைகளில் ஈடுபட்டுவந்ததைக் கண்டு, 'தேசீயப் பாதுகாப்புச் சங்கம்' அவனைக் காரியதரிசிப் பதவியிலிருந்து நீங்கும்படி செய்தது. இதனால் தொண்டர் படை சம்பந்தமாக அதிக வேலை செய்ய நேரம் கிடைத்தது. அக்காலத்தில் செலவுக்குப் பொருளில்லாத கஷ்டம் அவனை வாட்டி வருத்திவந்தது. ஆயினும் அவன், பஞ்சத்திலே பிறந்து, பஞ்சையராய் வாழ்ந்த தன் நாட்டவரை எண்ணி இரங்கினான். வறுமையின் வளர்ப்புப் பண்ணை பராதீனம் என்று வெறுத்தான். அங்கிலையில் பெருஞ் செல்வம் படைத்து ஆனந்தமாய் வாழ்வதைக் காட்டினும், சுதந்திரம் வேண்டி ஆண்டியாய் வாழ்வதே சிறந்தது என்று தானே ஆறுதல் செய்துகொண்டான். உண்ணப் போதிய உணவில்லை. இரவில் தலை சாய்க்க இடமில்லை. ஆயினும், அயர்லாந்திலுள்ள எல்லா ஊர்களும் அவனுக்குச் சொந்த ஊர்; ஐரிஷ் மக்கள் யாவரும் அவனுடைய பந்துக்கள்; நண்பர்களுடைய வீடுகளெல்லாம் அவனுடைய சொந்த வீடுகள்.

ஹாரி போலண்டு, பீஸ்லெய், ஜோ ஓரெய்லி முதலிய சிறைப்படாத நண்பர்கள் காலின்ஸுக்குப் பக்கபலமாக நின்று வேலை செய்துவந்தார்கள். ஸின்பீன் சங்கத்தின் காரிய

தரிசிகள் இருவரும் கைதிசெய்யப்பட்டதால், போலண்டு அவர்களுடைய வேலைகளையும் பார்த்துவந்தான். தலைவர்கள் இல்லாத குறையை இவ்வாலிபர்கள் நன்குணர்ந்து பன்மடங்கு ஊக்கத்துடன் வேலைசெய்து வந்தனர். கதால் புருகா கட்டாய ராணுவச் சட்டத்தை எதிர்த்துத் தக்க ஏற்பாடுகள் செய்வதற்காக ரகசியமாக இங்கிலாந்து சென்றான். அவனுடைய ஸ்தானத்தில் டிக் முல்காஹி தொண்டர் படைத் தலைமையை மேற்கொண்டான். எங்கணும் கோரமான புதுச் சட்டத்தை எதிர்க்க மும்முரமான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

தொண்டர் படைத் தலைமைக் காரியாலயத்தில் காலின்ஸுக்குத் தலைக்குமேல் வேலைகள் குவிந்துகொண்டே யிருந்தன. அவன் படை நிர்மாண அதிகாரி. அத்துடன் உதவித் தளகர்த்தனுகவும் இருந்தான். உண்மையில் பொதுக் காரியதரிசியின் வேலை அனைத்தையும் அவனே பார்த்துவந்தான். ஏனென்றால், பழைய காரியதரிசி சிறையிலிருந்தான். தொண்டர்களிடையே இடைவிடாத பிரசாரஞ் செய்யவும், வரப்போகும் போராட்டத்தைப் பற்றி விவரமாக அறிவிக்கவும், அவர்களைப் பக்குவப்படுத்தவும், ‘அன் டோக்லக்’ என்ற ரகசியப் பத்திரிகை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. பீஸ்லெய் ஆசிரியர் பதவியை ஏற்றுக் கொண்டான். அப்பத்திரிகை நான்கு பக்கங்களே யுடையதாயினும், அனலையும் ஆவேசத்தையும் குழைத்து ஐரிஷ் வாலிபர்களுக்கு ஊட்டிவந்தது. தொண்டர்களைப்பற்றி அதன் முதல் தலையங்கத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது: ‘தொண்டர்கள் ராஜீயவாதிகள் அல்லர். அணிவகுத்துச் செல்லல், விளம்பரக் காட்சிகளில்

சடுபடுதல், ராஜீய வேலைகள் செய்தல் முதலியவற்றிற்காக அவர்கள் நியமிக்கப்படவில்லை. எந்தத் தனி அரசியல் தலைவனையும் அவர்கள் பின்பற்றுவதில்லை. அவர்களுடைய விசுவாசம் ஐரிஷ் ஜனசமூகத்திற்கே பாத்திரமானது. எல்லா யுத்தவீரர்களும் தங்கள் மேலதிகாரிகளுக்குப் பணிவதுபோல் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களின்கீழே பணி செய்கிறார்கள். தலைவர்களுக்குப் பணிவது நபர்களைப் பொறுத்த சம்பந்தங்கள் அல்ல. மரியாதை என்பது பதவிக்கேயொழியப் பதவியிலுள்ள மனிதனுக்கன்று.' தொண்டர் படை எதிர்கால ராணுவமாகவே கருதப்பட்டது என்பது இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

கட்டாய ராணுவச் சட்டத்தை அமல் நடத்த எண்ணிய அரசாங்கம் முதலில் ஜனங்களைப் பயமுறுத்திப் பார்த்தது. இதற்காகப் பல விளம்பரங்கள் செய்யப்பட்டன. 'நிலப்படை, கடற்படை, ஆகாயப்படை முதலியவற்றில் எதில் வேண்டுமாயினும் இஷ்டம் போல் சுதந்திரர்களாகச் சேருகிறீர்களா? அல்லது, எங்கே போய்ச் சேரவேண்டும் என்பதைப் பற்றித் தீர்மானிக்க உரிமை யில்லாமல், உங்களைச் சேரும்படி கட்டாயப் படுத்தும் வரை காத்திருக்கப் போகிறீர்களா? நீங்கள் கொடுக்கவேண்டிய தொகையினரைக் கொடுக்கிறீர்களா? அல்லது கட்டாயத்தினால் அதற்கு மூன்று மடங்கு அதிகமானவர்களை இழுத்துக்கொண்டு போகவேண்டுமா?' இது ஒரு விளம்பரம். இதற்கு 'அன் டோக்லக்', 'அத்தகைய நிலைமை ஏற்படுமானால் ஐரிஷ் தொண்டர்களின் கொள்கை என்ன என்பது முன்னரே முடிவு செய்யப்பட் டிருக்கிறது........ஒவ்வோர் உண்மைத்

தொண்டனும் உயிர்போகும் வரை (ராணுவத்தில் சேர்க்கப்படுவதை) எதிர்க்கவேண்டியது கடமை!' என்று பதில் கூறிற்று. இது மட்டுமோ? இருதிறத்தாரும் பழிக்குப் பழி வாங்கவேண்டும் என்று வெகு விரிவாகத் திட்டங்கள் போட ஆரம்பித்தனர்.

'அன் டோக்லக்' சட்டத்திற்குப் புறம்பாக நடந்து வந்த பத்திரிகை. நெருப்புப் பொறி போன்ற அதன் வாசகங்களைக் கண்ட அதிகாரிகள் அப்பத்திரிகையை வைத்திருந்தவர்களுக்கெல்லாம் கடுமையான தண்டனை விதித்துவந்தனர். அதை அச்சிட்ட அச்சுக்கூடங்களெல்லாம் பறிமுதல் செய்யப்பட்டன. பல கஷ்டங்களையும் பொருட்படுத்தாமல் அப்பத்திரிகை மேலும் மேலும் பகை நெருப்பைக் கக்கிவந்தது. கட்டாய ராணுவச் சட்டத்திற்கு ஆதரவு காட்டுவதைப்பற்றி அப்பத்திரிகை, 'நமக்கு விரோதமாக இந்த அநீதியில், சாதாரணப் பிரஜையோ சிப்பாயோ எவனாயினும், நேரிடையாகவோ, உடந்தையாகவோ உதவிசெய்து வந்தால், அவனை நாம் கொடிய மிருகமொன்றை நடத்துவது போல் நடத்த வேண்டியதைத் தவிர வேறு தயவு தாட்சண்யம் வேண்டியதில்லை' என்று எழுதியிருந்தது. இன்னும், 'நமக்கு விரோதமா யிருப்பது அபாயகரமாகும் என்பதையும், நமக்கு எதிராக இல்லாதிருப்பவர்கள் நம்முடனே சேர்ந்து தீரவேண்டும் என்பதையும் நாம் அவர்களுக்குக் காண்பிக்கவேண்டும்' என்பது அப்பத்திரிகையின் ஆக்ஞை. இவ்வாறெல்லாம் பெரும் போராட்டத்திற்குத் தேசம் தயாரிக்கப்பட்டு வந்தது.

காலின்ஸ் அரசாங்க ஒற்றர்களைக் கைவசப்படுத்தி வைத்துக் கொண்டிருந்த விஷயம் முன்னர் கூறப்பட்

டிருக்கிறது. சில அதிகாரிகளின் நட்பினால் இங்கிலாந்தி லிருந்து முக்கியமான அரசாங்கத் தகவல்களைத் தெரிந்து கொள்ள அவன் ஏற்பாடு செய்துகொண்டான். அயர்லாந்தில் நடக்கும் விஷயங்களை அமெரிக்கா இங்கிலாந்து முதலிய நாடுகளிலிருந்த தோழர்களுக்கு அறிவிப்பதற்கும், அவர்களிடமிருந்து தகவல்கள் தெரிந்து கொள்வதற்கும் அவன் தக்க நபர்களைத் தூதர்களாக நியமித்துக்கொண்டான். ஆயுதங்கள் வரவழைப்பதற்கும், அரசாங்கத்திற்குத் தெரியாமல் சிலரை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கும், வெளியி லிருந்து அயர்லாந்துக்கு அழைத்து வருவதற்கும் கப்பலோட்டிகள் பலருடைய நட்பு அவசியமாயிருந்தது. அதற்காக காலின்ஸ் சில கப்பலோட்டிகளையும், கப்பல் வேலைக்காரர்களையும் சிநேகங் கொண்டான். அவர்களில் கெர், லினிகன், கவனுக் முதலியோர் முக்கியமானவர். உள் நாட்டில் அதிகாரிகள் ஒருவருக்கொருவர் அனுப்பி வரும் தகவல்களும் தபால் இலாகாவில் வேலைபார்த்து வந்த காலின்ஸின் நண்பர்களால் அவனுக்கு அடிக்கடி அறிவிக்கப்பட்டன.

அரசாங்கமும் விசேஷ முன்னேற்பாடுகளைச் செய்து வந்தது. நாடெங்கும் படை சேர்க்கும் ஸ்தாபனங்களை ஏற்படுத்தியது. ஜூன் மாத ஆரம்பத்தில் அது ஓர் அறிக்கையை வெளியிட்டு ஐரிஷ்காரர்கள் பட்டாளத்தில் சேரவேண்டுமென்று கேட்டுக்கொண்டது. அந்த அறிக்கையில், 50-ஆயிரம் ஐரிஷ்காரர் அக்டோபர் முதல் தேதிக்குள் ஆங்கிலப் பட்டாளத்தில் சேரவேண்டும் என்றும், அதற்குப் பின் மாதந்தோறும் 2- அல்லது 3- ஆயிரம் பேர் சேர்ந்துவர வேண்டும் என்றும் குறிப்பிடப்

யட்டிருந்தது. அறிக்கையின் பின்னுல் ஒட்டி நின்ற பயமுறுத்தலை எவரும் உணராமலில்லை. ஆனுல் ராணுவத்தில் ஒருவரும் சேருவதாய்க் காணவில்லை. அதற்குப் பதிலாகத் தொண்டர் படையில் பலர் கூட்டங் கூட்டமாய்ச் சேர்ந்துவந்தனர்.

ஜுலை மாத ஆரம்பத்தில் ஸின்பீன் சங்கமும், தொண்டர் படையும், கெயிலிக் பாஷா சங்கமும், வேறு பல சங்கங்களும் சட்ட விரோதமானவை என்று விளம் பரப்படுத்தப்பட்டன. தேசத்தில் எந்த மூலையிலும் பொதுக் கூட்டமோ ஊர்வலமோ நடத்தக் கூடாது என்று ஆங்கில ராணுவ அதிகாரிகள் உத்தரவிட்டனர். இந்த உத்தரவுகள் வந்தவுடன் பொதுக் கூட்டங்கள் அதிகமாய்க் கூட்டப்பட்டன. மாரி பொழிவது போல் சொற்பொழிவுகள் நடைபெற்றுவந்தன. பேசியவர்கள் எல்லோரும் கைதிசெய்யப்பட்டனர். பந்தய விளையாட்டு கள் கூடத் தடைசெய்யப் பட்டிருந்தும் நிற்கவில்லை. ஜனங்கள் ஆயிரக்கணக்கில் சென்று விளையாட்டுகளைப் பார்த்துவந்தனர்.

நாட்டிலே தன் உத்தரவுகள் காற்றில் பறக்கவிடப் படுவதைக் கண்ட அரசாங்கம் சிறைக்குள்ளிருந்த தேச பக்தர்கள் மேல் சீறிப் பாய்ந்தது. பெல்பாஸ்ட் சிறையில் போலீஸார் உட்புகுந்து, தொண்டர்களை அறைகளுக்கு வெளியே இழுத்துத் தள்ளி, தடிகளால் அடித்தனர். அவர்களுடைய கைகளைப் பின்புறமாகக் கட்டி, தீயணைக் கும் குழாய் மூலம் தேகங்களின் மேல் நீரைப் பாய்ச்சி, மூன்று நாள் அப்படியே நனைந்த உடைகளுடனும் கட்டிய கைகளுடனும் அவர்களை நிறுத்திவைத்தனர். இத்துடன் வேறு தண்டனைகளும் விதிக்கப்பட்டன.

வானம் துளங்கினும் மானம் துளங்காத தொண்டர்கள் இன்னல்களை யெல்லாம் இனிதே ஏற்றுக்கொண்டனர். தண்டனைக் காலம் முடிவடைந்த தொண்டர்களையும் வெளியே விடாது, எல்லாத் தொண்டர்களையும் இங்கிலாந்திலுள்ள சிறைகளுக்கு அனுப்பிவிட்டது அரசாங்கம்.

போர் குமுறிக்கொண்டிருக்கும் பொழுது காலின்ஸுக்கு நோயுண்டாயிற்று. அவன் சுவாசப் பைகளில் இடைவிடாத வலி யேற்பட்டுப் படுக்கையில் சுருண்டு கிடந்தான். நோய் தன்னிடம் கொஞ்சிக்கொண்டிருக்க இடங்கொடுக்கக் கூடாதென்று அவன் தீர்மானித்தான். 'நான் போகும்வரை வேலை காத்திருக்குமா?' என்று அவன் அடிக்கடி வருந்தினன். விரைவில் எழுந்து மீண்டும் தன் வேலைகளை மேற்கொண்டான்.

அயர்லாந்தின் பல பாகங்களிலிருந்தும் முக்கியமான தொண்டர் படை அதிகாரிகளை வரவழைத்து மகாநாடு கூட்டி யோசித்தான். மொத்தம் லட்சம் தொண்டர்கள் சேர்ந்திருப்பதாய்த் தெரிந்தது. காலின்ஸ் ஸின்பீன் நிர்வாக சபையிலும் அடிக்கடி கலந்து கொண்டான். ஏனென்ருல், ஐரோப்பா யுத்த முடிவில் அயர்லாந்தின் சுயேச்சை குறித்துச் சமாதான மகாநாட்டில் தெரியப்படுத்த வேண்டியது அவசியமா யிருந்தது. அக்டோபர் மாத முடிவில் ஸின்பீன் வருஷாந்த மகாநாடு கூட்டப்பட்டு முக்கியமான விஷயங்கள் பரிசிலனை செய்யப்பட்டன.

தொண்டர்கள் அடிக்கடி போராட்டங்களில் ஈடுபட்டுப் பயிற்சி பெற்றுவந்தனர். பெருங் கூட்டத்தாராகிய பட்டாளத்தாரைச் சிறு தொகையினராக நின்று

எதிர்க்கும் முறையை அவர்கள் விரைவில் கற்றுக் கொண்டனர். ஒரு சமயம் ஸின்பீன் தலைமைக் காரியாலயத்தை 700 சிப்பாய்கள் சூழ்ந்து முற்றுகை யிட்டனர். 30 தொண்டர்கள் அவர்களை எதிர்த்து அரும் போர் செய்து அவர்களுக்குப் படுகாயம் விளைத்தனர். கட்டிடத்தில் சில சாளரங்கள் மட்டுமே சேதமாயின. ஆனால், சிப்பாய்களில் பலர் காயமடைந்து வைத்தியசாலைக்குச் சென்றனர். தொண்டர்கள் கைதியாகும் போதும் முன் போல் அமைதியாகக் கைதியாவதில்லை; கைதியாவதற்கு முன்னால் எதிரிகளிடம் போராடிய பின்பே அவர்கள் கைகளில் விலங்கு மாட்ட முடிந்தது. கார்க் நகரில் நெல்லிஸ் என்னும் தொண்டனைக் கைதி செய்தபொழுது, அவன் போலீஸாரை நோக்கிச் சுட ஆரம்பித்தான்! தலைமை அதிகாரிக்குத் தலையில் காயமுண்டாயிற்று. நெல்லிஸ் பின்னால் சிறைவைக்கப்பட்டான். ஆனால், யுத்த சமாதான தினமாகிய நவம்பர் 11-ந் தேதிக்குப் பின் ஐந்து தொண்டர்கள் கார்க் சிறையிலிருந்து அவனை விடுவித்துக்கொண்டு வந்துவிட்டார்கள்.

யுத்தம் முடிந்துவிட்ட பின் ஆங்கில அரசாங்கம் பார்லிமெண்டு ஸ்தானங்களுக்கு அயர்லாந்தில் பொதுத் தேர்தல் நடத்தப்போவதாய் அறிவித்தது. பார்லிமெண்டுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தினர்கள் சீமைக்குச் செல்லாது, அயர்லாந்திலேயே தேசியச் சட்டசபை ஒன்றை அமைத்துக்கொள்ள வேண்டும் என்று வெகுநாளைக்கு முன்னரே ஸின்பீன் கட்சியார் தீர்மானித்திருந்தனர். ஆதலால் தேர்தலில் ஸின்பீன் தலைவர்கள் தீவிரமாய் ஈடுபட்டனர். அபேட்சகர்கள் பெயர்கள் பதிவுசெய்யப்பட்ட தினத்திலேயே 26-

ஸின்பீன் அங்கத்தினர்கள் போட்டியின்றியே வெற்றிபெற்றனர். அப்படி வெற்றிபெற்றவர்களில் சிலர் காலின்ஸ், டிவேலரா, கிரிபித், ஆஸ்டின் ஸ்டாக், டெரென்ஸ் மாக்ஸ்வினி* முதலியோர். பின்னால் தேர்தல் முடிவில் மொத்தம் 69-ஸின்பீனர்களும், 26-அல்ஸ்டர் 'யூனியனிஸ்ட்' கட்சியாரும், 6-பார்லிமெண்டுக் கட்சியாரும் வெற்றிபெற்றனர். தேர்தலில் ஸின்பீன் கட்சியினரின் மகத்தான வெற்றி ஒரு புதிய சகாப்தத்தை ஆரம்பிப்பதாயிருந்தது. தேர்தலில் வெற்றிபெற்ற 69-ஸின்பீனர்களில் 36-பேர் மன்னர்பிரானின் விருந்தினராய்ச் சிறைகளில் இருந்தனர்! 6-பேரைக் கைதிசெய்ய வாரண்டு தயாராயிருந்தது! 3-பேர் நாட்டினுள் பிரவேசிக்கக் கூடாது என்று தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது!

புதிதாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸின்பீன் அங்கத்தினர்களில் வெளியிலிருந்தவர்கள், 'மான்ஷன் மாளிகை' என்னும் அவர்கள் தலைமை ஸ்தலத்தில் இரண்டு மூன்று முறை கூடி, மேற்கொண்டு செய்ய வேண்டிய விஷயங்களைக் குறித்து யோசித்தனர். புதிதாய்க் கூடவேண்டிய குடியரசுச் சட்டசபைக்கு வேண்டிய அமைப்புத் திட்டமும், சுதந்திரப் பிரகடனமும் தயாரிக்கப்பட்டன. தேசிய அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

புது வருஷத்தில் ஜனவரி மாதம் 21-ம் தேதி குடியரசுச் சட்டசபை 'டெயில் ஐரான்' என்னும் பெயருடன்

* உண்ணாவிரதமிருந்து உயிர்ப்பலி கொடுத்த இந்த டெரென்ஸ் மர்க்ஸ்வினியின் 'சுதந்தரத்தின் தத்துவங்கள்' என்ற நூல் நவயுகப் பிரசுராலயத்தால் தமிழில் வெளியிடப் பெற்றிருக்கிறது.

மான்ஷன் மாளிகையில் கூடியது. 27 அங்கத்தினரே விஜயஞ் செய்திருந்தனர். கதால் புருகா தலைமை வகித்தான். எள்ளும் விழுவதற்கு இடமின்றிப் பெருந் திரளான ஜனங்கள் கூடியிருந்தனர். காலின்ஸும் போலண்டும் அச்சமயம் வேலை நிமித்தம் இங்கிலாந்துக்குச் சென்றிருந்தனர். அவர்கள் பெயர்கள் படிக்கப் பட்ட பொழுது வேறு இரு அங்கத்தினர்கள் அவர்கள் பெயரால் ஆஜர் கொடுத்தனர். இது அரசாங்க ஒற்றர்களை ஏமாற்றுவதற்காகக் கையாளப்பட்ட முறை. மிருந்த வைபவத்தினிடையே முதலில் பிரார்த்தனை நடைபெற்றது. பின்னர் புதிய அரசியலமைப்பு விளக்கப்பட்டது. ராஜாங்கத்திற்கு 'ஐரிஷ் குடியரசு' என்று நாமகரணஞ் செய்யப்பட்டது. தலைவன் புருகா எழுந்து நின்று, அயர்லாந்து பூரண சுதந்திரம் பூண்டு, வேற்று நாட்டின் சார்பின்றி, குடியரசாகிவிட்டதை உலகறியக் கூறினான். சுதந்திரப் பிரகடனம் ஐரிஷ் பாஷையிலும், பிரெஞ்சிலும், ஆங்கிலத்திலும் படிக்கப்பட்டது. அங்கத்தினர் யாவரும் எழுந்து நின்றனர். சுதந்திரப் பிரகடனத்தை மனப்பூர்வமாக ஆதரித்தனர். தம்மால் இயன்றதை யெல்லாம் செய்து அதை நிலைநிறுத்த முயல்வதாக உறுதியுடன் சபதஞ் செய்தனர். நிகழ்ச்சி முறை யாவும் ஐரிஷ் பாஷையிலேயே நடைபெற்றது. பின்னர், டிவேலரா, கிரிபித், பிளங்கெட் மூவரும் யுத்த சமாதான மகாநாட்டிற்கு அயர்லாந்தின் பிரதிநிதிகளாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வல்லமை மிக்க ஆங்கில ராணுவத்தின் கையில் சிக்கிக்கிடந்த அயர்லாந்தில், அந்நியர் ஆட்சியின் நடுவில், சுதேசச் சட்ட சபை ஒன்று கூடியது! 'குடியரசு'

என்று கூறிவிட்டது! மறுபக்கத்திலே, அடக்குமுறை, மட்டுக்கு மிஞ்சிய அடக்குமுறை, மேலும் மேலும் எல்லை யற்ற அடக்குமுறை—இதைத் தவிர வேறொன்றும் அறியாத அரசாங்கம், திகைப்படைந்து, அழல் கொண்டு எரியப் பார்த்துப் பெருமூச்சு விட்டது!

7

மீட்சிப் படலம்

ஜெர்மனியுடன் சதியாலோசனை செய்ததாகப் பொய்க் குற்றம் சாட்டப் பெற்று ஆங்கிலச் சிறைகளிலே வாடிக்கொண்டிருந்த ஐரிஷ் தேசபக்தர்கள், போர் முடிவுற்றதால் விரைவில் விடுதலை வருமென்று எதிர் பார்த்திருந்தனர். ஆனால், ஐரோப்பா யுத்தம் முடிந்த போதிலும், இங்கிலாந்துக்கும் அவர்களுக்கும் ஏற்பட்ட யுத்தம் மட்டும் முடியவில்லை என்பதை அவர்கள் நன்கு உணரவில்லை. நாட்களும் மாதங்களும் கழிந்தன. கிறிஸ்துமஸ் பண்டிகையும் வந்தது. ஆயினும், விடுதலை உத்தரவுமட்டும் வரவில்லை. 'அரசாங்கம் விடுதலை செய்யாவிடின், நம்மை நாமே விடுதலை செய்து கொள் வோம்!' என்று கைதிகள் முடிவு செய்தனர்.

டிவேலரா முதலியோர் லிங்கன் சிறையில் அடைக் கப்பட்டிருந்தனர். டெயில் ஐரான் அங்கத்தினர் பலரும் அங்குதான் இருந்தனர். லிங்கன் சிறை மற்ற சிறை களைப்போல் இல்லாமல் புது மாதிரியா யிருந்தது. பிர

தான வாயிலைத் தவிர அதற்குப் பின்பக்கத்திலும் ஒரு வாயிலுண்டு. அந்த வாயில் வழியாகவே ஞாயிற்றுக் கிழமை மதபோதகரான பாதிரியார் வருவதுண்டு. அவ்வாயிலிலுள்ள கதவுக்கு ஒரு திறவுகோல் கிடைத்தால் டிவேலரா முதலியோர் தப்பியோடுவது சுலபம். ஒருநாள் பாதிரியார் மறதியால் தம்முடைய சாவியை ஓரிடத்தில் வைத்துவிட்டுச் சென்றார். சமயம் பார்த்து டிவேல்ரா மெழுகுவர்த்தியில் அதை அழுத்தித் தடம் செய்துகொண்டார். சித்திரம் வரையத் தெரிந்த நண்பன் ஒருவன் அந்தத் தடத்தை வைத்துக்கொண்டு ஒரு கடிதத்தில் இரண்டு சித்திரங்கள் வரைந்து கொடுத்தான். முதல் சித்திரத்தில் ஒருவன் தன் வீட்டுக் கதவில் திறவுகோல் ஒன்றை வைத்துத் திறப்பதுபோல் காட்டப்பட்டிருந்தது. அதன் அடியில், 'நான் உள்ளே புக முடியவில்லை!' என்று எழுதப்பட்டிருந்தது. அடுத்த சித்திரத்தில், ஒரு கைதி ஒரு பெரிய திறவுகோலால் சிறைக் கதவைத் திறக்க முயலுவது போல் போடப்பட்டிருந்தது. அதன் அடியில், 'நான் வெளியேற முடியவில்லை!' என்று எழுதப்பட்டிருந்தது. அதில் கண்ட திறவுகோல் சிறையின் பின்பக்கக் கதவின் திறவுகோலின் அளவாகவே இருந்தது. கிறிஸ்துமஸ் பண்டிகைக் காலமாதலால், அதிகாரிகள் அக்கடிதத்தைக் காண நேரின், ஏதோ கைதிகள் விளையாட்டுக்காகப் படங்கள் வரைந்திருந்ததாக எண்ணிக் கொள்ள வேண்டும் என்றே அந்தச் சித்திரங்கள் போடப்பட்டிருந்தன. அந்தக் கடிதமும், அதிலுள்ள படங்களின் பொருளை விளக்கும் மற்றொரு கடிதமும் ஷெபீல்டு என்னும் ஊரிலுள்ள நண்பன் ஒருவனுக்கு அனுப்பப்

பட்டன. அவன் தைரியமும் சாமர்த்தியமும் இல்லாத வனுதலால், படங்களை டப்ளின் நகருக்கு அனுப்பிவிட்டுப் பேசாதிருந்தான். டப்ளினில் ஹாரி போலண்டு விஷயத்தைத் தெரிந்து கொண்டான். படத்திற் கண்ட சாவியைப் போல் ஒன்று தயாரித்து, அதை ஒரு ரொட்டிக்குள் வைத்துப் பொதிந்து கொடுத்தனுப்பினுன். காலின்ஸ் அந்த ரொட்டியை லிங்கன் சிறையிலிருந்த கைதிகளுக்கு அனுப்பினுன். கைதிகள் தங்கள் விடுதலை-ரொட்டி வந்ததாகக் களித்தனர். ஆனுல் அதிலிருந்த திறவுகோல் பூட்டுக்கு ஏற்றதாயில்லை. இரண்டாம் முறையும் ஒரு திறவுகோல் அனுப்பப் பட்டது. அதுவும் சரியாயில்லாது போயிற்று.

பின்னர், காலின்ஸ் போலண்டை அழைத்துக் கொண்டு தானே நேரில் லிங்கன் சென்றுன். எவ்வகையாலும் தோழர்களை விடுவித்துக்கொண்டு போகத் தீர்மானித்தான். முந்திய அத்தியாயத்தில் டெயில் ஐரான் கூடியபொழுது காலின்ஸும் போலண்டும் சபைக்குச் செல்லவில்லை என்று கூறப்பட்டிருக்கிறது. இவ்விருவரும் லிங்கனுக்கு இந்தக் காரியத்திற்காகத் தான் போயிருந்தனர். வெளியில் யாருக்கும் இந்த விஷயம் தெரியாமல் ரகசியமா யிருந்தது. லிங்கனில் டிவேலரா ஒரு புதிய திறவுகோலும் ஓர் அரமும் அனுப்பும்படி அவர்களுக்குச் செய்தி அனுப்பினுர். அவ்வாறே காலின்ஸ் இரண்டையும் அனுப்பினுன். கைதிகளில் டிலோக்ரேய் என்பவனுக்கு இரும்பு வேலை தெரியும். அவன் திறவுகோலைத் தக்கபடி திருத்தி அனுப்பினுன். அச்சமயம் சிறையில் ஒரு தொண்டன் நோய் மிகுதியால் விடுதலை செய்யப்பட்டான். அவன்

மூலமும் காலின்ஸுக்குச் செய்தி அனுப்பப்பட்டது. காலின்ஸ் பெப்ரவரி 3-ம்தேதி தோழர்களைச் சிறையிலிருந்து வெளியே கொண்டு வருவதாக அவர்களுக்குத் தகவல் கொடுத்தான். அதே சமயத்தில் உஸ்க் சிறையிலிருந்த நான்கு ஐரிஷ் தொண்டர்கள் தப்பியோடிவிட்டதாகச் செய்தி வந்தது. அதைக் கேட்டு காலின்ஸ் வருந்தினன். ஏனெனில், அதனல் எல்லாச் சிறையதிகாரிகளும் விழிப்படைந்து தன் வேலையைப் பாழாக்கி விடுவார்கள் என்று அவன் எண்ணினன்.

குறித்த தினத்தில் காலின்ஸ், ஒரு மோட்டார் காரை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு மூன்று நண்பர்களுடன் லிங்கன் சிறையை அடைந்தான். மோட்டார் டிரைவர் சந்தேகங் கொள்ளாதபடி, அவனைக் காலின்ஸ் வெகு தொலையிலேயே நிறுத்திவிட்டான். காலின்ஸ், போலண்டு, கெல்லி மூவரும் சிறைக்குப் பின்னலிருந்த வயல்களை யடைந்து, சிறைச் சுவரிலிருந்த ஒரு ஜன்னலடியில் படுத்துக்கொண்டனர். அங்கிருந்து குறித்த நேரத்தில் அவர்கள் ஒரு விளக்கொளி காட்டவேண்டும் என்றும், கைதிகள் அதற்குப் பதிலொளி காட்டினல் இருபக்கத்தாரும் தயாரா யிருப்பதாகப் பொருள் கொள்ளவேண்டும் என்றும் அவர்களுக்குள் முடிவு செய்யப்பட்டிருந்தது. அந்தச் சங்கேதப்படி, சமயம் வாய்த்தவுடன், வெளியேயிருந்து வெளிச்சம் காட்டப்பட்டது. உள்ளிருந்தும் பதில் வெளிச்சம் காட்டப்பட்டது. பின்னர் காலின்ஸ் சிறைக் கோட்டையின் பின் வாயிலை அடைந்து பார்க்கையில், அதில் வெளியேயும் ஓர் இரும்புக் கதவு போடப்பட் டிருந்தது. உள்ளே அனுப்பப்பட்டிருந்த திறவுகோலால் உட்கத

வைத் திறக்கலாமேயன்றி அந்த வெளிக் கதவைத் திறக்க முடியாது. ஆனால் காலின்ஸின் சட்டைப் பையில் வேறொரு சாவி இருந்தது. அவன் அதை எடுத்துப் பூட்டு வாயில் போடப் பார்த்தான். பூட்டு எளிதாய்த் திறந்துவிடும்போல் இருந்தது. ஆனால் திடீரென்று சாவி ஒடிந்து போய்விட்டது. பாதிச் சாவி பூட்டுக்குள்ளேயும் பாதி காலின்ஸின் கையிலுமாக இருந்தது. அதே சமயத்தில் டிவேலராவும், அவர் தோழர்கள் மகாரியும், மில்ராயும் உட்புறத்துக் கதவைத் திறந்துகொண்டு வந்தனர். அடுத்த கதவு திறக்கப் படாமை கண்டு திகைத்தனர், பூட்டிலிருந்த உடைந்த சாவியை வெளியே தள்ளுவதும் கடினமாயிருந்தது. வெண்ணெய் திரளும் சமயத்தில் தாழி உடைந்ததே என்று அவர்கள் கலங்கினார்கள். டிவேலரா, சிந்தை தளராமல், தம் கையிலிருந்த சாவியால் பூட்டின் பின் புறத்தில் குத்தினார். அவர்களுடைய பாக்கிய வசத்தால் பழைய சாவி வெளியே விழுந்தது. பின் அவர் தம் சாவியைக் கொண்டே அந்தப் பூட்டையும் எளிதில் திறந்துவிட்டார். யாவரும் மகிழ்ச்சியுடன் வெளியேறி வயற்புறத்தில் துள்ளிப் பாய்ந்தனர். வழியில் சில படை வீரர்கள் நின்றுகொண்டிருந்தனர். அவர்களைக் கண்டதும் போலண்டு, 'நண்பர்களே, சௌக்கியந்தானா?' என்று க்ஷேமம் விசாரித்துவிட்டு, தன் தோழர்களுடன் கம்பியை நீட்டினான். அவர்கள் லிங்கன் நகருக்குள் போனதும் காலின்ஸும் போலண்டும் ரயில் மார்க்கமாக லண்டனுக்குச் சென்றனர். மற்றையோர் மோட்டாரில் நிவார்க் நகருக்குப் புறப்பட்டனர். அங்கு சென்றபின், அவர்கள் மாஞ்செஸ்டருக்குப் போய்

மூன்று வாரம் தங்கியிருந்துவிட்டு, லிவர்பூல் துறைமுகத்தை அடைந்தனர்.

லிவர்பூலில் காலின்ஸின் பழந்தோழனான மாலுமி நீல் கெர் அவர்களுக்குத் தங்க இடம் கொடுத்துப் பாதுகாத்துவந்தான். காலின்ஸும், லண்டனில் ஆகவேண்டிய வேலைகளை முடித்துக்கொண்டு, அங்கு வந்து சேர்ந்தான். 36-மணி நேரமாக அவன் உணவே எடுத்துக் கொள்ளவில்லை. ஆதலால், லிவர்பூலில் ஒரு தினம் ஓய்வெடுத்துக்கொள்ள விரும்பினான். ஆனால், அன்றிரவு அவனுடைய மாலுமி நண்பனொருவன் அயர்லாந்துக்கு ஓடத்தில் செல்வதாகத் தகவல் கிடைத்தது. உடனே அவன் களைப்பைப் பொருட்படுத்தாது பிரயாணமானான். நீல் கெர் அவனுடன் துறைமுகத்திற்குச் சென்று வழியனுப்பினான். காலின்ஸ் ஓடத்தில் ஏறிச் செல்வதை மூன்று ஒற்றர்கள் கண்டு சந்தேகம் கொண்டார்கள். அவர்களுக்கு அவனைத் தெரியாத நிலைமையில் பேசாது நின்றனர். நீல் கெர், திரும்பும் பொழுது, கரையில் அவர்களைக் கண்டு, 'ரயிலுக்கு நேரமாய் விட்டதோ? வெகு நேரமாய் இங்கிருந்து விட்டேன்!' என்று கேட்டுக்கொண்டே, அவசரமாய் ரயிலுக்குப் போகிறவன்போல் மறைந்துவிட்டான்.

டிவேலரா இங்கிலாந்தில் மறைந்து வாழுமிடத்திலிருந்து அயர்லாந்துக்கு வரவேண்டும் என்றும், தாய் நாட்டில்தான் அவருக்கு மிகுந்த வேலை இருந்தது என்றும் அவருடைய நண்பர்கள் கட்டாயப்படுத்தினார்கள். காலின்ஸும் அவரை நேராக அங்கு வந்து சேரவேண்டும் என்று வற்புறுத்தினான். ஆனால் டிவேலரா, நேராக அமெரிக்கா சென்று, அங்குள்ள ஐரிஷ்காரர், பொது

ஜனங்கள், அதிகாரிகள் முதலியோரிடையே ஐரிஷ் சுதந்திரத்திற்காக வேலை செய்ய வேண்டும் என்று விரும்பினர். அவருடைய பிடிவாதத்தை எவரும் மாற்றுவது அரிது. எனவே காலின்ஸ், அவர் அமெரிக்கா செல்வதற்கு முன்னால் ஒருமுறை அயர்லாந்துக்கு வந்துதான் செல்லவேண்டும் என்றும், இல்லாவிட்டால் சிறையிலிருந்து அவரும் நண்பர்களும் வெளிவந்த பெருமை பயனற்றதாகும் என்றும் கூறினன். கதால் புருகாவும் இங்கிலாந்து சென்று, டிவேலராவைக் கண்டு எல்லா விஷயங்களையும் விளக்கிக் கூறினன். முடிவில் டிவேலராவும் தாய்நாடு திரும்ப இசைந்தார்.

மார்ச்மீ 24-ந்தேதி அயர்லாந்தின் பழம் பெருந் தேசபக்தனை ராபர்ட் எம்மெட்டின் திருவிழாவைக் கொண்டாட வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்று டப்ளினில் மான்ஷன் மாளிகையில் சங்கீதக் கச்சேரியுடன் பிரக்கியாதி பெற்ற ஒரு தேசபக்தருடைய பிரசங்கமும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. பெருந் திரளான ஜனங்கள் கூடியிருந்தனர். அவர்கள் யாவரும் புதிய பிரசங்கி யார் என்பதைப் பற்றி வியப்புற்றனர். திடீரென்று ஜனங்கள் கூடியிருந்த மாளிகையின் கதவுகள் அடைக்கப்பட்டன. ஓர் ஐரிஷ் வாலிபன் மேடையின் மீது தோன்றினன். அவன் யார்? டிவேலராவுடன் லிங்கன் சிறையிலிருந்து தப்பி யோடிய ஸீன் மகாரியே அவன். அவன் சொற்பொழிவு யாவர் உள்ளத்தையும் உருக்கிவிட்டது. பிரசங்க முடிவில் அவன் மாயமாய் மறைந்து சென்றுன். வெளியே காத்து நின்ற ஒற்றர் திருக்கூட்டம் எவன் சொற்பொழிவாற்றினன் என்பதை அறிந்துகொள்ள

முடியாமல் திரும்பிச் சென்று, மறுநாள் பத்திரிகைகளிலேதான் மகாரி அங்கிருந்ததை அறிய முடிந்தது.

இச்சமயத்தில் இங்கிலாந்தில் 'இன்புளுயன்ஸா' என்ற விஷஜுரம் பல உயிர்களைப் பலிகொண்டு வந்தது. அங்கு சிறைகளில் கிடந்துழன்ற ஐரிஷ்காரர்களையும் அந்நோய் பற்றிக்கொண்டது. அவர்களில் **பீயர்ஸ் மக்கான்** என்னும் வாலிபன் ஜுரம்கண்டு மார்ச் மாதம் 6-ந் தேதி மடிந்துபோனான். அவன் **திப்பெரரிப்** பகுதியைச் சேர்ந்த ஒரு பெருங்குடியிற் பிறந்தவன்; தன்னலமற்றவன், தீவிர தேசபக்தன், தளராத ஊக்கமுடையவன். அவ்வீரக் காளையின் மரணம் ஐரிஷ் பொதுஜனங்களைத் தட்டியெழுப்பியது. அவனுடைய உடல் அயர்லாந்துக்குக் கொண்டுவந்து அடக்கம் செய்யப்படும்பொழுது நாடெங்கும் துக்க வெள்ளம் பரந்திருந்தது. 'ஜெர்மன் சதியாலோசனை' என்ற போலிக் காரணத்தால் தங்கள் இளைஞர் பலர் மேலும் சிறையிடை வாடும்படி செய்யப்படுவதைக் கண்டு சினங்கொண்டிருக்கும் ஐரிஷ்காரரை மக்கானின் மரணம் வாட்டி வருத்தியது. ஆனால், அவன் இறந்த தினத்தன்று இரவே அரசாங்கம் இங்கிலாந்திலிருந்த ஐரிஷ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யப்போவதாக அறிவித்தது.

விடுதலையாகும் கைதிகளை வரவேற்பதற்கு ஒரு வரவேற்புக் கழகம் அமைக்கப்பட்டது. காலின்ஸ் அதில் முக்கியமான ஸ்தானம் ஒன்றை வகித்திருந்தான். எல்லாக் கைதிகளும் விடுதலையாவதால், டிவேலராவும் அயர்லாந்துக்கு வந்து சேருவதற்கு ஏற்பாடுகள் நடந்தன. டப்ளினில் அவருக்கு மிகுந்த குதூகலத்துடன் வரவேற்பு நடைபெறும் என்று விளம்பரப்படுத்தப்

பட்டது. 'அமைதிக்கு விரோதி' என்றும், 'ராஜாங்கத் துவேஷி' என்றும் பழிக்கப்பட்டுச் சிறை வைக்கப்பட்டவரும், சிறையிலிருந்து தப்பியோடி அரசாங்கத்தின் மானத்தைக் குலைத்தவருமான ஒருவரைப் பொதுஜனங்கள் படாடோபத்துடன் வரவேற்று உபசரிப்பதென்றால், அதை எந்த அரசாங்கந்தான் பொறுக்கும்? ஆங்கில அரசாங்கம் எவ்விதமான வரவேற்பும் கூடாது என்று உத்தரவு போட்டது. அவ்வுத்தரவை மீறி நடக்க வேண்டும் என்று காலின்ஸ் முதலியோர் நினைத்தனர். ஆனால், டிவேலரா மாறுபட்ட கருத்துக் கொண்டார். அரசாங்க விரோதிகளை ஜனங்கள் வரவேற்பதால் அதற்கு மட்டுக் கடங்காத கோபம் பிறப்பது இயல்பு ஏனெனில், அவ்வரவேற்பு தேசத்திலுள்ள உண்மையான நிலைமையை உலகத்து நாடுகளுக்கெல்லாம் தெரிவித்துவிடும். அயர்லாந்தின் சுதந்திர வேட்கைக்கு எதிராக நின்றவை ஆங்கிலேயரின் தர்க்க வாதங்கள் அல்ல, ஆனல் அவர்களின் பல்லாயிரம் துப்பாக்கிகளேயாம். அவர்களுக்கு அளவு கடந்த ஆத்திரத்தை மூட்டி அந்த மிருக பலத்தை வீணே தாண்டவமாடச் செய்வானேன்? ஆனல், வரவேற்பை நிறுத்திவிட்டால் அரசாங்கம் ஸின்பீனர்கள் பணிந்துவிட்டனர் என்று பிரசாரம் செய்யுமல்லவா? உண்மைதான். ஆனல், இந்தப் பொய் அது கூறிவரும் பல கோடிப் பொய்களில் ஒன்று தானே! முன்னல் ஜனங்கள் தங்கள் தலைவர்களிடத்தில் கொண்டுள்ள ஆர்வத்தையும் அன்பையும் தேர்தலில் காட்டினர். வேறு பல வழிகளிலும் இன்னும் காட்ட முடியுமல்லவா? இத்தகைய காரணங்கள் பலவற்றையும் எடுத்துக் கூறி, டிவேலரா, வெளிப்படையான வர

வேற்பு வேண்டாம் என்று தம் நண்பர்களுக்குச் செய்தி யனுப்பி, அவ்வாறே எவ்வித ஆடம்பரமு மின்றித் தாய்நாடு திரும்பினர். அவருடைய நோக்கமெல்லாம், கொக்கைப்போல் காலங் கருதியிருந்து, சமயம் நேரும் பொழுது காரியத்தை முடித்துக்கொள்ள வேண்டும் என்பதே.

ஆங்கிலச் சிறையிலிருந்து டிவேலரா முதலியோர் வெளியேறியதை மேலே குறித்தோம். ஐரிஷ் சிறையி லிருந்தும் வேறு சிலர் தப்பி வந்தனர். தொண்டர்களில் சிலர் தாங்கள் சிறைப்பட்ட காலம் முதல் அதிகாரி களுக்குப் பணியவே யில்லை. கொடுந் தண்டனைகள் எல்லாம் அவர்களுடைய உறுதியைக் கலைக்க முடியா மற் போயின. சாதாரணக் கைதிகள் எந்தத் தண்டனை களைக் கண்டு அஞ்சி நடுங்குவார்களோ அந்தத் தண்டனை களைத் தொண்டர்கள் முதலிலேயே குதூகலத்துடன் ஏற்றுக்கொள்வது வழக்கம். பகைவரின் சட்டங்களுக் கும், கொடுமைகளுக்கும், அன்பான பசப்பு வார்த்தை களுக்கும் அவர்கள் பணிவதில்லை. தங்களை, மற்ற கொலை களவு செய்த குற்றவாளிகளினின்றும் பிரித்து, யுத்தக் கைதிகளைப்போல் தனியான கௌரவத்துடன் நடத்த வேண்டும் என்பதே அவர்கள் கோரிக்கை. அவர்களின் உறுதியைக் கலைப்பதற்கு, அதிகாரிகள் தங்களுக்குத் தெரிந்த கொடுமைகளை யெல்லாம் செய்து, பல வாலிபர் களை உயிர்ப்பலி வாங்கிய பின்புதான் ஏதாவது மாற் றங்கள் செய்யத் துணிந்தனர்.

சிறைத் தொண்டர்களிலே அதிகாரிகளுடன் இடை விடாது பெரும் போர் தொடுத்தவன் மேரிபரோ சிறையி லிருந்த பாட்ரிக் பிளமிங் என்பவன். ஓர் ஆங்கில

ராணுவத்தானிடம் ஆயுதம் வாங்க முயற்சித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு, 1917 மார்ச் மாதம் அவனுக்கு ஐந்து வருஷக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. அவன் கொடியதோர் உண்ணு விரதத்தை மேற்கொண்டமையால், அதிகாரிகள் அவனை நவம்பர் மாதம் விடுதலை செய்துவிட்டனர். ஆனால் 1918-ம்வு மேயீ பல வாலிபர்கள் கைதி செய்யப்படுகையில் அவனும் கைதி செய்யப்பட்டு, பழைய தண்டனையில் மிஞ்சியிருந்த பாகத்தை அநுபவிப்பதற்காக, மீண்டும் மேரிபரோ சிறையில் வைக்கப்பட்டான்.

சிறை புகுந்தது முதல் அவன் போர் தொடுத்து விட்டான். கைதிகளின் உடைகளை அவனுக்குப் பலவந்தமாய் அணிவித்தபொழுது, அவன் அவற்றைச் சுக்கு நூருகக் கிழித்தெறிந்தான். அதற்காக அவன் கைகளில் விலங்கிடப்பட்டது. என்ன யுக்தி செய்தோ அவன் விலங்கு பொடியாகும்படி தகர்த்தான். சிறை அதிகாரிகள் சீற்றங்கொண்டு, வழக்கம்போல் தங்கள் தண்டனைப் பாணங்களை அந்த இளைஞன்மேல் தொடுக்க ஆரம்பித்தனர். சரீரத்திற்கும் ஆன்மாவுக்கும் நாள் தவருமல் இழைக்கப்படும் கொடுமைகளைத் தாங்கி, துன்பத்தின் மேல் துன்பமாக அடுக்கி வரினும் உரம் அழியாது நிற்பதில் அவனுக்கு இணையாக வேறு எத்தொண்டனையும் கூறமுடியாது. மாதக் கணக்காக அவன் எண்ணற்ற இன்னல்களைத் தாங்கி நின்ருன். பன்முறை அவன் யமபுரத்தை எட்டிப் பார்த்தான். மரணம் இப்பொழுதோ சற்று பின்னரோ என்ற அவஸ்தை அவனுக்குப் பல தடவை ஏற்பட்டது. ஆயினும், அவ்வீரனின் ஆன்மா பணிய மறுத்தது! தினந்தோறும் அவன் செத்

துச் செத்துப் பிழைத்து வந்தான். ஆயினும் அதிகாரிகளை எதிர்ப்பதற்கு வேறு என்ன ஆயுதத்தைக் கையாளலாம் என்று யோசித்தான். சாத்வீக எதிர்ப்புடன் புதிய எதிர்ப்பு ஒன்றையும் அவன் கைக்கொண்டான். கைக்கு எட்டக்கூடிய சகல பொருள்களையும் அவன் தூள் தூளாக உடைத்தெறிய ஆரம்பித்தான். சாப்பிடும் தட்டு, குவளை, பாத்திரங்கள் யாவும் ஒரு விநாடியில் பொடியாகக் குவிந்தன. சில சமயங்களில் அறைக் கதவும் சுவர்களும் உடைக்கப்பட்டன. இவ்வாறு செய்யப்பட்ட அழிவு வேலையைத் தொண்டர்கள் பிற்காலத்தில் 'தகர்த்தெறிதல்' என்று அழைக்க ஆரம்பித்தனர். பாட்ரிக் பிளமிங் சதை வற்றி எலும்பும் தோலுமாக இருந்துகொண்டே செய்துவந்த அட்டகாசங்களைச் சிறை அதிகாரிகளால் பொறுக்க முடியவில்லை. அவர்கள் மிகுந்த பொருட் செலவில் ஒரு புதிய அறை கட்டி அவனை அதில் அடைத்துப் பூட்டி வைத்தனர். அதை அவனால் சேதப்படுத்த முடியாது என்பது அவர்கள் கருத்து. ஆனால் அவன் என்னென்ன யுக்திகளோ செய்து அதையும் உடைத்துத் தகர்க்க ஆரம்பித்தான். முடிவில் கைதிக்கு அதிகாரிகள் பணிந்தனர்!

கிறிஸ்துமஸ் பண்டிகை நெருங்கி வந்தது. மனிதன் யுக்தியால் கண்டுபிடிக்கக் கூடிய எவ்விதக் கொடுமையும் பாட்ரிக் பிளமிங்கைப் பணியச் செய்ய முடியாது என்பதை அதிகாரிகள் உணர்ந்தனர். 'கிரிமினல்' என்று பழிக்கப்படும் இதர குற்றவாளிகளைப் போல் அரசியல் கைதிகளை நடத்துவதற்குச் சம்மதிக்கக் கூடாதென்று தீர்மானித்து, உயிரும் ஒருதுளி ரத்தமும்

உள்ளவரை அதை எதிர்க்கவேண்டும் என்று அவன் துணிந்து நின்றான். அவனை 'அரசியல் கைதி' என்ற அந்தஸ்தில் நடத்த வேண்டியதைத் தவிர அதிகாரிகளுக்கு வேறு வழியில்லாது போயிற்று. ஆனால் இரண்டு வருஷத் தண்டனைக்கு அதிகமாகப் பெற்றவர்களை அரசியல் கைதிகளாக நடத்தச் சட்டம் இடம் கொடுக்கவில்லை. ஆதலால் பிளமிங்கின் தண்டனைக் காலத்தை ஐந்திலிருந்து இரண்டு வருஷமாக்க அவர்கள் ஏற்பாடு செய்து, அவனை உயர்ந்த முறையில் நடத்த இசைந்தார்கள். ஒரு தொண்டனின் உறுதி, அதிகாரிகளைத் தலைப்பாகைக்குத் தக்கபடி தலையைத் தறித்துக் கொள்ளும்படி செய்தது! ஆனால், அதற்காக பிளமிங் பன்னிரண்டு மாத காலம் இடைவிடாது அநுபவித்த தாங்கொணாத் துயரங்களை அளவிட முடியுமோ?

பாட்ரிக் பிளமிங் பின்னர் மௌன்ட்ஜாய் சிறைக்கு அனுப்பப்பட்டான். அங்கு வேறு பல ராஜீயக் கைதிகள் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் நால்வர் கொலை களவு செய்த குற்றவாளிகளோடு சேர்க்கப்பட்டுத் துன்புறுத்தப்பட்டனர். பிளமிங், அவர்களைக் கண்டவுடன் மனமுருகி, அவர்களுக்காக மற்ற ராஜீயக் கைதிகளுடன் சேர்ந்து, வேலை நிறுத்தம் ஆரம்பித்தான். 'தகர்த்தெறிதல்' முறையும் கையாளப்பட்டது. அவர்கள் யாவருக்கும் கை விலங்குகள் போடப்பட்டிருந்தன. சனிக்கிழமையும் ஞாயிற்றுக் கிழமையும் மட்டும் அதிகாரிகளுடன் போராட்டம் செய்யாது இருபக்கத்தாரும் ஓய்வெடுத்துக்கொள்ள வேண்டும் என்று பிளமிங் ஏற்பாடு செய்தான். இச்சமயத்தில் வெளியிலே ஸின்பீன் தலைமைக் காரியாலயத்திலுள்ளவர்கள் மௌன்ட்ஜாய்

சிறையிலுள்ள நண்பர்களைச் சிறையிலிருந்து வெளியேற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்துகொண்டிருப்பதாகத் தகவல் எட்டியது. வேலை நிறுத்தம் செய்வது பின்னல் தப்பியோடுவதற்கு இடையூருகும் என்று கருதி, கைதிகள் அதைக் கைவிட்டனர். அதிகாரிகளும் அவர்களுடைய எதிர்ப்புக்கு அஞ்சித் தங்களுடைய கண்டிப்பைக் குறைத்துக்கொண்டனர்.

ராஜீயக் கைதிகள் மற்ற குற்றவாளிகளோடு கலந்துகொள்ளாமல் சிறையின் வைத்தியசாலையிலுள்ள நல்ல அறையில் வசித்துவந்தனர். வைத்தியசாலை சிறைக்குப் பின்னல் தனியாக இருந்தது. ராஜீயக் கைதியான பார்ட்டன் என்பான் ரகசியமாக ஓர் அரத்தை வரவழைத்து வைத்துக்கொண்டு, தன்னுடைய அறையின் ஜன்னல் கம்பி ஒன்றை அறுத்தெடுத்துவிட்டான். மார்ச் மாதம் 16-ம் தேதி இரவு அவன் வெளியேறுவதற்குக் குறிப்பிடப்பட்டது. அன்று இரவு, அவன் சில துணிகளைச் சுருட்டி நீளமான ஓர் உருவத்தைப்போல் தோன்றும்படி படுக்கையில் கிடத்திவிட்டு, வெளியேறிவிட்டான். மதில் சுவருக்கு வெளியே தொண்டர்கள் காத்து நின்றனர். பார்ட்டன் தான் தயாராயிருப்பதற்கு அறிகுறியாக ஒரு சவுக்காரத் துண்டை வெளியே எறிந்தான். வெளியிலிருந்த தொண்டர்கள் கயிற்றின் வழியாக ஒரு நூலேணியை அனுப்ப, அதன் உதவியால் பார்ட்டன் வெளியேறித் தப்பித்துக் கொண்டான். அவன் விடுதலைக்கு வேண்டிய ஏற்பாடுகளின் காரணஸ்தன் காலின்ஸ்தான்.

காலின்ஸ் மௌன்ட்ஜாய் சிறையிலிருந்த சகல ராஜீயக் கைதிகளையுமே அப்புறப்படுத்த வேண்டும்

என்று திட்டங்கள் போட்டுவந்தான். சிறையிலிருந்தவர்களுக்குச் செய்தி அனுப்பி அவர்களைத் தயாராய் இருக்கும்படி சொல்லியிருந்தான். சிறைச்சாலைச் சுவரடியில் வெடிமருந்தைக் கொட்டித் தீ வைத்துச் சுவரை உடைத்து, அதன் வழியாகக் கைதிகளை வெளியேற்றலாம் என்றால் அதற்கு வழியில்லை. ஏனென்றால் வெடிமருந்தின் ஓசை கேட்டவுடனே பாராக்காரர்கள் வந்துவிடுவார்கள். ஆதலால், அமைதியான முறையே தக்கதென்று தீர்மானிக்கப்பட்டது.

மார்ச் மாதம் 29-ம் தேதி 2-30 மணிக்கு ராஜ்யக் கைதிகள் யாவரும் தேகப் பயிற்சி செய்வதற்காக அறைகளிலே யிருந்து வெளியே விடப்பட்டு, மூன்று பிரிவாய் நிறுத்தப்பட்டிருந்தனர். மூன்று மணி யளவில் வெளியிலிருந்து ஒரு சீட்டி யடிக்கப்பட்டது. அது தான் அவர்கள் வெளியேற வேண்டியதற்கு அறிகுறி. காப்பாளராகிய வார்டர்களில் ஏழு பேர்களே அங்கிருந்தனர். குறைந்த காலத் தண்டனையுடைய ஏழு தொண்டர்கள் அவர்களை அடக்குவதற்கு நெருங்கினார்கள். அவர்களுடைய சட்டைப் பைகளில் உணவெடுக்கும் கரண்டிகள் சில இருந்தன. அவர்கள் சட்டைப் பைகளில் கைகளைப் போட்டுக்கொண்டு, தங்களிடம் ரிவால்வர்கள் இருப்பதாகச் சொல்லி, வார்டர்கள் வாய் திறந்தாலும் இருக்குமிடத்தைவிட்டு அசைந்தாலும், சுட்டுவிடுவதாகப் பயமுறுத்தினார்கள். வார்டர்களிடம் ஆயுதமில்லாததால், அவர்கள், தொண்டர்களுடைய கரண்டித் துப்பாக்கிகளுக்கு அஞ்சி, நின்ற இடத்திலேயே நின்றனர். இதற்கிடையில் வெளியிலிருந்து ஒரு கயிறும் அத்துடன் ஒரு நூலேணியும் சுவரின்மேல் வந்து

விழுந்தன. மற்ற ராஜீயக் கைதிகள் ஏணியின்மேல் ஏறி ஒவ்வொருவராக வெளியே குதித்தனர். இருபது பேர்களுக்கு மேல் தப்பியோடினர், முதலில் சுமார் பன்னிரண்டு பேர்களே தப்பியோட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், சுவரின்மேல் தொங்கிய நூலேணியைக் கண்டவுடன் எல்லாக் கைதிகளுக்கும் தப்பியோட வேண்டும் என்று ஆவல் பொங்கிவிட்டது! வெளியேறியவர்களில் சிலர் சைக்கிள் வண்டிகளிலும்,சிலர் டிராம் வண்டிகளிலுமாக விரைவாக நகருக்குள் சென்று. தங்கள் நண்பர்களை அடைந்தார்கள். தப்பியோடியவர்களில் முக்கியமானவர்கள் பிளமிங், வால்ஷ், பீஸ்லெய் முதலியோர். இவர்களுள் பீஸ்லெய்தான் பிற்காலத்தில் காலின்ஸின் வீரச் சரித்திரத்தை எழுதி வைத்தவன்.

நடுப்பகலில் ராணுவ வீரரும் வார்டர்களும் கூடிக் காத்துவரும் மௌண்ட்ஜாய் சிறையிலிருந்து தொண்டர்கள் தப்பியோடியது எளிதன்று. இவ்வெற்றி தொண்டர்களின் சாமார்த்தியத்தையும் காலின்ஸின் தீர்க்காலோசனையையும் குறிக்கின்றது. லிங்கன் சிறையிலிருந்து விடுதலையடைந்த டிவேலரா முதலியோரும், மௌண்ட்ஜாய் சிறையிலிருந்து விடுதலையடைந்த பீஸ்லெய், வால்ஷ் முதலியோரும் டெயில் ஐரானின் முக்கிய அங்கத்தினராதலால், அச்சபை மீண்டும் ஏப்ரல் மாத ஆரம்பத்தில் மான்ஷன் மாளிகையில் கூடியது. அதன் முதற் கூட்டத்தில் செய்யப்பட்ட சுருக்கமான விதிமுறைகள் டிவேலராவின் ஆலோசனையின் பேரில் மாற்றியும் திருத்தியும் அமைக்கப்பட்டன. புதிய மந்திரி சபை அமைக்கப்பட்டது. டிவேலரா டெயில் ஐரானின்

தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தப் பதவி மற்ற அரசாங்கங்களின் பிரதம மந்திரியின் பதவிக்கு நிகராகும். மைக்கேல் காலின்ஸ் பொருளாதார மந்திரியாயும், ஆர்தர் கிரிபித் உள்நாட்டு மந்திரியாயும், கதால் புருகா பாதுகாப்பு (சேனை) மந்திரியாயும், கவுண்ட் பிளங்கெட் அந்நிய நாட்டு மந்திரியாயும், காஸ்கிரேவ் ஸ்தல ஸ்தாபன மந்திரியாயும், ராபர்ட் பார்ட்டன் விவசாய மந்திரியாயும், மாக்நீல் கைத்தொழில் மந்திரியாயும், மார்க்கவிக்ஸ் சீமாட்டி தொழில் மந்திரியாயும் நியமிக்கப் பட்டனர். இவ்வாறு மற்ற அரசாங்கங்களைப் போலவே பலவேறு இலாகாக்களைப் பிரித்துக்கொண்டு டெயில் ஐரான் வேலை செய்ய ஆரம்பித்தது. அவற்றிற்கும் டெயிலுக்கும் ஒரு முக்கியமான வித்தியாசம் மட்டும் இருந்தது. அவையெல்லாம் தங்களுக்குப் பக்கபலமாகப் பெரும் பெரும் சேனைகளை வைத்துக்கொண்டிருந்தன. டெயிலோ தொண்டர் படையைத் தவிர வேறு சேனையைப் பெற்றிருக்கவில்லை. அது அயர்லாந்தில் அமைக்கப்பட்ட வலிமையுள்ள பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்த்தும் நிற்கவேண்டியிருந்தது. மேலும் டெயிலுக்கு அந்நிய நாடுகளில் ஸ்தானீகர்கள் இல்லை. அக்குறையைத் தீர்ப்பதற்காக ஸீன் கெல்லி என்பான் பிரான்ஸுக்குச் சென்று ஐரிஷ் குடியரசுக்காகத் தீவிரப் பிரசாரஞ் செய்யத் தொடங்கினன். டாக்டர் மக்கார்ட்டன் அமெரிக்க ஐக்கிய மாகாணத்தில் வாஷிங்டன் நகரை அடைந்து டெயிலின் பிரதிநிதியாக வேலை செய்து வந்தார்.

அக்காலத்தில் காலின்ஸ், தான் முன்னால் ஜாமீனில் வெளிவந்த வழக்கு சம்பந்தமாக, டெர்ரி நியாய

ஸ்தலத்தில் ஆஜராகவேண்டி யிருந்ததால் அங்கு செல்லாமலே மறைந்துகொண்டான். அது முதல் சமாதான காலம்வரை அவன் மறைந்து வாழ நேர்ந்தது. ஏப்ரல்மீ 8-ம் தேதி ஸின்பீன் விசேஷ மகாநாடு ஒன்று மான்ஷன் மாளிகையில் கூடுகையில், அவன் போலீஸ் ஒற்றர்களுக்குத் தெரியாமல் அங்கு சென்றான். எந்த இடத்திற்குச் செல்வது மிகுந்த அபாயமோ அவ்விடத்திற்கு அவசியமாகப் போவது அவன் வழக்கம். மகாநாட்டில் பல தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. அவற்றில் முக்கியமானது ஐரிஷ் போலீஸாரைச் சமூக பகிஷ்காரஞ் செய்ய வேண்டும் என்பது. மறுநாள் டெயில் ஐரான் கூட்டம் நடைபெறும் போதும் காலின்ஸ் ஆஜராயிருந்தான். அவன் மான்ஷன் மாளிகையில் செல்வதை ஒரு ஒற்றன் கண்டுகொண்டு மிக விரைவாகச் சென்று டப்ளின் மாளிகையில் தகவல் கொடுத்தான். காலின்ஸைக் கைதிசெய்வதற்குப் பல பட்டாளங்கள் மோட்டார் வாகனங்களில் அனுப்பப்பட்டன. இடையில் காலின்ஸ் தன் தோழர்களுடன் உணவு உண்பதற்காக உட்கார்ந்துகொண்டிருந்தான். திடீரென்று டெலிபோன் மணி அடித்தது. பீஸ்லெய் டெலிபோனில் செவிகொடுத்துக் கேட்கையில், டப்ளின் மாளிகையிலிருந்து காலின்ஸின் தோழனான பிராய் என்னும் ஒற்றன், பட்டாளங்கள் மான்ஷன் மாளிகைக்குப் புறப்பட்டு வரும் செய்தியைக் கூறினான். காலின்ஸும் மூன்று நண்பர்களும், அதிக அவசரமில்லாமல் போஜனத்தை முடித்துக்கொண்டு, பட்டாளங்கள் வருவதற்குச் சிறிது முன்னரே சைக்கிள்களைத் துணையாகக்கொண்டு கம்பியை நீட்டினர். இச்செய்தி டப்ளின் மாளிகைக்கு எட்டவே பட்டாளங்கள் வாராமலே யொழிந்தன.

அன்று பிற்பகலில் கூடிய டெயில் கூட்டத்திற்குக் காலின்ஸ் முதலியோர் செல்லவில்லை. ஆர்தர் கிரிபித், சிறைப்பட்ட ஐரிஷ் தேசபக்தர்கள் சிறைகளில் படுந் துன்பங்களைப் பற்றியும், ஆங்கில அரசாங்கம் செய்யும் மற்ற கொடுமைகளைப் பற்றியும் சபைக்கு விரிவாக எடுத்துரைத்தார். ராணுவத்தாருடன் சேர்ந்து கொண்டு ஐரிஷ் போலீஸார் அரசாங்கத்தின் கைக்கருவிகளாய் அமைந்து எண்ணற்ற கொடுமைகளைச் செய்து வருவதால் அவர்களை ஐரிஷ் மகாஜனங்கள் யாவரும் சமூகத்திலிருந்து விலக்கி வைத்துவிட வேண்டுமென்று டிவேலரா ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். ஓர் அங்கத்தினர்கூட ஆட்சேபிக்காமல், யாவரும் அதை ஏற்றுக்கொண்டனர். சுதந்திரம் வேண்டி எழுந்து நின்ற அயர்லாந்தின் சரித்திரத்தில் இத்தீர்மானம் பெரும் மாறுதல்களை உண்டாக்கியதைப் பின்னர் காண்போம்.

போலீஸாருக்கும் பட்டாளங்களுக்கும் அஞ்சி இருட்டறைகளிலே பதுங்கிக் கிடக்காமல் காலின்ஸ் மூன்றும் நாள் கூட்டத்திற்கும் விஜயஞ் செய்தான் அன்றும், அவன் மான்ஷன் மாளிகையிலிருந்த செய்தியைப் பட்டாளத்தார் அறிந்து, அவனைப் பிடிக்கவேண்டும் என்று வந்து அம்மாளிகையைச் சூழ்ந்து கொண்டனர். ஆனால் காலின்ஸ், அவர்கள் முற்றுகையிட்டுக் கொண்டிருக்கும்பொழுதே, இரண்டு பட்டாளங்களுக்கு நடுவாகச் சென்று மறைந்துவிட்டான். இவ்வாறு தான் இருக்கும் இடத்திற்கு வரும் பட்டாளங்களின் கையிலிருந்து தப்பியோடுவதோடு அவன் திருப்தியடையவில்லை. அவன், டப்ளின் மாளிகைக்குச் சென்று, அங்குள்ள ஒற்றர்களின் தஸ்தவேஜுகள் யாவற்றையும் சோதனையிட்டு, தொண்டர் படையைப் பற்றியும் ஸின்பீன்

இயக்கத்தைப் பற்றியும் அரசாங்கத்தார் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் விரும்பினான். அளவு கடந்த வலிமையுள்ள அரசாங்கத்தின் தஸ்தவேஜுகளைப் பார்ப்பதற்கு யாரால் உதவிசெய்ய முடியும்? காலின்ஸ் பிராயிடம் தன் எண்ணத்தை அறிவித்தான். டெயில் ஐரான் கூடி வருங் காலத்திலேயே ஒரு நாள் இரவில் காலின்ஸும் நூனன் என்பவனும் டப்ளின் மாளிகையை அடைந்தனர். பிராய் அங்கு தயாராய்க் காத்து நின்றான். அவன் இருவரையும் அழைத்துச் சென்று, அரசாங்கத் தஸ்தவேஜுகள் வைக்கப்பட்டிருந்த மாடி அறைக்குள் விட்டு விட்டு, வெளியே கதவைப் பூட்டிக்கொண்டான். அதே சமயத்தில் கீழே ஒரு குடிகாரன் தன் வெறியில் அரசாங்க மாளிகையின் சாளரம் ஒன்றை உடைத்துவிட்டான். காலின்ஸ் அதை அறிந்து மனம் கலங்கினான். உறங்கிக் கொண்டிருக்கும் சிப்பாய்கள் ஓசை கேட்டு எழுந்து வந்துவிடக் கூடும் என்று கவலையுற்றான். நல்ல வேளையாக அப்படியொன்றும் நிகழவில்லை. அவன் தோழனுடன் அமர்ந்துகொண்டு ஒற்றர்களின் அறிக்கைகளையும், குறிப்புக்களையும், அதிகாரிகளின் உத்தரவுகளின் நகல்களையும் மிக வேகமாகப் புரட்டிப் புரட்டிப் படித்துப் பார்த்தான். முக்கியமான விஷயங்களைத் தன் குறிப்புப் புத்தகத்திலே குறித்துக்கொண்டான். ஒற்றர் குறிப்புக்கள் பலவற்றில் தன்னைப்பற்றி எழுதப் பட்டிருப்பவற்றையெல்லாம் அவன் வியப்புடன் உற்றுப் பார்த்தான். ஒன்றில் அவனைப்பற்றி, 'அவன் விசேஷப் புத்திக் கூர்மை வாய்ந்த கார்க் நகரக் குடும்பத்தில் தோன்றியவன்' என்று குறிப்பிடப் பட்டிருந்தது.

அவன் அதைப் படித்துவிட்டுக் குலுங்கக் குலுங்கச் சிரித்து மகிழ்ந்தான். இவ்வாறு இரவு முழுதும் அரசாங்க மாளிகையில் வேட்டையாடிவிட்டு, அவன் தன் இருப்பிடத்திற்குத் திரும்பினான். இரவு முழுதும் தூக்கங் கொள்ளாத அவ்வீரன் மறுநாள் பகலில் டெயில் ஐரான் கூட்டத்திற்கும் தவறாது சென்றான்.

காலின்ஸ் தன் கட்சியின் வலிமையை மிகைபட எண்ணி மயக்கம் கொள்பவனில்லை. ஆதலால் டெயில் ஐரானின் அங்கத்தினர்களும், தொண்டர்களும், இதர ஸின்பீனர்களும் அரசாங்க ஒற்றர்களால் தொடரப்பட்டும்; துன்புறுத்தப்பட்டும் வருவதைக் காணும் பொழுது, அவன் தானும் தோழர்களும் பிறந்த நாட்டிலே வேற்றூர்போல் நடத்தப்பட்டதை நினைத்து வருந்தினான். சகல அதிகாரமும் டப்ளின் மாளிகையில் தங்கி யிருக்கும் பொழுது, குடியரசு என்பது பெயரளவுதான் அன்றோ? ஒற்றர்கள் தாங்கள் தொண்டர்களைத் தொடர்ந்தால் அபாயம் என்பதைக் காட்டச் சொற்ப எச்சரிக்கையாவது செய்யவேண்டு மல்லவா? இவ்வாறு அவன் எண்ண மிட்டுச் சில ஏற்பாடுகள் செய்தான். பசு நடக்க ஆரம் பித்தால், கன்றுகள் துள்ளிப் பாயுமல்லவா? சில தொண்டர்கள் துப்பறியும் அதிகாரியாகிய ஹால்லி என் பவனுடைய வீட்டிற்குள் புகுந்து சோதனையிட்டு அட்ட காசஞ் செய்தனர். வேறு சில தொண்டர்கள் ஒபிரியன் என்னும் துப்பறியும் அதிகாரியை நடுத்தெருவில் பிடித்துக் கயிற்றால் கட்டி உருட்டி விட்டனர். கயிறு களுடனும் கம்புகளுடனும் ஆரம்பமான இந்தச் சண்டை, பின்னால் துப்பாக்கிகளும் கைத்துப்பாக்கிகளும் உபயோ கிக்கப்பட்ட பெரும் போராய் மூண்டது.

அக்காலத்திலெல்லாம் காலின்ஸ் போலண்டு, பீஸ்லெய் என்னும் நண்பர்களுடன் கூடி வாகான் விடுதியில் வசித்துவந்தான். அவ்விடுதி ஒற்றர்கள் சந்தேகத்திற்கு உட்படவில்லை. இரவுகளில் அவன் நண்பர்களுடன் கூடி மேற்கொண்டு செய்யவேண்டிய வேலைகளைக் குறித்து வெகு நேரம் ஆலோசனை செய்வது அந்த விடுதியில்தான்.

மிக நெருக்கடியான அக்காலத்தில் டிவேலரா கடல் கடந்து அமெரிக்கா செல்லவேண்டும் என்று பிடிவாதஞ் செய்தார். காலின்ஸ் தேசிய இயக்கத்தின் ஹிருதயமாய் விளங்கியதுபோல் டிவேலரா அதன் மூளையாய் விளங்கினர். டிவேலரா பெரிய ராஜதந்திரி. வல்லரசாகிய இங்கிலாந்தின்மேல் வெற்றி கொள்ளவும், தேசத்தைப் புணருத்தாரணம் செய்யவும் மிகுந்தபொருள் வேண்டும் என்று அவர் சிந்தித்தார். பகைவர் செருக்கை அறுக்கும் ஆயுதம் பொருள் என்று கருதினர். ஆனல் கொந்தளிக்கும் அடக்குமுறைக் கடலின் நடுவே, திசை தெரியாது தவித்த மரக்கலமான அயர்லாந்து, ஏராளமான பணத்தைப் பெறுவது எங்ஙனம்? 5-லக்ஷம் பவுன் கடன் வாங்கவேண்டும் என்றும், அதில் பாதி உள் நாட்டிலும் பாதி வெளி நாடுகளிலும் வாங்கவேண்டும் என்றும் டெயில் ஐரான் தீர்மானித்திருந்தது. அமெரிக்காவுக்குப் போய்ப் பணம் சேகரித்து அங்குள்ளவர்களின் ஆதரவைப் பெறவேண்டும் என்று டிவேலரா பிடிவாதம் செய்தார். காலின்ஸும் முடிவில் இசைந்து, பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். முன் கூட்டியே தோழன் போலண்டையும் அமெரிக்காவுக்கு அனுப்பிவைத்தான்.

அமெரிக்காவிலிருந்த ஐரிஷ்காரர்கள் 1919-ம் வருஷம் கூடிய தங்கள் ஜாதீய மகாநாட்டில் அயர்லாந்தின் கோரிக்கைகளைச் சமாதான மகாநாடு கேட்கும்படி செய்வதற்காக வால்ஷ், டூன், ரியான் என்னும் மூவரை நியமித்திருந்தனர். அவர்கள் மூவரும் ஐரிஷ் ஜாதியைச் சேர்ந்த பிரபலமான அமெரிக்கர்கள்; ராஜீய வாழ்க்கையிலும் மிக உயர்ந்த அந்தஸ்துள்ளவர்கள். அவர்கள் பாரிஸ் நகரை அடைந்தனர். ஆங்கிலப் பிரதம மந்திரி லாயிட் ஜார்ஜ், அவர்களுடைய பெருமையை அறிந்து, அவர்களை எப்படியாவது மயக்கிவிட வேண்டும் என்று கருதித் தம்மைக் கண்டு பேச வருமாறு அழைத்தார். ஆனால், அமெரிக்கப் பிரதிநிதிகள், மந்திரியைச் சந்திப்பதற்கு முன்னால், அயர்லாந்துக்குச் சென்று அங்குள்ள விஷயங்களை நேரில் தெரிந்துகொள்ள வேண்டும் என்று புறப்பட்டனர்.

அவர்கள் மேமீ 3-ம் தேதி டப்ளின் நகரை அடைந்தனர். நகர சபைத் தலைவரும், டெயில் ஐரான் சார்பாக டிவேலராவும், மகாஜனங்களும் அவர்களை மிகுந்த வைபவத்துடன் வரவேற்றனர். அவர்கள் நாட்டின் எந்தப் பாகத்திற்குச் சென்றாலும், ஜனங்கள் ஆரவாரத்துடன் உபசரித்தனர். ஆனால், பெல்பாஸ்டு நகரில் மட்டும் நகரசபைத் தலைவர் அவர்களைச் சந்திக்க மறுத்தார். அவர்கள் நாடு முழுதும் சுற்றிப் பார்த்து, தேசிய எழுச்சி தாண்டவமாடுவதையும், வேற்றார் ஆட்சியின் கீழ் ஜனங்கள் அல்லலுறுவதையும் தெரிந்து கொண்டனர். மேமீ 10-ம் தேதி டெயில் ஐரானின் விசேஷக் கூட்டத்திற்கும் அவர்கள் விஜயஞ் செய்திருந்தனர். டிவேலரா அவர்களை வரவேற்கையில், உண்மையையும்

நீதியையும் அமெரிக்கா கைவிடாதென்றும், அது வில்ஸனின் உயர்ந்த தத்துவங்களைப் பாதுகாக்குமென்றும் தாங்கள் நம்புவதாயும், உலகத்தில் தன்னிகரில்லாது உயர்ந்துள்ள அமெரிக்க சமூகம் வலியார் மெலியாரை வருத்தும் வழக்கத்தை ஒழிக்கவேண்டிய பொறுப்பையுடையது என்றும் கூறினர். ஆர்தர் கிரிபித்தும் மற்றும் சில அங்கத்தினர்களும் பகைவரின் அநீதிகளை எடுத்துரைத்தனர். காலின்ஸ் பொருளாதார மந்திரியாதலால், ஆங்கில ஆட்சியின்கீழ் வரிப்பளுவாலும், கொடுமைகளாலும் அயர்லாந்து செல்வமிழந்து சீர்கெட்டுப்போன விருத்தாந்தத்தைத் தக்க புள்ளி விவரங்களுடன் எடுத்துக் காட்டினன். அச்சமயம் மான்ஷன் மாளிகை முழுதும் ஜனங்கள் நிரம்பியிருந்தனர்.

கெல்லி என்னும் தொண்டன் டெயில் ஐரான் கூட்டத்திற்கு வரும்பொழுது, வழியில் ஸார்ஜன்டு புரூட்டன் என்னும் ஒற்றன் அவனைக் கைதி செய்ய முயற்சித்ததால், அவன் தன் ரிவால்வரைத் தூக்கிக்கொண்டான். புரூட்டன் உடனே கைகளை மேலே தூக்கிக்கொண்டு அபயம் கேட்டான். இதற்குள் பல தொண்டர்கள் கெல்லியைச் சூழ்ந்துகொண்டு அவனைச் சபைக்கு அழைத்துச் சென்றனர். இந்தக் கெல்லியின்மேல் ஒரு வாரண்டு இருந்தது. அதற்காக ஏராளமான போலீஸாரும் பட்டாளத்தாரும் மான்ஷன் மாளிகையை நோக்கி வந்தனர். அச்சமயம் அமெரிக்கப் பிரதிநிதிகள் அங்கே இல்லை. கட்டிடம் முழுதும் சோதனை போடப்பட்டது. ஆனல் கெல்லியோ, காலின்ஸ் முதலிய ஆசாமிகளோ, அங்கு காணப்படவில்லை. போலீஸாரும் பட்டாளங்களும் வெறுங் கையோடு திரும்பினர்.

அவர்கள் போகும் வரை காலின்ஸும் அவன் தோழர்களும் மேல் மாடியிலேறி, அடுத்த வீட்டின் மாடியில் மறைந்துகொண்டிருந்துவிட்டுப் பின்னல் திரும்பி வந்தனர். அன்றிரவு அமெரிக்கப் பிரதிநிதிகளுக்கு மான்ஷன் மாளிகையில் பொதுஜன வரவேற்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவர்கள் வரும்பொழுதும் பட்டாளத்தார் அவர்களை வழிமறித்துச் சோதனையிட்டனர். ஆங்கில ஆட்சியின் ருசியை அவர்கள் நேரிலும் தெரிந்துகொள்ளவேண்டு மல்லவா? இரண்டு மூன்று தினங்களுக்குப் பின் அவர்கள் பாரிஸுக்குத் திரும்பினர்.

அப்பிரதிநிதிகள் அங்கு சென்ற பின், லாயிட் ஜார்ஜ் அவர்களுடைய மனநிலை அயர்லாந்துக்கு அநுகூலமா யிருந்ததைக் கண்டு, பேட்டி யளிக்க மறுத்துவிட்டார். அவர்கள் பிரசிடெண்டு வில்ஸனைக் கண்டு பேசினர்கள். ஐரிஷ் ஜனங்களுக்குச் சமாதான மகாநாட்டில் தங்கள் கோரிக்கையைக் கூற உரிமை அளிக்க வேண்டும் என்று ஐக்கிய மாகாணச் சட்டசபை தீர்மானித்திருந்தும், வில்ஸன் தம்முடைய அதிகார தோரணையில் ஒன்றும் செய்ய முடியாது என்றும், தனிப்பட்ட முறையிலே இயன்ற சகாயம் செய்வதாயும் கூறினர். இது வெற்றுரை என்று அறிந்து வால்ஷ் முதலியோர் வருந்தினர்கள்.

இடையில் அப்பிரதிநிதிகள் தாங்கள் அயர்லாந்தில் கண்டும் கேட்டும் வந்த விஷயங்களை யெல்லாம் ஓர் அறிக்கையாக வெளியிட்டனர். அது எங்கணும் மிகுந்த பரபரப்பை உண்டாக்கிவிட்டது. அயர்லாந்தில் பயங்கர ஆட்சி நடப்பதையும், தேசபக்தர்கள் கைதிகளாக நடத்தப்படும் கொடுமையையும், நிரபராதி

களான மக்களுக்கு இழைக்கப்படும் தீங்குகளையும் அறிக்கை விரிவாக எடுத்துரைத்தது. எனவே, ஆங்கில அதிகாரிகள் சினங்கொண்டு, அவ்வறிக்கை வெறும் பொய் மூட்டை என்று மறுப்புக்கள் வெளியிட்டனர். ஆனால் வால்ஷ், சிறிதும் கலங்காமல், 'தாமும் தம் சகாக்களும் தயாரித்த அறிக்கையையும் அதற்கு எதிராக ஆங்கில அதிகாரிகள் சொல்லவேண்டிய விஷயங்களையும், சமாதான மகாநாடு நியமிக்கும் ஒரு பஞ்சாயத்தின் முன்னர் ஆலோசனைக்கு வைக்கத் தயாராயிருப்பதாக அறிவித்தார். அதிகாரிகள் இதற்கு எங்ஙனம் துணிவர்? அவர்கள் வால்ஷின் அறிக்கையைக் காணாதவர்போல் மௌனம் சாதித்தனர். மௌனம் சர்வார்த்த சாதனம் அன்றோ?

சமாதான மகாநாட்டில் அயர்லாந்து கலந்து கொள்வதற்குச் செய்த முயற்சி இவ்வாறு முடிந்தது. 'கொல்லன் உலையில் ஈக்கு என்ன வேலை?' என்னும் கொள்கையை வல்லரசுகள் உறுதியாய்ப் பிடித்துக் கொண்டிருந்தன. அயர்லாந்து தன் கையே தனக்குதவி என்னும் பாடத்தைக் கடைசி முறையாகக் கற்றுக் கொண்டது.

8

முன்னேற்பாடுகள்

பெரிய இயக்கம் ஒவ்வொன்றையும் அதன் பகைவர் முதலிலேயே மதிக்க மாட்டார்கள். ஆரம்பத்தில் அவர்கள் அதை அலட்சியஞ் செய்வர்; அடுத்தாற்போல் ஏள

னஞ் செய்வர்; பின்னர் வசை மொழியால் பழிப்பர்; மேலும் அது வளருமானால், அடக்குமுறை என்னும் தண்டத்தைத் தொடங்குவர். இந் நான்கு படிகளையும் தாண்டிய பின்னரே, ஓர் இயக்கம் வெற்றி என்னும் ஐந்தாம் படியில் ஏறமுடியும் என்று மகாத்மா காந்தி கூறியுள்ளார். ஸின்பீன் இயக்கம் நிச்சயமாக நான்காம் படியில் ஏறி நின்றது. நாலுபுறத்திலிருந்தும் அடக்குமுறைப் பாணங்கள் அதன் மேல் பாய்ந்து துளைத்தன. ஆனால், வெற்றி பெறுவதற்குப் பெரியதோர் போர்—மகத்தான தியாகம்—தேவையாயிருந்தது.

அப்போரை விவரிக்கு முன்னர் முதலில் அயர்லாந்தில் இருந்த இரு அரசாங்கங்களுடைய வல்லமையையும் ஆராய்வோம். ஒரு பக்கத்தில் பொதுஜனங்கள் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளைக் கொண்ட டெயில் ஐரான். அதற்கு உதவியாய் நடந்தது ஸின்பீன் இயக்கம். அதைப் பாதுகாத்து நின்றது தொண்டர் படை. ஐரிஷ் மக்களின் ஆதரவு முழுதும் அதற்கே உரியது. மற்றொரு பக்கத்தில் வேற்றூரின் அரசாங்கம் என்னும் 'விடிவிலாத் துன்பஞ் செய்யும் பராதீனம்'. அதற்கு உற்ற துணையாய் நின்றவை ஆண்டுதோறும் பெருந் திரவியத்தை விழுங்கிக்கொண்டிருந்த பட்டாளமும் போலீஸும். இவற்றுள் பட்டாளம் எப்பொழுதும் பயன்படுவதன்று—சில அசாதாரண நிலைமைகளில்தான் அது அவசியம். ஆனால் போலீஸின் உதவியில்லாமல் சர்க்காரால் ஒன்றும் செய்ய முடியாது.

ஐரிஷ் போலீஸ் படை ஜனங்களுக்குத் தொண்டு செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டதன்று. அது ஆங்கில அரசாங்கத்தைப் பாதுகாக்கும் பட்டாள

மாகவும், ஒற்றுக்கேட்டு அதற்கு அறிவிக்கும் ஒற்றர் கூட்டமாகவும் விளங்கியது. எல்லாத் தேசபக்தர்களைப் பற்றியும், அவர்கள் செய்து வந்த வேலைகளைப் பற்றியும், ஜனங்களின் மனோபாவங்களைக் குறித்தும், தொண்டர் படையின் வலிமையைக் குறித்தும், எக்காலத்தும் அரசாங்கம் மிக நன்றாகவும் தெளிவாகவும் அறிந்து கொண்டிருந்தது. இது எங்ஙனம் சாத்தியப்பட்டது என்றால், போலீஸ் ஒற்றரின் உதவியினாலேதான். ஒற்றர்கள் நாடெங்கும் பரந்திருந்தனர். போலீஸ் தாணக்கள் யாவும் வலைப் பின்னலைப்போல் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டிருந்தன. இக்காரணத்தால், ஆங்கில அதிகாரிகள் டப்ளின் மாளிகையில் உட்கார்ந்துகொண்டே, ஒவ்வொரு நிமிஷத்திலும் தேசமனைத்தும் நடக்கும் விஷயங்களை உடனுக்குடன் தெரிந்துகொள்ள முடிந்தது. தெரிந்துகொண்ட பின்னர், அவர்களுக்குப் பிடியாத விஷயங்களை அடக்குவதற்குப் பட்டாளத்தையோ போலீஸையோ அனுப்பி வந்தனர். ஒற்றர்களில் பெரும்பாலார் அயர்லாந்தில் பிறந்தவர்கள். இதர போலீஸாரும் ஐரிஷ்காரரே. இவர்கள்தான் அரசாங்கத்தின் கைகளாகவும், கண்களாகவும், செவிகளாகவும் விளங்கினர். இந்தக் கைகளை வெட்டி, கண்களைக் குருடாக்கி, செவிகளையும் அடைத்து விட்டால், அரசாங்கம் மலை சாய்ந்தது போல் சாய்ந்துவிடும். போலீஸ் படையின் வீழ்ச்சியே தங்களது வெற்றி என்பதை அறிந்துகொண்டு, ஸின்பீனர்கள் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய முற்பட்டனர். டெயில் ஐரானும் போலீஸாரைச் சமூக பகிஷ்காரஞ் செய்யவேண்டும் என்று தீர்மானித்தது.

காலின்ஸின் ஏற்பாடுகளின்படி டிவேலரா ரகசியமாக அமெரிக்காவுக்குச் சென்றார். இதனால் காலின்ஸின்

பொறுப்பு அதிகரித்து வந்தது. அவன் டெயில் ஐரானின் உளவு இலாகாத் தலைவனாயும் நியமிக்கப்பட்டு, தனக்குக் கொடுக்கப்பட்ட நான்கு பதவிகளையும் வகித்து, இடைவிடாது உழைத்துவந்தான். ஒற்றுக் கேட்பது அவனுக்கு வெகுநாள் பழக்கம். முதன் முதலாகத் தக்க ஒற்றர் கூட்டத்தை அமைத்துக்கொண்டால்தான் அதிகார வர்க்கத்தை எதிர்த்து நிற்கமுடியும் என்பது அவனுக்கு மிக நன்ருய்த் தெரியும். ஆனுல், ஒற்றுக் கேட்பதற்குத் தக்க நபர்களைக் கண்டுபிடிப்பது கஷ்டமாயிருந்தது. அவன் லியான் டோபின் என்பவனைப் பிரதான உளவு அதிகாரியாக நியமித்துக்கொண்டான். உளவு இலாகா மெதுவாகவே வளர்ந்துவந்தது. காலின்ஸ் மிகத் தேர்ந்த நண்பர்களையே அந்த இலாகாவுக்கு நியமித்து வந்தான். இவர்களைத் தவிர, அரசாங்க ஒற்றர்களிலும் சிலர் அவனுக்கு வழக்கம்போல் உதவி புரிந்துவந்தனர். ஆங்கில ஒற்றர் படையை எதிர்த்து நாடெங்கணும் சுற்றிப் போராட்டங்கள் செய்வதற்காகப் 'பறக்கும் தொண்டர் படை' ஒன்றும் நிறுவப்பட்டது. வெடி குண்டுகள் செய்வதற்காகப் பார்னல் தெருவில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டது. காலின்ஸ் தனக்கு நண்பரான பிராய், மக்நமாரா என்னும் இரு ஒற்றர்களையும் வாரம் தவருமல் சந்தித்துப் பகைவரின் நடவடிக்கைகள் யாவற்றையும் தெரிந்துகொண்டு வந்தான். அதிகாரிகளும் ஒற்றர்களும் கையாளும் ரகசிய பாஷையின் பொருளைத் தெரிந்துகொள்ளவேண்டிய நுட்பமான குறிப்புகளையும் அவன் நன்ருய்த் தெரிந்துகொண்டான். பகைவரின் கடிதங்கள் பல அவன் கைக்கு வந்து சேருவதற்குத் தக்க ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. இவ்வாருக ஒற்றர்களையே ஒற்றுப் பார்க்கும் கடின

மான வேலையிலும் அவன் அநுபவம் பெறச் சந்தர்ப்பம் வாய்த்தது.

இடையில், தொண்டர் படையினர் அதுகாறும் செய்துவந்த சில காரியங்களை நாம அறிந்துகொள்ள வேண்டும். 1919 ஜனவரியிலிருந்து ஜூன் மாதம் வரை தொண்டர்கள் செய்த பெருங் காரியங்களில் சிலவற்றை இங்கு குறிப்பிடுவோம். இரண்டு வருஷ காலமாய் அவர்கள் போலீஸ் கொடுமைகளையெல்லாம் பொறுமையுடன் ஏற்றுக்கொண்டிருந்தனர். மக்நீல் தன்னைக் கைதிசெய்ய வந்த போலீஸாருடன் போராடியதைப் போன்ற சம்பவங்கள் ஆங்காங்கே அபூர்வமாக நடந்தவை. ஸோலோ ஹெட்பக் என்னுமிடத்தில் ஜனவரி 21-உ இரண்டு போலீஸார் தொண்டர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அப் போலீஸார் ஒரு வெடி மருந்து வண்டிக்குப் பாதுகாவலாகச் சென்றுகொண்டிருந்தனர். தான்பிரீன் முதலான தொண்டர்கள் சிலர் வெடி மருந்தைக் கைப்பற்றுவதற்காக முயற்சிக்கையில், அப்போலீஸார் எதிர்த்ததால், அவர்கள் சுட்டுத் தள்ளப்பட்டார்கள். அச் சமயத்தில் பல ஸின்பீனர்களே பகைவர்களின் ரத்தம் சிந்துவதற்குச் சம்மதிக்கவில்லை. ஸோலோ ஹெட்பக் சம்பவத்தால் தேசத்தில் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டது. பின் மார்ச்மீ 20-உ டப்ளின் தொண்டர்கள் சிலர், கெல்லின்ஸ் டவுனில் ஆகாய விமானம் இறங்கும் இடத்திற்குச் சென்று,75 துப்பாக்கிகளையும் பல்லாயிரம் குண்டுகளையும் கைப்பற்றிக் கொண்டனர். ஆயுதங்களைக் காத்துக் கொண்டிருந்த பட்டாளத்தாரை அடக்குவதற்குத் தொண்டர்கள் ஒரு குண்டுகூடச் சுடவில்லை.

லிமெரிக் சிறையில் வைக்கப்பட்டிருந்த நோயாளியான ஒரு தொண்டன் ஏப்ரல்மீ 6-உ வேறு தொண்டர்களால் வெளியே கொண்டுபோகப் பட்டான். அன்று நோயாளியைச் சூழ்ந்து போலீஸார் பாதுகாத்து நிற்கையில் திடீரென்று ஆயுதந் தாங்கிய தொண்டர்கள் அங்கு புகுந்தனர். ஒரு போலீஸ்காரன் நோயாளியைப் பார்த்துச் சுட்டான். அதனால் அவன் அபாயமான காயமடைந்தான். அதே சமயத்தில் தொண்டர்களும் சுட்டனர். முதலில் சுட்ட போலீஸ்காரன் மடிந்து வீழ்ந்தான்; மற்றும் நான்கு போலீஸாரும் வார்டர்களும் காயமடைந்தனர். தொண்டர்கள் கைதியைத் தூக்கிக் கொண்டு மறைந்தனர். ஆனால், அந்த நோயுற்ற தொண்டன் மறுநாள் இறந்துபோனான். இதிலிருந்து லிமெரிக்கில் சில நாள் ராணுவச் சட்டம் அமல் நடத்தப்பட்டது. ஏப்ரல்மீ 20-உ ஒரு தொண்டர் படை அரக்லின் என்னுமிடத்தில் போலீஸ் படைவீடுகளைத் துணிவுடன் தாக்கி, போலீஸாரை ஜயித்து, அங்கிருந்த ஆயுதங்களையும் வெடிமருந்தையும் கைப்பற்றிக் கொண்டது.

இத்தகைய காரியங்களெல்லாம் தனிப்பட்ட சில தொண்டர்களின் செயல்கள் என்று எண்ணிவிடக் கூடாது. இவை யாவும் தலைமை ஸ்தலத்திலிருந்த அதிகாரிகள் வேண்டுமென்றே அமைத்த திட்டத்தின்படி நிகழ்ந்தவை. இவை சம்பந்தமாகத் தொண்டர் படையின் பத்திரிகையாகிய ‘அன் டோக்லக்’கில் வெளிவந்த நீண்ட அறிக்கையில் காணப்பட்ட விஷயமாவது: ‘எதிரியின் ஆயுதந்தாங்கிய சிப்பாய்களாயினும், போலீஸாராயினும், அவர்களை நம்மேல் படையெடுத்துவந்த அந்

நியரை நடத்துவது போலவே பாவிப்பது நியாயமாகும். இதை எல்லாத் தொண்டர்களும் தெளிவாய்த் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம். ஒவ்வொரு தொண்டனும் தன் படையின் கடமைகளைச் செய்யும்பொழுது, நமது ராஜ்யத்தைக் கவர்ந்து கொண்ட ஆங்கிலேயரின் சிப்பாய்களுக்கும் போலீஸ்ருக்கும் எதிராக நியாயமான எல்லாவித யுத்த முறைகளையும் கையாளுவது ஒழுங்கும் சட்டப்படி நியாயமுமாகும். தொண்டனுடைய ஆயுதங்களைப் பறிக்க முயற்சிகள் செய்யப்பட்டால், எதிர்த்து நிற்கவேண்டியது அவன் உரிமை மட்டுமல்லாமல் கடமையுமாகும்......இங்கிலாந்து, ஒன்று தேசத்தைக் காலி செய்து கிளம்பிவிட வேண்டும்; இல்லாவிடில், தனது அந்நியப் படையின் உதவியால் இடைவிடாது தன்னோடு போராடும் இந்நாட்டைக் கைவசம் வைத்துக் கொள்ளவேண்டும்.'

இனி, மேற்கொண்டு நடந்த காரியங்களைக் கவனிப்போம். ஜூலை 30-உ ஒற்றனை ஸார்ஜன்டு ஸ்மித் என்பவன் தன் வீட்டருகிலேயே சுட்டுக் கொல்லப்பட்டான். அவன் இதுவரை தேசிய இயக்கத்திற்கு எதிராகத் தீவிரமாக வேலை செய்துவந்ததற்காகவே இத்தண்டனை விதிக்கப்பட்டது. எத்தனையோ முறை அவனுக்கு எச்சரிக்கை செய்தும், பயனில்லாது போயிற்று. இந்த மரண தண்டனை டெயில் ஐரானின் பாதுகாப்பு மந்திரியால் விதிக்கப்பட்டது. ஆறுமாத காலமாக நிலைத்து நின்ற டெயில் ஐரான் இதுவரை இத்தகைய தீவிரமான தண்டனைகளை விதிக்கவில்லை. செப்டம்பர் 12-உ பிரன்ஸ்விக் தெரு போலீஸ் தலைமை ஸ்தலத்திற்கு வெளியே டேனியல் ஹோயி என்ற ஸார்

ஜன்டு சுட்டுக் கொல்லப்பட்டான். இவனும் தன் நாட்டுத் தேசபக்தர்களுக்கு எதிராக ஒற்றுப் பார்த்ததால் உயிரிழக்க நேர்ந்தது. இத்தகைய தண்டனைகள் குறித்த பலனை உண்டாக்கின. மற்ற ஒற்றர்கள் தொண்டர் களிடம் அதிகமாய் நெருங்க அஞ்சினார்கள். தங்களுக்கு இடப்பட்ட உத்தரவுகளை ஓரளவு நிறைவேற்றிக் கூலி பெறுவதைத் தவிர, அவர்கள் தாங்களாக விசேஷ முயற்சி எதுவும் எடுத்துக் கொள்வதில்லை. நாளடைவில் தொண்டர்களின் போராட்டம் வலுவடைந்தது. பெர்மாய் என்னுமிடத்தில், தொண்டர்கள் லியாம் லிஞ்சின் தலைமையின் கீழ், 17 ஆயுதம் தாங்கிய சிப்பாய்களோடு போராடி வெற்றி கொண்டு ஆயுதங்களைப் பறித்துக் கொண்டனர். ஆகஸ்டு மாதத்தில் அயர்லாந்தின் தெற்கிலும் மேற்கிலும் பல போலீஸ் படை வீடுகள் தொண்டர்களால் தாக்கப்பட்டுக் கைப்பற்றப்பட்டன. பொது ஜனங்களும் போலீஸாரைச் சமூக பகிஷ்காரஞ் செய்ய ஆரம்பித்தனர். அதனால் பல போலீஸார் ராஜிநாமாச் செய்தவண்ணமா யிருந்தனர். இவையெல்லாம் பிரிட்டிஷாரின் பிடி தளர்ந்துவந்ததைக் குறிக்கின்றன.

டெயில் ஐரான் தோன்றியது முதல் நாளுக்கு நாள் அதன் செல்வாக்கு பெருகிவந்தது. தேசத்தில் அதுவே உண்மையான அரசாங்கம் என்பதை ஜனங்கள் சிறிது சிறிதாக உணர்ந்தனர். ஸின்பீன் இயக்கத்தின் ஒரு முக்கியாம்சமான பிரிட்டிஷ் நீதிஸ்தல பகிஷ்காரத்தை அவர்கள் கைக்கொண்டு, ஸின்பீன் நீதிஸ்தலங்களுக்கு வழக்குகளைக் கொண்டுபோயினர். தேசியப் பஞ்சாயத்துகளில் நல்ல நீதி வழங்கப்பட்டதோடு, வழக்குகள் விரைவாகவும் முடிக்கப்பட்டன; செலவும் சுருக்கமாயிருந்தது.

அரசாங்கச் சட்டப்படி தேசியப் பஞ்சாயத்துகள் ஏற்படுவதற்கு இடமிருந்தது. பத்திரிகைகள் அப் பஞ்சாயத்துகளில் முடிவான வழக்குகளின் விவரங்களை வெளியிட்டுப் பிரபலப் படுத்தின. டெயில் ஐரான் சில நாட்களுக்குப் பிறகு பஞ்சாயத்துகள் அனைத்தையும் ஒழுங்குபடுத்தி, ஏற்ற சட்டங்களியற்றி, ஜில்லாக்களுக்கு வேண்டிய பெரிய நீதிஸ்தலங்களையும் அமைத்தது.

தேசியத் திட்டத்தை நிறைவேற்றத் தேசத்தினிடம் பக்தி கொண்ட பல இளைஞர் மட்டும் இருந்தால் போதுமா? ஏராளமான ஆயுதங்கள் வேண்டும்; ஆயிரக் கணக்கான பொருளும் வேண்டும். பொருள் மிகுந்திருந்தால், கற்ற இளைஞரையும் ஆயுதங்களையும் பெறமுடியும். ஆனால் ஏழைமைப்பட்ட அயர்லாந்தில் தேசியக் கட்சிக்குப் பொருள் ஏது? அடிமைப்பட்ட தேசம், ஆளும் நாட்டால் பொருள் அபகரிக்கப்பட்டு, வளர்ந்து வரும் வறுமையில்தானே உழலும்! ஆளும் நாடு தேவையான பட்டாளங்களை வைத்துக்கொள்ளப் பெரும் பொருளைப் பெறமுடியும். கொடுந் தீர்வைகள், வர்த்தகம், 'நாகரிகமான' சுரண்டல் முதலிய பல வழிகளில் அதற்குப் பொருள் சேரும். ஆனால் அடிமை நாடு பணத்திற்கு என்ன செய்யும்? பொருள் இல்லாவிடில் கிளர்ச்சியில்லை; கிளர்ச்சி இல்லாவிடில் போரில்லை; போரில்லாவிடில் சுதந்திர மில்லை.

டெயில் ஐரானின் தலைவரான டிவேலரா, பொருளின் அவசியத்தை நன்கறிந்து, ஆரம்பத்திலேயே உள்நாட்டில் 2,50,000 பவுனும், வெளி நாடுகளில் 2,50,000 பவுனும் டெயில் ஐரான் பேரால் கடன் வாங்கவேண்டும் என்று அறிவித்திருந்தார். இந்தக் கடனுக்குக் கொடுக்

கப்படும் தொகைகளுக்குக் கடன் பத்திரங்கள் கொடுக்கவும், நாடு சுதந்திரம் அடைந்த பின்பு வட்டியுடன் முதலைச் செலுத்துவதாக உறுதி கூறித் துண்டுப் பிரசுரங்கள் முதலியவற்றால் பிரசாரம் செய்யவும் வேண்டியிருந்தது. அயர்லாந்தில் கடன் தொகை வசூலிப்பது எளிதான வேலையன்று. ஒவ்வொரு துறையிலும் அரசாங்கம் எதிர்த்து வந்ததால், மிகவும் கவனமாகப் பணவசூல் செய்யவேண்டியிருந்தது.

வசூல் வேலை வரவு செலவு மந்திரியின் வேலையாதலால், காலின்ஸ் அதைத் தீவிரமாகச் செய்ய முற்பட்டான். ஹார்க்கோர்ட்டு தெருவில் அவன் காரியாலயம் இருந்தது. தேசத்தின் பல பாகங்களிலும் கட்டுப்பாடாக வசூலிப்பதற்குப் பொறுப்புவாய்ந்த நால்வர் நியமிக்கப்பட்டனர். அவர்கள் அவன் உத்தரவின் பேரில் தங்களுக்கு வேண்டிய உதவியாட்களை நியமித்துக் கொண்டு வேலை செய்து வந்தனர். சிறைக்குள் சிக்காது வெளியேயிருந்த டெயில் ஐரான் அங்கத்தினர் ஒவ்வொருவரும் தத்தம் பகுதியில் வசூலுக்குப் பொறுப்பாயிருக்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஸின்பீனர்கள் மட்டுமின்றி, மற்ற எல்லாப் பொதுஜனங்களிடமும் வசூல் செய்யவேண்டும் என்பதைக் காலின்ஸ் வற்புறுத்தினன். தன்னுடைய சிப்பந்திகள் கவனிக்காத மூலை முடுக்குகளிலுள்ள இடங்களையும் குறிப்பிட்டு அங்கெல்லாம் பணம் திரட்டவேண்டும் என்று அவன் அவர்களுக்கு அடிக்கடி கடிதம் அனுப்பிவந்தான்.

காலின்ஸின் தலைமைக் காரியாலயமே தினந்தோறும் போலீஸ் கண்டத்திற்கு உட்பட்டிருந்தது என்றால், வசூல் வேலை எவ்வளவு கஷ்டமானது என்பதை நாமே

யூகித்துக்கொள்ளலாம். காரியாலயத்தில்தான் பண சம்பந்தமான கணக்குகள் யாவும் இருந்தன. ஒரு சமயம் காலின்ஸ் அங்கு வேலை செய்துகொண்டிருக்கையில், திடீரென்று பட்டாளத்தாரும் போலீஸாரும் அங்கு வந்து தோன்றினர். போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் காலின்ஸிடம் சென்றார். அவருக்குக் காலின்ஸைத் தெரியாது. காலின்ஸ் விரைவாக ரிவால்வரை எடுத்து டைப் அடிக்கும் பெண்ணொருத்தியிடம் கொடுத்து மறைக்கச் சொல்லிவிட்டு, கையில் சில தஸ்தவேஜுகளுடன் நின்றான். அங்கிருந்து தப்புவதற்கு எவ்விதத்திலும் வழியில்லை. இன்ஸ்பெக்டர் அவன் கையிலுள்ள காகிதங்களைப் பார்க்கவேண்டும் என்று கேட்டார். காலின்ஸ் மிகுந்த தைரியத்துடன் அவரைப் பார்த்து, 'உமக்கு அவற்றில் என்ன வேலை இருக்கிறது? உம்முடைய சொந்த நாட்டாரையே ஒற்றுப்பார்க்கும் தொழில் நன்றாயிருக்கிறது!' என்று பரிகசித்தான். இச் சொற்களைச் செவியுற்ற இன்ஸ்பெக்டர் திகைத்து நின்றார். அந் நிலையில், காலின்ஸ் அப்பால் சென்று, மேல் மாடியில் ஏறி, அங்கிருந்து பக்கத்திலிருந்த ஒரு போஜன விடுதியின் கூரையின் மேல் பதுங்கியிருந்தான். சோதனை முடிந்தது. போலீஸாரும் பட்டாளத்தாரும் மறைந்தொழிந்த பின்னர், அவன் மெல்ல வெளியேறித் தனது காரியாலயத்தை அடைந்தான். போலீஸார் போகும்பொழுது இரண்டு முக்கியமான தொண்டர்களைக் கைதி செய்துகொண்டு சென்றனர்.

பின்னால் காலின்ஸின் வேலைகளுக்காக ஒரு புதுக் காரியாலயம் கட்டப்பட்டது. அதில் பணம், தஸ்தவேஜுகள் முதலியவற்றை மறைத்து வைப்பதற்குக்

கள்ள அறைகள் அமைக்கப்பட்டன. கட்டிடத்திற்குள் போலீஸார் பிரவேசித்தால், உடனே மேல் மாடியில் வேலை செய்யும் காலின்ஸ் அதை அறிந்துகொள்வதற்கு ஒரு மின்சார மணி அமைக்கப்பட்டது. அவன் அங்கிருந்து தப்பியோடவும் வழிகள் செய்யப்பட்டிருந்தன.

தேசியக் கடன் நிதியைப்பற்றிப் பத்திரிகைகள் மிகவும் விளம்பரப்படுத்தின. அயர்லாந்தின் வர்த்தகத்தைப் பெருக்குவதற்கு வெளிநாடுகளுக்குப் பிரதிநிதிகளை அனுப்பவும், கைத்தொழில்கள் விவசாயம் முதலியவற்றை வளர்க்கவும், பஞ்சாயத்துகள் நியமிக்கவும், தேசிய நாணயச்சாலை அமைக்கவும், மற்றும் தேசிய நிர்மாண வேலைகளைச் செய்யவும் அந்நிதி உபயோகிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. அவ்வாறே நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. கடன் விளம்பரங்களை வெளியிடும் பத்திரிகைகள் டெயில் ஐரானைப்பற்றிக் குறிப்பிடாமல், 'தேசியப் பிரதிநிதிகள்' வசூலிப்பதாகவே எழுதி வந்தன. இதனால் அரசாங்கத்தின் அடக்குமுறைக்குத் தப்பிவிடலாம் என்பது அவைகளின் கருத்து. ஆனால் சர்க்கார் அப்பத்திரிகைகள் யாவற்றையும் அடக்கி வாய்ப்பூட்டிட்டது. சில பத்திரிகாலயங்களில் அச்சு யந்திரங்களும் உடைக்கப்பட்டன. பல பத்திரிகைகள் ஏககாலத்தில் அடக்கப்பட்டுப் போனதால், அடக்குமுறையே கடன் நிதிக்கு விசேஷ விளம்பரமாகிவிட்டது. அரசாங்கம் அந்நிதிக்குப் பணம் உதவுவது சட்ட விரோதம் என்று உத்தரவிட்டது. ஆயினும், கொடிய அடக்குமுறையின் நடுவேயும், காலின்ஸ் ஏராளமாக நிதி வசூலித்து வந்தான். 1920, ஜூலையில் வசூலை நிறுத்தியபோது மொத்தம் 3,79,000 பவுன் நிதி சேர்ந்திருந்தது.

காலின்ஸ் தன் காலம் முழுவதையும் வசூலுக்கு மட்டுமே செலவிடவில்லை. அதி தீவிரமான காரியங்கள் பலவற்றிற்கு அவன் தலைமை வகித்து நடத்தினன். தொண்டர்களைக் கொண்டு பல சூரத்தனமான வேலை களைச் செய்வித்தான். ஆனல், தன் முக்கியமான கவனம் நிதி வசூலை விட்டுச் சிதறிவிடாமலும் பார்த்துக்கொண் டான். வசூலுக்காக ஜில்லாக்களின் பல பகுதிகளிலும் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டங்களை அரசாங்கம் தடை செய்தது. கூட்டங்கள் யாவும் ஒதுக்கமான இடங்களில் ரகசியமாக நடைபெற வேண்டியிருந்தன. சர்க்காருக்குப் பயந்து, முல்லிங்கார் என்னும் இடத்தில் இடுகாட்டில் ஒரு கூட்டம் கூடிற்று என்றல், அடக்குமுறையின் வேகந் தான் என்னே! மேலும் வர்த்தகர்களும் குடியானவர் களும் கொடுக்கும் உண்டியல்களை நேராக 'வரவு செலவு மந்திரிக்கு' என்று அனுப்ப முடியவில்லை. அரசாங்கம் நாணயச்சாலைகள் அவ்விலாசத்திற்குப் பணம் கொடுக் கக்கூடாது என்று விதித்தது. அதனல் முதலில் பண மெல்லாம் சில தனிப்பட்ட நபர்களின் பேரால் நாணயச் சாலைகளில் போடப்பட்டுப் பின்னர்தான் காலின்ஸின் கைக்கு வந்து சேர்ந்தது. கடன் பத்திரங்களும் விளம் பரங்களும் அச்சிட்டுத் தயாரிப்பதிலும் பெருங் கஷ்டம் விளைந்தது. ஆனல், காலின்ஸ் டப்ளின் மாளிகைக்கு வெகு சமீபத்திலேயே உள்ள டோல்லார்டு அச்சுக் கூடத்தில் சாமர்த்தியமாக அவற்றைத் தயாரித்துக் கொண்டான்.

நிதிக்கு அயர்லாந்தில் வசூலானதோடு, வெளிநாடு களிலிருந்த ஐரிஷ்காரர் பலரிடமிருந்தும் பணம் வந்தது. சைன, இந்தியா, ஆஸ்திரேலியா முதலிய தொலையிடங்

களிலிருந்தும் பணம் அனுப்பப்பட்டது. தென் ஆப்பிரிகாவிலுள்ள ஐரிஷ்காரர் மட்டுமே 1,000 பவுன் அனுப்பியிருந்தனர்.

நிதி சம்பந்தமான கணக்குகளெல்லாம் காலின்ஸால் மிக ஒழுங்காக எழுதிவைக்கப்பட்டன. ஒரு சமயம் போலீஸாருடைய சோதனையில் அகப்பட்ட சில கணக்குகள் மூலம் பல பெயர்கள் அவர்களுக்குத் தெரிந்தன. அப்பெயர்களையுடைய நபர்களில் பலர் முன்னால் ஸின் பீன் இயக்கத்தில் சேராதவர்கள் என்பதைக் கண்டு அவர்கள் வியப்புற்றனர்.

நிதிக்குச் சேர்ந்த திரவிய மெல்லாம் கூடியவரை தங்கமாக மாற்றப்பட்டுப் பல இடங்களில் புதைத்து வைக்கப்பட்டது. கொஞ்சப் பணம் மட்டுமே சில நபர்களின் பெயரால் நாணயச்சாலைகளில் போடப்பட்டது. தொண்டர்கள் பணத்தைச் சேகரித்துக் காலின்ஸிடம் கொண்டு வந்து கொடுப்பதில் மிகுந்த எச்சரிக்கையாயிருந்தனர். ஒரு சமயமாவது அவர்கள் பணத்தைப் பறிகொடுத்ததில்லை. தேசத்தில் தங்க நாணயங்களின் நடமாட்டமே இல்லாதிருந்த பொழுது, காலின்ஸ் 25,000 பவுன் தங்கத்தைப் பெறமுடிந்தது பெரு வியப்பேயாகும். தங்கத்தைப் பல பெட்டிகளில் அடைத்துப் புதைத்து வைத்ததில், ஒரு சமயம் ஒரு சிறு பிரேதப் பெட்டிகூட உபயோகிக்கப்பட்டது. போலீஸார் தோண்டிப் பார்த்தாலும் கூட, அதில் பிணமிருப்பதாக எண்ணிப் போய் விடுவார்கள் என்பதற்காக இப்படிச் செய்யப்பட்டது!

9

போர் முழக்கம்

1916-ம் வருஷ ஈஸ்டர் கலகம் தோன்றியது முதல் மூன்று வருஷ காலமாக அயர்லாந்தின் சுதந்திரத்திற்காக உழைத்துவந்த தேசபக்தர்கள் பிரசாரம், சாத்வீக எதிர்ப்பு முதலிய காரியங்களையே செய்து வந்தனர். ஆனால், ஆங்கில அரசாங்கம் மட்டும் எல்லையற்ற பலாத்காரத்தைக் கையாண்டு வந்தது. எத்தனை ஐரிஷ் வீரர்கள் கொல்லப்பட்டார்கள்! எத்தனை ஆயிரவர் சிறையிடப்பட்டனர்! அமைதியாய் வாழும் குடிஜனங்களுடைய வீடுகளில் எத்தனை ஆயிரம் சோதனைகள்! தடையுத்தரவுகள் எத்தனை! தேசப்பிரஷ்டங்கள் எத்தனை! ராணுவச் சட்டப்படி தண்டனைகள் எத்தனை! நசுக்கப்பட்ட பத்திரிகைகள் எத்தனை! மாபெருந் தலைவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் எத்தனை! இவ்வாறு இரத்தப் பெருக்கும், கொடுமைகள் அனைத்தும், அரசாங்கத்தாலேயே செய்யப்பட்டு வந்தன. எதிர்ப்புறத்திலிருந்து இதுவரை கட்டுப்பாடான பலாத்காரம் பிரதிபலிக்கவில்லை. ஆனால், 1919, நவம்பர், டிசம்பர் மாதங்களிலிருந்து தொண்டர்களும் போர் முழக்கம் செய்தனர்.

ஐரிஷ் தொண்டர்படை சுயேச்சையான ஒரு ஸ்தாபனம். ஆயினும், டெயில் ஐரான் ஏற்பட்டதிலிருந்து தொண்டர்படை அதன் உத்தரவுகளுக்குக் கட்டுப்பட்டு

நடந்துவந்தது. அதுவே குடியரசின் தேசியப் படையாக அமைந்திருந்தது. டெயில் ஐரானின் பாதுகாப்பு மந்திரியே அதை நடத்திவந்தார். நாளடைவில் அது ' ஐரிஷ் குடியரசுப் படை ' யென்றும் அழைக்கப்பட்டது. 1918-ம்ஸூ தொண்டர்களுடைய வருஷாந்த மகாநாடு கூட்ட முடியாமற் போகவே, 1919-ம் வருஷத்திலாவது கூட்டவேண்டுமென்று பலர் விரும்பினர். மகாநாட்டுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய காலின்ஸ் நியமிக்கப்பட்டான். அவன் தீர்க்காலோசனை செய்து பார்த்ததில், தேசத்தின் பல பாகங்களிலிருந்து தொண்டர் படையின் அதிகாரிகள் டப்ளினுக்கு வருவதனுல், ஒற்றர்களால் பெரும் துன்பம் விளையுமென்றும், தொண்டர் படையே சீர்குலைந்து போகுமென்றும் உணர்ந்தான். ஆதலால், மகாநாட்டைக் கூட்டாம லிருக்கவேண்டுமென்று முடிவு செய்தான். தலைமைக் காரியாலயத்திலுள்ளவர்கள் தீவிரமான வேலைகள் யாவற்றிலும் காலின்ஸின் அபிப்பிராயத்தையே ஏற்றுக்கொள்வது வழக்கம். அவனே மகாநாடு வேண்டாமென்று தீர்மானித்ததும், யாவரும் அம்முடிவை ஏற்றுக்கொண்டனர்.

போலீஸ்காரர்களில் ஒருவரிருவர் ஆங்காங்கு சுட்டுத் தள்ளப்படும் விஷயமாக அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டது. ராணுவ நீதிஸ்தலங்கள் சந்தேகப்பட்டவர்களைக் கடுமையாய்த் தண்டித்தன. பல நிரபராதிகள் வீணுகத் தண்டனையடைந்தனர். வார்ட்டன் என்னும் ஒற்றன் சுடப்பட்ட வழக்கில், ஜான் ஹர்லீ என்னும் மாஜி சிப்பாய் ஒருவன் 12-வருஷக் கடுங்காவல் தண்டனை பெற்ருன். அவனுக்

கும் அவ் வழக்குக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. ஆனால், வார்ட்டன் சுடப்பட்ட மைதானத்தில் பத்திரிகை விற்றுக்கொண்டிருந்ததே அவன் குற்றம். காலின்ஸை அவ்வழக்கில் சம்பந்தப்படுத்துவதற்காக, ஹார்லீ பொய்ச் சாட்சி சொல்லுமாறு போலீஸார் எவ்வளவோ கட்டாயப் படுத்தினர். அவன் கடைசி வரையில் மறுத்துவிட்டான். [அயர்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கைக்குப் பின்னால், காலின்ஸ் அவனை விடுதலை செய்து அயர்லாந்தின் தேசியப் படையில் சேர்த்துக்கொண்டான்.] ராணுவ நீதி ஸ்தலங்கள் ஒரு குற்றமும் செய்யாத பலருக்கு மரண தண்டனை விதித்தன. அவற்றின் நோக்கமெல்லாம் யாரையாவது தண்டித்தாக வேண்டும் என்பதுதான். சுடப்பட்ட வார்ட்டன் காயம் குணமாகிப் பிழைத்துக்கொண்டான். ஆனால், அடுத்தாற்போல் ஒற்றர்களில் ஸார்ஜண்டு பார்ட்டன் என்பான் நவம்பர்மீ 29-ம் தேதி கலாசாலைத் தெருவில் சுடப்பட்டு மடிந்தான். அயர்லாந்தின் கவர்னர் ஜெனரலான லார்டு பிரெஞ்ச் கடுங் கோபமடைந்து, 'சமீப காலத்தில் போலீஸார் சுடப்பட்டது சம்பந்தமாகக் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்குத் தக்க துப்புக் கூறுவோர்க்கு 5,000 பவுன் பரிசளிக்கிறோம்' என்று விளம்பரம் செய்தார்.

ஒரு வருஷக் காலம் இடைவிடாது உழைத்து, காலின்ஸ் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் இரகசியப் போலீஸ் வர்க்கத்தையே நிலை குலையும்படி செய்ய ஆரம்பித்தான். ஒற்றர்களிலே முக்கியமான ஆறு பேர்கள் அவனுக்கு உற்ற தோழராய் விளங்கி, அரசாங்கத்தின் அந்தரங்கங்கள் யாவற்றையும் அறிவித்து வந்தார்கள். மற்றும்

பல ஒற்றர்களும் தேசிய இயக்கத்துக்கு அனுதாபம் காட்டினர். பொதுவாக ஒற்றர்கள் யாவரும் தொண்டர்களின் குண்டுகளுக்கு அஞ்சித் தங்கள் வேலைகளைத் தீவிரமாகச் செய்யாது ஒழிந்தனர். உயிரை வெறுத்தவர்களே தொண்டர்களை எதிர்த்து நிற்க முடிந்தது.

அதிகாரிகள் முக்கியமான தொண்டர்கள் பலரை ஒரேயடியாகக் கைதி செய்துவிட வேண்டும் என்ற தங்கள் பழைய முறையை ஆரம்பித்தனர். அவர்கள் செய்த ஏற்பாடுகள் எல்லாம் சில நிமிஷ நேரத்தில் காலின்ஸுக்கு எட்டிவிடும். உடனே அவன் தன் சகாக்களுக்கு எச்சரிக்கை செய்வான். அதிகாரிகள் பல முறை சோதனை போட்டதில், இரண்டு பேர்களையே கைதி செய்ய முடிந்தது. அவர்கள் டெயில் ஐரான், ஸின்பீன் காரியாலயங்களை மூடிவிட்டனர். தொண்டர்களோ, தங்களுடைய உற்சாகத்தில் குறையாது, பல போலீஸ் படைவீடுகளைத் தாக்க முற்பட்டனர். அவர்கள் பெரும் படைகளின் முன்னால் நின்று போராட முடியாததால், 'கொரில்லாச் சண்டை'யையே பின்பற்றி வந்தனர்.

அநாகரிகமான அடக்குமுறை தேசத்தில் தாண்டவமாடிக் கொண்டிருக்கும் பொழுது, புதிய தேர்தலும் நடைபெற்றது. ஸின்பீனர்களுக்கே அதில மகத்தான வெற்றி கிடைத்தது. டெயில் ஐரான் மீண்டும் கட்டுப்பாடாக வேலை செய்துவந்தது. பிரிட்டிஷ் சட்டத்தை டெயில் ஐரானின் சட்டம் கொஞ்சம் கொஞ்சமாக விழுங்கிவந்தது. தொண்டர்களும் காலத்துக்குத் தக்கபடி நடக்கக் கற்றுக்கொண்டனர். பகைவர்கள் எண்ணிக்கையிலும் ஆயுதங்களிலும் மேம்பட்டிருப்பதைக் கண்டு அவர்கள் அஞ்சவில்லை. அவர்கள், சொந்த

நாட்டில், சொந்த மக்களிடையே வாழ்ந்து வந்ததால், எதிரிகள் அவர்களை அடக்க முடியவில்லை. நாட்டுப்புறத்திலுள்ள போலீஸ் படைவீடுகள் அடிக்கடி தாக்கப்பட்டதால், அரசாங்கத்தார் அவற்றில் பலவற்றை மூடிவிட்டனர். மீந் என்னுமிடத்தில் தொண்டர்கள் இரண்டு படைவீடுகளைத் தாக்கி, ஆயுதங்களையெல்லாம் கொள்ளையிட்டனர். பல படைவீடுகளை எரித்துத் தள்ளினர்; சிலவற்றை வெடிமருந்தால் தகர்த்தனர். அவர்கள் தங்களிடம் அடைக்கலம் புகுந்த போலீஸாரைக் கொல்லாமலும், கூடியவரை உயிர்ச் சேதம் இல்லாமல் ஆயுதங்களை அபகரித்துக்கொண்டும், விட்டுவிடுவது வழக்கம். அவர்களுடைய வீரப் போராட்டங்கள் அரசாங்கத்தின் முதுகெலும்பாகிய போலீஸ் வர்க்கத்தையே தகர்த்து வந்தன. அதுகாறும் போலீஸார் தேசிய இயக்கத்தை நசுக்குவதற்கு எவ்விதமான கொடுமையையும் கூசாது செய்துவந்தனர். அவர்கள் ஐரிஷ் மக்களிடையே பிறந்தவர்களாயினும், சிறிதும் தேசாபிமானம் இல்லாமல், ஒற்றுக் கேட்டும், தொண்டர்களை வதைத்தும், தலைவர்களைச் சிறைப்படுத்தியும் வந்தனர். தங்கள் சகோதரர்களையே அடிமைப்படுத்தி வைப்பதற்கு அவர்கள் அந்நிய நாட்டாரிடம் மிகுந்த பக்தியுடன் வேலை செய்து வந்தனர். மகா வீரத்துடனும், கட்டுப்பாட்டுடனும் போராடுவதில் அவர்கள் புகழடைந்திருந்தார்கள். 1867-ல் கிளம்பிய தேசியப் போராட்டமான பீனியன் கலகத்தை அவர்கள் எளிதாக அடக்கிவிட்டார்கள். பார்னல் காலத்தில், பலவிதக் கொடுமைகளைச் செய்து அவர்கள் தேசிய இயக்கத்தைக் குழி தோண்டி மூடிவிட்டார்கள். அத்தகைய வலிமை கொண்டவர்கள் இப்பொழுது தொண்டர்களின் இடைவிடாத எதிர்ப்

பினால் தளர்ந்து வீழ நேர்ந்தது. அவர்களுக்கும்கூட வீழ்ச்சிக் காலம் தோன்றிவிட்டது! கொந்தளித்து அலைவீசி எழுந்த தேசிய வெள்ளத்திற்கு எதிரே அவர்களால் நிலைத்து நிற்க முடியவில்லை.

அரசாங்க யந்திரத்தின் தலைவராக விளங்கிய லார்டு பிரெஞ்சைத் தாக்கவேண்டும் என்று காலின்ஸுக்கும், மற்ற தலைமைக் காரியாலயத்திலுள்ள அங்கத்தினர்களுக்கும் நோக்கம் இருந்தது. அவரைத் தாக்குவதனால், அயர்லாந்து விடுதலைக்காகத் தொடுத்திருக்கும் போரைப்பற்றி உலகெங்கும் பிரசாரமாகும் என்று அவர்கள் எண்ணினார்கள். ஆனால், லார்டு பிரெஞ்ச் எந்த இடத்திற்குச் சென்றாலும், பெரும் பாதுகாப்புடனேயே சென்றார். அவருடைய போக்குவரத்துகள் யாவும் மிக ரகசியமாகவே இருந்தன. தொண்டர்கள் அவரை எதிர்த்துப் பல சமயங்களில், பல இடங்களில், காத்திருந்தும் பயனில்லாது போயிற்று. ஆனால், ஒரு சமயம் லார்டு பிரெஞ்ச் ரோஸ்காமன் தாலுகாவிலுள்ள தமது நாட்டுப்புறத்து மாளிகையிலிருந்து டப்ளினுக்கு வருகிற செய்தி காலின்ஸுக்கு எட்டியது. டிஸம்பர் 19-ந் தேதி அவர் வருகின்ற தினமாதலால், காலின்ஸ் அவர் ரயிலிலிருந்து இறங்கக்கூடிய இடமாகிய ஆஷ்டவுனுக்குச் சில தொண்டர்களை அனுப்பினான்.

பதினொரு தொண்டர்கள் ஆஷ்டவுண் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் கெல்லி என்பவன் விடுதியில் காத்திருந்தனர். அவர்களில், மகா தீரனான தான்பிரீன்,* ஸீன் டிரீஸி முதலிய திப்பெரரித் தொண்டர்களும்,

* இவனுடைய சரித்திரம் 'சுதந்திர வீரன் தான்பிரீன்' என்ற தனி நூலாகத் தமிழில் உள்ளது.

டப்ளின் தொண்டர்கள் சிலரும் முக்கியமானவர்கள். மார்ட்டின் ஸாவேஜ் என்னும் அதி பாலியனும் அவர்களில் ஒருவன். குறிப்பிட்ட நேரத்தில், லார்டு பிரெஞ்சினுடைய மோட்டார் கார் வரும் பொழுது, அதை மறித்து, அவரைச் சுட்டுத் தள்ளிவிட வேண்டும் என்பதே தொண்டர்கள் கருத்து. தான்பிரீனும் வேறு இருவரும் ஒரு வண்டியை இழுத்து ரஸ்தாவை அடைக்கும் வேலையில் ஈடுபட்டனர். அந்நேரம் அங்கு காத்திருந்த போலீஸ்காரன் ஒருவன், அவர்களைப் பட்டிக்காட்டு மனிதர்கள் என்று கருதி, கவர்னர் ஜெனரல் வருவதால் ரஸ்தாவை விட்டு விலகும்படி கூறினான். தான்பிரீன் முதலியோருக்கும் அவனுக்கும் தர்க்கம் நடந்துகொண்டிருக்கையில், திடீரென்று தள்ளி நின்ற தொண்டன் ஒருவன் போலீஸ்காரன் மேல் ஒரு வெடிகுண்டை எறிந்தான். போலீஸ்காரன் சொற்பக் காயம் அடைந்தான். குண்டோசை கேட்டால், லார்டு பிரெஞ்ச் அவ்வழியே வராமலே நின்றுவிடுவார் என்று தொண்டர்கள் மனம் கலங்கினர். அச்சமயம் ஒரு கார் வந்தது. தொண்டர்கள் லார்டு பிரெஞ்ச் எப்பொழுதும் இரண்டாவது காரிலே தான் வருவது வழக்கம் என்பதை அறிந்தவர்கள். ஆயினும், அவர்கள் முதல் காரின் மேலும் ஏராளமான குண்டுகளைப் பொழிந்து சுட்டனர். அந்தக் கார் வாயு வேகமாகச் சென்று மறைந்தது. அதில்தான் லார்டு பிரெஞ்சும் அவருடைய உதவியாட்கள் சிலரும் இருந்தனர். இவ்விஷயம் தொண்டர்களுக்குத் தெரியாது. இரண்டாவது கார் வரும்பொழுதும் வண்டியை இழுத்து ரஸ்தாவை அடைக்க முடியவில்லை. அதில் கார்-ஓட்டியைத் தவிர வேறு ஆளில்லை. அவனும் தொண்டர்

களுக்குப் பணிந்து விட்டான். அதே சமயத்தில் வேறு இரண்டு கார்களும் வந்தன. அவற்றிலிருந்த சிப்பாய்கள் மிகுந்த ஆயுதங்களை வைத்திருந்ததால், தொண்டர்களை நோக்கிச் சுட ஆரம்பித்தனர். தொண்டர்களும் பதிலுக்குச் சுட்டனர். தொண்டர்களில் மார்ட்டின் ஸாவேஜ் குண்டுபட்டு மடிந்தான். அந்தக் கார்களும் வேகமாய்ச் சென்று மறைந்த பின்னர், தொண்டர்கள் அங்கிருந்து டப்ளினை நோக்கிப் புறப்பட்டனர். அவர்களிடம் சைக்கிள் வண்டிகள் மட்டுமே இருந்ததால், அவர்கள் உயிர் துறந்த இளைஞனை ஸாவேஜின் உடலை அங்கேயே போட்டு விட்டுச் சென்றனர்.

அரசாங்கமும் சில பத்திரிகைகளும் இச் சம்பவத்தைக் 'கொலை முயற்சி' 'அதிக்கிரமம்' முதலிய வசை மொழிகளால் நிந்தித்த போதிலும், பொதுஜனங்கள் உண்மையை உணராமலில்லை. பதினெரு தொண்டர்கள் பெரும் பாதுகாப்புடன் வந்த கவர்னர் ஜெனரலை எதிர்ப்பது விளையாட்டா, அல்லது அரும் போராட்டமா? ஒரு பக்கம் யந்திரத் துப்பாக்கிகளுடன் கூடிய சிப்பாய்கள் பலர்; மறு பக்கம் கைத் துப்பாக்கிகளும் வெடி குண்டுகளும் தாங்கி நிற்கும் யுத்தப் பழக்கமற்ற சில இளைஞர்கள். அவ்விளைஞர்களுக்குப் போராட்டத்திலும் மரணம் ஏற்படலாம், அன்றி எதிரிகள் கையில் அகப்பட்டாலும் மரணந்தான். இவற்றை யெல்லாம் பொதுமக்கள் எண்ணிப் பார்த்தார்கள். உள்ளத்தில் யாதொரு சுய நலமும் இல்லாமல், உயிரைத் திரணமென்று கருதிப் போராடும் தொண்டர்களை அவர்கள் மதிக்க ஆரம்பித்தார்கள். அவர்களுடைய மனோபாவம் மார்ட்டின் ஸாவேஜின் பிரேத விசாரணை அறிக்கையிலிருந்து வெளியா

யிற்று. ஜூரிகள், அவன் 'லார்டு பிரெஞ்சைத் தாக்கிய முயற்சியில் கொல்லப்பட்டான்' என்று முடிவு கூறி, அவனுடைய சுற்றத்தாருக்குத் தங்கள் அனுதாபத்தைச் செலுத்தினர். விசாரணையின் போது அவன் நற்குண சீலன் என்றும், அவனது அளவற்ற வீரத்தாலேயே மரணம் நேர்ந்தது என்றும் சொல்லப்பட்டது.

ஆஷ்டவுண் போராட்டம் ஆங்கிலத் துருப்புகளிடையே பெருங் குழப்பத்தை விளைவித்தது. சிப்பாய்கள் தூங்கும் பொழுதுகூடத் தொண்டர்கள் தங்களைத் தாக்குவதாகச் சிம்ம சொப்பனம் கண்டு வந்தனர். ஒரு நாள் பிரிட்டிஷ் பத்திரிகைகள் எல்லாம் வைசராய் மாளிகை தாக்கப்பட்டதாக விரிவான செய்திகளை வெளியிட்டன. தொண்டர்கள் வைசராய் மாளிகைக்குச் செல்லவுமில்லை, தாக்கவுமில்லை! உண்மை என்னவென்றால், இரவில் மனக் குழப்பமடைந்த காவல் சிப்பாய்கள் அம் மாளிகைக்கு வெளியே சென்றுகொண்டிருந்த ஸிவில் உத்தியோகஸ்தரான **கென்னடி** என்பவரைக் கொன்று விட்டார்கள். இந்தச் சம்பவத்தைத்தான் ஆங்கிலப் பத்திரிகைகள் தொண்டர்களின் போராட்டமாக வருணித்தன. மரண விசாரணையில், கென்னடி குத்திக் கொல்லப்பட்டு வீழ்ந்த பின்னரும், இரண்டு சிப்பாய்கள் அவரைச் சுட்டதாக வெளியாயிற்று. சிப்பாய்கள் தங்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர் ஒருவரையே குத்திக் கொன்று, அவர் இறந்த பின்னும் மீண்டும் மீண்டும் சுட்டனர் என்றால், அவர்களை ஆட்டிவைத்த கிலி எத்தன்மையது! இதுதான் கொரில்லாச் சண்டையின் மர்மம். தொண்டர்கள் சில குண்டுகளைச் சுடுவதில் ஆரம்பிக்கும் வேலையைக் 'கிலி' பின்னால் பூர்த்தி செய்து வந்தது!

இந்தக் குயின்லிஸ்க் ஐரிஷ் சிப்பாய். ஐரோப்பா யுத்தத்தில் ஜெர்மானியருடைய கைதியாக இருக்கையில், அவன் ஸர் ரோஜர் கேஸ்மென்டுக்கு மிகவும் உதவி செய்து, அவருடன் அயர்லாந்துக்கு வந்தவன். அயர்லாந்தில் ஸின்பீன் கட்சியார் அவனுக்கு வேண்டிய பொருளுதவி செய்து பாதுகாத்து வந்தனர். காலின்ஸ் தன் கைப்படவே அவனுக்குப் பணம் கொடுத்திருந்தான். ஆயினும், பின்னால் கொஞ்சம் பொருள் கஷ்டத்தினால், அவன் மனநிலை மாறித் தொண்டர்களையும் காலின்ஸையும் காட்டிக்கொடுக்க முயற்சித்தான். டப்ளின் மாளிகையிலிருந்த சர்க்கார் உதவிக் காரியதரிசிக்குத் தான் ஒற்றறிந்து சொல்லத் தயாராயிருப்பதாக அவன் ஒரு கடிதம் எழுதினான். அக்கடிதம் பின்னால் காலின்ஸின் கைக்குக் கிடைத்தது. அதன் நகல் வருமாறு:

மிகவும் அவசரம்

21, கார்டினர்ஸ் பிளேஸ்,
டப்ளின்.
நவம்பர் 11-உ, 19.

உதவிக் காரியதரிசி,
டப்ளின் மாளிகை.

'ஐயா,

'சில சம்பவங்கள் காரணமாகத் தங்களுக்கு நான் எழுதும்படி நேர்ந்திருக்கிறது. நான் நேரிலேயே வந்திருப்பேன்; ஆனால் நான் மாளிகைக்குள் நுழைவதாகக் காணப்பட்டால், என் உயிரோ ஒருவேளை பின்னால் ஆபத்துக்குள்ளாக நேரும். கேஸ்மென்டுக்கு ஜெர்மனியில் உதவி செய்தவன் நான்தான். நான் நாட்டுக்கு வந்தது முதல், ஸின்பீன் ஸ்தாபனத்தோடு சம்பந்தப்

பட்டிருக்கிறேன். ஸ்தாபனத்தைப் பற்றி எனக்குத் தெரிந்ததையெல்லாம் (தங்களுக்குச்) சொல்ல வேண்டும் என்று தீர்மானித்து விட்டேன். என்னுடைய தகவல் அதிகாரிகளுக்கு உபயோகமாக இருக்கும். அயோக்கியப் பயல் மைக்கேல் காலின்ஸ் என்னை அகௌரவமாக நடத்தியிருக்கிறான். நான் எல்லா விஷயத்தையும் சொல்லி என் கையைக் கழுவப் போகிறேன். தாங்கள் என் உதவியை ஏற்றுக்கொள்வதானால், நம்பக் கூடிய தங்கள் ஆள் ஒருவனை மேற்கண்ட விலாசத்திற்கு நாளை மாலை நான்கு மணிக்கு அனுப்பிவையுங்கள். அங்கு நான் குயின் என்ற பெயருடன் வசித்துவருகிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

எச். குயின்லிஸ்க்,

மாஜி கார்ப்பொரல்; ராயல் ஐரிஷ்

ரெஜிமெண்டு.'

சர்க்கார் உதவிக் காரியதரிசி இந்தக் கடிதத்தைப் பிரையன் என்னும் போலீஸ் அதிகாரியிடம் கொடுத்துக் கவனிக்கும்படி சொன்னார். இதிலிருந்து குயின்லிஸ்க் ஒற்றர்களுக்கு நண்பனானான் என்று சொல்லத் தேவையில்லை. அவன் அடிக்கடி சர்க்காரின் உளவு இலாகாத் தலைமைக் காரியாலயத்திற்குச் சென்று, பிரையனைக் கண்டு தனக்குத் தெரிந்த துப்புக்களைக் கூறி வந்தான். அவன் கொடுத்த தகவல்களைடைப் அடிப்பதற்காக பிராய் என்னும் ஒற்றனிடம் கொடுப்பார்கள். பிராய் காலின்ஸின் தோழனானதால், உடனே அவற்றை அவனுக்கு அனுப்பிக்கொண்டு வந்தான்.

குயின்லிஸ்க், அரசாங்கத்திற்காக ஒற்றுக் கேட்டுப் பணம் பெறுவதோடு நில்லாமல், காலின்ஸிடமும் அதே

தொழிலை மேற்கொண்டான். அவன் காலின்ஸிடம் பிரையன்தான் தன்னை முன்கூட்டி வந்து கண்டு பேசிய தாகவும், அமெரிக்காவுக்குச் செல்ல அநுமதிச் சீட்டு வாங்கவே தான் போலீஸ் தலைமை ஸ்தலத்திற்குச் சென்றதாகவும் கூறினன். மேலும், தான் பிரையனிடம் விளையாட்டாகவே துப்புக் கூறுவதாய் ஒப்புக்கொண்ட தாகவும் சொன்னன். அவன் நோக்கம் இரு பக்கத் திலும் நண்பனைப் போல் நடித்துப் பணம் பறிக்க வேண்டும் என்பதே. இது இரண்டு தோணிகளில் கால் வைத்துச் செல்வது போல் ஆபத்தில் முடியும் என்பதை அவன் உணரவில்லை. முக்கியமில்லாத சில அரசாங்க விஷயங்களைக் கூறி அவன் காலின்ஸை ஏமாற்ற முயன் ருன். மேலும் மேலும் காலின்ஸைப் பற்றிய துப்புக் களை யெல்லாம் அறிந்து அவனைத் தொலைத்துவிட எண்ணினன். தனக்கும் காலின்ஸுக்கும் பொதுத் தோழனுன ஸீன் என்பவனுக்கு அவன் எழுதிய கடிதம் ஒன்றில், 'எனக்கு ஒரு தொழிலும் கிடைக்கவில்லை. மறுபடி எனக்குப் பண உதவி செய்யும்படி காலின்ஸைக் கேட்கவும்', என்று குறிப்பிட்டிருந்தான். இத் தீயோன், எவனைத் தள்ளி மூடுவதற்குக் குழி தோண்டினனே, அவனிடமிருந்தே பொருளுதவி வேண்டியது மிக வியப் பான விஷயந்தான் !

பின்னல், டப்ளின் மாளிகையிலிருந்தும் ஏராளமான பணம் கிடைக்காது என்று குயின்லிஸ்க் அறிந்து கொண்டான். காலின்ஸைப் பற்றி முக்கியமான துப்புக் கூறினலன்றி போலீஸார் அவனை எவ்வாறு முழுதும் நம்பி உதவி செய்வர்? அவன் மிகக் கோபமடைந்து, போலீஸார் கையாளும் முறைகளைக் கண்டித்து, 'பிரீ

மன்ஸ் ஜர்னல்' என்னும் பத்திரிகையில் அவதூருக ஒரு கடிதம் எழுதினுன். அக்கடிதம் பொய் மலிந்து விளங்கியது. அவன் போலீஸாரை எவ்வளவு கண்டித்த போதிலும், உண்மையில் காலின்ஸ் வகித்து வந்த முக்கியமான ஸ்தானத்தையும் அவனைக் கைது செய்ய வேண்டியதன் அவசியத்தையும் அரசாங்கத்துக்கு அறிவித்து வந்தவன் அவனேயாவன்.

முக்கியமான தொண்டர் படைத் தலைவர்களைப் பிடித்துக் கொடுக்காவிடில் டப்ளின் மாளிகையிலிருந்து எந்த உதவியும் கிடைக்காது என்பதைக் குயின்லிஸ்க் உணர்ந்தான். 1920-ம் வருஷம் பெப்ரவரி மாத ஆரம்பத்தில் அவன் காலின்ஸை எப்படியாவது பிடித்துக் கொடுத்துப் பரிசு பெறவேண்டும் என்று துணிந்தான். அவன் காலின்ஸுக்கு வேண்டிய நண்பர்களை யெல்லாம் கண்டு, தான் அவனிடம் நேரில் சொல்லவேண்டிய மிக ரகசியமான விஷயம் இருப்பதாய்க் கூறி, அவன் இருப்பிடத்தை விசாரித்தான். ஈமன் பிளெமிங் என்னும் நண்பன் ஒருவன் காலின்ஸைக் கண்டு அவனைக் குயின் லிஸ்க் பார்க்க விரும்புவதாக அறிவித்தான். காலின்ஸ் குயின்லிஸ்கைப்பற்றித் தனக்குள்ள சந்தேகத்தை நிவர்த்தித்துக் கொள்ள விரும்பினுன். அவனைச் சோதிக்க எண்ணினுன். அவன் தான் கார்க் நகரில், விந்திராப் தெரு, ரென் விடுதியில் தங்குவதாகப் பிளெமிங் மூலம் குயின்லிஸ்குக்குச் செய்தி அனுப்பினுன்.

மறுநாள் காலையில், டப்ளின் மாளிகையிலிருந்து கார்க் நகரிலுள்ள ஜில்லா போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு ஒரு தந்தி பறந்தது. காலின்ஸ் அதை வழிமறித்துப் படித்துப் பார்த்துவிட்டு அனுப்பினுன். அத்தந்தியில்

என்ன விஷயம் எழுதப்பட்டிருந்தது? காலின்ஸ் ரென் விடுதியில் இருப்பதால், அதைப் போலீஸும் பட்டாளமும் வளைந்துகொள்ள வேண்டும் என்பதே அதில் கண்ட விஷயம். அன்று காலையிலேயே குயின்லிஸ்கும் கார்க் நகருக்குச் சென்று, ரென் விடுதியில் காலின்ஸைத் தேடினன். அங்கு காலின்ஸின் அடிச்சுவடே காணப்படவில்லை. குயின்லிஸ்கினுடைய வஞ்சனை முழுதும் காலின்ஸுக்கு விளங்கியது. அவன் டப்ளின் மாளிகைக்கு எழுதிய கடிதமும் காலின்ஸுக்குக் கிடைத்து விட்டது. காலின்ஸ் கார்க் நகரத் தொண்டர்களுக்கு ஓர் உத்தரவு அனுப்பினன். உடனே தொண்டர்கள் குயின்லிஸ்கைக் கைதி செய்தனர். அவனுடைய தேசத் துரோகத்திற்காக, பெப்ரவரி மாதம் 18-ந் தேதி, அவனுக்கு மரண தண்டனை விதித்து நிறைவேற்றினர்கள்.

ஸின்பீனர்களோடு போராடுவதில் போலீஸ் உளவு இலாகா தவிடு பொடியாய் நொறுங்கி வருவதைக் கண்டு அதிகாரிகள் மனம் கலங்கினர். அவர்கள் தங்கள் ஒற்றர்களையே நம்ப முடியவில்லை. இங்கிலையில் பெல்பாஸ்டிலிருந்து வில்லியம் ரெட்மண்டு என்பவரை வரவழைத்து, டப்ளின் போலீஸ் உதவிக் கமிஷனராக நியமித்தனர். ரெட்மண்டு அளவற்ற ஆற்றலுடையவர். அவரை எதிர்த்து வேலை செய்வது காலின்ஸுக்குப் பெருங் கஷ்டமாக இருந்தது. அவர் நான்கு வாரக் காலமே உத்தியோகம் பார்த்தபோதிலும், அதற்குள் மிகுந்த ஊக்கத்துடன் பல அரிய வேலைகளைச் செய்ய முற்பட்டார். காலின்ஸைப் போலவே அவரும் ஒரு சைக்கிளில் ஏறி டப்ளின் தெருக்களைச் சுற்றுவது வழக்கம். பெல்பாஸ்டிலிருந்து புதிய ஒற்றர்களை வரவழைத்து அவர்

உளவு இலாகாவைப் பலப்படுத்தினார். வெகு சீக்கிரத்தில் காலின்ஸைப் பிடிக்கவேண்டிய ஏற்பாடுகளையும் செய்தார். காலின்ஸும் கண்விழித்துப் பார்த்தான். 'நாம் ரெட்மண்டை விரைவில் பிடிக்காவிடில், அவன் நம்மைப் பிடித்து விடுவான்!' என்று அவன் தன் நண்பர்களுக்கு எச்சரிக்கை செய்தான்.

ரெட்மண்டு வேலையை ஏற்றுக்கொண்ட காலத்தில், அவரைப் பார்க்கிலும் அபாயகரமான ஆங்கில ஒற்றன் ஒருவன் டப்ளினுக்கு வந்தான். அவன் பெயர் பர்ன். ஆனால், அவன் ஜேம்ஸன் என்று புனைபெயர் வைத்துக் கொண்டிருந்தான். அவன் மிகுந்த திறமை வாய்ந்த ஒற்றன். இங்கிலாந்தில் அவன் தன்னைப் பொது உடைமைக்காரன் என்று காட்டிக்கொண்டு, எத்தனையோ ரகசியங்களைக் கண்டுபிடித்திருந்தான். அவன் முன்னால் சிப்பாயாக இருந்தவன். ஸின்பீனர்களின் பிரதிநிதியாக லண்டனிலிருந்த ஆர்ட் ஓபிரியனை அவன் நட்புக்கொண்டு, அயர்லாந்தின் புரட்சிப் போருக்கு வேண்டிய ஆயுதங்களை வரவழைத்துக் கொடுப்பதாகக் கூறி ஏமாற்றினான். ஓபிரியன் அவன் பேச்சை நம்பி, காலின்ஸுக்கு அவனை அறிமுகஞ் செய்து ஒரு கடிதம் கொடுத்தனுப்பினான். காலின்ஸும் அவனை நம்பி அன்புடன் நடத்தி வந்தான். அவனுடைய திட்டங்கள் போற்றத் தக்கனவாயிருந்தன. அவன் தான் ரஷ்ய ஸோவியத் சர்க்காருடன் சம்பந்தம் வைத்துக்கொண்டிருப்பதாயும், ஏராளமான பணம் தன் கையில் இருப்பதாயும் கூறினான். அத்துடன், தன்னால் யந்திரத் துப்பாக்கிகள் பலவற்றை வரவழைக்க முடியும் என்றும், அயர்லாந்தின் பல பாகங்களிலுமுள்ள சிப்பாய்கள் பலரைத் தனக்குத் தெரியும் என்றும், அவர்கள்

எல்லோரும் உதவி செய்வார்கள் என்றும் சொல்லிக் காலின்ஸை மகிழ்வித்தான். காலின்ஸ் அவனை நம்பித் தலைமைக் காரியாலயத்தில் உதவி செய்ய நியமித்த போதிலும், டோபின், கல்லென் என்னும் இரு நண்பர்களை அவனைக் கவனித்து வருமாறு வேண்டிக்கொண்டான். கல்லெனுக்கு ஆரம்ப முதலே ஜேம்ஸனிடம் அவநம்பிக்கை உண்டு. ஜேம்ஸன் மிகுந்த சாமர்த்தியத்துடன் நடந்ததால், அவனுடைய அந்தரங்கங்களைத் தெரிவது எளிதாயிருக்கவில்லை.

ஒரு நாள் காலின்ஸ் பிரண்டன் ரஸ்தாவிலுள்ள ஓகானர் என்பவருடைய வீட்டில் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் வேளையில் ஜேம்ஸனை வரவழைத்து அவனுடன் பேசினான். பின்னர் அவன் ஜேம்ஸனை மறுநாளும் அதே வேளையில் அங்கு வரும்படி கூறினான். மறுநாள் அவன் குறித்த நேரத்தில் ரெட்மண்டு ஓர் ஒற்றனை அங்கு அனுப்பிவைத்தார். ஒற்றர்களின் கூட்டம் ஒன்று மோட்டார் லாறியில் ஏறிக்கொண்டு ஓகானர் வீட்டை நோக்கி வந்தது. அந்த லாறி வந்து சேருவதற்கு முன்னால்தான், ஜேம்ஸன் பேச்சை முடித்துக்கொண்டு, டோபினுடன் வெளியேறிச் சென்றான். முதலில் அங்கு வந்து காத்திருந்த ஒற்றன், டோபினைக் காலின்ஸ் என்று எண்ணிக்கொண்டு, விரைந்து ஓடி, எதிரே வரும் லாறியை மறித்து, அதிலிருந்த ஒற்றர்களிடம், 'பறவை தப்பியோடிவிட்டது!' என்று கூவினான். லாறி வந்த வழியே திரும்பியது. அச்சமயத்தில் காலின்ஸ், தனக்கு ஏற்பட்டிருக்க வேண்டிய இடுக்கணை அறியாதவனாய், ஓகானர் வீட்டிலேயே கவலையற்றிருந்தான்.

லாறியிலிருந்த ஒற்றர்களில் காலின்ஸின் தோழனுன மக்நமாரா ஒருவன். அவன் பின்னல் காலின்ஸுக்கு நடந்ததை யெல்லாம் அறிவித்தான். அத்துடன், ரெட்மண்டு தங்களைப் பார்த்து, 'காலின்ஸின் இருப்பிடத்தை உங்களால் கண்டுபிடிக்க முடியவில்லையே! இப்பொழுதுதான் லண்டனிலிருந்து வந்த ஒரு புது ஆசாமி அவனைப் பார்த்துவிட்டானே!' என்று சொல்லிக் கண்டித்ததாயும் அறிவித்தான். இந்தப் புதிய ஆசாமி ஜெம்ஸனகவே இருக்கவேண்டுமன்ருே? காலின்ஸ் ரெட்மண்டிடம் தன் கைவரிசையைக் காண்பிக்கத் தீர்மானித்தான்.

மறுநாள் சாப்பாட்டு வேளையில், ஒகானர் வீட்டிற்குக் காலின்ஸ் செல்லக்கூடிய வழியாகிய மோர் ஹாம்ப்டன் ரஸ்தாவில் ஓர் ஒற்றன் வந்து நின்று கவனித்துக்கொண்டிருந்தான். காலின்ஸ் சரியான சமயம் பார்த்துத் தன் சைக்கிளில் ஏறிக்கொண்டு, அந்த ஒற்றன் பக்கமாக விரைவாக ஓட்டிச்சென்று, பிரன்டன் ரஸ்தாவில் திரும்பினன். ஒற்றன் அவனைப் பார்த்து, அவன் எங்கு செல்கிருன் என்பதைக் கவனிக்கத் தானும் பிரண்டன் ரஸ்தாவுக்குத் திரும்பினன். அவன் அங்கு திரும்பு முன்னமே, காலின்ஸ் ஒரே பாய்ச்சலாக அத்தெருவைக் கடந்து, வேறு வழியாக மறைந்துவிட்டான். ரஸ்தாவிலும் அதன் மறுகோடியிலும் அவனைக் காணுமையால், அவன் ஒகானர் வீட்டுக்குள்ளேதான் புகுந்திருக்க வேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டு, ஒற்றன் டப்ளின் மாளிகைக்குத் தகவல் கொடுத்தான்.

ரெட்மண்டு பெரும்படையுடன் ஒரு லாறியில் வந்து இறங்கினர். ஒகானருடைய வீடு முழுதும் சோதனை

விடப்பட்டது. அங்கு ஒகானருடைய மனைவியையும் குழந்தைகளையும் தவிர வேறு யாரும் இல்லை. ரெட்மண்டு அதற்கு அடுத்த வீட்டையும் சோதனையிட்டார். அங்கும் பயனில்லை. அவர் திரும்பிச் செல்லுகையில், ஒகானர் மனைவியைக் கண்டு, 'இனிமேல் நான் தங்களை மறுபடி இப்படித் தொந்தரவு செய்யவில்லை!' என்று மரியாதையாய்க் கூறிச் சென்றார். இவ்வார்த்தை பின்னால் உண்மையாயிற்று. ஏனெனில், பின்னால் தொண்டர்கள் அவரை இவ்வுலகிலேயே வைத்திருக்க வில்லை. மூன்று தினங்களுக்குப் பிறகு, ஹார்க்கோர்ட்டு தெருவில் தாம் வசித்துவந்த ஸ்டான்டர்டு விடுதிக்குச் செல்லும் பொழுது, ரெட்மண்டு தொண்டர்களின் குண்டுபட்டு மடிந்தார். அச்சமயத்தில் அவர் தம் உடைகளுக்குள்ளே இரும்புக் கவசம் அணிந்திருந்தும் பயனில்லாது போயிற்று. டப்ளின் போலீஸை ஒற்றுக்கேட்கும் தொழிலுக்கு உபயோகிப்பது மேற்கொண்டு பயனற்றது என்பதை இச்சம்பவம் தெளிவாக்கியது. பின்னர் ரெட்மண்டின் ஸ்தானத்திற்கு வந்த அதிகாரி அடங்கி ஒடுங்கி வாழ்ந்து வந்தார்.

ஒகானர் வீட்டுச் சம்பவத்திலிருந்து ஜேம்ஸன் மீது மிகுந்த சந்தேகம் உண்டாகிவிட்டது. ஆயினும், சந்தேகத்தை வெளிக் காட்டாமல் அவனை மேற்பார்த்து வரவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. உண்மை என்னவெனில், ஜேம்ஸன் டப்ளின் மாளிகையின் ஒற்றனல்லன்; சீமையிலுள்ள புகழ்பெற்ற ஒற்றர் இலாகாவின் தலைமை ஸ்தலமான ஸ்காட்லண்டு யார்டிலிருந்து அனுப்பப்பட்டவன். அவன் மேற்சொன்ன நிகழ்ச்சிக்குப்பின் தன் மேலதிகாரிகளுக்கு அறிவிப்பதற்காக இங்கிலாந்து சென்றான். பின் அங்கிருந்து திரும்பி வந்து, அவன்

டோபினையும் கல்லெனையும் கண்டு தன்னைக் காலின்ஸிடம் அனுப்பும்படி பன்முறை வற்புறுத்தினான். அவ்விருவரும் இதைக்கண்டு சந்தேகப்பட்டனர். ஜேம்ஸனுக்கு ஒரு குழி தோண்டி, அவன் அதில் விழுகிருனு என்று பார்ப்பதற்காகக் காலின்ஸ் ஏற்பாடு செய்து வைத்தான்.

ஜேம்ஸன் பட்டாளப் படைவீடுகளுக்குச் செல்வதற்குரிய அநுமதிச் சீட்டு ஒன்றை முன்னல் டோபினுக்குக் கொடுத்திருந்தான். அவன் இங்கிலாந்திலிருந்து வந்ததும், அதைத் திரும்பக் கேட்டான். டோபின் காலின்ஸைக் கலந்துகொண்டு பதில் சொன்னான். காலின்ஸின் தஸ்தவேஜுகள் 'அயோனு டிரைவ்' என்னும் இடத்தில் இருப்பதாயும், அவற்றில் 5-வது எண்ணிட்ட பெட்டியில் 31-வது தஸ்தவேஜுக் கட்டில் அந்த அநுமதிச் சீட்டு இருப்பதாயும் அறிவித்தான். அவன் குறித்த வீடு டப்ளின் நகர மாஜி முனிசிபல் தலைவரும், பரம ராஜவிசுவாசியுமான ஜே. ஜே. பார்ரல் என்பவருடையது. அன்றிரவே பார்ரலுடைய வீட்டைப் பட்டாளத்தாரால் கடுமையாகச் சோதனையிட்டனர்! பார்ரல், ராஜபக்தரான தமது வீட்டில் ஏன் இப்படிச் சோதனை நடக்கிறது என்பதை அறியாமல், ஒரு மூலையில் நின்று பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தார்! மறுநாள் பொதுஜனங்களும் இச்செய்தியை அறிந்து பேராச்சரியம் அடைந்தனர்.

இவ்வாறு ஜேம்ஸன் காலின்ஸைப் பிடிப்பதற்கு இரண்டாவது முறை முயன்றும் தோல்வியடைந்தான். மீண்டும் சீமைக்குச் சென்றான். ஆனல், விரைவில் திரும்பிவந்து, டோபினைக் காண விரும்பினான். அவனைச்

சந்திப்பதற்காகப் பால்லிமன் ரஸ்தாவில் ஏகாந்தமான ஓரிடம் குறிப்பிடப்பட்டது. ஜேம்ஸன் அங்கு செல்லு கையில் தொண்டர்களால் பிடிக்கப்பட்டு, மரண தண்டனை பெற்றுக் குண்டுகளுக்கு இரையாளுன்.

அடுத்தாற்போல் மீண்டும் ஓர் ஆங்கில ஒற்றன் கிளம்பிஞன். அவனும் முன்னல் பட்டாளத்தில் இருந்த வன். அவன் பெயர் முல்லாய். அவன் காலின்ஸிடத்தில் பழகி அவனுடைய அந்தரங்கங்களையெல்லாம் அறிய விரும்பிஞன். காலின்ஸ் அவனை ஆரம்பத்திலிருந்தே சந்தேகித்துச் சில நண்பர்களைக் கொண்டு அவனைக் கவனித்து வந்தான். நாளடைவில் அவனுடைய வஞ்சனைகள் எல்லாம் வெளியாகவே, அவன் நடுப்பகலில் விக்லோ தெருவில் சுட்டுத் தள்ளப்பட்டான். சமாதான காலம் வரை காலின்ஸிடம் அண்டிய ஒற்றர்களில் அவனே கடைசியானவன்.

10

ஆட்சியின் வீழ்ச்சி

பிரித்தாளுதல் கொடுங்கோலனின் கூரிய ஆயுதம். ஒரு நாட்டில் உட்பிளவு இருந்தால், அதை அடக்கி ஆள்வது சுலபம். பிளவு மறைந்து விடாமல் ஆப்பை ஆழமாகப் பதிக்க வேண்டியதே ஆள்வோரின் வேலை. எனவே, ஆங்கிலப் பிரதம மந்திரி லாயிட் ஜார்ஜ் அயர்லாந்தைப் பிளவுபடுத்தப் புதிய 'சுய ஆட்சி மசோதா'

ஒன்றைத் தயாரித்தார். 1919 முடிவில் அம்மசோதா வெளியாயிற்று. அதன்படி அயர்லாந்தை இரண்டாகப் பிரித்து, வடகிழக்கு அல்ஸ்டரிலுள்ள ஆறு தாலுகாக்களுக்கு ஒரு தனிப் பார்லிமெண்டு கொடுக்க ஏற்பாடாயிற்று. ஐரிஷ் மக்களில் அல்ஸ்டர் வாசிகளுக்கும் பிற மாகாணத்தாருக்கும் மதவேற்றுமை காரணமாகப் பிளவு இருந்தது உண்மைதான். அந்தப் பிளவை அரசியலில் சட்டபூர்வமாக நிலைநிறுத்துவதன் நோக்கம் என்ன? அவர்களாக அடக்கமுடியாத ஐரிஷ் மக்கள் தங்களுக்குள்ளேயே போராடி மடியட்டும் என்பதே ஆங்கில ராஜதந்திரிகளின் நோக்கம். ஐரிஷ் மக்களிடையே காணப்பட்ட வேற்றுமையை அவர்களே ஒழித்துக்கொள்ள வேண்டும். அவ்வேற்றுமையின் வளர்ச்சிக்கு அந்நிய ஆட்சியே காரணம். வேற்றூர் விலகும்போது, வேற்றுமையும் ஒழியும். அன்றியும், வேற்றுமை ஒழியும்போதும், வேற்றூர் விலக நேரும். இக்காரணத்தாலேயே ஆங்கிலேயர் அயர்லாந்தைப் பாகிஸ்தான் செய்ய விரும்பினர். அத்துடன், உலகில் அமெரிக்கா போன்ற முக்கியமான நாட்டார்கள் அயர்லாந்துக்காகப் பரிவு கொண்டு தங்களை வெறுக்கா வண்ணம் ஓரளவு சுதந்திரத்தைக் கொடுக்கவேண்டும் என்பதும் அவர்கள் எண்ணம். ஆனால் ஸின்பீனரோ, கால், அரை, முக்கால் சுதந்திரத்தை வேண்டினரில்லை; வடுப்படாத பரிபூரண விடுதலையே வேண்டி நின்றனர். அரை குறையான சுதந்திரம் —தேசத்தை இரு கூறுக்கும் சுதந்திரம்—அவர்களால் வெறுத்து நீக்கப்பட்டது.

இக்காலத்தில் ஐரிஷ் போலீஸின் இன்ஸ்பெக்டர் ஜெனரலான ஸர் ஜோஸப் பைர்ன் என்ற கத்தோலிக்கர்

வேலையிலிருந்து நீக்கப்பட்டார். ஏனென்றால், அவர் டப்ளின் மாளிகையின் கொடிய நோக்கங்களுக்குத் தக்க படி ஆடுகிறவரல்லர். லார்டு பிரெஞ்ச் தம் நோக்கத்திற்கு இசைந்த வேறொருவரை நியமித்துக்கொண்டார். அதே சமயத்தில், போலீஸாரை வதைத்தும் காயப்படுத்தியும் வந்தவர்களைக் கண்டுபிடிப்பதற்கு உதவி செய்பவர்களுக்கு 3,000 பவுன் பரிசளிப்பதாக விளம்பரப்படுத்தப்பட்டது. 3,000 அல்ல, 30 லட்சம் பவுன் கொடுத்தாலும், தொண்டர்களைக் காட்டிக்கொடுக்க எவரும் முன்வரக் காணோம்.

ஆங்கில அரசாங்கம், அயர்லாந்துக்கு அளிக்கும் சொற்ப சுதந்திரத்தையும் தனியாகக் கொடுத்தால் அதன் உடலுக்கு ஏற்காது என்று எண்ணி, ஓரளவு அடக்கு முறையும் சேர்த்துக் கொடுக்க விரும்பியது. இதுவரை அது கையாண்டு வந்த அடக்குமுறைகளைத் தவிர இன்னும் என்ன பாக்கியிருக்கிறது? பல வெறியர்களை ஒன்று சேர்த்து, கண்ட விடங்களில் ஜனங்களைச் சுட்டுத் தள்ளும்படி இன்னும் அது செய்யவில்லை; பட்டிகளையும், பட்டணங்களையும், வீடுகளையும், வாசல்களையும் இன்னும் அது கொளுத்தித் தள்ளவில்லை. அவ்வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஐரிஷ்காரரில் தக்க நபர்கள் கிடைக்கவில்லை. ஆதலால், ஆங்கிலேயரில் பலரை ஒரு பட்டாளமாகச் சேர்த்து அயர்லாந்துக்கு அனுப்ப வேண்டும் என்று அது தீர்மானித்தது. இரக்கம் என்பதையே அறியாது, கொடுமையே உருக்கொண்டு விளங்கிய இப்பட்டாளந்தான் பிற்காலத்தில் '**கறுப்புக் கபிலர்**' என்னும் பிரசித்தமான பெயரைப் பெற்றது. இதற்கு வேண்டிய ஆட்களைச் சேர்ப்பதற்கு இங்கிலாந்தில் விளம்பரங்கள் ஒட்டப்பட்டன.

1920, ஜனவரியில் அயர்லாந்து முழுதும் முனிசிபல் தேர்தல்கள் நடைபெற்றன. எங்கு பார்த்தாலும் ஸின்பீனர்களே மகத்தான வெற்றி பெற்றுவந்தனர் **டப்ளின், கார்க், லிமெரிக், வாட்டர்போர்டு** முதலிய முக்கிய நகரங்களிலெல்லம் ஸின்பீனர்களே மேயர்களாக (நகர சபைத் தலைவர்களாக) நியமிக்கப் பெற்றனர். கார்க் நகருக்கு **தாமஸ் மக்கர்டெயின்** மேயராக வந்தார். (இப் பெரும் வீரர் அரசாங்க ஒற்றரால் படுகொலை செய்யப் பட்ட கொடுமையைப் பின்னர் கூறுவோம்.) டப்ளின் நகருக்கு **டாம் கெல்லி** மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட் டார். அவர் அப்பொழுது இங்கிலாந்தில் கைதியாக இருந்தார்.

இக்காலத்தில் காலின்ஸ் ஒற்றறிதல், தொண்டர் படை நிர்வாகம், வரவு செலவு இலாகாவுக்குக் கடன் சேர்த்தல் முதலிய பல வேலைகளிடையே கிடந்து உழன்று கொண்டிருந்தான். அவன் அறிவுபெற்ற நாள் முதலாய்த் தொண்டிற்குக் கையையும் தேசத்திற்கு உள்ளத்தையும் இறையாக வைத்தவன். ஆயினும், அவனுக்கு இரண்டு கைகளும் ஓர் உள்ளமுந்தானே உண்டு! அவற்றால் எவ்வளவு வேலையைத்தான் செய்ய முடியும்? டெயில் காரியாலயத்தில் வேலை செய்யும் முக்கியஸ்தர் எல்லோரும் திடீர் திடீரென்று கைதி செய்யப்பட்டு வந்தனர். இதனால் தொடர்ந்தாற்போல் வேலை செய்ய வழியில்லை. நோக்கும் திசை யெல்லாம் அரசாங்க எதிர்ப்பு திரண்டு நின்றது. ஆயினும், காலின்ஸின் இடைவிடாத முயற்சியால் *30,000* பவுன் கடன் நிதி சேர்ந்தது; மொத்தம் ஒரு லட்சம் பவுன் வாக்களிக்கப்பட்டது. ஐரிஷ் மக்களின் தேசபக்தியைக்

கவனித்தால், சேர்ந்த பணம் குறைவாகவே தோன்றும். ஆயினும், அரசாங்க இடையூறுகள் பணம் சேர்ப்பதை மிகக் கடினமாக்கின. தொண்டர்களை மோட்டார் வண்டிகளில் ஏற்றக்கூடாது என்று தடை செய்யப்பட்டது. அவர்களைத் தினந்தோறும் பன்முறை நடுத் தெருக்களில் நிறுத்திச் சோதனை செய்தனர். இங்கிலையில் பணத்தையும், கடன் அறிக்கைகளையும், கணக்குகளையும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டு செல்ல முடியவில்லை. இத்தனை கஷ்டங்களிடையே சொற்பப் பணம் சேர்வதே பாக்கியமாகக் கருதப்பட்டது.

ஜனவரி முடிவில் அரசாங்கம் வழக்கம்போல் ஸின் பீன் முக்கியஸ்தர் யாவரையும் ஒரே யடியாகக் கைதி செய்ய ஏற்பாடு செய்தது. காலின்ஸ் அரசாங்க நடவடிக்கைகளை முன்கூட்டியே தக்க காலத்தில் அறிந்து கொண்டதால் தொண்டர்களை எச்சரிக்கையா யிருக்கும்படி செய்திகள் அனுப்பிவந்தான். ஆனால், அவன் அனுப்பிய செய்திகள் சிலருக்குக் குறித்த காலத்தில் கிடைக்காமற் போனதால், அவர்கள் மட்டும் கைதி செய்யப்பட்டார்கள். ஆயினும், பல நூற்றுவரைக் கைதி செய்ய வேண்டும் என்று எண்ணியிருந்த அரசாங்கம், மொத்தம் 58-பேரையே கைதி செய்ய முடிந்தது. கைதியானவர்களில் ராபர்ட் பார்ட்டன், ஜோ மக்ராத் என்பவர்கள் முக்கியமானவர்கள்.

பார்ட்டன் காலின்ஸுக்கு மிக்க உதவியா யிருந்தவன். அவன் பிரிவால் வேலைக்கு மிகுந்த இடையூறு ஏற்படும் என்று கண்டு, காலின்ஸ் அவனை மீட்டுக் கொண்டு வர ஏற்பாடு செய்தான். பார்ட்டனைப் போலீஸ் தாணுவிலிருந்து மௌண்ட்ஜாய் சிறைக்குக் கொண்டு

போகும் பொழுது இடையில் வழி மறித்து அவனை விடுவிப்பதற்காகச் சில தொண்டர்களை அனுப்பி வைத்தான். தொண்டர்கள் குறித்த இடத்தில் சென்று காத்திருந்தனர். அங்கு ஒரு ராணுவ மோட்டார் வந்தது. அவர்கள் அதை வழி மறித்தனர். அதிலிருந்த ராணுவ அதிகாரிகளும் சிப்பாய்களும் கைகளை உயரே தூக்கிச் சரணடைந்தனர். ஆனால் மோட்டாரில் பார்ட்டன் இல்லை; கைதி செய்யப்பட்ட ஓர் ஆங்கில சிப்பாய் மட்டுமே அதில் இருந்தான். தொண்டர்கள் ஏமாற்ற மடைந்து திரும்பினர். அதிகாரிகள் பார்ட்டனை இங்கிலாந்திலுள்ள போர்ட்லாந்து சிறைக்கு அனுப்பிவிட்டனர்.

இதன்பின் மீண்டும் அரசாங்கம் பெருவாரியாய்க் கைதி செய்யும் முறையை ஆரம்பித்தது. வழக்கம் போல் காலின்ஸ் நண்பர்களுக்கு எச்சரிக்கை அனுப்பினான். கைதி செய்யக் குறிப்பிடப்பட்டிருந்தவர்களில் லியாம் டோபினும் ஒருவன். அவன் பட்டாளத்தார் கையில் சிக்காமல் தப்பிவிட்டான். ஆனால் அவன் வீட்டில் தற்செயலாய் வந்து தங்கியிருந்த வில்லியம் டோபின் என்பவனைப் பட்டாளத்தார் கைதி செய்துகொண்டு போயினர். வில்லியத்திற்கும் தொண்டர் படைக்கும் சம்பந்தமே யில்லை. பட்டாளத்தார் தவறாகவே அவனைப் பிடித்தனர். ஒரு பாவமும் அறியாத அவனைப் பலநாள் சிறையில் வைத்திருந்து, பின் விடுதலை செய்தனர்.

பெப்ரவரி மாதம் 19-ம் தேதி, தொண்டர்கள் வெடி மருந்துக்காக ஐரிஷ் ஸ்டீம் பாக்கெட் கம்பெனியைச் சோதனை போட்டனர். அவர்கள் எண்ணியபடி வெற்றி உண்டாகவில்லை. அங்கிருந்து காலையில் திரும்பிச் சென்ற தொண்டர்கள் இருவரை வழியில் போலீஸார்

தடுத்துவிட்டனர். தொண்டர்கள் எதிர்த்துச் சுட்டதில் ஒரு ஸார்ஜன்டும் போலீஸ்காரனும் மிகுந்த காயமடைந்தனர். தொண்டர்களில் பாட்ரிக் மக்ராத் என்பவன் காயமடைந்து, கைதியானன். காயங்கள் பலமாயிருந்ததாலும், அவன் நிரந்தரமாக எழுந்து நடமாட முடியாது போனதாலும், அதிகாரிகள் வெகுநாள் அவனை ஆஸ்பத்திரியில் வைத்திருந்து, முடிவில் விடுதலை செய்தனர். இரண்டு தொண்டர்கள் பல போலீஸாரை எதிர்த்துப் போராடிய இந்தச் சம்பவம் காரணமாகப் போலீஸார் விழித்துக்கொண்டனர். மேற்கொண்டு தொண்டர்கள் விஷயத்தில் தலையிடுவது தங்களுக்கு ஒவ்வாது என்று அறிந்துகொண்டனர். ஆனல், ஆங்கில ராணுவ அதிகாரிகள் தங்களிடம் அனுமதிச் சீட்டுப் பெற்றவர்களைத் தவிர மற்ற யாரும் நள்ளிரவிலிருந்து காலை 5 மணி வரையும் வீட்டைவிட்டு வெளியேறக் கூடாது என்று டப்ளின் நகர் முழுவதும் 'கர்பியூ'* உத்தரவு போட்டனர். இக் கொடிய உத்தரவை ஸின்பீன் இயக்கத்தில் அநுதாபமில்லாதவர்களும் ஆட்சேபித்து எதிர்த்தனர். டப்ளின் நகரசபை, தன் வேலையாட்களில் எவரும் ராணுவத்தாரிடம் அநுமதிச் சீட்டு வாங்கக்கூடாது என்றும், முனிசிபல் விளக்குகள் எல்லாம் இரவு 11-30 லிருந்து காலை 6 மணி வரை அணைக்கப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

'கர்பியூ' உத்தரவு போட்ட ஒரு வாரத்திற்குள் தொண்டர்கள் அதிகாரிகளின் மூளை கலங்கும்படி ஒரு செயல் புரிந்தனர். இங்கிலாந்திலிருந்து டப்ளின் மாளிகைக்குரிய கடிதங்களைத் தாங்கி வந்துகொண்டிருந்த

* கர்பியூ உத்தரவு—ஊரடங்கு சட்டம்.

மெயில் வண்டியை ஒருநாள் காலை 8-30 மணிக்குச் சில தொண்டர்கள் வழிமறித்து, எல்லாக் கடிதங்களையும் கொள்ளையிட்டுப் போயினர். கவர்னர் ஜெனரலிலிருந்து, காரியதரிசி, உதவிக் காரியதரிசி, ராணுவம், போலீஸ் முதலிய பதினுன்கு இலாகாக்களுக்கு உரிய முக்கியமான கடிதங்களெல்லாம் தொண்டர்களுக்குக் கிடைத்ததால், பல அரிய ரகசியங்கள் வெளியாயின. பின்னுல் காலின்ஸ் அக்கடிதங்களைத் தக்க வழியில் பயன்படுத்திக்கொண்டான். அன்று முழுதும் பட்டாளத்தார் டப்ளின் நகரின் பல பாகங்களையும் திரும்பத் திரும்பச் சோதனையிட்டனர். ஆயினும், கடிதங்கள் போனவழி புலப்படக்காணேம்.

காலின்ஸின் பெயர் இதுவரை பொதுஜனங்களுககுத் தெரியாமல் இருந்தது. இப்பொழுது யாவரும் அவனை நன்கு அறிந்துகொண்டனர். போலீஸாரிடத்தும் சிப்பாய்களிடத்தும் அவனுக்கு நேரும் நித்திய கண்டங்களும், அவன் அவற்றிலிருந்து தப்பும் விந்தைகளும் நாடெங்கும் பரவின. அரசாங்கமும் அவனே தனது குலப் பகைவன் என்று அறிந்தது. டப்ளினுக்கு வரும் தொண்டர் படை அதிகாரிகள் முக்கியமான சகல விஷயங்களுக்கும் அவனையே கண்டு பேசிவந்தனர். அரசாங்கம் அவனைப் பிடிப்பதற்கு ஏராளமான பணச் செலவு செய்தும் பயனில்லாது விழிக்கும்பொழுது, தொண்டர்கள் மட்டும் எளிதாக அவன் இருக்கும் இடத்தை அறிந்து கண்டு பேசினர். அவனுடைய ஞாபகசக்தி அபாரமானதால், அவன் யாரை எந்த நேரத்தில் காணவேணும் என்பதை மனத்திலேயே பதிய வைத்துக்கொண்டு, ஒவ்வொரு நாளும் நூற்றுக் கணக்கானவரைக் கண்டு பேசிவந்தான். ஒரு சமயம் சிலருக்கு

மேல் நடக்க வேண்டிய வேலைகளைக் குறித்து உத்தர விடுவான்; அடுத்தாற்போல் சிலரிடத்தில் பண வரவு செலவு கணக்குகளை முடிப்பான்; பின்னர் ஒற்றறிந்து கூறும் நண்பர்களை விசாரிப்பான். பின் நாட்டுப்புறத் துத் தொண்டர் படைகளுக்கு வேண்டிய அறிக்கைகளை யும் புத்திமதிகளையும் அனுப்புவான். நாள்தோறும் அவன் எழுதிவந்த கடிதங்களுக்கு அளவில்லை. சூரிய மூளையும் கொந்தளித்துப் பெருகும் உற்சாகமும் பெற்ற வர்க்கு எந்த வேலைதான் கடினமாம்? பள்ளிச் சிறுவனைப் போல் சிரித்து மகிழ்ந்து உறவாடும் காலின்ஸை ஒரு முறை கண்டவர்கள் பின் அவனை மறப்பதேயில்லை. ஆனால், சொன்ன வேலைகளைக் குறித்த காலத்தில் சரியா கச் செய்யாத நண்பர்கள்மீது அவன் இடி போல் வெகுண்டு குமுறிப் பாய்வான்.

காலின்ஸ் நண்பர்களைச் சந்திப்பதும், பேசுவதும் வாகான் விடுதியிலேதான். அவனைக் காணவரும் நண் பர்கள் யாவரும் குறித்த வேளைகளில் அங்கே சென்று காத்திருப்பார்கள். காலின்ஸ் ஒரு தனி அறையில் இருந்துகொண்டு ஒவ்வொருவராகக் கண்டு விஷயங் களைப் பேசி முடிப்பான். அவன் வேலையின் கஷ்டத்தை அறிந்துகொள்ள வேடிக்கையான ஒரு சம்பவத்தைக் கூறுவோம்: ஒரு சமயம் அமெரிக்க ஐக்கிய மாகாணத்தி லிருந்து டப்ளினுக்கு வந்திருந்த வக்கிலான ஜேம்ஸ் ஸல்லிவன் என்பவர், அவனைப் பார்க்க வேண்டுமென்று ஏற்பாடு செய்து, வாகான் விடுதியில் காத்திருந்தார். காலின்ஸ், முக்கியமான விஷயங்களை முதலில் முடிக்கக் கருதி, தொண்டர் படை அதிகாரிகளையும் பிறரையும் கண்டு பேசினன். ஒருவர் பின் ஒருவராகப் பலர் அவன்

இருக்கும் அறைக்குச் சென்று சிறிது நேரம் பேசிவிட்டு வெளியேறினர். ஸூல்லிவன் வெகு நேரமாகக் காலின்ஸ் தன்னைக் காக்க வைத்தது குறித்து மனம் புழுங்கிக் கோபமடைந்தார். அவர் காலின்ஸ் மண்டைக்கனம் மிக்கவன் என்று முடிவு செய்தார். அச்சமயத்தில் அவர் ஒரு வாலிபனைச் சந்தித்தார். அவன் காலின்ஸின் தோழர்களில் ஒருவன் என்று கருதி, அவர் தம் மனஸ்தாபத்தையும் காலின்ஸின் அகம்பாவத்தையும் பற்றி விரிவாக அவனிடம் எடுத்துச் சொன்னார். அவ்வாலிபனும், 'ஆமாம், காலின்ஸ் கர்வம் மிகுந்தவன்தான்!' என்று அவர் கூறியதை ஆதரித்துப் பேசினான். சிறிது நேரத்தில், ஸூல்லிவன் தம்முடன் பேசிக்கொண்டு நின்றது மைக்கேல் காலின்ஸே என்று கண்டு தலைகுனிந்தார்.

டெயில் ஐராணின் நீதிஸ்தலங்கள் ஒழுங்காய் வேலை செய்துவந்தமையால், பிரிட்டிஷ் ஆட்சியின் உலைவுக்கு அது ஒரு புதிய வழியாகத் தோன்றியது. நாடெங்கும் அந்த நீதிஸ்தலங்களில் ஆங்காங்குள்ள பிரபலஸ்தர்கள் நீதிபதிகளாயும் பஞ்சாயத்தாராயும் நியமனம் பெற்று அழகாக வேலை செய்து வந்தனர். கட்சிக்காரர்களும் பிரிட்டிஷ் கோர்ட்டுகளை விலக்கி அவற்றிற்கே தங்கள் வழக்குகளைக் கொண்டு சென்றனர். வக்கீல்களும் சுதேசிக் கோர்ட்டுகளில்தான் தங்களுக்கு வருமானமுண்டு என்றறிந்து அவற்றிலேயே அமர்ந்தனர். அக் கோர்ட்டுகளின் நிகழ்ச்சிகளை எல்லாப் பத்திரிகைகளும் விரிவாக வெளியிட்டுவந்தன. சுருங்கச் சொன்னால், பிரிட்டிஷ் கோர்ட்டுகள் வேலையற்றுப் போனதால் அடைக்கப்பட்டு வந்தன. போலீஸ் வேலையையும் பல விடங்களில் தொண்டர்களே செய்துவந்தனர். தொண்டர்

படையில் போலீஸ் வேலைக்கு என்று ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டது.

நிர்மாண வேலைகளுக்காகவும் டெயில் ஜாரன் தக்க திட்டம் வகுத்து வேலை செய்தது. கைத்தொழில்களைப் பற்றி விசாரிக்க ஒரு கழகம் அமைக்கப்பட்டது. அக் கழகத்தைக்கூட அரசாங்கம் சட்ட விரோதமானதென்று தடுத்தது. ஆயினும் கழகம் பல கஷ்டங்களிடையே தொழில்களை வளர்க்க ஏற்பாடுகளைச் செய்து வந்தது. ஸின்பீன் இயக்கம் ஆரம்பம் முதலே அழிவு வேலையோடு ஆக்க வேலையையும் செய்யவேண்டுமென்று திட்டம் வகுத்து வந்திருந்தது. ஆர்தர் கிரிபித் ஒரு புதிய சமுதாயத்தைச் சிருஷ்டி செய்வதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தார். ஆனல் அரசாங்கத்தின் கொடுமைகளும், அடக்குமுறைகளும் எந்த ஆக்க வேலையையும் செய்ய இடம் கொடுக்கவில்லை. ஆதலால்தான் ஸின்பீனர்களும் எதிர்த்துப் போராடிக்கொண்டே யிருக்க நேர்ந்தது. ஸின்பீன் இயக்கத்தை உடைத்தெறிவதற்குத் தாங்கள் செய்துவந்த முயற்சிகள் யாவும் பயனற்றுப் போகவே, அதிகாரிகள், சட்டம், நியாயம், ஒழுங்கு முதலியவற்றைக் காற்றில் பறக்க விட்டுவிட்டுப், புதிய அடக்குமுறைகளைக் கையாள முற்பட்டனர்.

நூதன அடக்குமுறைகளை மனம் கூசாது கையாளுவதற்காக, அயர்லாந்தின் பிரதம காரியதரிசியின் பதவிக்கு ஸர் ஹமார் கிரீன்வுட் என்பவர் நியமிக்கப்பட்டார். அவர் இரக்கம் என்பதைக் கண்டறியாதவர். கல் நெஞ்சத்துடன் கொடுமைகளைச் செய்யவும், அதிகாரிகள் செய்யும் அக்கிரமங்கள் எல்லாம் நியாயமானவை என்று பிடிவாதத்துடன் சாதிக்கவும் அவரே ஏற்றவர் என்று

பிரிட்டிஷ் அரசாங்கம் அவரை நியமித்திருந்தது. அவர் அதிகாரத்தின் கீழ், கொள்ளையும் கொலையும் பெருகி, போலீஸாரும் பட்டாளமும் கொள்ளை நோய்போல எங்கும் பரவி, நாட்டையும் நகரத்தையும் அழித்து வந்த கதையைப் பின்னால் விவரித்துள்ளோம்.

ஜனவரி மாதக் கடைசியில் தர்ல்ஸ் என்னும் இடத்தில் ஒரு போலீஸ்காரன் சுடப்பட்டான். அதிலிருந்து அங்கிருந்த போலீஸார் வெறிகொண்டு ஆடத் தலைப்பட்டனர். நகரத்திலுள்ள தெருக்களிலும் வீடுகளிலும் அவர்கள் சுட ஆரம்பித்தனர். வழிப்போக்கர்களைத் தாக்கினர். ஜன்னல்களைத் தகர்த்தனர். இச்சம்பவங்களைக் குறித்து 'லண்டன் டெய்லி கிரானிக்கிள்' என்ற பத்திரிகை ஒரு குறிப்பு எழுதியது. அப்பத்திரிகை ஆங்கிலப் பிரதம மந்திரிக்கு ஆதரவாக இருப்பதாகவும் அவர் கருத்துக்களை வெளியிடுவதாகவும் கருதப்பட்டு வந்தது. அதன் குறிப்பு வருமாறு:

> 'இம்மாதிரியான சம்பவங்களைக் குறித்து யாரும் வருந்தாமல் இருக்க முடியாது. ஆனால் யாரும் இவற்றைக் கண்டு ஆச்சரியப்படவும் முடியாது. இந்தக் கொலைச் சங்கங்கள் தங்கள் வேலையை மேலும் நடத்திவரும் பட்சத்தில், இவைகளுக்கு எதிராக வேறு சங்கங்களும் தோன்றுவதோடு, அதிகாரிகளின் உயிரைப் போலவே முக்கியமான ஸின்பீனர்களுடைய உயிருக்கும் அபாயம் நேரும்.'

'கிரானிக்கிள்' பத்திரிகையின் ஜோசியம் அப்படியே பலித்துவிட்டது. ஆனால், அதன் கூற்று, ஜோசியமா அல்லது ஆங்கில அரசாங்கத்தின் உட்கருத்தை அறிந்து கூறப்பட்டதா? எங்காவது ஒரு போலீஸ்காரனாவது சிப்பாயாவது சுடப்பட்டால், உடனே நகர முழுதும் அரசாங்கத்தாருடைய கொடுமைகள் தாண்டவமாடின. கிர

பராதிகள் பழிவாங்கப்பட்டனர். துப்பாக்கிகள் கண்ட கண்ட இடங்களில் குண்டுகளைப் பொழிந்தன. விரைவாக அதிகாரிகளுடைய 'கொலைச் சங்கங்க'ளும் தோன்றின. பிரசித்தி பெற்ற தேசியத் தலைவர்களைக் கொலை செய்வதே அவைகளின் நோக்கம். அவை தலைவர்கள் பலருக்குப் பயமுறுத்தல்-கடிதங்களை அடிக்கடி அனுப்பி வந்தன.

கார்க் நகர மேயரான தாமஸ் மக்கர்டெயினுக்குப் பின்கண்ட வார்த்தைகள் அடங்கிய ஒரு கடிதம் அனுப்பப்பட்டது:

'தாமஸ் மக்கர்டெயின்! மரணத்திற்குத் தயராயிரு. உனக்கு முடிவுகாலம் வந்துவிட்டது!'

அயர்லாந்தின் தென் பாகத்தில் பல ஸின்பீன் தலைவர்கள் இதைப் போன்ற இறுதிக் கடிதங்களைப் பெற்றனர். முதலில் இவை விளையாட்டாகத் தோன்றினும், பின்னால் வினையாக முடிந்தன. கட்டுப்பாடாக அரசாங்கம் கொலைத்தொழிலை மேற்கொண்டதையே இக்கடிதங்கள் குறிப்பிட்டன.

மார்ச் மாதம் 20-ம் தேதி இரவு 1 மணிக்கு ஆயுதம் தாங்கிய ஒரு கூட்டத்தார் தாமஸ் மக்கர்டெயினுடைய வீட்டுக்குள் பலவந்தமாய்ப் புகுந்து, படுக்கையில் படுத்திருந்த அவ்வீரரைச் சுட்டுத் தள்ளினர். சுடும்பொழுது அவர் மனைவியும் அருகிலே நின்றாள். கொண்ட கணவனைத் தன் முன்பு சுட்டுத்தள்ளும் பொழுது, அந்த அம்மையின் உள்ளம் என்ன பாடுபட்டிருக்கும்! சிறிது நேரத்தில் அக்கூட்டத்தார், இரத்த வெள்ளத்தின் நடுவே இறந்த மக்கர்டெயினைப் போட்டுவிட்டு, வெளியேறி மறைந்துவிட்டனர். அவர்கள் ராணுவ உடை எதுவும்

அணிந்திருக்கவில்லை; மாறு வேடம் பூண்டிருந்தனர். முகங்களில் கருமையான வர்ணம் பூசியிருந்தனர். அவர்கள் யாவர்? அவர்கள் அனைவரும் அன்றிரவு கிங் தெருவிலுள்ள படைவீடுகளுக்குள் புகுந்ததை அறிந்து, நாளடைவில், அவர்கள் யாவர் என்பதையும், அவர்களில் முக்கியஸ்தர்களின் பெயர்களையும் காலின்ஸ் அறிந்துகொண்டான்.

அதிகாரிகள் வேண்டுமென்று செய்த இக் கொலை பாதகம் நாடெங்கும் கோபத்தையும் கொதிப்பையும் உண்டாக்கியது. பார்லிமெண்டில் அதைப் பற்றி வினவிய பொழுது, லாயிட் ஜார்ஜ், மக்கர்டெயின் தம்முடைய கட்சியைச் சேர்ந்தவர்களாலேயே கொல்லப்பட்டதாகக் கூறினர்! 'அவருடைய சொந்தக் கட்சியைச் சேர்ந்த அமிதவாதிகளால் கொலையுண்டார்!' என்பது அவர் வாக்கு. மக்கர்டெயின் தீவிர ஸின்பீனர்; தம் கட்சியாரின் நம்பிக்கைக்கும் விசுவாசத்திற்கும் மிகவும் பாத்திரமானவர். சர்க்கார் கூறியது ஒருபுறம் இருக்கட்டும். அவர் மரண விசாரணையின் மூலம் வெளி வந்த கார்க் நகர ஜனங்களின் அபிப்பிராயத்தைக் கவனிப்போம். பதினறு நாட்கள் விசாரணை செய்தபின், மரண விசாரணைச் சபையார் வெளியிட்ட அறிக்கை கூறியதாவது:

'கார்க் நகர மேயரான தாமஸ் மக்கர்டெயின், குண்டுக் காயங்களினல் ஏற்பட்ட அதிர்ச்சியினலும், இரத்தப் பெருக்கினலும் இறந்ததாக நாங்கள் காண்கிருேம். கல் நெஞ்சத்துடன், மிகக் கொடுமையான நிலைமையில், வேண்டுமென்றே, அவர் காயப்படுத்தப்பட் டிருக்கிருர். பிரிட்டிஷ் சர்க்காருடைய அதிகாரிகளின் உத்தரவுப்படி ராயல் ஐரிஷ்

போலீஸாராலேயே இக்கொலை ஏற்பாடு செய்து நடத்தப் பட்டிருக்கிறது.

'இங்கிலாந்தின் பிரதம மந்திரி **டேவிட் லாயிட் ஜார்ஜ்,** அயர்லாந்தின் லார்டு லெப்டினண்டு (கவர்னர் ஜெனரல்) **லார்டு பிரெஞ்ச்,** அயர்லாந்தின் மாஜி பிரதம காரியதரிசி **அயான் மாக்பெர்ஸன்,** தாற்காலிக போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் **ஸ்மித்,** டிவிஷனல் போலீஸ் இன்ஸ்பெக்டர் **கிளேடன், டி. ஐ. ஸ்வான்ஜி,** மற்றும் பெயர் தெரியாத போலீஸார் சிலர்—ஆகிய இவர்கள் வேண்டுமென்றே கொலைக் குற்றம் செய்ததாக நாங்கள் முடிவு கூறுகிறோம்.'

என்ன வீரமான அறிக்கை! அடிமை நாட்டிலே, யதேச்சாதிகாரம் நடைபெறும்போது, மரண விசாரணை அதிகாரிகள் சிறிதும் சலனமின்றி உண்மையைப் பச்சையாகக் கூறிவிட்டனர்.

மக்கர்டெயினின் கொலைக்குப் பிறகு ஜில்லா இன்ஸ்பெக்டர் **ஸ்வான்ஜி** வடக்கே **லிஸ்பர்ன்** நகருக்கு மாற்றப்பட்டார். மேற்கொண்டு கார்க்கிலிருந்தால் அவர் உயிருக்கு அபாயம் விளையுமென்று அதிகாரிகள் கருதியதாலேயே அவர் வேறிடத்திற்கு அனுப்பப்பட்டார். ஆனால், காலின்ஸின் உளவு அதிகாரிகள் அவர் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்துவிட்டனர். உடனே கார்க் தொண்டர்கள் அங்கு சென்று அவரைச் சுட்டுக் தள்ளினர்.

சிறிது காலத்திற்குப் பிறகு, கார்க் நகரத் தொண்டர்கள், கிங் தெரு போலீஸ் படைவீடுகளில் இருந்தவர்களே மேயரைக் கொலை செய்தவர்களாதலால், அப்படை வீடுகளையே தகர்த்துவிடவேண்டும் என்று சென்றனர். தெருவில் நடமாடுவோரிடையே வீணாக உயிர்ச்சேதம்

ஏற்படாமலிருப்பதற்காக முதலில் ஒரு தொண்டன் ஆகாயத்தைப் பார்த்துச் சுட்டான். அந்த ஓசையைக் கேட்டுப் போலீஸார் யாவரும் வெளியே ஓடி ஒளிந்து கொண்டனர். உடனே தொண்டர்கள் படை வீடுகளில் வெடி மருந்தைக் கொட்டிக் கொளுத்தி, அவற்றைத் தரை மட்டமாக்கினர். (இங்கு பிரஸ்தாபிக்கப்பட்ட கிங் தெரு பிற்காலத்தில் 'மக்கர்டெயின் தெரு' என்று புனிதமான பெயர் பெற்றது.)

மக்கர்டெயினுக்குப் பிறகு டெரென்ஸ் மாக்ஸ்வினி கார்க் நகர மேயராக வந்தார். முந்திய மேயர் இரத்த வெள்ளத்தின் நடுவே கொலையுண்டு கிடந்ததைப் பார்த்த பிறகும், மாக்ஸ்வினி நகரசபைத் தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டார் என்றால், தாமும் உயிர்ப் பலி கொடுக்க முன் வந்துவிட்டார் என்பதை மட்டும் இங்கே குறிப்பிடுதல் அவசியம். அவர் மிகச் சிறந்த அறிவாளி, ஐரிஷ் தேச பக்த திலகங்களில் ஒருவர். அவ்வீர கேசரி தாய்த் திருநாட்டிற்காக அடைந்த வீர மரணத்தைப் பின்னர் கூறுவோம்.

அரசாங்கத்தின் கொலைச் சங்கங்களில் ஒன்று தர்ல்ஸ் நகரிலும் தோன்றியது. அங்கு போலீஸார் சாதாரண ஜனங்களை அடிப்பதும், கொள்ளையிடுவதும் தினசரி நிகழ்ச்சிகள். அங்கிருந்த ஸின்பீன் தலைவர் ஜேம்ஸ் மக்கார்தி, மக்கர்டெயினைப் போலவே, இருளில் கொலை செய்யப்பட்டார். தர்ல்ஸுக்கு அருகில் ராக் என்னும் இடத்தில் தாமஸ் டுவியர் என்பவரும் கொலை செய்யப்பட்டார். இவ்வாறு தனிப்பட்ட ஸின்பீன் பிரமுகர்கள் வதை செய்யப்படும் வேளையில்தான், ஸர் ஹமார் கிரீன்வுட்டின் நியமனம் அறிவிக்கப்பட்டது.

ஸர் நெவில்லி மக்ரெடி என்னும் புதிய சேனாதிபதியும் அதே சமயத்தில் அயர்லாந்துக்கு அனுப்பப்பட்டார்.

அடக்குமுறைகள் வளர வளரத் தொண்டர்களின் உத்வேகமும் வளர்ந்து வந்தது. 1920, ஈஸ்ட்டர் வாரத்தில், தொண்டர்கள் 1916-ம் வருஷத்துக் கலகத்தின் ஞாபகார்த்தமாக மீண்டும் போர் செய்வர் என்று அரசாங்கம் மிகுந்த முன்னேற்பாடுகளைச் செய்து வந்தது. அதன் ஒற்றர்கள் திறமையற்றுப்போன விஷயம் இதிலிருந்தே தென்பட்டது. ஏனெனில், தொண்டர்கள் அவ்வாறு ஒன்றும் ஏற்பாடு செய்யவில்லை. சிறு கூட்டங்களாகச் சென்று தாக்கும் கொரில்லாச் சண்டை மிகுந்த பயன் கொடுத்து வந்ததால், அவர்கள் அதையே பல நாட்களாகப் பின்பற்றி வந்தனர். ஈஸ்ட்டர் வாரம் முழுதும், டப்ளின், கார்க், லிமெரிக், தர்ல்ஸ் முதலிய முக்கியமான நகரங்களுக்கு வரும் ரஸ்தாக்களை எல்லாம் ராணுவத்தார் பாதுகாத்து நின்றனர். அவ் வழிகளில் சென்ற ஜனங்களைச் சோதனையிட்டனர். ரயில்களில் வந்து இறங்கிய பிரயாணிகளையும் அவர்கள் சோதனை போடாமல் விடவில்லை. பட்டாளங்கள் வீதிகளில் எல்லாம் சுற்றித் திரிந்து பாதுகாத்தன. யுத்தக் கப்பல்கள் கடற்கரைகளில் வட்டமிட்டுத் திரிந்தன. இத்தனை ஏற்பாடுகளும் ஒரு யுத்தம் ஏற்படும் என்ற யூகத்தினாலேயே செய்யப்பட்டன.

இக்காலத்திலெல்லாம் தொண்டர்கள் அரசாங்கத்தை அதிரச் செய்வதற்கு மீண்டும் ஓர் பெருஞ்செயல் செய்வதற்கு ஏற்பாடு செய்து வந்தனர். ஈஸ்ட்டர் ஞாயிற்றுக்கிழமைக்கு முந்திய நாள் இரவில், டப்ளின் கார்க் முதலிய சகல நகரங்களிலும் வருமான வரி

ஆபீசுகள் எல்லாம் தொண்டர்களால் தாக்கப்பட்டன. அவை யாவும் தீயால் எரிக்கப்பட்டன. வருமான வரி சம்பந்தமான எல்லாத் தஸ்தவேஜுகளும், புத்தகங்களும், கணக்குகளும் அழிக்கப்பட்டன. அவசியமான இடங்களில் வருமான வரி அதிகாரிகளுடைய வீடுகளும் சோதனை யிடப்பட்டன. பட்டாளங்கள் இரவு பகலாய் ஆரவாரத்துடன் நகரங்களையெல்லாம் பாதுகாத்து வரும் காலத்திலேயே, தொண்டர்கள் இந்த அரும் பெருஞ் செயலைச் செய்ததன்மூலம், சர்க்கார் வருமான வரியை வாங்குவதற்கு வழியில்லாமல் போயிற்று. பல மாதங்களுக்கிடையில், வரி செலுத்த வேண்டியவர்களுடைய விவரங்களையும், வரி விகிதங்களையும், பாக்கிகளையும் அதிகாரிகளால் கண்டு பிடிக்க முடியவில்லை. சுருங்கச் சொல்லின், பின்னல் சுதந்திர அரசாங்கம் ஏற்படும்வரை வருமான வரியை வாங்க முடியாது போய் விட்டது. ஆனல், சர்க்கார் தன் அதிகாரிகளுக்குச் சம்பளம் கொடுக்கும்பொழுது அவர்கள் செலுத்த வேண்டிய வருமான வரியை மட்டும் பிடித்துக் கொண்டது!

போலீஸாரால் காலிசெய்யப்பட்ட 315 படை வீடுகள் மேற் சொன்ன ஈஸ்டர் சனிக்கிழமை இரவிலேயே தகனம் செய்யப்பட்டன. படை வீடுகளை எரித்ததன் மூலம் மேற்கொண்டு போலீஸார் நாட்டுப்புறங்களில் வசிப்பதற்கு வழி யில்லாது செய்யப்பட்டது. தொண்டர்கள் இதிலிருந்து வேறு பல தீவிரமான வேலைகளிலும் ஈடுபட்டனர். இச் செயல்களால் தேசத்தில் அரசாங்க அமைப்பு * தகர்ந்துபோய்விட்டது. ஸிவில் அதிகாரிகள்

* Civil Government.

ஆள முடியாமற் போகவே ராணுவ பலம் ஒன்றை வைத்தே அயர்லாந்தை அடக்கியாள வேண்டியிருந்தது. போலீஸார் ஒற்றர்கள் முதலியோர் உதவியின்றி ராணுவத்தார் வெகுநாள் ஆள முடியாது. ஆயினும், ஆங்கிலேயருக்கு வேறு வழியில்லை. எனவே, அவர்கள் ராணுவத்தின் பயங்கர ஆட்சியை விரைவிலேயே ஆரம்பித்தனர்.

அச்சமயத்தில் மௌண்ட்ஜாய் சிறையில் எழுபத்தைந்து தொண்டர்கள் தங்களை ராஜீயக் கைதிகளாக நடத்தவேண்டும் என்று உண்ணாவிரதம் தொடங்கினர். பொதுஜனங்கள் அவர்களை ஆதரித்து நின்றனர். பெரிய மனிதர்களுடைய வேண்டுகோள்களும் ஜனங்களின் கிளர்ச்சியும் அதிகாரிகளுடைய பிடிவாதத்தை விலக்க முடியவில்லை. ஐரிஷ் தொழிலாளர் காங்கிரஸின் நிர்வாக சபையும், தொழிற் கட்சியும், உண்ணாவிரதமிருந்த தொண்டர்களுக்கு அநுதாபம் காட்டுவதற்காக வேலைநிறுத்தம் செய்யவேண்டும் என்று தீர்மானித்தன. ஐரிஷ் பிஷப்புகளின் சங்கம், உண்ணாவிரதம் காரணமாக எவர்களாவது இறந்தால், அதற்கு ஆங்கில அரசாங்கமே பொறுப்பாகும் என்று, எச்சரிக்கை அனுப்பியது. தேசம் முழுவதிலும் பெரும் பெரும் கண்டனக் கூட்டங்கள் கூடின. பத்து நாள் உண்ணாவிரதத்திற்குப் பின்னால், மௌண்ட்ஜாயிலிருந்த கைதிகள் யாவரையும் அரசாங்கம் விடுதலை செய்தது.

இதன் பிறகு லண்டன் **வோர்ம்வுட் ஸ்க்ரப்ஸ்** சிறையிலிருந்த ஐரிஷ் கைதிகளும் உண்ணாவிரதத்தைக் கைக்கொண்டனர். அவர்களுடைய தலைவனான **ஜோ மக்ராத்** என்பவனை வேறு சிறைக்கு மாற்றுவதை ஆட்சே

பிக்கவே விரதம் தொடங்கினர். சிறை அதிகாரிகள் கைதிகளுடன் ராஜி செய்துகொண்டு, மக்ராத்துடன் அவனுக்குப் பிரியமான வேறு சில கைதிகளையும் அழைத்துக்கொண்டு போக அநுமதித்தனர். சிறிது காலத்திற்குப் பின்னர், ஜோஸப் மக்டோனுக், எல்லாக் கைதிகளையும் விடுதலை செய்யவேண்டும் என்ற கோரிக்கையுடன், மீண்டும் உண்ணுவிரதத்தைத் தொடங்கினுன். 150 கைதிகள் உணவெடுக்க மறுத்தனர். லண்டனிலுள்ள ஐரிஷ் மக்கள், ஒவ்வொரு நாள் இரவிலும், சிறைக்கு வெளியே கூடி, ஆரவாரங்கள் செய்து தங்கள் அருமைத் தொண்டர்களுக்கு அநுதாபம் காட்டி வந்தனர். அவர்களைக்கூட ஆங்கில விஷமிகள் அடிக்கடி தாக்கித் துன்புறுத்தினர். பதினெட்டு நாள் அதிகாரிகள் பேசாதிருந்துவிட்டு, பின்னர் கைதிகளை விடுதலை செய்தனர்.

தர்ல்ஸ் நகரில் ஸின்பீன் பிரமுகர் இருவரைப் போலீஸார் கொலை செய்த விவரம் மேலே சொல்லப்பட்டிருக்கிறது. அங்கிருந்த போலீஸாரில் பலர் அல்ஸ்டர் வாசிகளாதலால், அவர்கள் தேசீயவாதிகளையும் மற்ற ஐரிஷ் மக்களையும் பல கொடுமைகளுக்கு உள்ளாக்கி வந்தனர். ஜனங்களை அடிப்பதும், பணத்தையும் சொத்துக்களையும் பறிப்பதும் தினசரி நடந்தன. இரவுகளில் போலீஸார் நடுத் தெருக்களில் நின்றுகொண்டு, குறியில்லாமலே பல இடங்களையும் பார்த்துச் சுட்டுக்கொண்டிருந்தனர். ஸின்பீனர்களுடைய வீடுகளுக்குள்ளும் குண்டுகள் பாய்ந்தன. முக்கியமான கட்டிடங்கள் எரிக்கப்பட்டன. இச்செயல்களால் ஜனங்களிடையே பீதி உண்டாக்க வேண்டும் என்பதே அவர்கள் நோக்கம்.

தொண்டர்களும் தங்கள் போராட்டத்தை விடாது நடத்திவந்தனர். மேற்கொண்டு முப்பது வருமான வரி ஆபீசுகளையும், அவற்றின் தஸ்தவேஜுகளையும், 95 போலீஸ் படைவீடுகளையும் எரித்துத் தள்ளினார்கள்.

ரயில்வே தொழிலாளர்கள், போர்க்கருவிகள், ஆயுதங்கள், வெடிமருந்து முதலியவற்றை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அனுப்புவதற்குத் தாங்கள் உதவிசெய்ய முடியாது என்று கூறினர். ரயில்வேக்காரர் சங்கமும் அவர்களுடைய தீர்மானத்தை ஆதரித்தது. பல சமயங்களில் எஞ்சின் ஓட்டிகள், ஆயுதம்தாங்கிய சிப்பாய்களையும் யுத்தக் கருவிகளையும் ரயிலில் ஏற்றினால், தாங்கள் ஓட்டமுடியாது என்று மறுத்துவந்தனர். வேலை செய்ய மறுத்தவர்கள் ஒருவர் பின் ஒருவராக நீக்கப்பட்டனர். ஆயினும், அவர்களுடைய மறுப்பு நிலைத்து நின்றது. பலர் வேலையிலிருந்து நீக்கப்பட்டதால், ரயில் போக்குவரத்தே மிகவும் தடைப்பட்டது.

அரசாங்கம் புதிதாக இரண்டாயிரம் துருப்புக்களை வரவழைத்து, கார்க் தாலுகாவுக்கு அனுப்பிவைத்தது; முக்கியமான நகரங்களில் பல கட்டிடங்களையும் பட்டாளங்களுக்காகப் பிடித்துக்கொண்டது.

டெயில் ஐரானின் செல்வாக்கைத் தொலைப்பதற்காக, அதன் நிதிகளைச் சேமித்து வைத்திருந்த நாணய சாலைகளை எல்லாம் சோதனையிட்டுப் பணத்தைப் பறிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்தது. நாணயசாலைகளின் கணக்குகளைப் பரிசோதித்து டெயிலின் பணம் அவற்றினிடம் இருக்கிறதா என்று கண்டுபிடிப்பதற்காக ஆலன் பெல் என்னும் அதிகாரி நியமிக்கப்பட்டார். முன்னால் பார்னல் காலத்தில் இதே மாதிரியான வேலை

யில் அவர் அநுபவம் பெற்றவர். நாணயசாலைகளின் உத்தியோகஸ்தர்கள் அவர் முன்பு ஆஜராகித் தங்கள் கணக்குகளைச் சமர்ப்பிக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். சோதனை அதிகாரி பெல் கேட்கும் கேள்விகளுக்கும் அவர்கள் உண்மையான விடை பகரவேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்பட்டனர். பெல்லுடைய வேலைகள் காரணமாக, டெயில் ஐரான் வருந்தி வாங்கிய கடன் தொகை யாவும் பறிமுதலாகும் அபாய நிலை ஏற்பட்டது. எனவே, ஒருநாள் காலை, பெல் மங்க்ஸ் டவுனில் தம்முடைய வீட்டிலிருந்து டப்ளினுக்கு ஒரு டிராம் வண்டியில் வந்து கொண்டிருந்த பொழுது, தொண்டர்கள் அவரைப் பிடித்து வெளியே கொண்டுபோய்ச் சுட்டுத் தள்ளிவிட்டனர். இதற்குப் பின் எந்த ஐரிஷ் நாணயசாலையின் விஷயத்திலும் அரசாங்கம் தலையிடத் துணியவில்லை.

பீடர் கிளான்ஸியின் தலைமையில் டப்ளின் தொண்டர்கள் சிலர் 'கிங்ஸ் இன்ஸ்' என்னும் இடத்தைப் பகலிலேயே தாக்கி, அங்கிருந்த காவற்காரர்களை அடக்கி, 25 துப்பாக்கிகளையும், இரண்டு யந்திரத் துப்பாக்கிகளையும், ஏராளமான வெடி மருந்தையும் கைப்பற்றிக்கொண்டனர். டால்டன், ஸார்ஜண்டு ரெவல் என்னும் ஒற்றர்களைச் சில தொண்டர்கள் சுட்டொழித்தார்கள். இவர்களில் ரெவெல் இரும்புக் கவசம் அணிந்திருந்ததால், காயம் மட்டுமே அடைந்தான்; மற்றவன் மடிந்தான். தெருக்களில் ஒற்றர்கள் சுற்றித் திரிவதும் இதிலிருந்து நின்றுவிட்டது.

ஏப்ரல் மாதம் 25-ந் தேதி ஒரு தொண்டர் படை கார்க் தாலுகாவில் மில் ஸ்டிரீட்டுக்குச் சென்று ஆறு பேர்களைக் கைதி செய்தது. அங்குள்ள போலீஸார்

தங்கள் படைவீடுகளுக்குள் அடங்கி யிருந்துவிட்டனர். தொண்டர்களால் கைதி செய்யப்பட்டவர்கள் நாணய சாலே அதிகாரிகளிடமிருந்து பெரும் பணத்தைக் கொள்ளேயிட்டவர்கள். தொண்டர்கள் அவர்களிடமிருந்த திருட்டுச் சொத்தாகிய 18,000 பவுனைப் பிடுங்கி, உடையவர்களிடம் கொடுத்துவிட்டு, அத்தீயோரை நாட்டைவிட்டு ஓடும்படி விரட்டினுர்கள். இத்தகைய பரோபகாரமான காரியங்கள் பலவற்றையும் அவர்களே கவனிக்கவேண்டி யிருந்தது. ஏனெனில், போலீஸ் வர்க்கம் சிதறிப்போனதால் ஜனங்களைப் பாதுகாப்பதும் அவசியமாயிற்று. தலைமைக் காரியாலயத்தார், தொண்டர்கள் தங்கள் ராணுவ வேலைகளைக் கைவிட்டுச் சாதாரணப் போலீஸாருடைய காவல் வேலைகளிலேயே ஈடுபட்டுவிடாமல் இருப்பதற்காகத் தனியான தொண்டர் படைகளை ஜனப் பாதுகாப்புக்காக நியமித்தனர்.

ஒவ்வொரு நாள் இரவிலும் தொண்டர்கள் போலீஸ் படைவீடுகளை இடைவிடாது தாக்கிவந்தனர். பல படைவீடுகள் அவர்கள் கைவசமாயின. இவைகளில் கில்மல்லக் படைவீடுகளைத் தொண்டர்கள் கைப்பற்றியது புகழத்தக்க செயலாகும். 1867-ல் அதே படைவீடுகளைப் பிடிப்பதற்காகப் பழைய தேசியப் போர் வீரரான பீனியன்கள் எவ்வளவோ முயன்றும் தோல்வியடைந்தனர். ஆனால், இச்சமயத்தில் அவை தொண்டர்களால் சுட்டெரிக்கப்பட்டன. இரண்டு போலீஸாருக்கு மரணமும் அறுவருக்குக் காயமும் ஏற்பட்டது. பின்னல் போலீஸாரும் கில்மல்லக்கில் ஜனங்களுடைய வீடுகளை எரித்தும், நகரமண்டபம் ஒன்றைக் கொளுத்தியும் தெருக்களில் மனம்போனபடி சுட்டும்வந்தனர். இவைகள் அவர்களுடைய பழிவாங்கும் முறைகள் !

பொதுஜனங்களிடம் சிறிதாவது அபிமானமுள்ள போலீஸாரை ராஜிநாமாச் செய்யும்படி தூண்டுவதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தூண்டுதல்களும், வேண்டுகோள்களும், ஜனங்களுடைய சமூக பகிஷ்காரம் என்னும் ஆயுதமும் போலீஸாருடைய மனத்தைக் கலைத்தன. அநேகம் போலீஸார், தங்களுக்கும் ஜனங்களுக்கும் எவ்விதப் பகையும் இல்லை என்பதை அறிந்து, வேலையை ராஜிநாமாச் செய்தனர். வேலையை விடுவோர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வந்தது. பயம் காரணமாகச் சிலர் வேலையிலிருந்து நீங்கியது உண்மையேயாயினும், தேசத்திற்கு எதிராக மாற்றாருடன் சேர்ந்துகொண்டு தம் சுயதேசத்தாரை வதைக்க மனமின்றியே பெரும்பாலோர் விலகினர். ஜீவனத்திற்கு உபாயமாக அவர்கள் வைத்துக்கொண்டிருந்த பதவிகளை விட்டது பெருந் தியாகமே யாகும். காலின்ஸ் தனக்கு உதவியாயிருந்த சில போலீஸாரை மட்டும் வேலையை விடாமலிருக்கும்படி செய்துகொண்டான். கடைசிவரை இவர்கள் அவனுக்கு உறுதுணையாக நின்றார்கள்.

போலீஸாரைப் பின்பற்றிப் பல மாஜிஸ்திரேட்டுகளும் வேலைகளை உதறித் தள்ளினர். அவர்கள் எல்லோரும் இதுவரை ஆங்கில ஆட்சியை ஆதரித்து வந்தவர்கள். செத்த மாட்டை உண்ணிகள் விடுவதுபோலவும், கடலில் மூழ்கும் கப்பலிலிருந்து எலிகள் தப்பி ஓடுவதுபோலவும், அவர்களும் அரசாங்க உத்தியோகங்களை விட்டு வெளியேறினர்.

ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களில் வடகிழக்கு அல்ஸ்டரைத் தவிர மற்ற இடங்களிலெல்லாம் ஸின் பீனர்களே வெற்றி பெற்றனர். புதிதாய்த் தேர்ந்தெடுக்

கப்பெற்ற டப்ளின் கார்ப்பொரேஷன் போன்ற ஸ்தல ஸ்தாபனங்கள் எல்லாம் டெயில் ஐரானுக்கே விசுவாசமாக இருப்பதாய்ப் பிரமாணம் செய்தன. மேலும், தங்கள் நடவடிக்கைக் குறிப்புக்களை ஆங்கில அரசாங்க ஸ்தல ஸ்தாபன போர்டினிடம் சமர்ப்பிக்க மறுத்துவிட்டன. இச் சம்பவங்கள், உயிர் ஊசலாடிக் கொண்டிருந்த அதிகார வர்க்கத்தின் மூச்சை மேலும் திணறவைத்தன.

டெயில் ஐரானின் கோர்ட்டுகளும் நாடெங்கணும் திறமையுடன் வேலைசெய்து வந்தன. அவற்றின் தீர்ப்புக்களை நிறைவேற்றத் தொண்டரின் போலீஸ் படை திறமையுடன் வேலை செய்துவந்தது.

அரசாங்கமும், உயிரைக் காத்துக் கொள்வதற்காக, தன் கடைசிப் போராட்டத்தில் இறங்க முற்பட்டது.

11

'கறுப்புக் கபிலர்'

1920-ம் வருஷ ஜூன் மீ முதல் அயர்லாந்தில் ஆங்கில ஆட்சியின் இருளடர்ந்த இழிவான சரித்திரம் ஆரம்பமாயிற்று. அப்பொழுதுதான் 'கறுப்புக் கபிலர்' என்று பெயர் பெற்ற 'பிளாக் அண்டு டான்'* பட்டாளத்தார் அயர்லாந்துக்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் செய்த கொடுமைகள் நாகரிக உலகைத் திடுக்கிடச் செய்

* Black and Tans.

பவை. நரகலோகத்தின் பேய்ச் சக்திகளை ஒருங்கே அவிழ்த்து விடுவதுபோல, ஆங்கில அரசாங்கம் அவர்களை அயர்லாந்தின்மேல் அவிழ்த்து விட்டுவிட்டது.

அரசாங்கம், தன் ஒற்றர்கள், போலீஸார், சிப்பாய்கள் முதலிய துணைக் கருவிகளால் தேசிய எழுச்சியை அழித்துவிடுவதற்கு எத்தனையோ முயற்சிகள் செய்து பார்த்தும், இதுவரை பயனில்லை. அதனுடைய உளவு இலாகாவையே தொண்டர்கள் தகர்த்துவிட்டனர். போலீஸார், உடையும் ஆயுதமும் தாங்கி, தனியே வெளிவர அஞ்சினர். சிப்பாய்களும் தொண்டர்களை முறியடிக்க முடியாமல் விழித்தனர். இந்நிலையில்தான் ஆங்கில அரசாங்கம் இங்கிலாந்திலிருந்து புதிதாகக் கறுப்புக் கபிலரை அனுப்பியது. அப்படையினர் பெரும்பாலும் குற்றம் புரிவதையே தொழிலாகக் கொண்ட வகுப்புக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அவர்களிற் பலர் இங்கிலாந்தில் தங்கள் ஊர்களில் கேட்கச் சகிக்காத கொடும் பாதகங்களைச் செய்து தண்டனை அடைந்தவர்கள். அவர்கள்தான் அயர்லாந்தில் ஆங்கிலச் சட்டத்தையும் அமைதியையும் பாதுகாப்பதற்காகத் தாங்கள் அடைபட்டிருந்த சிறைக்கோட்டங்களிலிருந்து வெளியே விடப்பட்டார்கள். நீசத் தொழிலுக்காக நியமிக்கப்பட்ட நீசர்களே அவர்கள். சத்தியம், தயை, தாட்சண்யம், கௌரவம் முதலிய ஒழுக்கம் எதுவுமே இல்லாதவர்கள். அவர்கள் தங்களுக்குள்ளேயே ஒருவர் பணத்தையும் சாமான்களையும் மற்றவர் திருடிக்கொள்வது வழக்கம். பழைய போலீஸாரில் எஞ்சி நின்றவர்கள் அவர்களோடு சேர்ந்து வேலை செய்வதுகூடக் கேவலம் என்று எண்ணினார்கள். இத்தகைய மாக்கள்தான் ஸர் ஹமார் கிரீன்வுட்டின் உதவியாட்களாக விளங்கினார்கள்.

புதிதாக அயர்லாந்துக்கு வந்திருந்த இந்தப் படையினருக்குக் கொடுப்பதற்கு அரசாங்கத்திடம் போதிய உடைகள் இல்லே. எனவே, அவர்கள் பழைய போலீஸாரின் உடைகள் சிலவற்றையும் புதிய உடைகள் சிலவற்றையும் அணியவேண்டி யிருந்தது. சிலர் கபில நிறமுள்ள (காக்கி) அங்கிகளையும் கறுப்புக் குல்லாக்களையும், வேறு சிலர் கறுப்பு அங்கிகளையும் காக்கி நிறக் குல்லாக்களையும் அணிந்துகொண்டார்கள். அயர்லாந்தின் ஓர் பாகத்தில் கறுப்பும் கபிலமும் கலந்த நிறத்தில் ஒருவகை நாய்கள் உண்டு. அவற்றின் ஞாபகார்த்தமாக, புதிதாக வந்திறங்கிய அந்த வீர தீரப் படையினருக்குக் 'கறுப்புக் கபிலர்' என்ற புனைபெயரை ஜனங்கள் சூட்டிவைத்தார்கள். 'கறுப்புக் கபிலர்' அநேக கொலைகளையும் கொள்ளைகளையும் கூசாது செய்ததால், அவர்களுடைய பெயரே எங்கும் பீதியை உண்டாக்கியது. அதைக் கண்டு அவர்கள் பெருமிதங்கொண்டு, 'கறுப்புக் கபிலர்' என்ற திருநாமத்தைத் தாங்களே விருப்பத்துடன் ஏற்றுக்கொண்டனர்.

இயற்கையிலேயே கொடுமையில் பண்பட்ட அவர்களை மேன்மேலும் கொடுமை செய்யும்படி தூண்டுவதற்காக அரசாங்கம் 'வார சாரம்'* என்ற ஒரு பத்திரிகையை நடத்திவந்தது. அதில் அவர்கள் செய்த கொலைகளையும் அதிக்கிரமங்களையும் ஆதரித்துக் கட்டுரைகள் பல எழுதப்பட்டன. அப்பத்திரிகை அவர்களைக் கொலைச் செயலுக்குத் தூண்டுவதற்காக வெளியிட்ட வசனங்கள் சிலவற்றைக் கவனிப்போம்:

'அயர்லாந்தைச் சட்டத்திற்கு அடங்கி நடக்கும் பிரஜைகளுக்கு ஏற்றதாயும், கிளர்ச்சியே தொழிலாய், கொலையே

* The Weekly Summary.

வழியாய்க் கொண்டுள்ளோருக்குத் தக்க நரகமாயும் செய்யும் தொழிலை அவர்கள் நடத்திக்கொண்டே வருவார்கள்.

'இந்தக் கொள்ளைகளும், தீ வைத்தலும் போலீஸாரைச் சுட்டுத் தள்ளுவதற்குக் குறைந்த யுத்தமா?

'போலீஸ்காரனைச் சுட்டுத்தள்ளுவதற்குக் காரணஸ்தன் என்று சந்தேகிக்கப்படுகிற ஒரு மனிதனை அவன் படுக்கையில் வைத்தே சுட்டுத் தள்ளுவது குறைந்த யுத்தமா?

இவ்வசனங்களைப் போன்ற தூண்டுதல்களை அடிக்கடி படித்துவரும் படையினர், சந்தேகப்பட்டவர்களைப் படுக்கையில் வைத்தே சுட்டுத்தள்ள வேண்டும் என்ற உபதேசத்தை மறந்துவிடாது நடத்தி வந்தனர். இரவில் வீடுகளிலிருந்து மனிதர்களை வெளியே கொண்டு வந்து சுட்டுத்தள்ளினர். ஒரு சமயம் ஒரு தொண்டன் வீட்டில் காணப்படாமையால், அவன் சகோதரனை ஒரு நொண்டிப் பையனைச் சுட்டுக் கொன்றனர். மற்றொரு முறை பத்து வயதுச் சிறுவன் ஒருவனை வதைத்தனர். இச்செயல்களெல்லாம் அத்து மீறிய வெறியர்கள் செயல் என்று கருதக்கூடியவை அல்ல. எல்லாம் ஆங்கில-ஐரிஷ் அரசாங்கங்களின் ஆக்கினையின் பேரிலேயே நடந்தன. ஜூன் மாதம் 3-ம் தேதி வால்டர் லாங் என்பவர் பார்லிமெண்டில் வெளியிட்ட கூற்று இவ்விஷயத்தை வெட்ட வெளிச்சமாகக் காண்பித்தது. அவர் கூறியதாவது: 'ஐரிஷ் போலீஸார் சுடுவதற்கு அநுமதிக்கப்படவில்லை என்ற கூற்றுக்குச் சிறிதும் ஆதாரமில்லை. போலீஸார் சுட்டதுடனன்றி, மிகுந்த பயன் கொடுக்கும் முறையிலும் சுட்டிருக்கின்றனர் என்று கூற நான் ஆனந்தமடைகிறேன். அவர்கள் மேலும் அவ்வாறு செய்வார்களென்றும் நான் நம்புகிறேன்.'

ஆகஸ்டு, 14-ம் தேதி, லிமெரிக் தாலுகாவில் பாட்ரிக் லிஞ்ச் என்பவன் பட்டாளத்தாரால் இரவில் வீட்டை விட்டு வெளியே கொண்டுபோகப்பட்டான். பின்னால், அவனுடைய உடல் குண்டுகளால் சல்லடைக் கண்ணாகத் துளைக்கப்பட்டுக் கிடந்தது. இக்கொலையைச் செய்தவர்கள் சிப்பாய்களே.

கறுப்புக் கபிலருடன் துணைப் படை ஒன்றும் அமைக்கப்பட்டது. அதிலுள்ளவர்கள் அதிகச் சம்பளம் வாங்குபவர்கள். ஐரிஷ் தேசிய இயக்கத்தை அடியோடு கல்லியெறியும் முயற்சியில் அவர்கள் அரும்பாடு பட்டனர். அவர்கள் யாவரும் பட்டாளத்திலிருந்து விலகிய அதிகாரிகள் என்று அரசாங்கம் கூறியது. அது முற்றிலும் உண்மையன்று. அவர்களிலும் கேடிகள் பலர் இருந்தனர். சாதாரணக் கறுப்புக் கபிலர் படையைக் காட்டிலும் அவர்கள் அதிகத் திறமை வாய்ந்திருந்தனர். ஏனெனில், அவர்கள் அதிகச் சாதுரியமும், சக்தியும், தைரியமும் உடையவர்கள். அவர்களும் பொதுவாகக் கறுப்புக் கபிலரைச் சேர்ந்தவராகவே ஜனங்கள் கருதி வந்தனர்.

ஜூன் மாதம் 17, 18, 19-ம் தேதிகளில் டெயில் ஐரானின் கூட்டமொன்று பிளமிங் விடுதியில் நடைபெற்றது. சுமார் ஐம்பது அங்கத்தினர் விஜயம் செய்திருந்தனர். ஒவ்வோர் இலாகாவும் செய்துவந்த வேலைகளைக் குறித்து மந்திரிகள் சுருக்கமான அறிக்கைகள் சமர்ப்பித்தனர். சேனையைப் பற்றிப் பாதுகாப்பு மந்திரியான கதால் புருகா எடுத்துக் கூறினான். எந்த அங்கத்தினரும் மந்திரிகளின் அறிக்கைகளை எதிர்த்து ஒரு வார்த்தைகூடக் கூறாமல், அவற்றை அப்படியே ஏற்றுக்கொண்டனர்.

காலின்ஸ் வரப்போகிற வருஷத்தில் ஏற்படக்கூடிய செல வினத்தைக் குறித்து ஒரு திட்டம் தயாரித்தான். அதுவும், அவனுடைய வரவு செலவு கணக்கும் மிகத் தெளிவாயிருந்தன. அங்கத்தினர்களுக்கு விளக்கவேண்டிய விஷயங்களை எல்லாம், அவன் மனப்பாடமாகவே வைத்திருந்ததுபோல், எடுத்துரைத்தான்.

இக் கூட்டத்தில்தான் காலின்ஸ் முதன்முதல் தாங்களே வருமான வரி வசூலிக்க வேண்டும் என்று ஒரு தீர்மானம் கொண்டுவந்தான். அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய வருமான வரியை டெயில் ஐரானுக்குச் செலுத்தும்படி ஜனங்களுக்கு அறிவிக்கவேண்டும் என்றும், அரசாங்கம் அவர்களைத் தண்டிக்காதபடி டெயிலே அவர்களைப் பாதுகாக்கவேண்டும் என்றும் அவன் எடுத்துரைத்தான். சிலர் ஆட்சேபணைகள் கூறினர். காலின்ஸ், சகல கேள்விகளுக்கும் பொருத்தமாகப் பதில் கூறி, சில தனிப்பட்ட நபர்களையே சர்க்கார் தண்டிக்க முடியும் என்றும், நாடெங்கணும் வரி மறுப்பு நடக்கும்பொழுது அதனால் ஒன்றும்செய்ய இயலாது என்றும் வற்புறுத்தினன்.

டெயில் ஐரானின் உத்தரவுப்படி ஜனங்கள் யாவரும் அரசாங்கத்திற்கு வருமான வரி செலுத்துவதை உடனே நிறுத்திக்கொண்டனர். அயர்லாந்து சுதந்திரமடைந்து சமாதான உடன்படிக்கை ஏற்படும்வரை இவ்வரி மறுக்கப்பட்டது. வரிமறுத்தவர்களில் பலர் ஸின்பீன் இயக்கத்தைச் சேர்ந்தவர்களல்லர். ஆயினும், அவர்களும் மற்றவர்களோடு கலந்துகொண்டனர். ஆனல், வரி மறுத்தவர்கள் யாவரும் டெயிலுக்குத் தாங்கள் செலுத்த வேண்டிய தொகைகளைச் செலுத்தவில்லை; சிலர்தான் செலுத்தினர். சிலர் தேசிய அரசாங்கத்திற்குப் பெருந்

தொகைகளும் கொடுத்தனர். இதனுடன் தேசியக் கடனுக்கும் பெரும் பணம் சேர்ந்தது.

இக்காலத்தில் ஆச்சரியமான ஒரு சம்பவம் நடைபெற்றது. ஆங்கிலத் தளகர்த்தரான பிரிகேடியர் ஜெனரல் லூகாஸ், வேறு இரண்டு அதிகாரிகளுடன் மீன்பிடித்துக்கொண்டிருக்கையில், கார்க் நகரத் தொண்டர் தலைவர் நால்வர் அவரைப் பிடித்துக்கொண்டு போய், யுத்தக் கைதியாகச் சிறைவைத்து விட்டனர். பெரிய தளகர்த்தர் ஒருவர் தொண்டரால் சிறை வைக்கப்பட்டிருக்கிறார் என்ற விஷயம் இங்கிலாந்திலும் அயர்லாந்திலும் மிகுந்த பரபரப்பை உண்டாக்கியது. லூகாஸ் பெர்மாய் நகரில் வேலைபார்த்தவராதலால், அவர் பிடிக்கப்பட்ட மறுநாள் இரவு, 400 சிப்பாய்கள் அந்நகர் வீதிகளில் புகுந்து, முக்கியமான வர்த்தக ஸ்தலங்களை எல்லாம் கொள்ளையடித்துப் பாழாக்கினர். பல்லாயிரம் பவுன் பெறுமதியுள்ள சொத்துக்களைக் கொள்ளையிட்டனர். அச்சிப்பாய்கள் ஆயுதம் தாங்கி யிருக்கவில்லை என்பதை அறிந்து சில தொண்டர்கள் அவர்களை எதிர்த்துத் துரத்தினார்கள். அதே இரவில் லிஸ்மோர் நகரமும் ராணுவத்தால் தாக்கித் தகர்க்கப்பட்டது.

லூகாஸ், ஒரு மாதம் சிறையிலிருந்து, பின்னர் தப்பியோடிவிட்டார். அடைக்கப்பட்ட இடத்திலிருந்து வெளியேறி, ரஸ்தா வழியாக அவர் சென்றுகொண்டிருக்கையில் பட்டாளத்தாருடைய மோட்டார் ஒன்றைச் சந்தித்து, அதில் ஏறிக்கொண்டார். தற்செயலாகச் சில தொண்டர்கள் ஊலா என்ற இடத்திற்குச் சமீபத்தில் அந்த மோட்டாரை மறித்துச் சுட்டனர். அரை மணி நேரமாக அங்கு நடந்த போராட்டத்தில் இரண்டு சிப்பாய்கள் இறந்தனர்;

மூவர் காயமடைந்தனர். அவர்களுக்கு உதவியாக வேறு படைகளும் வந்து சேரவே, தொண்டர்கள் தப்பி ஓடிச் சென்றுர்கள். ஜெனரல் லூகாஸ், தொண்டர்களால் தாம் மிக்க கௌரவத்துடன் நடத்தப்பட்டதாகவும், தாம் சந்தித்த தொண்டர் படை அதிகாரி மிகுந்த கண்ணிய முள்ள கனவான் என்றும் அறிவித்தார். லூகாஸைத் தொண்டர்கள் நடத்திய பான்மையையும், அவர்களை அரசாங்கம் நடத்திய முறையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இரு பக்கத்தாருடைய கண்ணியமும் நன்கு புலப்படும்.

அயர்லாந்தில் கறுப்புக் கபிலர் செய்த கொடுமைகள் வெகு தொலையிலுள்ள இந்தியாவுக்குக்கூட எட்டின. இந்தியாவில் பிரிட்டிஷ் பட்டாளங்களில் இருந்த ஐரிஷ் சிப்பாய்கள் பலர், தங்கள் தாய்நாட்டில் நடந்த கோரங்களைக் கேள்வியுற்று, மனக்கொதிப்படைந்தனர். அவர்களில் 'கான்னுட்டு ரேஞ்சர்கள்' என்ற படையினரில் 350 சிப்பாய்கள் பஞ்சாபில் இருந்தபோது, அயர்லாந்தில் நடந்த கொடுமைகளை ஆட்சேபிப்பதற்காக வேலை செய்ய மறுத்தனர். அவர்களை ஆங்கிலேயர் அடக்கும் பொழுது குழப்பம் ஏற்பட்டது. அதில் அவர்களில் இருவர் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர். பின்னுல், 62 சிப்பாய்கள் ராணுவச் சட்டப்படி கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். முதலில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 14 பேர்களில் 13 பேருக்கு ஜன்ம தண்டனையாக மாற்றப்பட்டது. ஜேம்ஸ் டாலி என்பவன் மட்டும் பீரங்கி வாயில் வைக்கப்பட்டான். இக்கொடுந் தண்டனைகள் எல்லாம் ஆங்கில அதிகாரிகளின் மனத் துணுக்கத்தையே காட்டின.

அயர்லாந்திலுள்ள போலீஸுக்குள்ளும் ஒரு பெருங் குழப்பம் தோன்றியது. அதனால் சர்க்காரும் நடுக்க மடைந்தது. கலனல் ஸ்மித் என்னும் போலீஸ் கமிஷனர் லிஸ்டௌல் படைவீடுகளில் இருந்த போலீஸாருக்கு ஓர் உபதேசம் செய்ய முற்பட்டார். அரசாங்கத்தின் புதிய கொள்கைப்படி கலகக்காரரான ஸின்பீனர்களை அடக்க வேண்டும் என்றும், போலீஸார் அவர்களைக்கண்ட இடத்திலேயே சுடவேண்டும் என்றும் பிரசங்கித்தார். ‘நீங்கள் எவ்வளவு அதிகமாகச் சுடுகிறீர்களோ அவ்வளவு அதிகமாக நாங்கள் உங்களை விரும்புவோம்!’ என்பது அவருடைய திருமொழி.

படைவீடுகளில் இருந்தவர் யாவரும் ஐரிஷ்காரர். அவர்கள் உடனே வெகுண்டெழுந்து கலகம் செய்தனர். கமிஷனர் ஸ்மித் கொலைகாரன் என்று நிந்தித்து, ஐரிஷ் போலீஸ்காரரின் தலைவன் ஒருவன் கண்டித்துப் பேசினான். ஸ்மித் உடனே அவனைக் கைதி செய்யும்படி உத்தரவிட்டார். போலீஸார், ‘முடியாது!’ என்று மறுத்தனர். தாம் மேலும் அங்கு நின்றால் அபாயம் என்று கருதி, ஸ்மித் விரைந்து ஓடிவிட்டார். பின்னர், போலீஸார் வெகு காலத்திற்கு அரசாங்கத்திற்கு அடங்காமலே இருந்தனர். அரசாங்கமும் அவர்களிடம் நெருங்குவதற்கு அஞ்சியது. ஏனெனில், அவர்களை அடக்கினால் மற்ற போலீஸாரிடையிலும் அதிருப்தி உண்டாகிவிடும். அவர்களுடைய ராஜத்துரோகம் கெர்ரி முதலிய இடங்களிலிருந்த படைவீடுகளுக்கும் பரவியது. அரசாங்கம் எதிர்பார்த்தபடி பழைய போலீஸார் ஈவிரக்கமில்லாமல் கொடுமை செய்ய லாயக்கற்றவர்களாய்க் காணப்பட்டனர். எனவே, அது தன் கறுப்புக் கபிலரையே நம்பி வாழவேண்டி யிருந்தது.

லிஸ்டெளல் போலீஸின் கலகத்தைப்பற்றி முதலாவதாக வெளியிட்டது 'ஐரிஷ் புல்லெடின்' என்ற டெயில் ஐராணின் தினசரிப் பத்திரிகையாகும். அதிலிருந்து மற்ற பத்திரிகைகளும் அச்செய்தியை வெளியிட்டன. காமன்ஸ் சபையிலும் அதைப்பற்றிய பிரஸ்தாபம் எழுந்தது. இவ்வாறு ஸ்மித்தினுடைய நடத்தை எங்கும் வெளியானதால், இரண்டு தொண்டர்கள் கார்க் நகரில் அவர் இருந்த இடத்திற்குச் சென்றனர். அவர்களில் ஒருவன் அவர் அருகில் சென்று, மிகுந்த நிதானத்துடன், 'கண்ட இடத்திலேயே சுடவேண்டும் என்பதுதானே உமது உத்தரவு? நீர்தான் இப்பொழுது கண்முன்பு இருக்கிறீர். ஆதலால் தயாராயிரும்!' என்று கூறி, உடனேயே சுட்டுத்தள்ளிவிட்டான்.

புதிதாக வரவழைக்கப்பட்ட ஆங்கில ஒற்றர்கள் டப்ளின் நகர் முழுதும் நிறைந்திருந்தனர். அவர்களுடைய பேச்சிலிருந்தே அவர்கள் ஆங்கிலேயர் என்று கண்டுபிடிப்பது எளிதாக இருந்தது. அவர்களுக்கு ஐரிஷ் மக்களிடையே பழகி விஷயங்களை அறிய முடியாததால், அவர்கள் சந்திகளில் திரியும் பிச்சைக்காரரையும், கேடிகளையும், போக்கிரிகளையும் பிடித்து, கூலி கொடுத்து, அவர்களைக் கொண்டு ஸின்பீனர்களைப் பற்றிப் புலம் விசாரித்து வந்தனர். அந்தத் தரித்திரர்களால் ஒரு வேலையும் செய்ய முடியவில்லை. அவர்கள் தாழ்ந்த நிலையிலிருந்ததால், ஒருவருடனும் நெருங்கிப் பழக முடியவில்லை. சந்தேகிக்கப்பட்ட முக்கியமான நபர்களை அவர்கள் கண்டுவிட்டாலும், ஒற்றர்களிடத்தில் மறைவாகப் போய் அறிவிப்பதற்கு முன்னல் காணப்பட்ட நபர்கள் மறைந்துபோய் விடுவார்கள். மேலும்

அவர்கள் தங்கள் உயிரையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால், ஆங்கில ஒற்றர்கள் மிகுந்த சாமர்த்தியசாலிகளா யிருந்தனர். அளவற்ற பொருட் செலவிலேயே அவர்கள் வரவழைக்கப்பட்டிருக்க வேண்டும். கொலின்ஸின் ஒற்றுக் கேட்கும் முறைகளும் ஸின்பீனர்களிடம் தேச மகாஜனங்கள் கொண்டுள்ள உறுதியான பற்றும் வல்லவர்களான அந்தச் சூரப் புலிகளையும் வேலைசெய்ய முடியாமற் செய்துவிட்டன.

தேசீயப் போராட்டமும் அடக்குமுறைகளும் வலுக்க வலுக்க, காலின்ஸுக்கு வேலை மிகுந்தது. அவனுடைய காரியாலயங்கள் டப்ளின் நகரின் பல பாகங்களிலும் சிதறிக் கிடந்தன. அவைகளுக்குச் சென்று வேலை செய்தது போகப் பாக்கியுள்ள நேரத்தில், அவன் லியாம் டெவ்லின் என்னும் நண்பருடைய இல்லத்தில் தங்கி வந்தான். அங்கு அவனுடைய நண்பர்கள் அடிக்கடி வந்து தங்கிக் கலந்துபேசவும், ஓய்வெடுத்துக் கொள்ளவும், இரவில் உறங்கவும் சில அறைகள் கிடைத்திருந்தன. டெவ்லினும் அவர் மனைவியும் காலின்ஸுக்கும் தொண்டர்களுக்கும் பேருதவி செய்து வந்தனர். ஐரிஷ் சுதந்திர யுத்தத்தில் அவர்களுக்கு அளவற்ற அபிமான முண்டு. முன்னால் காலின்ஸ் தங்கிவந்த வாகான் விடுதி இக்காலத்தில் காலின்ஸ் தங்குவதற்கு ஏற்றதாயில்லை: அங்கு ஒற்றர் தொல்லை அதிகமா யிருந்தது.

தேசிய இயக்க சம்பந்தமான கடிதங்களை ரயில்களில் கொண்டுசெல்லக் காலின்ஸ் செய்த ஏற்பாடுகள் குறிப்பிடத்தக்கவை. பிரயாணிகளைப் பல இடங்களிலும் சோதனையிடுவது வழக்கமா யிருந்தது. ஆ...ல்

கடிதங்களைக் கொண்டுசெல்வதற்கு ரயில் கார்டுகளையும், இதர அதிகாரிகளையுமே காலின்ஸ் கைக்குள் போட்டுக் கொண்டான்.

இதுவரை அரசாங்கம் ஸின்பீன் கோர்ட்டுகளைச் சகித்து வந்தது போய், இப்பொழுது திடீரெனக் கறுப்புக் கபிலர் அவற்றைத் தாக்க ஆரம்பித்தனர். கோர்ட்டுகள் கூடும் இடங்களிலெல்லாம் அவர்கள் சென்று கலைத்தனர்; அவற்றில் கலந்துகொள்பவரைக் கைதி செய்தனர். இத்தனை கஷ்டங்களுக்கு நடுவேயும் அவை ஆங்காங்கே நடந்துவந்தன.

தொண்டர்களுடைய குடியரசுப் போலீஸினுடைய வேலைகளும் தடை செய்யப்பட்டன. அவர்கள் கைதி செய்த குற்றவாளிகள் அரசாங்கப் படைகளால் விடுவிக்கப்பட்டதோடு, தொண்டர்களுக்கு நீண்ட காலச் சிறைத் தண்டனைகளும் விதிக்கப்பட்டுவந்தன.

கறுப்புக் கபிலரும் இதர பட்டாளங்களும் ஜனங்களைப் பழிவாங்குவது சர்வ சாதாரணமா யிருந்தது. நகரங்களும் கிராமங்களும் எரிக்கப்பட்டன. நிரபராதிகள் சுட்டுத் தள்ளப்பட்டனர். ஆனால், ஸர் ஹமார் கிரீன்வுட், ஐரிஷ் ஜனங்களே தங்கள் வீடுகளைக் கொளுத்திக் கொண்டும், தங்கள் ஆட்களைத் தாங்களே சுட்டுக் கொண்டும், அரசாங்கத்தின் மேல் பழி போடுவதாக வியாக்கியானம் செய்தார். சில சமயங்களில் தம் பட்டாளங்கள் கொஞ்சம் கட்டுக்கடங்காது சென்றுவிட்டதாகவும் கூறி அவர் மழுப்பினர். இவ்வுரைகளை நம்புவார் எவரும் அயர்லாந்தில் இல்லை.

பசுமையான மரகதத் தீவான அயர்லாந்தின் அங்கங்கள் கறுப்புக் கபிலரால் கண்டபடி சிதைக்கப்பட்ட

இவ்வேளையிலே, லாயிட் ஜார்ஜ், அயர்லாந்தின் 'பொது ஜனப் பாதுகாப்புக்காகவே' அவர்கள் அங்கு சென்றிருப்பதாக உலகிற்கு அறிவித்தார்! 'இந்தப் பாதுகாப்புப் போதும், போதும்!' என்று அயர்லாந்து கூவியது. தன் இளைஞர்களை நூற்றுக் கணக்கில் பலி கொடுத்தது. ஆனால் பிரிட்டிஷ் பிடி முற்றிலும் தளர்ந்தபாடில்லை. அறப்போகும் பிரி முறுகுவதுபோலும், அணையப் போகும் தீ கொழுந்துவிட்டு எரிவது போலும், அரசாங்கம் தங்கு தடையில்லாத தண்டப் பிரயோகத்தில் இறங்கி வந்தது.

பட்டாளங்களுக்கும் கறுப்புக் கபிலருக்கும் அதிகமான அதிகாரம் கொடுப்பதற்காக ஸர் ஹமார் கிரீன்வுட் காமன்ஸ் சபையில் ஒரு புதிய மசோதாவைக் கொண்டுவந்தார். சுடப்பட்டோ தாக்கப்பட்டோ இறந்தவர்களுடைய பிரேதங்களைக் குறித்து மரண விசாரணை செய்வதையும் நிறுத்திவிட வேண்டும் என்பதே அந்த மசோதாவின் முக்கியாம்சம். இதுவரை எத்தனையோ மரண விசாரணைகளில், விசாரணை சபையார், பல மரணங்கள் போலீஸாராலும் பட்டாளங்களாலும் வேண்டுமென்றே செய்யப்பட்ட கொலைகள் என்று கூறியிருந்தனர். இது சர்க்காருக்குப் பிடிக்கவில்லை. அதனால் தான் புதிய மசோதா அவசரமாக நிறைவேற்றப்பட்டது. பார்லிமெண்டும் அதை அங்கீகரித்துச் சட்டமாக்கிற்று. இதுவரை மரணங்களை ஜனப் பிரதிநிதிகள் விசாரித்தது போக, புதிய சட்டத்தின்படி, கொலைகளைச் செய்தவர்களென்று கருதப்பட்ட பட்டாளத்து அதிகாரிகளே விசாரித்துக்கொள்ள வேண்டும். இம்மசோதாவைக் கொண்டுவந்தவர்களுடைய நோக்கம்

1920-ம் ஆண்டு முடிவதற்குள் ஸின்பீன் இயக்கத்தை நசுக்கி விடவேண்டும் என்பதுதான்.

தேசத்திலிருந்த போலீஸார், நாளுக்கு நாள் வலிமையிழந்து, தங்களையும் தங்கள் படை வீடுகளையுமே காத்துக்கொள்ள முடியாது தவித்தனர். நாட்டுப் புறங்களில் தனித்திருந்த படைவீடுகள் தொண்டர்களால் தாக்கப் பட்டன. கொஞ்சங் கொஞ்சமாகப் போலீஸார் யாவரும் சில நகரங்களில் மட்டும் கூட்டமாகச் சேர்த்து வைக்கப் பட்டனர். பல படைவீடுகள் காலிசெய்யப்பட்டன. தொண்டர்கள் உடனே காலியான படைவீடுகளைத் தீக் கிரையாக்கினர். போலீஸாருடைய பலக் குறைவைப் பற்றி இன்ஸ்பெக்டர்களும் கமிஷனர்களும் மேலதிகாரிக்கு எழுதிய கடிதங்கள் சில காலின்ஸின் கைக்குக் கிடைத்தன. இன்ஸ்பெக்டர் ஒருவர் எழுதிய கடிதம் இது:

'ராஜிநாமாக்களினாலும் விலகிக்கொள்வதனாலும் நாம் ஒவ்வொரு நாளும் ஆட்களை இழந்துகொண்டே வருகிறோம். புது ஆட்கள் சிலரைக்கூடச் சேர்க்கவும் முடியவில்லை...ஸ்டேஷன்களைக் காலிசெய்வது வருந்தத்தக்க விஷயமாயினும், அதைத் தவிர வேறு வழியில்லை...தற்சமயம் நாம் எங்கும் பலஹீனமாயும் காப்பில்லாமலும் அபாய நிலையில் இருக்கிறோம். போலீஸார் தங்கள் எல்லைகளில் ஆதிக்கமில்லாமல் படைவீடுகளில் தங்கியிருப்பதில் ஒரு பயனுமில்லை.'

மேஜர் பீன்னி என்னும் இன்ஸ்பெக்டர் தமது ஆகஸ்டு மாத அந்தரங்க அறிக்கையில் குறிப்பிட்டதாவது:

'தேசத்தின் நிலைமையில் எவ்விதச் சீர்திருத்தமுமில்லை; ஆனால் சீர்குலைவுதான் ஏற்பட்டிருக்கிறது......எல்லா இடங்

களிலும் போலீஸைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற எண்ணமே இருக்கிறது......எங்கணும் போலீஸாரிடம் பகைமை இருப்பதால், தாலுகாவின் பெரும் பாகத்தில் ஒரு போலீஸ் வண்டிகூடச் செல்வது பந்தோபஸ்தில்லை என்று நான் கருதுகிறேன்......ஸின்பீன் கோர்ட்டுகள் நடத்தப்படுகின்றன. ஆனால் இடங்கள் பலவாக இருக்கின்றன. கோர்ட்டு கூடுவதாகக் கருதிப் போலீஸார் ஒரு வீட்டுக்கோ மண்டபத்துக்கோ சென்றால், அங்கு ஒருவரையும் காண முடிகிறதில்லை. அநேகமாகத் தாலுகாவிலுள்ள எல்லா வாலிபர்களும் ஸின்பீனர்களே என்று கூறிவிடலாம். அவர்களில் பெரும் பகுதியினர் ஐரிஷ் தொண்டர்களாக இருக்கிறார்கள். தாலுகா வாசிகளின் வாழ்க்கையையும் வேலைகள் அனைத்தையும் இவ்விரு சங்கத்தார்களுமே தங்கள் ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டிருக்கின்றனர். ராஜவிசுவாசியோ, ராஜத்துரோகியோ—யாராயிருந்தாலும், அவர்களுடைய எண்ணங்களுக்கு எதிராக நடக்க அஞ்சுகிறார்கள்.'

இத்தகைய அறிக்கைகள் அக்காலத்து ஐரிஷ் நிலைமையை உள்ளவாறு படம் பிடித்துக் காட்டுகின்றன. அதிகாரிகளுக்கு ஏற்பட்ட மனக் கலக்கத்தையும் அவை குறிக்கின்றன. இரண்டு மாதங்களில் 556 போலீஸாரும், 313 மாஜிஸ்திரேட்டுகளும் தங்கள் வேலைகளை ராஜிநாமாச் செய்துவிட்டதாக கிரீன்வுட் அறிவித்தார்.

ஆங்கில அதிகாரிகளும் பத்திரிகைகளும் செய்து வந்த பொய்ப் பிரசாரத்தினாலும் ஸின்பீனுக்கு லாபமுண்டாயிற்று. போலீஸாரையோ பட்டாளங்களையோ தாக்கிய தொண்டர்கள் வெகு சிலராக இருந்தாலும், அதிகாரிகள் 200, 300 பேர்கள் கூடித் தாக்கியதாக அறிவித்து வந்தார்கள். ஏனெனில், அவர்களுடைய சேவகர்கள் சில தொண்டர்களாலேயே முறியடிக்கப்பட்டதாக ஒப்

புக்கொள்வது கேவலமா யிருந்தது. ஆங்கிலப் பத்திரிகைகளும் தொண்டர்களுடைய தொகையைப் பெரிய எண்களால் பெருக்கியே வெளியிட்டுவந்தன. இதனால், தொண்டர் 'படை இயற்கையில் தான் அடைந்திருந்த பலத்தைக் காட்டினும் பன்மடங்கு அதிகமாகப் பெற்றிருந்ததாகப் பொது ஜனங்களும் எண்ணினார்கள். தீவிரமான வேலைகளில் ஈடுபடும் பொழுது தொண்டர்களின் எண்ணிக்கை சுமார் முப்பதுக்குமேல் இராது. பல சண்டைகளும் படையெழுச்சிகளும் அதற்கும் குறைந்த தொகையினராலேயே நடத்தப்பட்டன. ஒரு சமயம் **கோகேன்**பர்ராவுக்கு அருகில் ஒரு ராணுவ மோட்டார் லாறி திடீரென்று ஓடாது நின்றுவிட்டது. பன்னிரண்டு தொண்டர்கள் தற்செயலாக அப்பக்கத்திற்கு வந்தனர். அவர்களைக் கண்டதும் ஆயுதம் தாங்கிய சிப்பாய்கள் கைகளை மேலே தூக்கி மன்னிப்பு வேண்டினர். சிப்பாய்களும் ராணுவ அதிகாரிகளும் வைத்திருந்த துப்பாக்கிகளையும் தோட்டாக்களையும் தொண்டர்கள் பிடுங்கிக்கொண்டு அவர்களுடைய மோட்டாருக்கு நெருப்பு வைத்து எரித்தனர். பின்னால் நடந்த ராணுவ விசாரணையில், அன்று சிப்பாய்களுடன் இருந்த **கலனல் மில்ஸ்**, 140, 150 தொண்டர்கள் பலவகைத் துப்பாக்கிகளைத் தாங்கி வந்து தாக்கியதாக வாக்குமூலம் கொடுத்தார். உண்மையில் சென்றவர்கள் 12 தொண்டர்களே; அவர்களில் சிலரிடத்தில் மட்டுமே ரிவால்வர்கள் இருந்தன.

1920, ஜுலை மாத முடிவில் தேசத்தின் வட பாகத்திலுள்ள பெல்பாஸ்ட் போன்ற நகரங்களில் ஆரஞ்சு ஜனங்கள் கத்தோலிக் தொழிலாளர்களைத் தாக்க ஆரம்பித்தனர். கப்பல் கட்டும் தொழிற்சாலைகளின் தொழி

லாளர்களையே முதலில் தாக்கினர். அவர்களுக்குப் பல கொடுமைகள் இழைத்தனர். அவர்கள் பலரைச் சமுத்திரத்தில் பிடித்துத் தள்ளிவிட்டதால், வெகு பிரயாசையுடன் நீந்திக் கரையேற வேண்டியிருந்தது. பல கத்தோலிக்கர் கொல்லப்பட்டனர். வேறு பலர் காயப்படுத்தப்பட்டனர். இக்கொடுமைகள் காரணமாகப் பல்லாயிரம் கத்தோலிக்கர் பெண்டு பிள்ளைகளுடன் தென்பாகத்திலுள்ள டப்ளின் முதலான நகரங்களுக்குக் குடியேறினர். டப்ளினில் வெள்ளம் பொங்கியதுபோல் அவர்கள் கூட்டங் கூட்டமாய்த் திரிவது பரிதாபமான காட்சியாயிருந்தது. கத்தோலிக்கருக்கு இழைத்த கொடுமைகள் பெல்பாஸ்டிலுள்ள அதிகாரிகளுடைய சம்மதத்தின் மேலும் கூட்டுறவினாலுமே செய்யப்பட்டவை.

ஸின்பீனர்கள் பெல்பாஸ்டிலிருந்து வந்த சாமான்களையெல்லாம் பகிஷ்கரிக்கவேண்டும் என்று பிரசாரம் செய்தனர். நாளடைவில் பகிஷ்காரம் வளர்ந்தோங்கி வந்தது. பெல்பாஸ்டு முதலாளிகளும் வர்த்தகர்களும் மற்ற மாகாணங்களை நம்பியே வாழ்ந்தவர்களாதலால் பகிஷ்காரம் அவர்களைப் பெரிதும் பாதித்தது. இதன் பிறகுதான் கலகத்திற்குக் காரணமானவர்கள் தாங்கள் ஆராயாது செய்த பிழைக்கு வருந்தினர். மதவெறியும் துவேஷமும் தாண்டவமாடிய அவ்வேளையில், ஆங்கில அரசாங்கம் ஏராளமான ஆயுதங்களை வரவழைத்து, அல்ஸ்டர் ஜனங்கள் பலருக்குக் கொடுத்து, அவர்களை 'விசேஷப் போலீஸா'ராக நியமித்தது. வெறிகொண்ட ஜனங்களுடைய கையில் ஆயுதங்களையும் கொடுத்துப் படைதிரட்டிய இப்பாதகம், கறுப்புக் கபிலரை நியமித்ததைப் பார்க்கினும் மிகக் கோரமான செயலாகும்.

ஜுலை மாதம் 23-ம் தேதி குறிப்பிடத் தகுந்த ஒரு செய்தி வெளியாயிற்று. சிப்பாய்களையும் ஆயுதங்களையும் ரயில்களில் ஏற்றிச்செல்ல முடியாது என்று கூறிய ஐரிஷ் ரயில்வேக்காரர் 200 பேர் வேலையிலிருந்து நீக்கப் பட்ட விஷயம் வெளியாகி எங்கும் பரபரப்பை உண்டாக் கியது.

கால்வேயிலும் மேற்கு அயர்லாந்திலும் அதிகாரிகள் பயங்கர ஆட்சியைத் தொடங்கினர். அப் பகுதிகளி லுள்ள வாலிபர்களைச் சிப்பாய்கள் இரவு நேரங்களில் அவர்கள் வீடுகளிலிருந்து வெளியே கொண்டு போய், ஆடைகளைக் கழற்றி அடிப்பதும், துன்புறுத்துவதும் சகஜமா யிருந்தன. 24 மணி நேரத்தில் ஜில்லாவை விட்டு வெளியேறும்படி பலருக்கு உத்தரவுகள் போடப் பட்டன. உடனே வெளியேறாதவர்கள் சுடப்பட்டனர். மேற்குப் பகுதியில்தான் கறுப்புக் கபிலருடைய அட்ட காசங்கள் உச்ச ஸ்தானத்தில் இருந்தன. அப்பகுதி சுதந்திரப் போராட்டத்தில் அதிகமாய்க் கலந்து கொள் ளாததாகும்.

கால்வேயிலிருந்த மைக்கேல் கிரிபின் என்ற பாதிரியார் பெரிய தேசாபிமானியாயும், ஐரிஷ் பாஷையை வளர்ப் பதில் ஆர்வங் கொண்டவராயும் இருந்தார். ஒரு நாள் அவரைச் சிப்பாய்கள் பிடித்துக்கொண்டு போயினர். பின்னால் நவம்பர் மாதம் 21-ம் தேதி அவருடைய பிரேதம் ஒரு சதுப்பு நிலத்தில் காணப்பட்டது. அவர் தலையில் குண்டு பாய்ந்திருந்தது. சிப்பாய்களுக்குத் தலைவரா யிருந்த ஜெனரல் குரோஸியர் பிற்காலத்தில் தாம் எழுதிய புத்தகம் ஒன்றில், கிரிபின் பாதிரியார் 'அவருடைய படுக்கையிலிருந்து வெளியே இழுக்கப் பட்டு என்னுடைய ஆட்களாலே கொலை செய்யப்பட்

டார்!' என்று எழுதியிருக்கிறார். கிரிபினைப் போலவே, மாக்னர் என்னும் மதபோதகரும் கார்க் தாலுகாவில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

டெரென்ஸ் மாக்ஸ்வினி மக்கர்டெயின் கொலையுண்ட பிறகு கார்க் நகர மேயர் பதவியை ஏற்றுக்கொண்ட விஷயம் முன்னர் கூறப்பட்டிருக்கிறது. அவரைக் கைதி செய்து ராணுவக் கோர்ட்டில் தண்டனை விதிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்தது கோர்ட்டிலேயே. 'நீங்கள் விதிக்கும் தண்டனைக் காலம் முழுதும் நான் சிறையில் இருக்கப் போவதில்லை!' என்று மாக்ஸ்வினி கர்ஜித்தார். அவர் நாடுகடத்தப்பட்டு, இங்கிலாந்திலுள்ள பிரிக்ஸ்டன் சிறையில் வைக்கப்பட்டார். அங்கு, தம்மை விடுதலை செய்யும்வரை உணவு உண்பதில்லை என்று அவர் விரதம் மேற்கொண்டார். ஒவ்வொரு நாளும் பத்திரிகைகளில் அவருடைய நிலைமையைக் குறித்து வெளிவந்த செய்திகளை ஜனங்கள் ஆவலுடன் படித்து வந்தனர். நாள் செல்லச் செல்ல, அவருடைய உண்ணா விரதம் மக்களிடையே பெருங் கவலையையும் வருத்தத்தையும் விளைவித்தது. மாக்ஸ்வினி குன்றாத வீரத்துடன் பட்டினித் தவத்தைத் தொடர்ந்து மேற்கொண்டிருந்தார். உலகத்தின் பல பாகங்களில் அவருடைய விரதம் ஆச்சரியத்தையும் அநுதாபத்தையும் உண்டாக்கியது. 74-தினங்கள் அன்னாகாரமின்றி, அங்குலம் அங்குலமாக உடலும் உணர்வும் தேய்ந்து, அவர் விண்ணுலகை அடைந்தார். இச்செய்தியைக் கேட்ட ஐரிஷ் மக்கள் இடியுண்ட நாகம்போல் பதைத்தனர். உலக மக்களும் ஓர் பெரும் தேசபக்தரின் உயிரைப் பழி வாங்குவதற்கு ஆங்கில அரசாங்கம் செய்து வந்த

பிடிவாதத்தின் கொடுமையை வெறுத்தனர். விடுதலை வேண்டி உண்ணு விரதம் இருப்பது சரியோ தவறோ என்பது ஒருபுறம் இருக்க, மாக்ஸ்வினியின் ஆத்ம பலி தானம் ஸின்பீன் கட்சிக்கு எங்கணும் மிகுந்த ஆதரவை உண்டாக்கியது. ஆனால், அவர் மரணத்தால், மகாவீரனையும், அறிவாளியாயும், பணி செய்வதையே கடனாகக் கொண்ட தொண்டர் திலகமாயும் விளங்கிய ஒரு குமரனைத் தேசம் இழந்துவிட்டது. ஸின்பீன் இயக்கமும் தன்னைத் தாங்கி நின்ற தூண்களில் ஒன்றை இழந்து விட்டது.

டப்ளினில் ஒற்றர் வெள்ளம் கரை புரண்டு ஓடிற்று. நோக்கிய திசை யெல்லாம் ஆங்கில ஒற்றர்கள் குழுமி நின்றனர். முக்கியமான உளவு அதிகாரிகள் பலர் சாதாரணக் குடி ஜனங்களைப் போல நகரின் பல பாகங்களில் வீடுகள் அமர்த்திக்கொண்டு வாழ்ந்துவந்தனர். உளவறிதலும், தொண்டர்களையும் சந்தேகப்பட்டவர்களையும் எங்கே கண்டாலும் சுட்டுத்தள்ளுவதுமாகிய இருவிதக் கடமைகளை அவர்கள் செய்துவந்தார்கள். அவர்கள் கொலை செய்வதற்கென்றே பல கூட்டங்களாக, அமைக்கப்பட்டிருந்தனர்.

கில்மல்லக் நகரில் மிகவும் பிரசித்தமான ஜான் லிஞ்ச் என்பார், செப்டம்பர்மீ 22-ம்உ, தேசீயக் கடனுக்குச் சேர்ந்த 23,000 பவுனை எடுத்துக்கொண்டு டப்ளினுக்கு வந்தார். அத்தொகையைக் காலின்ஸினிடம் செலுத்திய பிறகு, அவர் ஒரு நாடகசாலையில் கொஞ்ச நேரத்தைக் கழித்துவிட்டு, தம்முடைய ஜாகையான 'எக்ஸ்சேஞ்ச்' விடுதிக்குச் சென்று படுத்துறங்கினார். அன்றிரவு 2-மணிக்கு ஆங்கில அதிகாரிகள் சிலரும்,

போலீஸாரும், சிலர் உடை அணிந்தும் சிலர் அணியா மலும், அவ்விடுதிக்குள் சென்று, லிஞ்ச் இருந்த அறையை அடைந்தனர். அங்கு சிறிது நேரம் இருந்து விட்டு வெளியேறினர். லிஞ்ச் குண்டுபட்டு மடிந்து கட்டிலின் மேல் இரத்த வெள்ளத்தில் மிதந்து கொண் டிருந்தார்!

இப்படுகொலைக்குக் காரணமானவர்களைக் காலின்ஸ் விரைவாகக் கண்டுபிடித்தான். போலீஸாரும் அதிகாரி களுமே இதற்குக் காரணமானவர் என்பதை அறிந்தான். 'லிஞ்சைக் கைதி செய்வதற்குப் போலீஸார் செல்லுகை யில், அவர் எதிர்த்துச் சுட்டதால், அவர்களும் சுட வேண்டி யிருந்தது' என்று அரசாங்கம் முற்றிலும் பொய்யான ஓர் அறிக்கையை வெளியிட்டது. ஆனால் லிஞ்ச் தொண்டருமல்லர், ஆயுதம் எதுவும் வைத்திருப் பதும் வழக்கமில்லை. அவர் படுக்கையில் மடிந்து கிடக் கும் பொழுது மேலே போர்த்தியிருந்த போர்வை அப் படியே இருந்தது. அவருடைய அறையில் வேறு எவ் விதமான குண்டுகளும் சுடப்பட்டதாய்க் காணப்பட வில்லை. எனவே, அரசாங்கக் கூற்று முழுதும் பொய் என்பதை ஜனங்கள் எளிதாகத் தெரிந்துகொண்டனர்.

இக்கொலைக்குக் காரணமாயிருந்த இரு ராணுவ அதிகாரிகள் நவம்பர் 21-ம் தேதி தொண்டர்களிடம் மரண தண்டனை பெற்றனர்.

கொலைக் கூட்டத்தார் டப்ளின் தொண்டர் படை அதிகாரியான கரோல் என்பவனுடைய வீட்டை நள்ளிரவில் சோதனை யிட்டனர். அவன் வீட்டில் இல்லாமையால், அவர்கள் அவனுடைய வயோதிகத் தந்தையைக் கொலை செய்துவிட்டு மறைந்தனர்.

அக் கூட்டத்தார் செய்த கொலைகளில் பல இரகசிய மாய்ச் செய்யப்பட்டதால், வெளிக்குத் தெரியாமலே ஒழிந்தன. ஆனால், அவர்களால் கொலை செய்யப் பட்டவர்களுக்கும் தொண்டர் படைக்கும் எவ்விதச் சம்பந்தமும் இல்லை. நிரபராதிகளே பலியாகி வந்தனர்.

தொண்டர் படை அதிகாரிகளாகிய டாம் ஹேல் ஸூம், ஹார்ட்டியும் பட்டாளத்தாரால் பிடிக்கப்பட்டனர். ஹேல்ஸ் கார்க்கு நகரின் மூன்றாவது தொண்டர் படை யின் தலைவன். ஓய்வொழிவில்லாது தீவிரமாக உழைத்த வர்களில் ஒருவன். அவன் காலின்ஸுக்கு நெருங்கிய நண்பன். பகைவர்களின் கையில் சிக்கியிருந்தபொழுது அவனுக்கும் அவன் தோழனை ஹார்ட்டிக்கும் ஆங்கில ராணுவ அதிகாரிகள் இழைத்த கொடுந் துன்பங்களை யெல்லாம் அவன் காலின்ஸுக்கு இரகசியமாக எழுதி யனுப்பினான். அவர்களுடைய நகங்கள் குறடுகளினால் நசுக்கப்பட்டன. ஹார்ட்டி துன்பங்களைத் தாங்கமாட் டாது பைத்தியம் பிடித்தவனானான். காலின்ஸ் ஹேல்ஸி னுடைய செய்தியைக் கேட்டதிலிருந்து கோபமும் இரக்க மும் கொண்டு தத்தளித்தான். அன்றிரவு முழுவதும் அவனால் உறங்க முடியவில்லை. ஹேல்ஸினுடைய அறிக்கையை அவன் பத்திரிகைகளில் வெளியிடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான்.

ஹேல்ஸும் ஹார்ட்டியும் சித்திரவதை செய்யப் பட்டதைப் போல் வேறு பலரும் துன்புறுத்தப்பட்டனர். ஆங்கில ஒற்றர்கள் கைதிகளிடமிருந்து இரகசியங்களைத் தெரிந்துகொள்வதற்காகக் கொடுந் துன்பங்கள் செய் வது வழக்கமா யிருந்தது. ராணுவ நீதிஸ்தலத்தில் நடந்த ஒரு வழக்கில் கைதியாய் நின்ற தொண்டன்

ஒருவன் டப்ளின் மாளிகையில் தனக்குச் செய்யப்பட்ட சித்திரவதைகளை வருணித்தான். நீதிபதி, பத்திரிகை நிருபர்களுடைய குறிப்புப் புத்தகங்களைப் பிடுங்கிக் கொண்டு, தொண்டன் விவரித்த கொடுமைகளைப் பத்திரிகைகளில் வெளியிட்டால், கடுந் தண்டனைகள் விதிக்கப்படுமென்று பயமுறுத்தினார்!

டப்ளின் மாளிகையில் அதிகாரிகள் கையாண்ட முறைகள் பலதிறப்பட்டவை. கைதியை இருட்டறையில் அடைத்து, வெளியிலிருந்து திடீரென்று அவன் முகத்திற்கு நேரே மின்சார விளக்கை அடித்துக் கேள்வி கேட்பது வழக்கம். கேள்வி கேட்பவன் கைதி தன்னை அறிந்துகொள்ளாதவாறு இருட்டில் நிற்பான். ஏனென்றால், கைதி பின்னால் வெளியே சென்றால், தன்னைத் துன்புறுத்தியவனை அடையாளங் கண்டு பழிவாங்குவான் என்று பயமிருந்தது. கைதியை ஒரு சுவரின் அடியில் நிறுத்தி, அவன் நெற்றிக்கு நேராகத் துப்பாக்கியைப் பிடித்து, ஒன்று முதல் பத்து வரை எண்ணி, ஒவ்வோர் எண்ணுக்கு மிடையே ஒவ்வொரு கேள்வியைக் கேட்பதும் வழக்கம். சில சமயங்களில் அதிகாரிகள் கைதிகளைப் பார்த்து, 'உங்களைக் கறுப்புக் கபிலரிடம் தள்ளிவிடுவோம்!' என்று கூறிப் பயமுறுத்துவார்கள். கைகளை முறுக்குதல், தடியடி, துப்பாக்கிச் சனியனால் குத்துதல் முதலிய முறைகளும் அங்கு சாதாரணமாய் நிகழ்ந்தன. டப்ளின் மாளிகையில் ஆறு வாரம் அடைக்கப்பட்டிருந்த பாட்ரிக் டிரேப்னர் என்னும் தொண்டன் வெளியிட்ட வாக்குமூலம் வருமாறு:

'மொத்தம் நான் 33 தடவைகள் ஆங்கில உளவு அதிகாரிகளால் வினவப்பட்டேன். ஒவ்வொரு தடவையிலும்

என்னிடமிருந்து தகவல் அறிவதற்காக அவ்வதிகாரிகள் என்னை மிகக் கொடுமையாக நடத்தினர்கள். என் கை விரல்களைப் புறங்கையில் ஒட்டும்படியாகப் பின்புறம் மடித்து அழுத்தினர்கள். என் கைகளை முறுக்கினர்கள். பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியை என் கண் முன்னல் நீட்டி என் கண்களை அவிப்பதாகப் பயமுறுத்தினர்கள். காலினல் என்னை உதைத்தார்கள். சுட்டுவிடுவதாகப் பயமுறுத்தினர்கள். பல சமயங்களில், அறைகளுக்குச் செல்லும் வழியில், இருளடர்ந்த ஓரிடத்தில், என்னைக் கடுமையாக அடித்தார்கள். அங்குள்ள வைத்தியர்கள் வந்தவுடன், என் நிலைமைக்கு அத்தாட்சி கூற முடியும். ஒரு சமயம் ஓர் அதிகாரி எனக்கு ஒரு மதபோதகரைப் பார்க்கப் பிரியமா என்று கேட்டார். நான் அதற்கு இசைந்ததும், ஒரு "போதகர்" என்னிடத்திற்கு அனுப்பப்பட்டார். அந்தப் "போதகர்" டப்ளின் மாளிகையின் ஒற்றர்களில் ஒருவன் என்று நான் பின்னர் தெரிந்து கொண்டேன்.'

டெயில் ஐரானின் காரியாலயங்கள் நகரின் பல பாகங்களிலும் சிதறிக் கிடந்ததாலும், பட்டாளத்தார் அடிக்கடி சோதனைகள் செய்ததாலும், அதன் வேலைகள் நடப்பதற்குப் பெருங் கஷ்டமாயிருந்தது. சுமார் 17 வயதுடைய வாலிபர்கள் பலர் காரியாலயங்களின் கடிதங்களையும் தஸ்தவேஜுகளையும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டு செல்வதற்குத் தங்களுடைய சைக்கிள்களை உபயோகித்து வந்தார்கள். இந்தத் தூதர்கள் தெருக்களில் செல்லும் பொழுது எத்தனையோ முறை சோதிக்கப்பட்டிருக்கின்றனர். சோதனைகளுக்குத் தப்பிக் கடிதங்களைக் கொண்டு சென்றது அந்த இளைஞர்களின் சாமர்த்தியத்தையும் வீரத்தையுமே காட்டுகின்றது.

செப்டம்பர்மீ 29-ம் வ தொண்டர்களுக்கும் சிப்பாய்களுக்கும் நடந்த சண்டை ஒன்றில் பாரி என்னும் 18 வயதுடைய இளைஞனைச் சிப்பாய்கள் பிடித்துக் கொண்டனர். அவன், மிகச் சிறுவனாயும் மகா சூரனாயும் இருந்ததோடு, பல அரும் பெருங் காரியங்களைச் செய்தவனாகையால், நாடு முழுதும் அநுதாபம் காட்டப்பட்டது. ராணுவக் கோர்ட்டு அவனுக்கு மரண தண்டனை விதித்தது. காலின்ஸ் அவனை எப்படியாவது விடுவிக்க வேண்டும் என்று முயன்றும் பலிக்கவில்லை. பாரி கொல்லப்படுவதற்கு முதல் நாள், காலின்ஸ் மிகவும் வியாகூலப்பட்டான். அன்று இரவு முழுவதும் அவன் யாரிடத்தும் பேசாது, ‘ஐயோ, பாரி! ஐயோ, பாரி!’ என்று அரற்றிவந்தான். பாரி நவம்பர்மீ முதல் தேதியன்று கொல்லப்பட்டான்.

தேசத்தில் கறுப்புக் கபிலருடைய கொடுமைகள் பெருகிவந்தன. தொண்டர்களுடைய செயல்களுக்காக அவர்கள் பொதுஜனங்களைப் பழிவாங்கினர். பால்பிரிக்கனில் ஒரு போலீஸ்காரன் கொல்லப்பட்டதற்காக, அவர்கள் அந்நகர் முழுவதையும் சூறையாடினர். அங்கிருந்த மதுக்கடைகளில் புகுந்து இருந்த மதுவகைகளையெல்லாம் குடித்துவிட்டு, ஊரெங்கும் தீவைத்துச் சுட ஆரம்பித்தனர். இக்காரியங்கள் எல்லாம் மேலதிகாரிகள் உத்தரவின் மேலேயே நடந்தவை என்று பின்னால் சில சிப்பாய்களே ஒப்புக் கொண்டனர். பால்பிரிக்கனில் செய்த கொடுமைகளைச் சகிக்காது சில கறுப்புக் கபிலர்கூட ராஜிநாமாச் செய்தனராம்.

தொண்டர்கள், கறுப்புக் கபிலருடைய அட்டகாசங்களைச் சிறிது அடக்காவிட்டால், பெரிய அபாய

மாக முடியும் என்பதை அறிந்து, ஆங்காங்கே சில எதிர்ப்புக்களுக்கு ஏற்பாடு செய்தனர். ஸ்காரிப் என்னுமிடத்தில், பொது ஜனங்களைக் கொள்ளையிட்டுத் துன்புறுத்துவதற்காகச் சென்ற கறுப்புக் கபிலர் படை ஒன்றைச் சில தொண்டர்கள் மறித்துச் சுட ஆரம்பித்தனர். கறுப்புக் கபிலர் நிரபராதிகளும் நிராயுதபாணிகளுமான ஜனங்களைத் துன்புறுத்தவே லாயக்கானவர்களாதலால், தொண்டர்களுடைய குண்டுகளுக்கு அஞ்சிச் சிதறி ஓடினர்.

கிரனூர்டு நகரின் பக்கத்தில் இதைப் பார்க்கினும் பெரிய போராட்டம் நடைபெற்றது. டப்ளினிலிருந்து கிரனூர்டு நகரத்தைக் கொள்ளையிடவும் தீவைத்து எரிக்கவும் சென்ற கறுப்புக் கபிலர் சுமார் 100 பேர், தங்கள் இழிதொழிலைச் செய்துவிட்டுத் திரும்பும் பொழுது, பல்லினஸ்லீ என்னும் கிராமத்தில் இருபது தொண்டர்கள் அவர்களை எதிர்த்தனர். ஸீன் மக்கியோன் என்னும் தீரன் தொண்டர்கள் தலைவனாய் நின்று போர்செய்தான். கறுப்புக் கபிலரில் 20 பேருக்கு மேல் மரணமடைந்தனர்; பலர் காயமுற்றனர். பாக்கியுள்ளவர்கள் தங்கள் மோட்டார் லாறிகளில் ஏறிக்கொண்டு மறைந்தனர். அதிகாரிகள், தங்கள் படையின் ஊழல் வெளிக்குத் தெரியாமல் இருப்பதற்காக, இவ்விஷயத்தைப் பிரஸ்தாபிக்காமலே விட்டனர்.

காலின்ஸ், தனது உளவு இலாகாவின் உதவியால், ஜனங்களை வீணாக வதைத்த கொலைக் கூட்டங்களின் தலைவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவந்தான். டப்ளின் தொண்டர்களும், கறுப்புக் கபிலர்களுக்கு அஞ்சாது, பெருஞ் சமர் செய்து

வந்தனர். ஒரு சமயம் டிரம்கொண்டரா பாலத்தில் நின்றுகொண்டிருந்த சிப்பாய்கள் பலரை ஜோ லியனர்டு, சார்லஸ் டால்டன் என்னும் இரு தொண்டர்களே சுட்டு விரட்டினர்.

அக்டோபர்மீ 11-உ இரவு டிரம்கொண்டராவில் கரோலன் என்பவருடைய வீட்டில் சிப்பாய்களுக்கும் இரு தொண்டர்களுக்கும் அரும் போர் நடந்தது. திப்பெரரித் தொண்டர் படைத் தலைவர்களான தான்பிரீனும், ஸீன் டிரீஸியும் அவ்வீட்டில் இளைப்பாறிக் கொண்டிருந்தனர். அவ்விருவரும் ஸோலோ ஹெட்பக்கில் இரு போலீஸாரைக் கொலை செய்த வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள். அவர்களைப் பிடிப்பதற்காகக் காத்துக்கொண்டிருந்த ஒற்றர்கள், அவர்கள் கரோலன் வீட்டில் தங்கியிருப்பதைப் பட்டாளத்தாருக்கு அறிவித்து, அவர்களை அங்கு அழைத்துச் சென்றனர். பட்டாளத்தார், தான்பிரீனையும் டிரீஸியையும் அவர்கள் படுக்கையில் தூங்கும் பொழுதே சுட்டுத் தள்ளவேண்டும் என்று, அவ்வீட்டைச் சூழ்ந்து கொண்டார்கள். ஆனால், அவ்விருவரும் திடீரென்று எழுந்திருந்து, எதிரிகளுடன் போராடத் தொடங்கினர். ஒற்றர்களில் இரண்டு அதிகாரிகள் கொல்லப்பட்டனர். இறந்தவர் இருவரும் பல நாட்களாய்ப் பொதுஜனங்களை வதைத்துக் கொடுமை செய்தவர்கள். வெகுநேரப் போராட்டத்திற்குப் பின்னல், டிரீஸி தப்பியோடினன். தான்பிரீன், மிகவும் காயப்பட்டு, உதிரம் வழியும் உடம்போடு, மிகுந்த சிரமத்துடன் தப்பினன்.

நள்ளிரவில் நாற்புறமும் சூழ்ந்து நின்ற சிப்பாய்களின் கையில் சிக்காது, அவன் வெகுநேரம் அலைந்து திரிந்து, கடைசியில் ஒரு வீட்டை அடைந்தான். அவ்

வீட்டார் ஸின்பீன் கட்சியிடம் அநுதாபம் இல்லாதவ ராயினும், அவனுக்கு வேண்டும் உதவிகளைச் செய்தனர். பின்னர் அவனைத் தொண்டர்கள் மேட்டர் வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றனர்.

கரோலன் வீட்டைச் சூழ்ந்திருந்த சிப்பாய்கள், தாங் கள் தேடிவந்த வீரர்கள் தப்பித்துக்கொண்ட விஷ யத்தை அறிந்து, வெறிகொண்டு, கரோலனை நிறுத்தி வைத்துச் சுட்டனர். அவர் ஒரு பாவமும் அறியாதவர். படுகாயம் அடைந்த போதினும், அவர் உடனே உயிர் துறக்காமல், அன்று நடந்த அட்டூழியங்களை எல்லாம் உலகறிய எடுத்துச் சொல்லிய பின்னர் மடிந்தார்.

தான்பிரீன் வைத்தியசாலையில் படுத்த படுக்கை யாய்க் கிடந்தபொழுது, டிரீஸி டப்ளின் நகரின் பல பாகங் களிலும் அலைந்து, மேல் நடக்கவேண்டிய காரியங்களைக் கவனித்துவந்தான். டப்ளினில் பீடார் கிளான்ஸி என்பவ னுடைய ஜவுளிக் கடையில்தான் தொண்டர்கள் அடிக் கடி கூடிப் பேசுவது வழக்கம். அதை ஒற்றர்கள் கவ னித்து வந்தனர். ஒரு சமயம் டிரீஸி அங்கு புகுந்ததை ஒற்றர்கள் கண்டு அறிவித்ததால், பல சிப்பாய்கள் ஒரு லாறியில் ஏறி அங்கு வந்தனர். டிரீஸி அங்கிருந்து தப்புவதற்காகத் தன் சைக்கிளில் ஏறும்பொழுது, உளவு அதிகாரி ஒருவன் அவன் மேல் பாய்ந்தான். டிரீஸி அவனுடன் போராடி அவனைச் சுட்டான். அதற் குள் லாறியிலிருந்த ஒருவன் டிரீஸியைச் சுட்டு விட்டான். வேறு பலரும் அவனைக் குறிவைத்துச் சுட்டனர். சிப் பாய்களுடைய குண்டுகளால் டிரீஸி உயிர் துறந்தான்; தெருவில் நின்றுகொண்டிருந்த ஜனங்களில் சிலரும்

மடிந்தனர். ஒரு போலீஸ்காரனும் ஒரு பெண்ணும்கூட குண்டினால் இறந்து வீழ்ந்தனர்.

டிரீஸியின் பிரேதம் இனம் கண்டுபிடிப்பதற்காக டப்ளின் மாளிகைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. திப்பெரரியிலிருந்து ஸார்ஜன்டு ரோச் என்பவன் பிரேதத்தை அடையாளம் பார்ப்பதற்காக வந்தான். அவன் அவ்வீரனின் உடலைக் கண்டு அநாவசியமாகவும் ஆபாசமாகவும் பல வசனங்களைக் கூறினான். எதிரி இறந்த பிறகும் அவனுடைய கோபம் தணிந்ததில்லை போலும்! ஸார்ஜன்டு கூறிய வசை மொழிகளைக் கேட்டுக்கொண்டிருந்த ஒற்றன் ஒருவன் அவற்றைக் காலின்ஸுக்கு அறிவித்தான். மறுநாள், அந்த ஸார்ஜன்டு கப்பல் சாமான்கள் இறக்குமிடத்தில் நடந்துகொண்டிருந்த பொழுது சுட்டுக் கொல்லப்பட்டான். இவ்விஷயத்தில் டப்ளின் ஒற்றர்களும் தொண்டர்களுக்கு உதவி செய்தனர்.

ஒரு சமயம், கர்பியூ நேரத்திற்குப் பிறகு, ஜனங்கள் தெருக்களில் நடமாடாமல் சிப்பாய்கள் பாதுகாத்துவரும் வேளையில், ஓர் ஒற்றன் சுட்டுக் கொல்லப்பட்டான். உண்மையில் இக்கொலையைச் செய்து முடித்தவன் காலின்ஸின் நண்பனான ஓர் ஒற்றன்தான். சர்க்காரின் ஒற்றர்கள் சிலர் மூலமாகவே மற்ற ஒற்றர்களையும் அதிகாரிகளையும் சுட்டுக் கொல்வதற்கும் காலின்ஸ் ஏற்பாடு செய்தான் என்பதிலிருந்து சர்க்கார் உளவு இலாகாவின் பலஹீனம் தெரிகின்றது.

நாடெங்கும் நடந்த பயங்கர ஆட்சி ஜனங்களைக் கசக்கிப் பிழிந்தது. அவர்கள் திகைப்பும் வியப்புங் கொண்டு, எதை இழந்தும்;எவ்வகையாலும், கொடுங்கோலிலிருந்து

தப்புவதற்குத் துணிந்து நின்றனர். காலின்ஸின் தோழன் மக்கீ 'பறக்கும் தொண்டர் படை' பலவற்றை நிறுவினன். அவைகள் பல இடங்களுக்குஞ் சென்று கொடுமை செய்யும் அதிகாரிகளைத் தண்டித்து வந்தன. தொண்டர்கள் எழுச்சித் தீயை மூட்டி வந்தனர். கறுப்புக் கபிலரும் அதிகாரிகளும் அதற்கு எண்ணெய் ஊற்றி வந்தனர்.

12

பழிக்குப் பழி

ஆங்கில அரசாங்கம், தன்னை மூச்சுத் திணறும்படி செய்துவந்த தொண்டர் படையின் முதுகெலும்பாக விளங்கியவன் காலின்ஸ் என்பதை, 1920-ம் வருஷ ஆரம்பம் முதலே அறிந்திருந்தது. எனவே, ஆங்கில ஒற்றர்களும் சிப்பாய்களும் அவனைப் பிடிக்கவோ கொல்லவோ வேண்டும் என்பதிலேயே கண்ணுங் கருத்துமா யிருந்தனர். காலின்ஸின் உருவம் அவர்களுக்கு நன்முய்த் தெரியாது. அவனை அறிந்திருந்த பழைய போலீஸ் ஒற்றரிற் பலர் வேலையை விட்டு நீங்கியும், இறந்தும் மறைந்து விட்டனர். சிலர் தங்கள் உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தெருக்களில் வெளியேருமல் மறைந்து வாழ்ந்தனர். காலின்ஸ் பல சமயங்களில் தெருக்களில் வைத்தே சிப்பாய்களால் பிடிக்கப்பட்டான். அவர்களைப் பார்த்து அவன் புன்னகை செய்ததும், அவர்களும்

சிரித்துக்கொண்டே, 'நீ நல்ல பேர்வழியாய்க் காண்கின்ருய்!' என்று சொல்லி, விட்டுவிடுவது வழக்கம்.

தன்னைப் பிடிப்பதற்காக இங்கிலாந்திலிருந்து எத்தகைய மனிதர்கள் அனுப்பப்படுகிருர்கள் என்பதைக் காலின்ஸ் நன்ருய்த் தெரிந்துகொண்டிருந்தான். அவர்களில் முக்கியமானவன் ஒருவன். அவனுக்கு ஹார்ட்டி, கூடிங், ஹார்லிங், ஸவில்லி என நான்கு பெயர்கள் உண்டு. எத்தனையோ கள்ளக் கையெழுத்திட்டு மோசடிகள் செய்து அவன் பன்முறை சிறை சென்றவன். ஆகஸ்டு மாதம் 12-ந் தேதி அவன், தான் அயர்லாந்தில் ஒற்றுக வேலை செய்வதாயும், ஸின்பீனர்கள் ஆயுதங்கள் வைத்திருந்த இடங்கள் தனக்குத் தெரியும் என்றும் லார்டு பிரெஞ்சுக்கு ஒரு கடிதம் எழுதினுன். கடிதத்தில் கூடிங் என்று கையொப்ப மிட்டிருந்தான். இப் பெயரால் தான் அவன் 1918-ல் 3-ஞு சிறைத் தண்டனை அடைந்திருந்தான். அத்திருடன், சட்டத்தையும் அமைதியையும் பாதுகாக்க, அயர்லாந்துக்கு வரவழைக்கப்பட்டான்! லார்டு பிரெஞ்சும் அவனை வேலைக்கு அமர்த்திக் கொண்டார்!

அவன் அயர்லாந்துக்கு வந்தது முதல், காலின்ஸ் அவனை மிகவும் எச்சரிக்கையாய்க் கவனித்து வந்தான். அவன் லார்டு பிரெஞ்சுக்கு எழுதிய கடிதங்களை யெல்லாம் காலின்ஸ் வழி மறித்து உடைத்துப் பார்த்தான். அவ்வாறு உடைக்கப்பட்டவற்றில் கூடிங் அதுவரை செய்த மோசடிகள் எல்லாம் எழுதப்பட்டிருந்தன. அம் மோசடிகள் பெல்பாஸ்டில் ஜஸ்டிஸ் கார்டன் என்ற நீதிபதி முன்னுல் ஒப்புக் கொள்ளப்பட்டவை. பதினுன்கு இடங்களில் கள்ள உண்டியல்களினுலும், போலி விளம்பரங்

களினாலும், திருட்டினாலும் ஏராளமான பணம் பறித்த தாக அவனே ஒப்புக்கொண் டிருந்தான். அக்குற்றங் களை யெல்லாம் அரசாங்கம் மன்னித்து, அவனை ஒற்ற னாகவும் வைத்துக்கொண் டிருந்தது.

கூடிங்குக்கு மரண தண்டனை விதித்து விடாமல், தக்க எச்சரிக்கை மட்டும் செய்யவேண்டும் என்று காலின்ஸ் தீர்மானித்தான். அவன் சில நபர்களை அனுப்பி, கூடிங்கைக் கண்டு பேசும்படி செய்தான். அவர்களிடம் கூடிங் தான் ஆங்கில அதிகாரிகளைக் காட் டிக் கொடுக்கத் தயாரா யிருப்பதாகக் கூறினான். அவர் கள் அவனைத் தொண்டர் படையின் முக்கியமான கூட் டத்திற்கு அழைத்துச் செல்வதாக வாக்களித்து, ஒரு குறிப்பிட்ட நாளில் அழைத்துக் கொண்டு வந்தனர். கூடிங் அழைத்துவரப்பட்ட இடத்தில் அயர்லாந்து இங்கிலாந்து முதலிய பல நாட்டுப் பத்திரிகைக்காரர்கள் கூடியிருந்தனர். ஆர்தர் கிரிபித் அவர்களுக்குத் தலைமை வகித்திருந்தார். அக்கூட்டத்தில் இருந்தவர்கள் எவர் கள் என்பதை அறியாது, கூடிங் தான் யோசித்துள்ள சில திட்டங்களை விவரித்தான். அத்திட்டங்களின்படி காலின்ஸைப் பிடிக்கவேண்டும் என்பதே அவன் தீய எண்ணம். எல்லோரும் வெகு நேரம் அமைதியுடன் கேட்டுக்கொண் டிருந்தனர். முடிவில் கிரிபித் அவனுக்கு அங்குள்ளவர்களைப் பற்றி எடுத்துச் சொன்னார். அவன் அதுவரை செய்துள்ள குற்றங்களையும், அடைந்த தண் டனைகளையும் அவர் விவரித்துக் கூறினார். அவற்றைக் கேட்டவுடன், கூடிங் இடியுண்ட நாகம்போல் தளர்ந்து வீழ்ந்தான். ஒருவருக்கும் தெரியாது என்று அவன் கருதிய விஷயங்கள் எப்படியோ வெளியாகி யிருந்தன!

கிரிபித் அவனைப் பார்த்து, மேற்கொண்டு அயர்லாந்தில் தங்குவது அவனுக்கு ஆபத்து என்று கூறி, உடனே நாட்டைவிட்டு ஓடும்படி உத்தரவிட்டார். அதன்படியே அவன் விரைவாக மறைந்து விட்டான். இந்த நாடகக் காட்சி முழுதும் காலின்ஸ் செய்த ஏற்பாடாகும்.

காலின்ஸின் உளவு அதிகாரிகள் கண்டுபிடித்த ஆங்கில ஒற்றர்களில் மக்மஹன் என்பவன் ஒருவன. அவன் டப்ளின் நகரில் மௌன்ட் தெருவில் வசித்து வந்தான். அவனுடைய உண்மையான பெயர் ஆங்கிலிஸ். அவன் ஐரிஷ்காரனைப்போலப் பாவனை செய்துகொண்டு, உளவறிந்து வந்தான். முன்னால் 'எக்ஸ்சேஞ்ச்' விடுதியில் ஜான் லிஞ்சைக் கொலை செய்தவர்களுள் அவனும் ஒருவன். அந்தக் கொலைக்குப் பின்னால், அவன் அதற்காக மனம் வருந்தித் தன் துக்கத்தை மாற்றுவதற்காக ஓயாது குடித்து வந்தான். ஒரு சமயம் குடி வெறியில் அவன் ஒரு பெண்ணிடம் தான் செய்த கொலையை ஒப்புக்கொண்டான். அப்பெண் இந்த ரகசியத்தை வெளியிட்டுவிட்டாள். காலின்ஸ் விஷயமறிந்து, தன் ஆசாமிகள் சிலரை ஆங்கிலிஸ்ஸிடம் சம்பந்தம் வைத்துக்கொள்ளும்படி அனுப்பினான். அவன் மூலம் டப்ளினிலிருந்த முக்கியமான அரசாங்க ஒற்றர்களின் விலாசங்கள் பலவற்றையும் அவன் தெரிந்து கொண்டான். அந்த ஒற்றர்கள் யாவரையும் ஒரே நாளில் சுடவேண்டும் என்று தொண்டர் படைத் தலைமைக் காரியாலயத்தார் தீர்மானித்தனர்.

நவம்பர்மீ, 21-ம் வ ஞாயிற்றுக்கிழமை காலையில் முக்கியமான ஒற்றர்கள் வசிக்கும் வீடுகளையும் விடுதிகளையும் தாக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்

பட்டன். டிக் மக்கீயும், பீடார் கிளான்ஸியும் தலைவர்களா யிருந்து கவனித்து வந்தனர். காலின்ஸ் ஒற்றர்களுடைய விவரங்கள் யாவற்றையும் அவர்களுக்கு அறிவித் தான்.

குறித்த நாளுக்கு ஒரு வாரத்திற்கு முன்னால், ஆங்கில ஒற்றர்கள் வாகான் விடுதியைச் சோதனையிட்டனர். அன்று டோபின், கல்லென் என்னும் இரு தொண்டர்கள் அங்கு தங்கியிருந்தனர். ஒற்றர்கள் அவர்களைக் கண்டு சந்தேகித்து வினவினார்கள். அவர்கள் தங்கள் பெயர்களை மாற்றிக் கூறிச் சாதாரண மனிதர்களைப் போலவே நின்றனர். ஒற்றர்கள் அவ்விருவர்களையும் சுட்டுக் கொல்வதற்கே சென்றனர். ஆனால் ஆசாமிகளை நிச்சயமாய்த் தெரியாமையாலும், அவர்களைக் கைதி செய்து கொண்டுபோனால் பின்னால் சுட்டுத்தள்ள முடியாமற் போகும் என்பதனாலும், அவர்கள் அவ்விருவரையும் விட்டுச் சென்றனர். மூன்று தினங்கள் கழிந்து, மீண்டும் ஒற்றர்கள் அங்கு சோதனையிட்டனர். அங்கு உறங்கிக்கொண்டிருந்த டோபினும் கல்லெனும், தங்கள் படுக்கைகளிலிருந்து எழுந்து, ஒரு ஜன்னலின் வழியாய்த் தப்பியோடி, விடுதியின் பின்புறத்தில் பதுங்கிக்கொண்டனர். ஒற்றர்கள் வந்த வழியே திரும்பினர். 21-ம் உ இவர்களுக்கும் முடிவு வந்தது.

20-ம் உ இரவு வாகான் விடுதியில் வழக்கம்போல் தொண்டர் படை அதிகாரிகள் கூடி யோசித்தனர். மறுநாள் நடக்கப்போகும் சம்பவங்களால் என்னென்ன நேரும் என்பதைப்பற்றி அவரவர் அபிப்பிராயத்தைக் கூறினர். பின்னர் சிலர் அங்கிருந்து வெளியேறினர். முதலாவதாக வெளியே சென்றவர்களில் டிக் மக்கீ ஒரு

வன். காலின்ஸ் கடைசியாகவே சென்றான். அவன் வெளியேறும்பொழுதே கறுப்புக் கபிலர் அதிவேகமாக வாகான் விடுதியை நோக்கி லாறிகளில் வந்துகொண்டிருந்தனர். அவன், மின்னல் பாய்வதுபோல், பார்னல் சதுக்கத்திலுள்ள ஒரு வீட்டுக்குள் புகுந்துவிட்டான். அவ்வீட்டின் மாடியிலிருந்துகொண்டு, அவன் பட்டாளத்தாரின் திருவிளையாடல்களைக் கவனித்தான்.

விடுதியில் ஒகானல், பீஸ்லேய் என்னும் இருவர் குளூன் என்னும் ஒரு சிறுவனிடம் பேசிக்கொண்டிருந்தனர். பட்டாளத்தார் காலின்ஸும் அவன் தோழர்களும் அங்கிருந்ததாகத் தகவல் கிடைத்தே விரைந்து வந்திருந்தனர். அவர்கள் விடுதியில் சாப்பிட்டுக்கொண் டிருந்தவர்களையும் மற்றவர்களையும் பல கேள்விகள் கேட்டனர். அங்கு நேர்ந்த குழப்பத்தின் நடுவே, பீஸ்லேய் பின்வாசல் வழியாகத் தப்பினான். பின்பக்கம் தோட்டத்திற்கு வெளியே போக வழியில்லாததால், அவன் ஒரு சுவரில் ஏறி, அடுத்த வீட்டுத் தோட்டத்தில் குதித்து மறைந்துகொண்டான். ஸீன் ஒகானலும் பல சுவர்களைத் தாண்டி வெளியே செல்லுகையில், அங்கு நிறுத்தப்பட்டிருந்த பட்டாளத்தார் அவனைப் பிடித்துக்கொண்டனர். அவன் எதிர்ப்புறத்தில் ஒரு முடுக்கிலே தன் வீடு இருப்பதாயும், தான் அங்கு செல்வதற்காகவே வந்ததாயும், சமயோசிதம் போல் கூறினான். பட்டாளத்தாரும் அவனை நம்பி விட்டு விட்டனர்.

குளூன் என்னும் சிறுவன் மட்டும் விடுதியில் சிப்பாய்கள் கையில் சிக்கினான். அவர்கள் அவனை டப்ளின் மாளிகைக்குக் கொண்டு சென்றனர். குளூன் பின்னால் மீளவேயில்லை; அவர்கள் குண்டுக்கு இரையானான்.

அவன் நாட்டுப் பக்கத்திலிருந்து வேலையின் நிமித்தமாய் வந்தவன். மறுநாள் நடக்கவிருந்த விஷயங்களைக் குறித்து அவன் ஒன்றுமே அறியான்.

டிக் மக்கீயும், பீடார் கிளான்ஸியும் வாகான் விடுதியிலிருந்து தப்பிய பின்னர், அன்று இரவே வேறொரு தெருவில் கைதி செய்யப்பட்டனர்.

நவம்பர் மாதம் 21-ந் தேதி, தொண்டர்கள் படைகளாகப் பிரிந்து சென்று, டப்ளினிலுள்ள பல வீடுகளைச் சோதனை செய்து, பதினைன்கு ஆங்கில அதிகாரிகளைக் கொன்றனர். ஆங்கிலிஸ் மௌண்ட் தெருவில் சுட்டுக் கொல்லப்பட்டான். அங்கு வேறோர் ஒற்றனைச் சுட முயற்சித்த பொழுது தொண்டர்களைக் கறுப்புக் கபிலர் சூழ்ந்துகொண்டனர். இரு திறத்தாருக்கும் போராட்டம் நடைபெற்றது.

பதினைன்கு அதிகாரிகள் கூட்டமாகக் கொல்லப்பட்டதற்காகக் கறுப்புக் கபிலர் பழி வாங்க முற்பட்டனர். யாரைப் பழி வாங்குவது? ஒரு பாவமும் அறியாத பொது ஜனங்களைத் தவிர, வேறு யார் அவர்கள் கையில் சிக்குவர்? அன்று மாலை குரோக் தோட்டத்தில் ஒரு பந்து விளையாட்டைப் பார்ப்பதற்காக ஆணும், பெண்ணும், குழந்தையுமாகப் பெருங் கூட்டம் கூடியிருந்தது. கறுப்புக் கபிலர் அங்கு சென்று, நிரபராதிகளான ஜனங்களில் பதினைன்கு பேரைச் சுட்டுக் கொன்றனர்; சுமார் அறுபது பேருக்குக் காயம் விளைத்தனர். பிறகு, அங்கு கூடியிருந்தவர்களையெல்லாம் சோதனையிட்டனர். குரோக் தோட்டத்தில் பட்டாளத்தார் அநியாயமாய்ச் சுட்டது சம்பந்தமாகப் பின்னால் அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையில், கூட்டத்திலுள்ளவர்கள் சுட்டதாலேயே பட்டா

ளத்தாரும் தற்காப்புக்காகச் சுடநேர்ந்தது என்றும், 21-ம் தேதி 14 அதிகாரிகளை வதைத்தவர்கள் நாட்டுப் புறத்திலுள்ள தொண்டர்கள் என்றும், அவர்கள் பந்து விளையாட்டுக்கு வருவதாகப் பாவனை செய்துகொண்டு அக் கொலைகளைச் செய்தனர் என்றும், அவர்களைத் தேடிப் பிடிக்கவே பட்டாளத்தார் தோட்டத்திற்கு அனுப்பப்பட்டனர் என்றும் பொய் கூறிற்று. இம்மாதிரி அறிக்கைகள், பொய்யே விளை நிலமாக, பொய்யே வித்தாக விளைவித்து எடுக்கப்பட்ட பொய்க் கதிர்கள் என்பதைப் பொது ஜனங்கள் அறிவார்கள். அதிகாரிகளை வதைத்ததும், நகரத்தைச் சோதனை யிட்டதும்-எல்லாம் டப்ளின் தொண்டர் படையின் வேலைகள். நாட்டுப்புறத்துத் தொண்டர்கள் தலைநகரத்தில் புகுந்து குறிப்பிட்ட இடங்களையும் நபர்களையும் கண்டுபிடிக்கவே திறமையற்றிருந்தார்கள்.

கைதியான மக்கீ, கிளான்ஸி, குளூன் ஆகியவர்களைச் சுவரடியில் நிறுத்தி வைத்துப் பட்டாளத்தார் சுட்டு விட்டனர். மக்கீ, கிளான்ஸி இருவருடைய பிரேதங்களையும் அவர்களுடைய பந்துக்கள் எடுத்துக் கொண்டு வந்த பொழுது, அவைகளின்மேல் துப்பாக்கிச் சனியனால் குத்தப்பட்ட பல காயங்கள் இருந்தன. அவற்றிலிருந்து அவர்கள் கொல்லப்படுவதற்கு முன்னால் பல சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர் என்பது புலனாயிற்று. மக்கீயின் மார்பெலும்புகளில் சில உடைந்திருந்தன. அதிகாரிகள் வேண்டுமென்றே இக்கொலைகளைச் செய்துவிட்டு, 'அவர்கள் தப்பியோட முயன்ற பொழுது கொல்லப்பட்டனர்' என்று அறிக்கை வெளியிட்டனர். அவர்கள் தப்பியோட முயன்ற முறைகளையும்,

எவ்வாறு பிடிக்கப்பட்டனர் என்பதையும் பற்றி அதிகாரிகள் பல கதைகள் கற்பித்தனர். மக்கீ, கிளான்ஸி இருவரும் மரணமடைந்தது சுதந்திர யுத்தத்தில் தொண்டர் படைக்கு ஏற்பட்ட நஷ்டங்களிலெல்லாம் முக்கியமானது. மக்கீ காலின்ஸின் வலது கை. காலின்ஸ் அவ் வீரர்களுடைய அந்திமக் கிரியைகளுக்குக் கூட இருந்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். அச்சமயத்தில் அவன் வெளியேறுவதில் எவ்வளவு அபாயம் இருந்தது என்பதை அவன் பொருட்படுத்தவே யில்லை. பிரேதங்கள் அடக்கஞ் செய்யப்படுவதற்கு முன்னல் தக்க வைத்தியர்கள் அவற்றைப் பரிசோதித்து அறிக்கை வெளியிடவும் அவன் ஏற்பாடு செய்தான்.

பட்டாளத்தாருடைய பழிவாங்கும் மனோபாவத்தைக் காட்டுவதற்கு மற்றொரு சம்பவத்தையும் இங்கு கூறுவோம். 21-ம் தேதிக்கு இரண்டு தினங்களுக்குப் பின், ஒரு பட்டாளத்தான் லிங்கன் பிளேஸில் நின்று கொண்டு பல ஜனங்களைச் சோதனை யிட்டான். பின்னல் அவன் அவர்களைப் போகும்படி சொல்லிவிட்டு, அவர்கள் சில அடிகள் பெயர்ந்ததும், துப்பாக்கியை நீட்டிச் சுட்டான். அதனல் ஓர் இளைஞன் மடிந்து வீழ்ந்தான். ராணுவத்தாரின் மரண விசாரணையில், தொண்டர்கள் அங்கு பயிற்சி செய்துகொண்டிருந்ததாயும், அதனல் தான் சுட்டதாயும் அவன் அறிவித்தான். தொண்டர்கள் இருந்திருந்தால் தனியாய் நின்று சுட்ட சிப்பாயை விட்டிருப்பார்களா?

நவம்பர் 21-ம் தேதி நடந்த சம்பவம் பிரதம மந்திரி லாயிட் ஜார்ஜின் கண்களைத் திறந்தது. எவ்வகையாலும் அயர்லாந்தை நசுக்கிப் பெட்டிப் பாம்பு

போல் அடக்கி விடுவதாக அவரிடம் உறுதி கூறிய ராணுவ அதிகாரிகளின் எண்ணம் நிச்சயமாய்ப் பலிக்காது என்பது அதனால் புலனாயிற்று. மிகப் பயங்கரமான ஆட்சிக்குப் பின்னும் தொண்டர் படை உடையவில்லை. அதற்கு மாறாக, அது வல்லரசின் அதிகாரிகள் பலரை ஏககாலத்தில் குறிவைத்துப் பிடித்து விழுங்கிவிட்டது. லாயிட் ஜார்ஜ் தேர்ந்த ராஜதந்திரி யாதலால், அயர்லாந்துடன் சமாதானத்துக்கு வழி இருக்கிறதா என்று மெதுவாகக் கவனித்து வரலானார்.

ஆனால், டப்ளினிலிருந்த அதிகாரிகள் தங்கள் பயங்கர முறைகளை அதிகப்படுத்தினர். இரவு 10-மணியிலிருந்தே கர்பியூ உத்தரவு போடப்பட்டது. கூட்டங் கூட்டமாகப் பலரைக் கைதி செய்ய உத்தரவுகள் பறந்தன. ஸின்பீன் கைதிகளை அடைத்து வைக்க வடக்கே பல்லிகின்லரிலும், குர்ராக்கிலும் தாற்காலிகச் சிறைச்சாலைகள் அமைக்கப்பட்டன. டப்ளினிலும் சுற்றுப் பக்கங்களிலும், தெருத் தெருவாக, வீடு வீடாகச் சோதனைகள் செய்யப்பட்டன. சந்தேகிக்கப்பட்ட ஒவ்வொரு நபரையும் கைதி செய்து புதிய சிறை ஒன்றுக்கு அனுப்பி வைப்பது சகஜமாயிற்று. இத்தனை தடபுடல்களிடையே, போராடக்கூடிய திறமையுள்ள தொண்டர்கள் யாவரும் தப்பித்துக்கொண்டது ஆச்சரியமாகும். அவர்கள் சொந்த வீடுகளில் தங்காது வெளியிடங்களிலே எச்சரிக்கையுடன் சஞ்சரித்து வந்தனர். ஒவ்வொரு நாளும் தெருக்களிலும், வீடுகளிலும் சோதனைகள் நடந்தவண்ணமாயிருந்தன. ஆயினும், இவையெல்லாம் தொண்டர்களைப் பெரிதும் பாதிக்க முடியவில்லை.

ஆர்தர் கிரிபித், டுக்கன், மக்நீல், ஸ்டெயின்ஸ் முதலியோர் கைதி செய்யப்பட்டு, மௌன்ட்ஜாய் சிறையின் வைத்திய சாலையில் அடைக்கப்பட்டனர். அவர்கள் மரியாதையாக நடத்தப்பட்டதுடன், அவர்களுக்கு விசேஷ உரிமைகளும் அளிக்கப்பட்டன. காலின்ஸ் சிறைக்குள் இருந்த கிரிபித்துடன் இடைவிடாது கடிதப் போக்குவரத்து வைத்துக்கொண்டிருந்தான். பல வார்டர்கள் இவ்விஷயத்தில் அவனுக்கு உதவி புரிந்தனர்.

தொண்டர் படையின் வேலைகளுக்காக இதுவரை உபயோகித்த பார்னல் சதுக்கத்திலுள்ள வீடுகள் பல அதிகாரிகளால் அடிக்கடி சோதனை செய்யப்பட்டதால், அவற்றில் வேலைசெய்ய வழியில்லை. வாகான் விடுதியும் அவர்கள் கவனத்தில் விழுந்தது. அவர்கள் காலின்ஸைத் தேடி அதை அடிக்கடி சோதித்தனர். காலின்ஸ், மிக அவசியமான வேலை யிருந்தால், அவர்கள் தேடிய பின்னரும, மீண்டும் வருவதற்கு முன்னலும், அங்கு சென்றுவந்தான். சில சமயங்களில் அவன் அங்கு செல்லும்பொழுது சோதனை முடிந்திருக்கும். சில சமயங்களில் அவன் அங்கிருந்து வெளியேறியவுடன் சோதனை நடைபெறும். வாகான் விடுதியின் சொந்தக்காரர் மகயர் என்பவர். அவர் காலின்ஸைப் பிடித்துக் கொடுத்தால் 40,000 பவுன் பரிசளிப்பதாக அரசாங்கம் வாக்களித்தது. பணத்தை விரும்பி, அயர்லாந்தின் தவப் புதல்வனை—அடிமைத்தனத்தை வேரோடு பொசுக்கும் அனலை—தொண்டர் திலகத்தை—அவர் காட்டிக்கொடுக்க மறுத்தார். அதிகாரிகள் வாகான் விடுதியில் பூட்ஸ் துடைக்கும் வேலைக்காரனை ஹார்ட்டி என்பவனைக் கைதி செய்தனர். அவனை டப்ளின் மாளிகையில் ஓர்

இருட்டறையில் அடைத்துச் சில நாட்களாக விசாரித்து வந்தனர். கேள்வி கேட்பவர் முகத்தை மூடிக்கொண்டும், ஹார்ட்டியின் முகத்தில் வெளிச்சத்தை அடித்துக்கொண்டும் நிற்பது வழக்கம். ஹார்ட்டியிட மிருந்து காலின்ஸைப் பற்றிய விவரங்களைக் கறப்பதற்கு எத்தனையோ தந்திரங்களைக் கையாண்டனர். ஒன்றும் பலிக்கவில்லை. முடிவில் அதிகாரிகள், 'காலின்ஸ் உன் விடுதிக்கு வந்தவுடன் நீ, "மிஸ்டர்—வந்திருக்கிறார்!" என்று டெலிபோனில் சொல்லுவாயானால், உன்னை இப்பொழுது விட்டுவிடுகிறோம்' என்று கூறினர். ஹார்ட்டி அதற்கு இசைவதுபோல் பாசாங்கு செய்தான். பின் அவன் விடுதலை யடைந்து, காலின்ஸைக் கண்டு நடந்ததை யெல்லாம் விவரமாகக் கூறினான். காலின்ஸ் அவன் விருத்தாந்தத்தைக் கேட்டுக் குலுங்கக் குலுங்க நகைத்தான்.

அயர்லாந்தின் விடுதலைப் போர், ஒரு காலின்ஸ், ஒரு கிரிபித், ஒரு டிவேலராவால் மட்டும் நடத்தப்பட்டதன்று. சில ஆயிரம் தொண்டர்களால் மட்டும் நடத்தப்பட்டதன்று. அவர்கள் எல்லோரும் போர்க்களத்தின் முகப்பிலே நின்றது உண்மைதான். மரணத்தை அவர்கள் துச்சமாக எண்ணி மிருத்யுவின் அரங்கத்தில் மகிழ்ச்சியுடன் நடனமாடியதும் உண்மைதான். ஆனால், தங்கள் தேசத்தினருடைய பூரண ஆதரவும், பெருந் தியாகமும் இல்லாதிருந்தால், அவர்கள் ஆழங்காணாத அந்தகாரத்தில் வீழ்ந்து மறைந்திருப்பார்கள். பணத்தை விரும்பி, பட்டாளத்திற்கு அஞ்சி, ஜனங்களில் எவரேனும் துரோகத்தில் இறங்கியிருந்தால், விடுதலைப் போர் விழலாகியிருக்கும். காலின்ஸையும், தொண்டர்களில்

முக்கியமானவர்களையும் அந்நிய அரசாங்கத்துக்குக் காட்டிக் கொடுப்பவருக்கு எத்தனை ஆயிரம் பவுன்கள் பரிசு கிடைக்கும்!' அந்தத் திரவியம் தீவினையால்வருவது, தீண்டத் தகாதது, தேசபக்தர்கள் பல்லாயிரவரின் உதிரம் தோய்ந்தது!' என்று ஐரிஷ் மக்கள் அதை உதறித் தள்ளினர். உண்மையில் மற்றைப் போர் வீரரின் உதவியைப் போலவே, காட்டிக்கொடுக்க மறுத்த மகயர், ஹார்ட்டி முதலியோர் உதவியும் அபார மானது. பூட்ஸு துடைக்கும் ஹார்ட்டிக்கும் ஆயிரக் கணக்கான பவுன் துச்சமாகத் தோன்றிவிட்டது!

அக்காலத்தில் காலின்ஸ் பார்னல் தெருவில் லியாம் டெல்வினுடைய வீட்டு மாடியையும், கிர்வானுடைய மதுக் கடையையும் தன் வேலைகளுக்கு உபயோகித்துக்கொண்டு வந்தான். கிர்வான் விடுதியில்தான் அவன் மௌன்ட் ஜாயிலிருந்து வரும் வார்டர்களைச் சந்திப்பதும், தொண் டர்களுக்கு ஆயுதங்கள் பிரித்துக்கொடுப்பதும் வழக்கம். மதுக்கடையின் முன்புறத்தில் ஒரு கிராதிக்குப் பின்னு லிருந்து மது வகைகள் விற்கப்படும்; வாங்கிக் குடிப்ப வர்கள் முன் பக்கம் நிற்பார்கள். காலின்ஸ் முன் பக்கத்தில் நின்றுகொண்டு, கொஞ்சம் மதுவை வாங்கிக் கையில் வைத்துக்கொண்டு குடிப்பது போல் பாவனை செய்துகொண்டே தன் போலீஸ் நண்பர்களுடனும், வார்டர்களுடனும் பேசுவது வழக்கம். ஒரு நாள் இரவில் அவன் அவ்வாறு நின்று, தனக்கு மிக்க உதவிபுரியும் ஸார்ஜன்டு மாரிஸ் மக்கார்தியுடன் பேசிக் கொண்டிருந் தான். திடீரென்று கறுப்புக் கபிலர்கள் பலர் அங்கு வந்து சோதனையோட்டத் தொடங்கினர். முதலில் ஸார் ஜன்டு மக்கார்தியைச் சோதித்தனர். அவன் போலீஸ்

அநுமதிச் சீட்டு ஒன்றை நீட்டியவுடன் அவன் யார் என்பதை அவர்கள் அறிந்து, அவனுடன் அன்பாகப் பழக ஆரம்பித்தனர். ஸார்ஜன்டைச் சோதித்த பட்டாள அதிகாரி, 'அதோ பக்கத்தில் நிற்பவர் தங்கள் தோழரா?' என்று காலின்ஸைச் சுட்டிக் காட்டிக் கேட்டான். ஸார்ஜன்டும், 'ஆம்' என்று கூறினான். இன்னும் சிறிது நேரம் தாமதமாகி யிருந்தால் காலின்ஸும் சோதிக்கப்பட்டிருப்பான். அவன் சட்டைப் பையில் ஸார்ஜன்டு மக்கார்தி அப்பொழுதுதான் கொடுத்த ரகசியமான போலீஸ் தஸ்தவேஜும் ஒன்றிருந்தது. நல்லவேளையாக அவன் சோதிக்கப்படவில்லை. பட்டாள அதிகாரி தான் புதிதாய்ச் சம்பாதித்த நண்பர்களான ஸார்ஜன்டு, காலின்ஸ் இருவரையும் தன்னுடன் குடிக்க வருமாறு வேண்டினான். அவர்களும் இசைந்தனர். காலின்ஸ் பீர் குடிப்பதே யில்லை. ஆயினும் அன்று வேறு வழியில்லாததால், பகைவனை பட்டாள நண்பன் கொடுப்பதை மறுக்கத் துணியாது, கொஞ்சம் பீர் வாங்கிக் குடிப்பதுபோல் பாவனை செய்தான். பட்டாள அதிகாரி தன் படைவீட்டில் அன்றிரவு நடக்கும் நடனக் கச்சேரிக்கு வரும்படி அவர்கள் இருவரையும் அழைத்தான். இருவரும், 'அவசியம் வருகிறோம்!' என்று அழைப்பை விருப்பத்துடன் ஏற்றுக்கொண்டனர். பிறகு கறுப்புக் கபிலர் யாவரும், அங்கு காலின்ஸைக் காணவில்லை என்று கூறிக்கொண்டே வெளியேறினர். காலின்ஸ் அப்பொழுதுதான் நன்றாக மூச்சு வாங்க ஆரம்பித்தான். அதுவரை இருந்த நிலைமை அவனுக்குத்தான் தெரியும்!

பறக்கும் தொண்டர் படைகள் இக்காலத்தில் தீவிரமாய் வேலை செய்துவந்தன. முக்கியமாக லாங்

போர்டிலும் தென் அயர்லாந்திலும் அவைகள் இடைவிடாது வேலை செய்துவந்தன. அப்படைகளில் எவற்றிலும் முப்பதுக்கு மேற்பட்ட தொண்டர்கள் இருப்பதில்லை. அவைகள் தங்களுக்குக் குறித்த எல்லைகளுக்குள்ளே இருந்த படைவீடுகளைத் தாக்குதல், போலீஸ் பட்டாளங்களை வழிமறித்துப் போர் செய்தல் முதலிய காரியங்களைச் செய்துவந்தன. சில சமயங்களில் அவைகள் வெளியிலிருந்து உதவிப் படைகளை வரவழைத்துக்கொள்வதும் வழக்கம். இத்தகைய தொண்டர் படைகள்தான் அரசாங்கத்தின் 50,000 சிப்பாய்களையும், 15,000 கறுப்புக் கபிலரையும் மூச்சுத் திணறும்படி செய்ததோடு, அவர்களுக்கு இடைவிடாது வேலை கொடுத்தும் வந்தன. இவ்வாறு விரல் விட்டு எண்ணக்கூடிய சிலர் பல்லாயிரவரை எதிர்த்து நின்று, பல நெடு நாளாய்ப் போர் செய்து, வெற்றிகொண்ட விந்தை இந்த 20-ம் நூற்றாண்டில் அயர்லாந்தில் நடந்தது!

கில்மைக்கேல் என்னுமிடத்தில் நவம்பர் மாதம் 28-ம் தேதி கார்க் தொண்டர்கள் போரில் இறங்கினர். தொண்டர்கள் அங்கு 17 பட்டாளத்தாரைச் சந்தித்துப் போராடினர். சிறிது நேரம் சென்ற பின் சிப்பாய்கள் பணிந்துவிட்டனர். தொண்டர்கள் அவர்களை நம்பி அருகே செல்லுகையில், அவர்கள் மீண்டும் சுட ஆரம்பித்தார்கள். உடனே தொண்டர்களும் எதிர்த்துச் சண்டை செய்து, அவர்களில் ஒருவன் நீங்கலாக மற்ற யாவரையும் சுட்டனர். அந்த ஒருவனும் இறந்தவனைப் போல் பாசாங்கு செய்ததால்தான் தப்பினான். பின்னால் அவன் தன் அதிகாரிகளிடம் அச் சம்பவத்தைப் பற்றிக் கூறுகையில், பொய்கள் பலவற்றைப் புனைந்து கூறினான்.

பல நூறு தொண்டர்கள் வந்தார்களாம்! அவர்கள் யாவரும் அரசாங்க சிப்பாய்களைப் போல் காக்கி உடை அணிந்து ஏமாற்றினராம்! அச் சம்பவம் காரணமாக அரசாங்கத்திற்கு உண்டான கோபத்திற்கு அளவே யில்லை; ஆனால் ஜனங்கள் களித்தனர்!

ஆங்கிலேயர் அயர்லாந்தில் செய்துவந்த அநீதிகளை எதிர்ப்பதற்காக, இங்கிலாந்தில் பல கட்டிடங்களை எரித்தும், வேறு பல நஷ்டங்கள் விளைவித்தும் பழி வாங்கவேண்டும் என்று டெயில் ஐரானின் பாதுகாப்பு மந்திரியான கதால் புருகா வெகு நாளாக யோசனை கூறி வந்தான். அதைத் தலைமைக் காரியாலயத்தார் முதலில் ஏற்றுக்கொள்ளாதிருந்துபின்னால்தான் ஏற்றுக்கொண்டனர். ரோரி ஒகானர் என்பவனை அவ்வேலைகளுக்குப் பொறுப்பாக இங்கிலாந்துக்கு அனுப்பிவைத்தனர். நவம்பர் 28-ம் தேதி லிவர்பூல் துறைமுகத்தில் கப்பல்களிலிருந்து சாமான் இறக்குமிடத்தில் பதினேழு பெரிய கிட்டங்கிகள் எரிக்கப்பட்டன. இதைப் பின்பற்றி, இங்கிலாந்தின் வேறு பாகங்களிலும் நாச வேலைகள் நடைபெற்றன. அயர்லாந்தில் தாண்டவமாடிய கறுப்புக் கபிலர் பலருடைய வீட்டு விலாசங்களைத் தொண்டர்கள் அறிந்து, இங்கிலாந்தில் அவ் வீடுகளைக் கண்டுபிடித்து, அவைகளைத் தாக்கித் தீ வைத்து எரித்து வந்தனர்.

லிவர்பூல் தகனத்திற்குச் சிறிது முன்னால், காலின்ஸுக்கு மிக்க உதவியாயிருந்த நீல் கெர், ஸ்டீவ் லனிகன் முதலியோர் கைதி செய்யப்பட்டனர். லிவர்பூலிலிருந்து ஆயுதங்களையும் ஆட்களையும் அயர்லாந்துக்குக் கடத்துவதற்கு அவர்கள் உதவிபுரிந்தவர்கள். அச்சமயத்தில் அமெரிக்காவிலிருந்து திரும்பி வரும் டிவேலராவை அயர்

லாந்துக்குக் கடத்துவதற்கு கெர் பொறுப்பாளியா யிருந்ததால், திடீரென்று அவன் கைதியானது கஷ்ட மாக முடிந்தது. ஆயினும், அவன் தன் மனைவி மூலம் தகவல் சொல்லி, வேண்டும் ஏற்பாடு செய்தான்.

கிறிஸ்துமஸ் பண்டிகைக்குக் கொஞ்சம் முன்னால், பட்டாளத்தார் வழக்கம்போல் ஒரு நாள் இரவில் சோதனைகள் செய்தனர். 'ஹொரான் அன்டு லாலெஸ்' என்னும் சைக்கிள் கடையும் சோதனை செய்யப்பட்டது. அக்கடையின் அடித்தளத்தில் தொண்டர்கள் வெடி குண்டு செய்யும் அறை இருந்தது. குண்டு செய்யும் கருவிகளையும், ரிவால்வர்களையும் கண்டு, சிப்பாய்கள் தொண்டர்கள் அங்கு எப்பொழுது வேலைசெய்ய வரு வார்கள் என்று வினவினார்கள். 9 மணிக்குத் தொண் டர்கள் வரக்கூடும் என்று தகவல் கிடைத்ததால், சிப் பாய்களில் சிலர் கடைக்குள்ளும், சிலர் வெளியில் தெரு விலுமாக மறைந்து காத்திருந்தனர். குண்டு செய்யும் தொண்டர்கள் வழக்கம்போல் அக் கடைக்குள் புகுந் திருந்தால், அவர்கள் வாழ்வு அன்றோடு முடிந்திருக்கும். ஆனால் அச்சமயத்தில் அவர்களுக்கு உதவியாக ஒரு சம்பவம் நிகழ்ந்தது. எவனோ ஒரு பையன் தெருவில் ஒரு நண்பனை எதிர்பார்த்துக் காத்து நின்றுகொண் டிருந்தான். அவனைச் சிப்பாய்கள் சந்தேகித்துப் பிடிக்க முயன்றதால், அவன் சைக்கிளில் ஏறி விரைவாகச் சென் ருன். சிப்பாய்கள் அவனைச் சுட்டுக் காயப்படுத்தி விட் டனர். அங்கு குண்டோசை கேட்டதால், அப்பக்கத்தி லுள்ள ஜனங்கள் சிலர் பல திசைகளுக்கும் சென்று, அங்கு வந்துகொண்டிருந்த தொண்டர்களுக்கு எச் சரிக்கை செய்தனர். தொண்டர்களும் கூட்டத்தோடு

சேர்ந்துகொண்டு, தங்கள் தொழிற்சாலை சூறையாடப் படுவதை வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

கறுப்புக் கபிலர் வாங்கிய பழிகளில் டிசம்பர் 11-ம் தேதி கார்க் நகரை அவர்கள் எரித்ததுதான் மிகக் கொடியதாகும். அந்நகருக்கு வெளியே தொண்டர்கள் சில சிப்பாய்களை வழிமறித்துப் போர் செய்ததற்காகப் பழிவாங்க வேண்டும் என்று சாதாரண சிப்பாய்களும், கறுப்புக் கபிலர் யாவரும் சேர்ந்து, கர்பியூ நேரத்திற்குப் பின்னால் நகரின்மேல் பாய்ந்தனர். நகரம் முழுதும் கொள்ளையிடப்பட்டது. பற்பல வீடுகளும் தெருக்களும் எரிக்கப்பட்டன. நகர மண்டபமும் பொது ஸ்தலங்கள் பலவும் அக்கினிக்கு இரையாக்கப் பட்டன. டிலேனி என்ற பெயருள்ள இரு சகோதரர்கள் படுத்துறங்கும் பொழுது கொலை செய்யப்பட்டனர்.

ஸர் ஹமார் கிரீன்வுட், கார்க் தகன சம்பந்தமாக எவர்கள் அம்மாதிரிச் செய்திருப்பார்கள் என்பதே தமக்குத் தெரியவில்லை என்று காமன்ஸ் சபையில் கூறினார். 'மன்னர் பிரானின் படைகளால் தீ வைத்தல் ஆரம்பிக்கப்பட்டது என்பதற்கு அத்தாட்சி யில்லை!' என்று அக்கலியுக அரிச்சந்திரர் கூறினார். கார்க் ஜனங்களே தங்கள் அருமை நகரை எரித்துக்கொண்டிருக்க வேண்டும் என்பது அவர் கூற்று. நகர மண்டபத்தில் தீ வைக்கப்பட்டதைக் குறித்து அவர் கூறுகையில், பாட்ரிக் தெருவிலிருந்து தீ அம்மண்டபத்தைப் பற்றிக் கொண்டதாக விளக்கினார். பாட்ரிக் தெருவிலிருந்து நகர மண்டபம் கால் மைல் தூரத்திலுள்ளது. தீ இடையிலுள்ள தெருக்களையும் கட்டிடங்களையும் எரிக்காது ஒரே யடியாகத் தாண்டிச் சென்று நகர மண்டபத்தில்

மட்டும் பற்றிக்கொண்ட விந்தைக் கதையை கிரீன்வுட்டைத் தவிர வேறு யார் கண்டுபிடிக்க முடியும்? மேலும், தீ இடையில் லீ நதியையும் தாண்டி அணையாது சென்றிருந்தது!

கார்க் நகரிலிருந்த ஆண், பெண், குழந்தை உள்பட யாவருக்கும், தகன வேலை பட்டாளத்தார் செய்தது என்பது நன்றாய்த் தெரியும். அந்நகர முக்கியஸ்தர்களும் தேசத்தார்களும் அச்சம்பவத்தைப் பற்றி விசாரிப்பதற்கு ஒரு விசாரணைச் சபை நியமிக்க வேண்டினர். அரசாங்கம் தன் ராணுவத்தார் விசாரிப்பதே போதும் என்று கூறி மறுத்துவிட்டது.

13

சமாதான முயற்சி

விடுதலை வெறி கொண்ட ஐரிஷ் மக்களுக்கும் ஏகாதிபத்திய வெறி கொண்ட ஆங்கில ராஜதந்திரிகளுக்கும் நடந்த போரின் நடுவே சமாதானத்திற்காகச் செய்யப்பட்ட சில முயற்சிகளை இந்த அத்தியாயத்தில் குறிப்பிடுவோம்.

டெயில் ஐரானின் தலைவரான டிவேலரா கடல்கடந்த கண்டமாகிய அமெரிக்காவில் தம் நாட்டிற்குத் துணை தேடி வந்தார். டெயில் ஐரானின் உப தலைவர் கிரிபித் சிறைக் கோட்டத்தில் இருந்தார். வாலிப வீரனை காலின்ஸ் விடுதலைப் போரின் நடுநாயகமாய் நின்று இரவு

பகலாய் உழைத்து வந்தான். இரவில் சிறிது தலை சாய்க்கவும் அவனுக்குத் தக்க இடம் கிடையாது. எந்த நேரமும் சந்திகள், வீதிகள், வீடுகளெல்லாம் சோதனை. சோதனையிடப்பட்ட வீடுகளிலோ, அவற்றிற்கு அடுத்த வீடுகளிலோ அவன் இரவு நேரத்தைக் கழிக்கவேண்டியிருந்தது. உயிருடன் அவனைப் பிடிக்கவேண்டும் என்பதே பல்லாயிரம் பட்டாளத்தாரின் எண்ணமும் கனவுமாகும். அவனது இறந்த சடலத்தை அரசாங்கத்தினிடம் ஒருவன் கொண்டுவந்து கொடுத்தாலும், அவனுக்குப் பெரிய பரிசு கிடைக்கும். ஏனெனில், அரசாங்கத்தின் கவலை அனைத்தும் அதனுல் மாறிவிடும். நாட்டில் எங்கும் தொண்டர்களுக்கும் சிப்பாய்களுக்கும் சண்டைகள்! துப்பாக்கிக் குண்டுகளின் ஒலி காதைப் பிளந்தது. கறுப்புக் கபிலர், 'நாங்களிட்ட தீ மூள்க மூள்கவே!' என்று நாடு நகரங்களைக் கொளுத்தி வந்தனர். சுருங்கச் சொல்வோமாயின், ஐரிஷ் மக்கள் சுதந்திர தேவியின் சந்நிதானத்தில் தங்கள் இளைஞரின் ஆருயிரையும், வீடு வாசல்களையும் பலிகொடுத்து வந்தார்கள். இத்தனைக்கும் நடுவேதான் லாயிட் ஜார்ஜ் சமாதான அறிகுறி காட்ட முன் வந்தார்.

காலின்ஸுக்குச் சமாதானம் பேச என்ன தெரியும்? அவன் போர்வீரன். உச்சிமீது வானிடிந்து வீழினும் கலங்கமாட்டான். வல்லரசைத் திரணமென்று கருதிப் போராடுவான். போராட்டத்திற்கு வேண்டிய முறைகளை வகுப்பான். அரசாங்கத் தஸ்தவேஜுகள் பாதாள உலகில் வைக்கப்பட்டிருப்பினும், அவற்றின் மர்மங்களை அறிவான். காற்றும் நுழையாத டப்ளின் மாளிகையின் ரகசியங்களைக் கண்முன்பு கண்டதைப் போல் ஊகித்து

அறிவான். தளர்ந்த உள்ளத்திற்கு வீரம் புகட்டுவான். ஆனால், பொய்யும் புலையும் நிறைந்த அரசியல் உலகில், தந்திரம் மிக்க லாயிட் ஜார்ஜுடன் பேரம் பேச அவனால் முடியுமா? முடியுமோ முடியாதோ, அவனைத் தவிர அதற்கு அச்சமயம் வெளியில் வேறு ஆளில்லை.

1920, அக்டோபர், **6**-ம் தேதி லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகையில், பார்லிமென்டு அங்கத்தினரான பிரிகேடியர் ஜெனரல் **கோக்கெரில்** என்பவர் அயர்லாந்துடன் போராட்டத்தை நிறுத்திச் சமாதானம் செய்யவேண்டும் என்றும், இரு நாட்டுப் பிரதிநிதிகளும் சமத்துவமாய்க் கூடிக் கலந்து பேசவேண்டும் என்றும், இரு பக்கத்தாரும் விட்டுக் கொடுத்து அமைதியை நிலைநாட்டவேண்டும் என்றும், ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

ஜான் ஸ்டீல் என்ற அமெரிக்கப் பத்திரிகைக்காரர் ஒருவர் சில முக்கியஸ்தர்கள் மூலம் லாயிட் ஜார்ஜுடைய கருத்தையும் கிரிபித்தின் மனோபாவத்தையும் அறிய முயற்சித்தார். லாயிட் ஜார்ஜ் சமாதானத்தை விரும்புவதாகவே தெரிந்தது. கிரிபித்தும், கோக்கெரிலுடைய கடிதப்படி, கௌரவமான முறையில் சமாதானத்திற்குத் தயாரா யிருப்பதாய் அறிவித்தார். இவை யெல்லாம் நவம்பர் **21**-ம் தேதி சம்பவத்திற்கு முற்பட்டவை. ஆனால் இடையில் கிரிபித் ஏன் கைதி செய்யப்பட்டார்? அவர் கைதி செய்யப்பட்டது லாயிட் ஜார்ஜுக்குத் தெரியாதாம். ஒரு வேளை, கிரிபித்தைச் சிறையில் வைத்துக் கொண்டே சமாதானம் பேசுவது நலமென்று ஆங்கில அரசாங்கம் கருதியது போலும்!

ஆங்கில மந்திரி சபையார் அடுத்தாற்போல் ஆர்ச் பிஷப் **குளூன்** என்னும் ஆஸ்திரேலிய மதகுரு மூலம்

சமாதான முயற்சிகள் செய்தனர். குளூன் லண்டனைப் பார்ப்பதற்காகச் சென்றவர். அவர் டப்ளினுக்கும் சென்று கிரிபித்தைக் கண்டு பேசினுர். கிரிபித் டெயில் ஐரான் மந்திரி சபையின் காரியதரிசிக்கு அவரிடம் ஒரு கடிதம் கொடுத்தனுப்பினுர். அக்கடிதத்தில் அவர் கூறியதாவது :

'ஆர்ச்பிஷப் குளூன் தாம் லண்டனிலிருந்து எனக்குக் கொண்டுவந்த கடிதத்தைத் தங்களுக்குக் காட்டுவார். அது வரவு செலவு மந்திரி (காலின்ஸு)க்கும் மற்றும் பொதுவாக மந்திரி சபைக்கும் போகவேண்டியது.

'மை. கா. வை ஒற்றர்கள் பின் தொடர்ந்து கவனிக்காமல் இருப்பதாக அவர்கள் உறுதி கூறியிருப்பினும், ஆர்ச்பிஷப் அவரைப் பார்ப்பது உசிதமில்லை. நாம் அவர்களை நம்பமுடியாது. ஆனுல் தங்கள் மூலமோ, வேறு தாங்கள் ஆர்ச்பிஷப்புக்குக் குறிப்பிடும் நபர் மூலமோ சம்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

'தொழிலாளர் தலைவர்களான ஹெண்டர்ஸனும் ஆதம்ஸனும் நேற்று இங்கிருந்தார்கள். பிரிகேடியர்-ஜெனரல் கோக்கெரிலுடைய யோசனைகளைப் பற்றி நான் வெளிப்படையாகக் கூறியிருக்கும் விஷயத்தைக் கவனிக்கும்படி நான் அவர்களுக்குச் சொன்னேன். சமாதானத்திற்கும் டெயில் ஐரான் ஒரு முறை கூடுவதற்கும் அவர்கள் ஆவலுற்றிருக்கின்றனர்.

' ஆர்ச்பிஷப் அறிவிக்கும் பிரேரபணைகளின்படி நமது பக்கத்தில் நாம் கொள்கையில் எதையும் விட்டுக் கொடுப்பதாகாது என்று நான் நம்புகிறேன். ஆங்கில அரசாங்கம் இப்பொழுது நடத்திவரும் போராட்டத்தை நிறுத்திவிடுமாயின், தற்காப்புக்காக நாம் செய்து வரும் காரியங்களையும் நிறுத்த முடியும். டெயில் ஐரான் அங்கத்தினர்களையும் மற்றவர்களையும் பின்தொடர்வது நிற்கவேண்டும்.

சமாதான உடன்படிக்கையின் எல்லா ஷரத்துக்களையும் ஏற்பாடு செய்வதற்கு டெயில் முழுதும் யாதொரு தடையு மின்றிக் கூடவேண்டும். ஆ.கி.'

காலின்ஸ் டாக்டர் குளூனைச் சந்திப்பதனுல், அதி லிருந்து ஒற்றர்கள் அவனைத் தொடர்ந்து பிடித்துவிடக் கூடும். அந்நிலையிலும் காலின்ஸ் அஞ்சாது அவரை ஒரு முறை சந்தித்துப் பேசினுன். இரு பக்கத்தாரும் பலாத்காரமான செயல்களை நிறுத்தி, டெயில் ஐரான் முழுதும் கூடுவதற்கு அநுமதி தந்து, அதன் அமைதி யான வேலைகளில் தலையிடாமல் இருப்பதானுல்தான் சமாதானப் பேச்சில் இறங்க முடியும் என்பதை அவன் தெளிவாக உரைத்ததோடு, எழுதியும் கொடுத்தான்.

காலின்ஸ் கௌரவமான சமாதானத்திற்கு முயன்று கொண்டிருக்கும் பொழுது, சில ஐரிஷ்காரர்கள் முன்பின் ஆராயாது பிற்போக்கான எண்ணங்களை வெளியிட்டனர். ஸின்பீன் அரசியல் ஸ்தாபனத்தின் உபதலைவர் ஒருவர் லாயிட் ஜார்ஜுக்கு, அயர்லாந்து சமாதானத்திற்குத் தயாரா யிருப்பதாயும், முதலாவது அவர் என்ன செய்ய எண்ணியிருக்கிருர் என்பதை அறிவிக்கும்படியும் ஒரு தந்தி அனுப்பினுர். கால்வே தாலுகா கவுன்சிலின் அங்கத்தினரில் அறுவர் கூடி, தொண்டர்களுடைய வேலைகளைப் பழித்து, சமாதானம் வேண்டும் என்று தீர்மானித்தனர். கால்வே கவுன்ஸிலின் இதர அங்கத் தினர் பலர் சிறைச்சாலைகளில் வாடிக்கொண்டிருந்த பொழுது, வெளியேயுள்ள இப் பேடிகள் சமாதானத்திற்கு அவசரப்பட்டனர். இம்மாதிரிக் காரியங்கள், பெருந் தியாகங்களைச் செய்து களைத்திருந்த ஐரிஷ் மக்களைப் போலிச் சமாதானத்திற்கு இணங்கும்படி வற்புறுத்தக்

கூடியவை. அத்துடன், ஆங்கில அரசாங்கம் தான் செய்யும் கொடுமைகள் வெற்றியை உண்டாக்குவதாக எண்ணி, மேலும் அவற்றைச் செய்யும்படி தூண்டக் கூடியவை என்று தீவிரவாதிகள் வருந்தினர். வெண்ணெய் வரும் சமயத்தில், பிற்போக்காளர் தங்கள் பயத்தாலும் கோழைத்தனத்தாலும் தாழியை உடைத்து விடுவர் போல் தோன்றியது. ஆனால், ஸின்பீன் காரியதரிசியும் மற்ற முக்கியஸ்தர்களும் மேற்சொன்ன அபிப்பிராயங்களில் தங்களுக்கு உடன்பாடில்லை என்பதையும், தனிப்பட்டவர்கள் சுயேச்சையாகக் கூறிய விஷயம் எதுவும் தங்களைக் கட்டுப்படுத்தாது என்பதையும் தெளிவாக விளக்கினர்.

மிதவாதிகளும், பிற்போக்காளரும், சுயநலமிகளும் சமயத்திற்குத் தக்கபடி நடிக்க முன்வந்ததைக் கண்டு, காலின்ஸ் வெகுண்டு சீறினன். பொதுஜனங்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான டெயில் ஐரானே சமாதான விஷயத்தை முடிவுசெய்ய உரிமையுடையது என்பதை விளக்கி அவன் பத்திரிகைகளுக்குக் கடிதங்கள் எழுதினன். 'ஆங்கிலேயர் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும்வரை காத்திருங்கள்; இடையில் உங்கள் வேலையை நடத்தி வாருங்கள்!' என்பதே அவன் தேசத்தாருக்குக் கூறிய யோசனை.

ஆர்ச்பிஷப் குளூன் லண்டனுக்குத் திரும்பிச் சென்று மீண்டும் லாயிட் ஜார்ஜைக் கண்டு பேசினர். போனர்லா, ஹமார் கிரீன்வுட், சர்ச்சில், ஆண்டர்ஸன், ஜெனரல் மாக்ரெடி முதலியோரையும் கலந்து பேசினர். அப்பேச்சின் முடிவு என்ன என்பது இரண்டு தினங்களில் வெளியாயிற்று. காமன்ஸ் சபையில் பேசும்

பொழுது, லாயிட் ஜார்ஜ், மீண்டும் அயர்லாந்துடன் போர் தொடுக்கப் போவதாக அறிவித்தார். 'அமித வாதிகள் முதலில் அடக்கப்படவேண்டும்!' என்பது அவர் கூற்று. தென் அயர்லாந்தில் ராணுவச் சட்டத்தை அமல் நடத்தவேண்டும் என்று சர்க்கார் தீர்மானித்திருப்பதாக அவர் அறிவித்தார். மேலும், ஐரிஷ் தொண்டர்கள் தத்தம் ஆயுதங்களை அரசாங்கத்திடம் சமர்ப்பித்து விடவேண்டும் என்றார். டெயில் ஐரான் அங்கத்தினர் சிலர் இங்கிலாந்துக்கு வந்து கலந்து பேச அநுமதிக்கப் படுவர் என்றும் கூறினர். பிற்போக்காளர் சமாதானத்தை விரும்பி அனுப்பிய செய்திகளை அவர் படித்துக் காட்டினர். சிறிது காலத்திற்குப் பிறகு ராணுவச் சட்டம் அமலிலுள்ள பிரதேசத்தில் ஆயுதங்கள் வைத்திருப்பவர்களுக்கும், கலகக்காரருக்குத் தங்க இடங் கொடுத்து ஆதரிப்பவர்களுக்கும் மரண தண்டனை விதிக்கப்படும் என்றும் அவர் கூறினர். சமாதானத்தில் விருப்பங் கொண்டதாகப் பாவனை செய்த அதிகார வர்க்கம், தன் கோர தந்தங்களையும் பேழ் வாயையும் தெளிவாய்க் காட்டி, உறும ஆரம்பித்தது. முடியுமானல், சகல ஐரிஷ் வீரரையும் அப் பேழ்வாய் விழுங்கிவிடும் போலிருந்தது.

லாயிட் ஜார்ஜ் எவருடன் சமரசம் பேசினலும், ஒரு கையால் எதிரியின் குடுமியையும் மற்றொரு கையால் அவன் பாதத்தையும் பிடித்துக்கொள்வார் என்று காலின்ஸ் எண்ணியிருந்தான். எனவே காலத்துக்கு மூப்பான சமாதானப் பேச்சு வெம்பி உதிர்ந்துவிடும் என்பது அவன் எண்ணம். லாயிட் ஜார்ஜின் பேச்சு

தன் கட்சிக்கு மிக்க ஆதரவானது என்று கூறி, அவன் அதை வரவேற்ருன்.

குஞன் அயர்லாந்துக்குத் திரும்பி வந்து கிரிபித்தைச் சிறையில் கண்டு பேசினுர். கிரிபித் காலின்ஸுக்கு ரகசியமாக ஒரு கடிதம் அனுப்பினுர். அதில், கால்வே கவுன்சில் தீர்மானத்தையும் பிற்போக்காளருடைய வேண்டுகோள்களையும் கண்டு ஸின்பீனர்கள் முற்றிலும் தளர்ந்துபோய்விட்டதாக ஆங்கில அரசாங்கம் கருதுவதையும், ராணுவத்தார் லாயிட் ஜார்ஜைச் சமாதான வழியிலே செல்லவிடாது தடுத்துவருவதையும், மானக்கேடான எந்தச் சமாதானத்தையும் தாம் ஒப்புக்கொள்ள முடியாது என்று குஞனிடம் கூறியதையும் விளக்கமாகக் குறிப்பிட்டிருந்தார். மேலும் குஞன் தம்மை மறுபடி கண்டு பேசப்போவதாயும், இடையில் காலின்ஸின் அபிப்பிராயத்தைக் கேட்க விரும்புவதாயும் அவர் எழுதியிருந்தார்.

காலின்ஸ் அவருக்கு அனுப்பிய மறுமொழில் கூறியதாவது :

'கௌரவமான நிபந்தனைகளின் பேரில் சமாதானத்தைப் பெற நாம் நமது சம்மதத்தைத் தெளிவாகக் காட்டியிருக்கிருேம். லாயிட் ஜார்ஜ் முற்றிலும் பணிந்துவிட வேண்டும் என்று வற்புறுத்துகிருர். இவற்றிற்கு நடுவே வேறு வழியில்லை; மேற்கொண்டு (பேச்சை) வளர்ப்பது வீணுகும். அதனுல் அவர்களைக் காட்டிலும் நாம் ஆத்திரப்படுவதாகத் தோன்றும். டாக்டர் குஞன் லாயிட் ஜார்ஜின் தூதுவரே தவிர நம்முடையவர் அல்லர்.

'லாயிட் ஜார்ஜ் தவறுதலாக எண்ணவேண்டியதில்லை. ஐரிஷ் குடியரசுப் படை உடைக்கப்படவில்லை. ஜனங்களுடைய ஊக்கமும் அடங்கி விடவில்லை. ஆயினும்,

அவர்கள் கால்வே தீர்மானத்தை முக்கியமாய்க் கருதுவது போல், உண்மையாக இருக்கும் நிலையைக் கருத மாட்டார்கள்...'

லாயிட் ஜார்ஜ் காமன்ஸ் சபையில் பேசிய அன்று இரவுதான் கார்க் நகரம் எரிக்கப்பட்டது.

டாக்டர் குளூன் மீண்டும் கிரிபித்தைக் கண்டு பேசினார். அது சம்பந்தமாக கிரிபித் காலின்ஸுக்கு எழுதிய கடிதமாவது :

'4 மணி,

'செவ்வாய்க்கிழமை, டிஸம்பர் 14-ம் தேதி.

'டாக்டர் குளூன் இங்கு வந்திருக்கிறார். ஆங்கில மந்திரி சபை ஒருமாத காலத்திற்குத் தாற்காலிக சமாதானத்திற்கு இணங்குவதாக அவருக்கு அறிவிக்கிறது. சோதனைகள், கைதி செய்தல், தொடர்தல், கட்டிடங்களை அழித்தல், எரித்தல், கொள்ளை, ஆயுத சமர்ப்பணம் முதலிய ஒன்றும் அக்காலத்தில் இல்லை. ராணுவ விசாரணைகளைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. நான் ராணுவ விசாரணைகளும் நிற்க வேண்டும் என்று எடுத்துக் காட்டினேன்.

'"அமைதியான வேலை"களைக் குறித்து அவர்கள் ஆட்சேபிக்கிறார்கள். குளூன் அதைப்பற்றி விளக்கியிருக்கிறார். எப்படியும் அமைதியான நம் வேலைகள் நடக்க முடியுமாதலால் இது எனக்கு மிகவும் முக்கியமாய்த் தோன்றவில்லை.'

டாக்டர் குளூன் அக்கடிதத்துடன் ஒரு குறிப்பு எழுதி அனுப்பினார். அதில் அவர் பத்திரிகைகளில் வெளிவரத்தக்க முறையில் டெயில் ஐரான் கூடுவது போன்ற வேலைகளை நிறுத்தப்பட வேண்டும் என்று விளக்கினார். மேலும் கார்க் நகர தகனம் லாயிட் ஜார்ஜுக்குப் பக்கபலமாக இருக்கிறது என்றும், அதை

வைத்துக்கொண்டு அவர் தம் எதிரிகளை எதிர்க்க முடியும் என்றும் கூறினர். காலின்ஸ் அன்று தினமே கிரிபித்துக்கு ஒரு கடிதம் அனுப்பினன். அதில் டெயில் அங்கத்தினர் யாவரும் தாராளமாய்க் கூடுவதற்கு அநுமதிக்கப் பட்டாலன்றி இங்கிலாந்தின் ராஜிப் பேச்சுக்களைக் கவனிக்க முடியாது என்று கிரிபித் அறிக்கை வெளியிடவேண்டும் என்று டெயில் தீர்மானித்திருப்பதாக அறிவித்தான்.

டிசம்பர் 15-ம் தேதி, காலின்ஸ் லண்டனிலிருந்த டெயில் ஐரான் பிரதிநிதியான ஆர்ட் ஒபிரியனுக்கு ஒரு கடிதம் அனுப்பினன். அதில், அயர்லாந்தில் அதிகாரிகள் நடத்திய அதிக்கிரமங்களுக்கு மற்ற மந்திரி சபையினரைப் போலவே லாயிட் ஜார்ஜையும் பொறுப்புடையவராகக் கருதவேண்டும் என்றும், ஆங்கிலத் துருப்புகள் செய்த பயங்கரச் செயல்கள் இங்கிலாந்திலுள்ள பெரிய அதிகாரிகளின் மனத்தைப் பாதிக்கும் என்று தான் கருதவில்லை என்றும் அவன் குறிப்பிட்டிருந்தான். மேலும் லாயிட் ஜார்ஜ் மூலம் சமாதானம் ஏற்படும் என்பதிலும் அவனுக்கு நம்பிக்கையேயில்லை.

டெயில் ஐரான் சமாதானத்திற்குப் பின்கண்ட நிபந்தனைகளை ஏற்படுத்தி அவற்றை வெளியிடவேண்டும் என்று ஒபிரியன் அறிவித்தான்:

1. ஆயுதம் தாங்கிய சகல ஆங்கிலத் துருப்புகளையும் திரும்ப அழைத்தல்.

2. ஐரிஷ் குடியரசை ஒப்புக்கொள்ளுதல்.

3. 1800-க்குப் பின்னல், அயர்லாந்து, விகிதத்திற்கு மேலாகச் செலுத்திய வரிப் பணத்தை வாபஸ் செய்தல்: பொருளாதாரக் கமிஷன் செய்திருக்கும் முடிவுகளை ஆதாரமாய்க் கொண்டு இதைக் கவனிக்க வேண்டியது.

4. 1914-லிருந்து செய்யப்பட்ட அழிவு வேலைகளுக்கும் பலாத்காரச் செயல்களுக்கும் தண்டனையில்லாமல் செய்தல்.'

கிரிபித் மீண்டும் டாக்டர் குளூனைக் கண்டு பேசிவிட்டுக் காலின்ஸுக்கு அறிவித்தார். இரு பக்கத்தாரும் போராட்டத்தை நிறுத்திக் கௌரவமான சமாதானத்திற்கு முயலவேண்டும் என்பதே அவர் யோசனை. டெயில் ஐரான் வெளிப்படையாக வேலை செய்வதற்கு ஆங்கில அரசாங்கத்தின் சம்மதம் இல்லாவிட்டாலும் பாதகமில்லை என்பதும், அது வழக்கம்போல் வேலை செய்துவர அநுமதிக்கப்படும் என்பதும் அவர் எண்ணம். காலின்ஸ், சமாதான உடன்படிக்கை முடிவதற்கு டெயில் ஐரான் அங்கத்தினருடைய சம்மதத்தையே கேட்கவேண்டும் என்றும், அரசாங்கம் பின்னால் 'ஐரிஷ் பிரதிநிதிகள்' என்ற பெயரால் எவர்களையேனும் கூட்டி வைத்து முடிவு செய்தால் சம்மதிக்க முடியாது என்றும் அவருக்கு ஞாபகப் படுத்தினான். கிரிபித் தாமும் அவ் விஷயத்தை வற்புறுத்தியிருப்பதாகவும், 'ஐரிஷ் ஜனங்களின் பிரதிநிதிகள்' என்னும் சொற்றொடர் டெயில் ஐரான் அங்கத்தினரையே குறிக்கும் என்றும் விளக்கினார்.

ஆர்ச்பிஷப் குளூன் மீண்டும் லண்டனுக்குச் சென்று, லாயிட் ஜார்ஜிடம் நடந்த விஷயங்களைக் கூறினார். பிரதம மந்திரி ஐரிஷ் தொண்டர்கள் ஆயுதங்களைத் தங்களிடம் சமர்ப்பிக்கவேண்டும் என்று கூறினார். குளூன் தம்மிடம் முன்னால் இப்பிரச்னை கூறப்படவில்லை என்றும், ஆயுத சமர்ப்பணம் என்ற பேச்சை எடுத்தாலே எல்லா ராஜி முயற்சிகளும் சிதை

றிப் போகும் என்றும் எடுத்துக் கூறினர். பிரதம மந்திரி தாம் டப்ளின் மாளிகையின் கருத்தை அறிவதற்கு அவகாசம் வேண்டும் என்று அறிவித்தார். இடையில் குளுன் தமது நாட்டுக்குப் புறப்பட்டுக்கொண்டிருக்கையில், பிரதம மந்திரியின் அந்தரங்கக் காரியதரிசி அவர் பயணத்தை ஒத்திவைக்கவேண்டும் என்று வேண்டினர். மீண்டும் மந்திரி சபை கூடியது. மந்திரிகள் டாக்டர் குளுனை நழுவவிட்டு விட்டு, வேறொரு வழியில் சமாதான முயற்சி நடப்பதாக அவருக்குக் கூறினார்கள். ஒபில ஹகன் என்னும் பாதிரியார் மூலம் அவர்கள் பேச முற்பட்டனர். அப்பாதிரியார், காலின்ஸ் முதலியோர் தடுத்துச் சொல்லியும் கேளாது, ராஜி விவகாரத்தில் தலையிட்டு லண்டன் சென்றார். காலின்ஸ், அவர் தமக்குத் தாமே பிரதிநிதியே தவிர, வேறு எந்தக் கட்சிக்கும் பிரதிநிதியல்லர் என்று கூறிவிட்டான்.

டிவேலரா திரும்பிவந்து சேருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைக் காலின்ஸ் ரகசியமாகச் செய்து முடித்தான். 1920-ம் வருஷம் டிசம்பர் மாதம் 24-ந் தேதி டிவேலரா டப்ளினுக்கு விஜயஞ் செய்தார். அன்று அவரும் காலின்ஸும் வெகுநேரம் கலந்து பேசினர். அன்று மாலை காலின்ஸ் பட்டாளத்தார் கையிலிருந்து தப்பியதே பெரும் விந்தையாகும். சமாதானப் பேச்சு ஒரு பக்கம் நடக்கையில், கைதி செய்வதும், சோதனையிடுவதும், சுடுவதும் மறுபக்கம் குன்றாமல் நடந்து வந்தன.

டிஸம்பர் மாதம் 24-ந் தேதி மாலை காலின்ஸ் டோபின், கல்லென் முதலான நண்பர்களோடு 'கிரிஷாம்' விடுதியில் சாப்பிடுவதற்கு ஏற்பாடு செய்திருந்தான். அவர்கள் அங்கு சாப்பிட்டுக்கொண்டிருந்த பொழுது,

பட்டாளத்தார் திடீரென்று அங்கு புகுந்து, அவர்களைச் சூழ்ந்துகொண்டு கேள்விகள் கேட்க ஆரம்பித்தனர். காலின்ஸ், ஒன்றும் அறியாத மனிதனைப்போல், தன்னை மறிப்பதைக் கண்டு வெகுண்டு, அவர்களைத் தள்ளிக் கொண்டு வெளியே செல்ல முயற்சித்தான். வழியில் ஓர் அதிகாரி அவனைப் பிடித்துச் சோதனை யிட்டான். அவன் சட்டைப் பையிலிருந்து பட்டாளத்திற்கு உதவியான ஒரு தேசப்படம் அகப்பட்டது. அதிகாரி அதைப் பிரித்துப் பார்க்கையில் அதன் மூலையில் '6 ரிபில்ஸ்' என்று எழுதப்பட்டிருந்தது. அதைக் கண்ட அதிகாரி அவ்வார்த்தைகள் '6 துப்பாக்கிகள்' என்று குறிப்பதாய்க் கூறினான். காலின்ஸ் அவ்வாறில்லை என்றும், தன்னிடமுள்ள எழுதும் புத்தகங்களையே குறிப்பதாயும் கூறினான். இப்பேச்சினிடையே அதிகாரி அவனுக்கு அத்தேசப்படம் எதற்காக என்பதைக் கேட்க மறந்து போனான். ஆனால், காலின்ஸின் தலையில் கையை வைத்துத் தடவிப் பார்த்தான். தன்னுடைய சட்டைப் பையிலிருந்து ஒரு படத்தை எடுத்துக் காலின்ஸின் முகத்தோடு அதை ஒப்பிட்டுப் பார்த்தான். அப்படம் காலின்ஸின் பழைய உருவப் படம். காலின்ஸ் மிகக் கஷ்டமான நிலையில் நின்றுகொண்டிருந்தான். தலையின் மேல் பட்டாள அதிகாரியின் கை—சுற்றிலும் பல சிப்பாய்கள்! கொஞ்சம் சந்தேகம் உண்டானால் எல்லாம் பாழாகும். ஆயினும், சிந்தை தளராமல், புன்னகை அரும்பிய முகத்துடனேயே அவன் நின்றான். அதிகாரி தன்னைக் கண்டுபிடித்தோ, சந்தேகத்தின் பேரிலோ கைதி செய்வதானால், தான் என்ன செய்யவேண்டும் என்பதையும் யோசித்து, அவன் அதிகாரியின் இடுப்பில் மாட்டியிருந்த கைத்துப்பாக்கியையே கூர்மையாய்க் கவ

னித்துக் கொண்டிருந்தான். ஏனென்றால், அவசியம் ஏற்பட்டால், அதிகாரியையும் மற்ற பகைவரையும் எதிர்த்துப் போராடித் தப்பித்துக் கொள்ள ஆயுதம் ஒன்று வேண்டும் என்று கருதினான். தனியாய் நின்ற பொழுதும் பணிந்துவிடும் நோக்கம் அவனுக்கு ஏற்படவில்லை. அவன் தலை பணியவே அறியாதது. அதிகாரி நெடுநேரமாய்க் காலின்ஸையே விடாது உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். காலின்ஸ் அவன் கைத்துப்பாக்கியையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். ஆனால் திடீரென்று அதிகாரி அவனை விட்டுச்சென்றான். சிப்பாய்களும் வெளியேறினர். அவர்கள் வாழ்நாள் முழுதும் தேடி அலைந்தாலும் கிடைக்கத்தகாத ஆசாமி கைக்குள் சிக்கிய பின்னர், எளிதாக அவனை விட்டு விட்டு ஏமாந்து சென்றனர்.

14

போர் நிறுத்தம்

அயர்லாந்தில் அரசாங்கமும் தொண்டர்களும் தத்தம் வலிமையைப் பரீட்சை செய்து பார்த்துக் கொண்டிருக்கையில், பார்லிமெண்டில் ஒரு 'சுய ஆட்சி மசோதா' நிறைவேற்றப்பட்டது. வெகு விரைவாக அம்மசோதா சட்டமாகி, மன்னர் அங்கீகாரமும் பெற்றது. போதுத் தேர்தலுக்கும் ஏற்பாடு நடந்தது. 'சுய ஆட்சி மசோதா' அயர்லாந்தைப் பிளவுபடுத்தக்

கூடியதாயும், அடிமைத்தனத்தை மேலும் நிலைநிறுத்து வதாயும் இருந்தது. டெயில் ஐரான், அம்மசோதாவின் படி ஏற்படுத்தப்படும் இரண்டாவது சட்ட சபையின் தேர்தலை ஒப்புக்கொண்டு, முதலாவதான ராஜாங்க சபையை நிராகரித்தது. சட்டசபைத் தேர்தலின் மூலம் எவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனரோ அவர்களையே புதிய டெயில் ஐரான் அங்கத்தினராக எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதே இம்முடிவின் கருத்து.

இடையில் பிரிட்டிஷ் அரசாங்கம் சமாதானத்திற் காக மறைவாகச் சில முயற்சிகளைச் செய்தது. டெர்பி பிரபு என்பார் ஐரிஷ் வீரரின் மனப்பான்மையை அறிந்து வரும்படி ரகசியமாக அனுப்பப்பட்டார். அவரால் விசேஷமாக முன்னேற முடியவில்லை. பின்னர் ஸர் ஜேம்ஸ் கிரெய்க் என்பார் மூலம் முயற்சிகள் நடந்தன.

தேசத்தார் அனைவரும் 'சுயாட்சி'ச் சட்டத்தை எதிர்த்து நின்றனர். வடகிழக்கு அல்ஸ்டரைத் தவிர மற்ற இடங்களில் தேர்தலுக்கே அவசியம் ஏற்படவில்லை. குடியரசுக் கொள்கையுடையார் 124-பேர் போட்டியின் றியே தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால், டப்ளின் டிரி னிட்டி கலாசாலை தேர்ந்தெடுத்த நான்கு அங்கத்தினர் மட்டும் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர். காலின்ஸ் தென் கார்க் தொகுதிக்கு எதிர்ப்பின்றித் தேர்ந்தெடுக்கப் பட் டான். டிவேலரா, கிரிபித் முதலியோரும் வெற்றி பெற்ற னர். அல்ஸ்டர் தொகுதியில் வெற்றி பெற்ற தேசிய வாதிகள் சிலரும் டெயில் ஐரானை ஆதரித்தனர்.

தேர்தல் நடத்த காலத்தில் பட்டாளங்களும் தொண் டர்களும் செய்துவந்த போராட்டங்களையும், தகனங் களையும், சோதனைகளையும் கவனித்தால், தொண்டர்கள்

எவ்வளவு கஷ்டமான நிலையில் வேலைசெய்தனர் என்பது புலனாகும். காலின்ஸின் காரியாலயங்கள் பன்முறை சோதனையிடப்பட்டன. டப்ளினில் கர்பியூ உத்தரவு இரவு 8-30 மணியிலிருந்தே அமலுக்கு வந்தது. ஆயினும், சிப்பாய்கள் சிறு சிறு கூட்டங்களாகப் பிரிந்து நாட்டுப் பக்கங்களில் ஜனங்களோடு உறவாடவேண்டும் என்று அரசாங்கத்தார் ரகசிய உத்தரவு அனுப்பியிருந்தனர். அதைக் காலின்ஸும் ரகசியமாகப் பார்த்து நிலைமை மாறிவருகிறதை அறிந்துகொண்டான்.

சமாதான விஷயமாக ஜெனரல் ஸ்மட்ஸ் ரகசியமாக டப்ளினுக்கு வந்தார். அவர் தென் ஆபிரிகாவின் பிரதம மந்திரி. அவர் டிவேலராவைக் கண்டு பேசி, தென் ஆபிரிகாவில் போயர்கள் ஒப்புக்கொண்டிருக்கும் அரசியலைப் போன்ற ஒரு திட்டத்தை ஏற்றுக்கொண்டு சமாதானம் செய்துகொள்ளும்படி ஆலோசனை கூறினர். சிறைச்சாலையிலுள்ள கிரிபித், டுக்கன் முதலியோர் மூலமாக வேறு வழிகளில் சமாதானப் பேச்சுக்கள் நடை பெற்றன. இவையெல்லாம் ஆங்கில அரசாங்கம் தேச நிலையைச் சோதித்துப் பார்த்த உபாயங்கள் என்று எல்லோருக்கும் தெரியும்.

கடைசியாக, ஆங்கிலப் பிரதம மந்திரி லாயிட் ஜார்ஜ், ஜூன் மாதம் 24-ம் தேதி, டிவேலராவுக்கு நேராக ஒரு கடிதம் எழுதினர். மன்னர் பிரானின் விருப்பப்படி இரு நாடுகளுக்குள்ளும் சமாதானமும் சிநேகபாவமும் ஏற்படவேண்டியது அவசியம் என்றும், தென் அயர்லாந்தின் பெரும்பாலான ஜனங்களின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் டிவேலரா, வட அயர்லாந்தின் பிரதிநிதியும் பிரதம மந்திரியுமான ஸர் ஜேம்ஸ் கிரெய்க்

கையும், வேறு தமக்குப் பிரியமுள்ள உதவியாளரையும் அழைத்துக்கொண்டு சமாதானப் பேச்சு நடத்த வர வேண்டும் என்றும், வருகிறவர்கள் யாவருக்கும் தக்க பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும் அவர் அக்கடித மூலம் அறிவித்தார்.

டிவேலரா, அயர்லாந்து பிளவற்ற ஒரு நாடு என்பதையும், தேசீய சுயநிர்ணயத் தத்துவத்தையும் புறக்கணிக்காமலிருந்தால் சமாதானப் பேச்சுக்கு இடமுண்டு என்றும், விரிவான கடிதம் அனுப்புவதற்கு முன்னால் தாம் தேசத்தின் சிறுபான்மைக் கட்சியாரைக் கலந்து பேசுவதாயும் பிரதம மந்திரிக்குப் பதில் அனுப்பினார். பின், மறுபடி ஜுலை மாதம் 8-ம் தேதி முடிவான பதிலையும் அனுப்பிவைத்தார்.

இடையில் கிரிபித், டுக்கன், பார்ட்டன் முதலியோர் விடுதலை செய்யப்பட்டனர். பொது ஜனங்கள் விரைவில் சமாதானம் வரப்போவதை எண்ணி மகிழ்ச்சியடைந்தனர். அரசாங்கப் படைகளின் சார்பாக ஜெனரல் மாக்ரெடி மான்ஷன் மாளிகையில் தாற்காலிகமாகச் சமாதானம் செய்வதற்குத் தொண்டர் படைத் தலைவர்களுடன் கலந்து பேசினார். இறுதியில் இரு பக்கத்தாரும் சமாதானப் பேச்சு முடியும் வரை போரை நிறுத்த வேண்டும் என்று தாற்காலிக உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. சமாதானம் ஜுலை மாதம் 11-ம் தேதி திங்கட்கிழமை நடுப்பகலில் அமலுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டது.

சமாதானம் தொண்டர்களுடைய மகத்தான வெற்றியைக் குறிப்பதாய்ப் பொதுஜனங்கள் மகிழ்ச்சியடைந்தனர். ராணுவ பலத்தில் தொண்டர்களைப் பார்க்கினும்

அரசாங்கம் பல நூறு மடங்கு அதிக வலிமையுடையது. பின் தொண்டர்கள் எதிலே வெற்றி பெற்றனர் என்ருல், அயர்லாந்தில் ஆங்கிலேயரின் ஸிவில் ஆட்சியை அடியோடு அழித்ததிலேதான். ஸிவில் ஆட்சி நிலை குலேந்து வீழ்ந்திருந்தது. ஆட்சி முறைக்கு ஏற்பட்ட எதிர்ப்பும் விரைவிலே நீங்கி விடாது நெடுநாள் நிலேத்துநின்றது. கறுப்புக் கபிலருடைய கொடுமைகள் ஜனங்களே ஒற்றுமைப்படுத்தித் தொண்டர்கள் பக்கம் சேரும்படி செய்தன. பல போராட்டங்களிஞல் தொண்டர்களுக்கு ஓய்வு அவசியமா யிருந்தது. அவர்களிடம் போதுமான ஆயுதங்களும் தோட்டாக்களும் இல்லே. ஆதலால் தாற்காலிக சமாதானம் ஏற்ற காலத்திலே ஏற்பட்டதாகவே கருதப்பட்டது.

டிவேலரா தம் தோழன் ஆஸ்டின் ஸ்டாக்குடன், இங்கிலாந்து சென்று பிரதம மந்திரியை அடிக்கடி கண்டு பேசிவந்தார். அதன் பயஞக ஜுலே மாதம் 20-ம் தேதி, மந்திரி ஐரிஷ் பிரச்னேயைத் தீர்க்கக்கூடிய ஒப்பந்தம் ஒன்றைத் தயாரித்து அவரிடம் கொடுத்தார்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நோக்கம் சில நிபந்தனேகளுக்கு உட்படுத்தி அயர்லாந்துக்கு குடியேற்ற நாட்டு அந்தஸ்துக் கொடுக்கவேண்டும் என்பதே. அந்த நிபந்தனேகளில் கீழ்கண்டவை முக்கியமானவை.

ஐரிஷ் துறைமுகங்களில் ஆங்கிலக் கடற்படைகள் தங்குவதற்கும் அயர்லாந்தில் ஆங்கில ஆகாய விமானப் போக்குவரத்துக்கு வேண்டிய செளகரியங்கள் அமைத்துக் கொள்வதற்கும், பொதுவாக இரு நாடுகளின் பாதுகாப்புக்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்வதற்கும் இங்கிலாந்துக்கு உரிமை இருக்கவேண்டும். அயர்லாந்து தன்

வருமானத்துக்குத் தக்கபடி ஏகாதிபத்தியப் படைச்செலவுக்கு ஒரு பகுதி செலுத்தவேண்டும். இரு நாடுகளுக்குள்ளும் ஒன்றின் வர்த்தகப் பொருள்மேல் மற்றது வரி விதிக்கக் கூடாது. வட அயர்லாந்தின் ஜனங்கள் விரும்பினாலன்றி, அவர்களுக்குள்ள தனி அரசாங்கத்தையும் பார்லிமெண்டையும் கலைக்கக் கூடாது.

இந் நிபந்தனைகளில் கடைசியானது அயர்லாந்தை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்னும் நோக்கத்தை நிறைவேற்றுவது. அதைத்தான் ஐரிஷ் தேசியவாதிகள் விரும்பவில்லை. சின்னஞ் சிறு தீவான அயர்லாந்தைப் பாகிஸ்தான் செய்வது அதைச் சீர் குலைப்பதாகும். மற்ற நிபந்தனைகள் அவ்வளவு கொடூரமானவையல்ல. மேலும், அவைகளைப் பின்னால் மாற்றவும் செய்தார்கள்.

டிவேலரா இங்கிலாந்திலிருந்து திரும்பிவந்து, மந்திரி சபையிலுள்ள தம் தோழர்களைக் கலந்து பேசினார். சீமையில் இருக்கும் பொழுதும் அவர் காலின்ஸுக்கு அடிக்கடி விஷயங்களைத் தெரியப்படுத்தி யிருந்தார். நன்ருய்க் கலந்து ஆலோசித்து, ஆகஸ்டுமீ 10-ம் தேதி அவர் ஐரிஷ் ஜனங்களும் டெயில் ஐரானும் ஆங்கில அரசாங்கத்தின் திட்டத்தை ஏற்றுக்கொள்ள வழியில்லை என்று பிரதம மந்திரிக்கு ஒரு கடிதம் அனுப்ப நேர்ந்தது.

இதற்கிடையில் சிறையிலிருந்த டெயில் ஐரான் அங்கத்தினர்கள் விடுதலை செய்யப்பட்டனர். ஆனால், மரண தண்டனை பெற்றிருந்த ஸீன் மக்கியோன் மட்டும் விடப்படவில்லை. காலின்ஸ் இச் செய்தியைக் கேட்டு, வெஞ்சினங் கொண்டு, ஆகஸ்டுமீ 18-ம் தேதி கீழ்க்கண்ட

வாறு எச்சரிக்கை செய்தான்: 'தளகர்த்தன் ஸீன் மக்கியோன் விடுதலை செய்யப்பட்டாலன்றி டெயில் ஐரான் கூட முடியாது. அவனை விடுதலை செய்ய மறுப்பது தாற்காலிக சமாதானத்தை அரசாங்கம் உடைக்க வேண்டும் என்று ஆவலுற்றிருப்பதைக் காட்டுவதாகத் தோன்றுகிறது.' இந்த எச்சரிக்கையின் பயனுக அன்று மாலையே மக்கியோன் மௌண்ட்ஜாய் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டான்.

டெயில் ஐரான் முதலில் அந்தரங்கமாய்க் கூடி ஆலோசித்துவிட்டுப் பின்னர் வெளிப்படையாகக் கூடிற்று. வழக்கம்போல் மான்ஷன் மாளிகையில் ஜனங்கள் பெருந் திரளாகக் கூடியிருந்தனர். காலின்ஸ் அப்பொழுதுதான் வெளிப்படையாகத் தோன்றினன். அதுவரை அவன் முகத்தைப் பார்த்திராதவர்கள், இரண்டு வருஷ காலமாய் அரசாங்கத்தைத் திணற வைத்த அம்மாயனுடைய முகம் எப்படி இருக்கும் என்று தாங்களாகப் பலவிதமாய்க் கற்பனை செய்துகொண்டிருந்தனர். ஆனல், அவனை நேரில் கண்ட பின்பு, 'புன்னகை தவழும் முகத்துடன் கூடிய இந்த இளைஞனு இத்தனை நாள் வல்லரசை ஆட்டிவைத்தான்!' என்று அவர்கள் வியப்புற்றனர். காலின்ஸுக்கு ஜனங்கள் செய்த மரியாதைகளுக்குக் கணக்கில்லை. அவன் புகழைக் கூருதாரில்லை.

தேர்தலுக்குப் பின்னல் இதுவே டெயில் ஐரானின் முதற் கூட்டமாதலால், மீண்டும் டிவேலரா தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கிரிபித், காலின்ஸ், கதால் புருகா, காஸ்கிரேவ், ஸ்டாக், பார்ட்டன் ஆகியோர் மந்திரி சபையின் அங்கத்தினராக நியமிக்கப்பட்டனர்.

டெயில் ஐரான் லாயிட் ஜார்ஜின் சமாதானத் திட்டத்தை ஏகமனதாக நிராகரித்தது. டிவேலரா, ஆகஸ்டு மாதம் 24-ம் தேதி இவ்விஷயத்தை லாயிட் ஜார்ஜுக்கு அறிவித்தார்.

இரண்டு தினங்களுக்குப் பின்னல் பிரிட்டிஷ் பிரதமந்திரி டிவேலராவுக்குக் கண்டிப்பான ஒரு கடிதம் எழுதினர். அதில் அவர், குடியேற்ற நாட்டந்தஸ்தை அயர்லாந்து விரும்பவில்லை என்றல் அது மன்னருக்கு விசுவாசம் காட்ட மறுப்பதாயும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் ஓர் உறுப்பாக இருக்க மறுப்பதாயும் பொருள்படும் என்றும், அவர்களுடைய நோக்கத்தைத் தெளிவாய் அறிவித்துவிடும்படியும் எழுதியிருந்தார்.

இங்கிலேயில் ஐரிஷ் அரசாங்கம் தன் உத்தியோகஸ்தர்களுக்கு, ஆங்காங்குள்ள தொண்டர் படைகளின் வலிமையையும் ஜனங்களுடைய மனப்பான்மையையும் பற்றி அறிவிக்கும்படி, ரகசியமாக உத்தரவுகள் அனுப்பியிருந்தது. ராணுவ அதிகாரிகளுடைய செயல்களைப் பார்த்தால், அவர்கள் மறுபடி போர் தொடங்கும் நோக்கத்துடன் இருந்ததாய்த் தெரிந்தது. உதாரணமாக, ராணுவத் தலைமைக் காரியாலயம் பட்டாளங்களுக்குப் பின்கண்ட உத்தரவு அனுப்பியிருந்தது:

'ஒவ்வோர் உத்தியோகஸ்தனும் தன் ஸ்டேஷனைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் கலகக்காரர்கள் என்ன செய்து வருகிறர்கள் என்பதையும், எங்கெங்கு செல்லுகிறர்கள் என்பதையும் கண்டுபிடிக்க எல்லா முயற்சிகளேயும் செய்யவேண்டும். முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய விஷயங்கள்.

1. அணிவகுத்துத் தேகப்பயிற்சி செய்ய எத்தனை பேர் கூடுகின்றனர்?

2. அவர்கள் எத்தகைய ஆயுதங்களை வைத்திருக்கின்றனர்?
3. அவர்களுடைய அதிகாரிகளும் படையினரும் எத்தகைய கட்டுப்பாட்டுடன் இருக்கின்றனர்?
4. ஸ்தலத்திலுள்ள (தொண்டர் படைத்) தலைவர்களுடைய பெயர்கள் என்ன?
5. ஸ்தலத்திலுள்ள பொதுஜனங்களின் மனப்பான்மை எப்படியிருக்கிறது?
6. ஆயுத இறக்குமதி. சந்தேகப்பட்ட கப்பல்களை அறிவிக்க வேண்டியது.'

தொண்டர்களை ஒற்றர்கள் தொடர்வது போன்ற வேலைகளை நிறுத்த வேண்டும் என்று ஒப்பந்தம் செய்த பின்னும் மேற்கண்ட முறையில் உத்தரவுகள் போயின. தொண்டர் படைத் தலைவர்கள் அதிகாரிகளைக் கண்டு ஒப்பந்தத்தை அவர்களே மீறுவதை எடுத்துக் காட்டிக் கண்டித்தனர்.

நெடுநாளாகப் போராடி வந்த தொண்டர்களில் பலர், போரை நிறுத்தியதால், வேலையில்லாமல் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர். அங்கும் அவர்களால் ஒரு வேலையும் செய்ய முடியவில்லை. ஜனங்கள், அவர்களுடைய வீரச் செயல்களைக் கேட்டு, அவர்களை மட்டுக்கு மிஞ்சிப் புகழ ஆரம்பித்தனர். இப்புகழுரைகள் அவர்களை மயக்கிவிட்டன. அவர்கள், 'உண்மையில் நாம் மகா வீரர்களே!' என்று பெருமிதங் கொண்டனர். யுத்த காலத்தில் அமைதியுடனும் ஒழுக்கத்துடனும் வாழ்ந்து வந்த தொண்டர்கள், இப்பொழுது மதுவகைகளை மட்டுக்கு மிஞ்சிப் பருக ஆரம்பித்தனர். இதுவரை போராட்டங்களைக் கண்டு அஞ்சி ஒதுங்கி வாழ்ந்தவர்கள், இப்பொழுது திடீரென்று சூரர்களைப் போல்

முன்வந்து அட்டகாசஞ் செய்தனர். ஆறுமாத காலம் போராட்டத்தை நிறுத்தியதால், பொதுவாகத் தொண்டர் படையின் கட்டுப்பாடும் ஒழுக்கமும் உலைந்துவந்தன.

சமாதான காலத்திலும் புதிய தொண்டர்கள் சேர்ந்து வந்தனர். புதிதாய்ச் சேர்ந்தவர்கள் பழைய தொண்டர்களுடைய உறுதியும் கட்டுப்பாடுமின்றி, அந்நாள் வரை போராட்டங்களினால் ஏற்பட்ட துன்பங்களை உணராதவராய், மீண்டும் போர்வெறி கொண்டு நின்றனர். பல இடங்களிலும் தொண்டர்களுக்குப் பயிற்சிக்கூடங்கள் அமைக்கப்பட்டன. 19, 20 வயதுடைய வாலிபர்கள் தொண்டர் படையில் சேர்ந்து, கையில் ஆயுதங்கள் கிடைத்தவுடன் தாங்களே தேசத்தில் அதிகாரிகள் என்று எண்ணி, வீணை கலகங்களிலும் குழப்பங்களிலும் ஈடுபட்டனர். சுருங்கச் சொன்னால், தேசமெங்கும் ஒருவகையான அராஜகம் தோன்றிவந்தது.

செப்டம்பர் 12-ம் தேதி டிவேல்ரா லாயிட் ஜார்ஜின் அழைப்பை ஏற்றுக்கொண்டு, தம் கட்சியின் கொள்கையை விளக்கி அவருக்கு ஒரு கடிதம் எழுதினார். அயர்லாந்தின் தேசிய அபிலாஷைகளை அது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் சேருவதோடு சமரசப்படுத்துவதற்காக ஐரிஷ் பிரதிநிதிகள் வரவேண்டும் என்று லாயிட் ஜார்ஜ் கூறியதை அவர் ஏற்றுக்கொண்டார். ஆனால், அத்துடன் அவர் ஐரிஷ் பிரதிநிதிகளைப் பற்றியும் பின்வருமாறு கூறினார்: 'எங்கள் தேசம் தன் பரிபூரண சுதந்திரத்தை விளம்பரப்படுத்தியிருக்கிறது. அது தன்னைச் சுயேச்சையான ராஜாங்கமாகக் கருதுகிறது. அந்த ராஜாங்கத்தின் பிரதிநிதிகளாகவும், தேர்ந்தெடுக்கப்பட்ட பாதுகாப்பாளராகவுமே, நாங்கள்

எங்கள் ஜனங்களின் சார்பாக வேலை செய்ய அதிகாரமோ அல்லது சக்தியோ படைத்திருக்கிறோம்.

லாயிட் ஜார்ஜ் கடைசியாகக் கூறப்பட்ட இக்கூற்றை ஆதரிப்பதானால், அது ஐரிஷ் குடியரசை மதித்து ஏற்றுக் கொள்வதாகும். அப்படியானால் ராஜிக்குப் பேச்சே வேண்டியதில்லை. எனினும், டிவேலராவின் கடிதம் மக்ராத், போலண்டு என்னும் இருவர் மூலம் பிரதம மந்திரிக்கு அனுப்பப்பட்டது. அவர், கடிதத்தில் கண்ட விஷயப்படி பிரிட்டிஷ் அரசாங்கம் முதலிலேயே ஐரிஷ் குடியரசை மதிக்க முடியாது என்றும், ஆனால் ஐரிஷ் பிரதிநிதிகள் தங்கள் குடியரசை ஆதரித்து அதை ஏற்றுக்கொள்ளும்படி வாதாட உரிமையுள்ளவர்கள் என்றும் கூறினார். அங்கிலையில் டிவேலராவின் கடிதம் சமாதானத்திற்கே வழியில்லாது செய்ததால், அக்கடிதம் தம்மிடம் கொடுக்கப்படாததாகத் தாம் பாவிக்கத் தயாரா யிருப்பதாயும், அதைக் கொணர்ந்த தூதுவர் இருவரும் மீண்டும் அதை டிவேலராவிடம் கொடுத்து, மாற்றி எழுதும்படி சொல்லவேண்டும் என்றும் அவர் ஆலோசனை சொன்னார். தூதுவர்கள், மறுநாள் டெயில் கூட்டத்தில் அக்கடிதம் வெளிவருவதால், வாபஸ் செய்ய நேரமில்லை என்று கூறினர். ஆயினும், அவர்கள் இருக்கும் நிலைமையைக் கூறித் தாங்கள் திரும்பி வரும்வரை டிவேலரா அக்கடிதத்தை வெளியிடாமல் இருக்கும்படி ஒரு தந்தி அனுப்பினர். ஆனால், டிவேலரா மறுநாள் டெயில் கூட்டத்தில் அக்கடிதத்தை வெளியிட்டுவிட்டார்.

ஐரிஷ் பிரதிநிதிகளாகச் சமாதான மகாநாட்டுக்குச் செல்வதற்கு ஐவருடைய பெயர்கள் மேற்சொன்ன கூட்

டத்தில் உறுதிசெய்யப்பட்டன. ஆர்தர் கிரிபித், மைக்கேல் காலின்ஸ், ராபர்ட் பார்ட்டன், ஈமன் டுக்கன், ஜார்ஜ் கவான் டபி ஆகிய ஐவருமே அப்பிரதிநிதிகள். டிவேலரா தாம் குடியரசின் சின்னமாகத் தாய்நாட்டிலேயே தங்கவேண்டும் என்றும், மற்றவர்கள் சென்றால் போதும் என்றும் கூறினர். அவருடைய தீர்மானத்தைக் கண்டு மற்ற நண்பர்கள் வருந்தினர். ஏனெனில், ராஜிப் பேச்சில் முக்கியமான ஒவ்வொரு பிரச்னையையும் அவரிடம் கலந்துகொள்ள வேண்டியிருந்தது.

டிவேலரா தாம் பிரதம மந்திரிக்கு எழுதிய கடிதத்தை வெளியிட்டுவிட்டதால், பிரதம மந்திரி சமாதானம் பேசுவதற்குத் தாம் அனுப்பிய அழைப்பை வாபஸ் வாங்கிக்கொண்டார்.

இதன் பிறகு அவ்விருவரும் தந்திகள் மூலமாயும் கடிதங்கள் மூலமாயும் தத்தம் கருத்தை விளக்கிக்கொண்டனர். டிவேலரா, ஆங்கில அரசாங்கம் ஐரிஷ் குடியரசை முன்கூட்டியே ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை என்றும், தங்கள் பிரதிநிதிகள் தாங்கள் குடியரசின் சார்பாக வருவதாக எண்ணுவதைத் தடுக்க முடியாது என்றும், முன்னால் மந்திரியைக் கண்டு பேசும் பொழுது தாம் குடியரசின் தலைவர் என்பதை மனத்தில் வைத்துக்கொண்டே பேசியதாயும் அறிவித்தார். முடிவில், லண்டனில் சமாதான மகாநாட்டைக் கூட்ட ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆகஸ்ட்டு மாத ஆரம்பத்தில் டெயில் ஐரானின் விதிகள் திருத்தியமைக்கப்பட்டு ஒரு புதிய மந்திரி சபையும் அமைக்கப்பட்டது. புதிய மந்திரி சபை அங்கத்தினரின் விவரமாவது :

டிவேலரா—பிரதம மந்திரி, ஆர்தர் கிரிபித்—அந்நிய நாட்டு மந்திரி, மைக்கேல் காலின்ஸ்—வரவு செலவு மந்திரி, ராபர்ட் பார்ட்டன்—பொருளாதார மந்திரி, காஸ்கிரேவ்—ஸ்தல ஸ்தாபன மதிரி, ஆஸ்டின் ஸ்டாக்—உள்நாட்டு மந்திரி, கதால் புருகா—பாதுகாப்பு மந்திரி.

சமாதான மகாநாட்டிற்குப் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பாக லாயிட் ஜார்ஜ், ஆஸ்டின் சேம்பர்லேன், லார்டு பர்க்கன்ஹெட், வின்ஸ்டன் சர்ச்சில், ஸர் வொர்திங்டன் இவான்ஸ், ஸர் ஹமார் கிரீன்வுட் ஆகிய அறுவரும் பிரதிநிதிகளாய் நியமிக்கப்பட்டிருப்பதாய் அக்டோபர் மாதம் 7-ம் தேதி அறிவிக்கப்பட்டது. முக்கியமான அரசியலமைப்பு சம்பந்தமான பிரச்னைகளில் ஆலோசனை கூற அட்டர்னி ஜெனரல் ஸர் கார்டன் ஹிவார்ட்டும் மகாநாட்டின் அங்கத்தினராய்க் கருதப்படுவார் என்றும் கூறப்பட்டது.

அக்டோபர் மாதம் 8-ந் தேதி ஐரிஷ் பிரதிநிதிகளில் காலின்ஸைத் தவிர மற்றையோர் லண்டனுக்குப் புறப்பட்டுச் சென்றனர். அங்குள்ள ஐரிஷ்காரர்கள் அவர்களைக் குதூகலத்துடன் வரவேற்றனர். லண்டன் நகரில், 'ஹான்ஸ் பிளேஸ்' என்னுமிடத்தில், அவர்கள் தங்குவதற்கு டெயில் ஐரான் செலவில் ஒரு பெரிய மாளிகை அமர்த்தப்பட்டது. 'கடொகன் கார்டன்'ஸில் மற்ருெரு வீடும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அக்டோபர் மாதம் 9-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவுதான் காலின்ஸ் புறப்பட்டான். அவன் பிறருக்குத் தெரியாமலே லண்டனில் இறங்கி நேராக ஹான்ஸ்பிளேஸுக்குச் சென்ருன். அவனுக்கு வரவேற்பு முதலிய வைபவங்கள் பிடிக்காததால்தான், இவ்வாறு ரகசியமாய்ச் சென்ருன். எந்த நாட்டின் கொடுங் கோலை

எதிர்த்து அவன் இரவு பகலாய்க் கடும் போர் புரிந்தானே, அந்நாட்டின் ஹிருதயமான லண்டன் மாநகரின் நடுவே, அயர்லாந்தின் தூதனாக அவன் விளங்கியது காலத்தின் மாறுதலைக் காட்டியது.

இங்கு நாம் டெயில் ஐரான் மந்திரி சபையினுள்ளே புகைந்துவந்த குழப்ப மொன்றைக் குறிப்பிட வேண்டியது அவசியம். கதால் புருகா காலின்ஸிடம் வெறுப்படைந்து, முன்னால் ஆயுதங்கள் வாங்கிய வகையில் காலின்ஸ் பண விஷயத்தில் நம்பிக்கைக் குறைவாய் நடந்துகொண்டதாக எண்ணினான். ஆஸ்டின் ஸ்டாக்கும் காலின்ஸிடம் கொண்டிருந்த அன்பைத் துறந்தான். டிவேலரா நடுநிலைமை வகித்தார். அதனால் அவருக்கும் காலின்ஸுக்கும் இடையில் பிளவு ஏற்படும்போல் தோன்றியது. இவ்வாறு சிறிதாகக் காணப்பட்ட புகையின் நடுவே, பின்னால் தேசமெங்கும் பற்றி எரியக்கூடிய பெரு நெருப்பு மறைந்து நின்றுகொண்டிருந்தது.

15

உடன்படிக்கை

லண்டனில் காலின்ஸ் 'கடொகன் கார்டன்'ஸில் தங்கியிருந்தான். ஐரிஷ் பிரதிநிதிகள் எவரும் ஆங்கிலேயர் நடத்தும் விருந்துகளிலும் கச்சேரிகளிலும் கலந்து கொள்ளக்கூடாது என்று அவர்களுக்குள் ஒரு தீர்மானம் செய்துகொண்டு, அதன்படி நடந்துவந்தனர். அவர்

களுக்கு உதவியாக வேலைக்காரர்களும், காரியதரிசிகளும் அயர்லாந்திலிருந்தே வந்திருந்தனர்.

சமாதான மகாநாட்டின் முதற் கூட்டம் அக்டோபர் மாதம் 11-ம் தேதி பகல் 11 மணிக்கு டௌனிங் தெருவில் கூடிற்று. மகாநாட்டின் ஆரம்பத்திலேயே திகைப்பை உண்டாக்கும் ஒரு சம்பவம் நேர்ந்தது. ஐரிஷ் பிரதிநிதிகள் தாங்கள் ஸர் ஹமார் கிரீன்வுட்டுடன் கைகுலுக்க முடியாது என்று லாயிட் ஜார்ஜுக்கு முன்கூட்டியே அறிவித்தனர். கிரீன்வுட் அயர்லாந்துக்குச் செய்த கொடுமைகளெல்லாம் முன்னால் விவரிக்கப்பட்டிருக்கின்றன. அவருடன் ஐரிஷ் தேசியவாதிகள் கைகுலுக்குவதற்கு மறுத்தது இயற்கையேயாகும். லாயிட் ஜார்ஜ், ஆரம்பத்திலேயே மனக்கசப்பை விளைவிக்கும் இக்காரியம் நிகழாமலிருப்பதற்கு, ஒரு தந்திரம் செய்தார். பேசக்கூடிய அறையின் நடுவேயுள்ள பெரிய மேஜையின் முன்னால் அவர் நின்றுகொண்டு, முதலாவது ஐரிஷ் பிரதிநிதிகளை மேஜையின் ஒரு பக்கத்திற்கு அனுப்பி விட்டு, ஆங்கிலப் பிரதிநிதிகளைப் பின்னால் வரவேற்று மேஜையின் மறுபக்கத்திற்கு அனுப்பினார். அதன் பின்னர், அவர் இருகட்சியினரையும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்துவைத்தார். இந்தத் தந்திரத்தினால் பிரதிநிதிகள் ஒருவரை யொருவர் கைகுலுக்கவேண்டிய அவசியமே இல்லாமற் போயிற்று.

இரு கட்சியாருக்கும் பொதுவான அக்கிராசனரை நியமித்துக் கொள்ளாமல், ஐரிஷ் பிரதிநிதிகள் கிரிபித்தைத் தலைவராகவும், ஆங்கிலப் பிரதிநிதிகள் லாயிட் ஜார்ஜைத் தலைவராகவும் நியமித்துக்கொண்டனர்.

இருபக்கத்தாரும் மேற்கொண்டு என்ன நடக்கப் போகிறது என்று எதிர் நோக்கி யிருந்தனர். அவர்கள் சந்தித்தது அதுவே முதன்முறை ஆகையால், ஒருவரை ஒருவர் உன்னிப்பாய்ப் பார்த்தவண்ணம் இருந்தனர். முக்கியமாக ஆங்கிலப் பிரதிநிதிகள் தாங்கள் வெகு நாளாய்க் கேள்விப்பட்டிருந்த காலின்ஸின் முகத்தைக் கவனித்துப் பார்த்தனர். அறையில் அமைதி நிலவி யிருந்தது. லாயிட் ஜார்ஜ் மகாநாட்டை ஆரம்பித்து வைத்து ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். ஆர்தர் கிரிபித்தும் அதற்குத் தக்கபடி இனிமையாக மறுமொழி பகர்ந்தார்.

பிரதம மந்திரி பேசியபொழுது, டெயில் ஐரானைக் குறிப்பிடுகையில், 'உங்கள் பார்லிமெண்ட்' என்றும், டெயில் மந்திரி சபையை 'உங்கள் அரசாங்கம்' என்றும் அழைத்த வார்த்தைகளை ஐரிஷ் பிரதிநிதிகள் நன்கு கவனித்தனர். இதே டெயில் ஐரானும் அதன் மந்திரி சபையுமே சட்ட விரோதமான ஸ்தாபனங்களாகக் கருதப்பட்டு, சில மாதங்களுக்கு முன் அதன் அங்கத்தினர்கள் சிறை வைக்கப்பட்டனர். இப்பொழுது அவை பிரதம மந்திரியால் சம அந்தஸ்துடன் அழைக்கப்பட்டன! அரசியல் சூதாட்டத்தில் சமயத்துக்குத் தக்கபடி ராஜ தந்திரிகள் காய்களை உருட்டுவது இயற்கையே யன்றோ!

மகாநாடு தினந்தோறும் கூடி ஆலோசித்து வந்தது. கடற்படை, ராணுவம், வரவு செலவு முதலிய விஷயங்களை இரு நாடுகள் சம்பந்தமாகவும் எப்படி முடிவு செய்ய வேண்டும் என்று விவாதங்கள் நடைபெற்றன. தாற்காலிக சமாதான உடன்படிக்கை சம்பந்தமாக எந்தப் பிரச்னைகளைத் தீர்ப்பதிலும் மிகுந்த நேரம் செல

விடப்பட்டது. ஆனால், அயர்லாந்துக்கும் ஆங்கில மன்னருக்கும் உரிய சம்பந்தம், வடகிழக்கு அல்ஸ்டருடைய நிலைமை ஆகிய முக்கியமான விஷயங்களை விவாதத்திற்குக் கொண்டுவர நாளாயிற்று.

மகாநாட்டின் 'சப்-கமிட்டிகள்' ஒவ்வொன்றிலும் காலின்ஸ் ஸ்தானம் பெற்று அரிய ஊழியம் செய்து வந்தான். ராணுவ விஷயங்களிலும், சிக்கலான பொருளாதார விஷயங்களிலும் அவன் காட்டிய திறமை ஆங்கிலப் பிரதிநிதிகளையும் ஆச்சரியப்படும்படி செய்தது. சிரித்தும், நகைச் சுவை ததும்பும்படியும் பேசிக்கொண்டிருந்த காலின்ஸின் அபாரமான புத்திக் கூர்மையைக் கண்டு பர்க்கன்ஹெட் பிரபுகூட மயங்கிவிட்டார்.

லண்டன் நகரிலுள்ள ஐரிஷ்காரரேயன்றி ஆங்கிலேயரும் காலின்ஸைக் காண ஆசைகொண்டிருந்தனர். 'அவன் பெரிய சதியாலோசனைக்காரன்', 'இரத்த வெறி கொண்டு போராடுவோன்' என்றெல்லாம் அவர்கள் கேள்விப்பட்டிருந்ததால், உண்மையான காலின்ஸை நேரில் வந்து பார்த்து மகிழ்ந்தனர். இதனால் காலின்ஸுக்கு லண்டனில் பல புதிய நண்பர்கள் கிடைத்தனர்.

காலின்ஸ் சமாதான மகாநாட்டிலும் 'சப்-கமிட்டி'களிலும் வேலைசெய்ததோடு, இடையிடையே அயர்லாந்துக்கும் சென்றுவர வேண்டியிருந்தது. அவனுடைய உளவு இலாகாவுக்கும் வரவு செலவு இலாகாவுக்கும் வேண்டிய ஆலோசனைகளைக் கூறவேண்டியிருந்தது. டோபினும் கல்லெனும் அடிக்கடி லண்டனுக்கு வந்து அவனுடன் கலந்து பேசினர். லண்டனில் இருக்கும்பொழுது காலின்ஸ் தனக்குக் கிடைத்த சொற்ப ஓய்வு

நேரத்தைத் தன் சகோதரி ஜோஹன்னுவுடன் செலவிட்டு வந்தான்.

இரவில் வெகுநேரம் வரை அவன் விழித்திருக்க வேண்டியிருந்தது. ஆயினும், அவன் அதிகாலையில் எழுந்திருந்து வெளியே சென்று வேலை பார்த்து விட்டுக் காலை ஆகாரத்திற்கு மீண்டும் அங்கு வருவது வழக்கம். சிறையிலிருந்த ஒற்றனை பிராய் விடுதலையடைந்து அவனுக்கு உதவியாக வந்திருந்தான். காலை நேரத்தில் காலின்ஸ் வெளியே செல்லும் பொழுது சில சமயங்களில் பிராய் அவனுக்குத் தெரியாமல் தொடர்ந்து செல்வதுண்டு. பிராய்க்கு எந்த நேரமும் காலின்ஸுக்கு ஏதாவது அபாயம் உண்டாகுமே என்று பயம் இருந்து வந்தது. காலின்ஸ் எத்தனையோ வேலைகளுக்கிடையில் தன்னுடைய மதக் கடமைகளிலும் வழுவுவதில்லை. அவன் கோவிலுக்குச் செல்வதும் பிரார்த்தனை செய்வதும் அவன் நண்பர்களுக்குக் கூடத் தெரியாது. அவர்கள் உறங்கிக்கொண்டிருக்கும் பொழுதே, அவன் எழுந்திருந்து தன் வேலைகளை முடித்துக்கொள்வான். அதிகாலையில் எழுந்திருந்து அவன் உறங்கிக்கொண்டிருக்கும் தோழர்களைக் காலைப் பிடித்து இழுப்பதும், அவர்கள் போர்வைகளை எடுத்தெறிவதும் வழக்கம். இத்தனைக்கும் அவன் இரவில் படுக்கச் செல்லும் நேரம் 12 மணிக்கு மேலாகும்.

ஜீவாதாரமாய்க் கருதப்பட்ட பிரச்னைகளாகிய பிரிட்டிஷ் சம்பந்தம்; வடகிழக்கு அல்ஸ்டர் ஆகிய இரண்டும் முடிவாக விவாதிக்கப்பட்டன. ஸர் ஜேம்ஸ் கிரெய்க்கும் அவர் மந்திரிசபையும் அயர்லாந்து முழுவதற்கும் பொதுவான ஒரே அரசாங்கத்தின் கீழிருக்க

மறுத்ததால், அல்ஸ்டர் பிரச்னை தீர்க்க முடியாமல் இருந்தது. பிரிட்டிஷ் சர்க்காரும் அவர்களைக் கட்டாயப் படுத்த மறுத்தது. எனவே, அவ்விஷயத்தில் ஐரிஷ் பிரதிநிதிகள் விட்டுக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதனால் அயர்லாந்து இரண்டாகப் பிரிக் கப்பட்டது.

இடையில் மகாநாடு முறிந்துவிடும் போலிருந்தது. ஆனால், முடிவாக டிசம்பர்மீ 5-ம் தேதி மாலை 5-மணிக்கு ஆரம்பமான கூட்டம் மறுநாள் காலை 2-30 மணிவரை நடைபெற்றது. அப்பொழுதுதான் சமாதான உடன் படிக்கையை முடிவு செய்து, இரு கட்சியாரும் அதில் கையெழுத்திட்டனர்.

சமாதான உடன்படிக்கையின் முக்கியமான ஷரத் துக்களின் சுருக்கம் கீழேயுள்ளது :

1. அயர்லாந்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் கானடா, ஆஸ்திரேலியா, நியூஜீலந்து, தென் ஆபிரிகா முதலிய குடியேற்ற நாடுகளுக்கு நிகரான அரசியல் அந்தஸ்தைப் பெறுகின்றது. அமைதி, ஒழுங்கு, நல்லரசாங்கம் ஆகிய வற்றை நிலைநிறுத்த வேண்டிய சட்டங்களைச் செய்வதற்கு அதற்கு ஒரு பார்லிமெண்ட் உண்டு. பார்லிமெண்டுக்குப் பொறுப்புள்ள ஒரு நிர்வாக அரசாங்கமும் உண்டு. அந்த நிர்வாக அரசாங்கம் 'ஐரிஷ் பிரீஸ்டேட்' எனப் பெயர் பெறும்.

2. பின்னால் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு, ஐரிஷ் பிரீஸ்டேட் பிரிட்டிஷ் பார்லிமெண் டோடும், அரசாங்கத்தோடும் பெறும் சம்பந்தம் கானடாவி னுடையதைப் போலவே இருக்கும். பிரீஸ்டேட்டுக்குப் மன்னர்பிரானுக்கும் அல்லது அவர் பிரதிநிதிக்கும், பார்லி

மெண்டுக்குமுள்ள சம்பந்தம் கானடா கொண்டுள்ள சம்பந்தத்தைப் போலவே இருக்கும்.

3. கானடாவுக்கு ராஜப் பிரதிநிதி நியமிக்கப்படுவதைப் போலவே அயர்லாந்துக்கும் பிரதிநிதி நியமிக்கப்படுவார்.

4. ஐரிஷ் பிரீஸ்டேட் பார்லிமெண்டின் அங்கத்தினர் ஒவ்வொருவரும், பிரீஸ்டேட் அரசியல் அமைப்புக்கு விசுவாசமா யிருப்பதோடு, மேன்மை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் மன்னருக்கும், அவர் வாரிசுகளுக்கும், சட்ட பூர்வமாகப் பின் பட்டத்துக்கு வருபவர்களுக்கும் விசுவாசமா யிருப்பதாகப் பிரமாணம் செய்யவேண்டும்.

5. பிரிட்டிஷ் அரசாங்கமும் ஐரிஷ் அரசாங்கமும் ஓர் ஏற்பாடு செய்துகொண்டு, ஐரிஷ் பிரீஸ்டேட் பொறுப்பு ஏற்றுக்கொள்ளும் வரை, ஐரிஷ் கடற்கரையைப் பிரிட்டிஷ் படைகளே பாதுகாக்கவேண்டியது.

6. அயர்லாந்தின் பாதுகாப்புக்காக ஏற்படுத்தப்படும் ராணுவம், இங்கிலாந்தின் ஜனத்தொகைக்கு அங்கு எவ்வளவு ராணுவம் இருக்கிறதோ, அதே விகிதப்படி அயர்லாந்தின் ஜனத்தொகைக்குத் தக்க அளவுக்கு மேற்படாதபடி இருக்கவேண்டும்.

7. ஆங்கிலக் கப்பல்கள் ஐரிஷ் துறைமுகங்களில் தங்குவதற்கும், ஐரிஷ் கப்பல்கள் ஆங்கிலத் துறைமுகங்களில் தங்குவதற்கும் உரிமையுண்டு. ஆனால் எல்லாக் கப்பல்களும் துறைமுகங்களில் கட்டவேண்டிய கட்டணங்களைச் செலுத்தவேண்டும்.

8. வட அயர்லாந்தின் பார்லிமெண்டின் சம்மதமில்லாமல் தென் அயர்லாந்தின் பார்லிமெண்டு அதன் மேல் ஆதிக்கம் செலுத்த முடியாது.

ஐரிஷ் பிரதிநிதிகளுக்கும் இங்கிலாந்துக்கும் உடன்படிக்கை முடிவாகிவிட்டதென்ற செய்தியைக் கேட்ட ஐரிஷ் மக்களிடையே பரபரப்பு ஒன்றையுங் காணவில்லை. அவர்கள் சென்ற ஆறுமாத காலமாய் நிலைமை எப்படி மாறுகிறதோ என்று கொண்டிருந்த சந்தேகமும் பயமும் நீங்கி, யுத்தம் சமாதானம் இரண்டுக்கும் இடையே திரிசங்கு நிலையில் நிற்பது ஓய்ந்தது என்று மகிழ்ச்சியுற்றனர். சென்ற மூன்று வருஷ காலமாய் நடந்துவந்த போராட்டம் காரணமாக, அவர்கள் டெயில் ஐரானின் மந்திரிசபையில் அளவற்ற நம்பிக்கை கொண்டிருந்தனர். எப்படியாவது மந்திரிசபையார் தேசத்திற்கு விடிவு காலத்தையும் அமைதியையும் கொண்டுவருவர் என்பது அவர்களின் நம்பிக்கை.

இங்கிலாந்துடன் சம்பந்தம் வைத்துக்கொள்ளாது அயர்லாந்து தனித்த குடியரசாகிவிட வேண்டும் என்ற பூரண சுயேச்சைக் கொள்கையுடையோர் உடன்படிக்கையை வெறுத்துப் பேச ஆரம்பித்தனர். ஆங்கில மன்னருக்கு விசுவாசம் காட்டுவதை அவர்கள் ஆட்சேபித்தனர். மற்றும் சில தேசாபிமானிகள், சிறிய தீவான அயர்லாந்தில் வடக்கிலும் தெற்கிலும் இரண்டு அரசாங்கங்கள் ஏற்படப் போவதைக் கண்டு, தேசத்தை இரண்டாக வெட்டுவதை ஆட்சேபிக்காமல் ஐரிஷ் பிரதிநிதிகள் ஏற்றுக்கொண்டதற்காக வருந்தினர்.

பொதுஜனங்களோ, சென்ற 30-வருஷங்களாகப் பார்லிமெண்டுக் கட்சியாருடன் சேர்ந்து போராடி ஒன்றும் கிடைக்காமல், எந்தச் சுய ஆட்சி மசோதாவும் அளிக்காத பெரிய சீர்திருத்தத்தைப் புதிய 'குடியேற்ற நாட்டு அந்தஸ்து' அளித்ததால், அது ஒரு பெரும்

வெற்றி என்று கருதினர். இங்கிலாந்துடன் சமாதானம் செய்துகொள்வது என்றால், எதையாவது விட்டுக் கொடுத்தால்தான் முடியும் என்பதை அவர்களிற் பலர் உணர்ந்திருந்தனர். உடன்படிக்கையைப் பற்றிச் சாதக மாகவும் பாதகமாகவும் அபிப்பிராயங்கள் கூறப்பட்டன. இந் நிலைமை ஏற்பட்டது இயற்கையேயாகும். ஏனெனில், உடன்படிக்கை குடியரசைக் கொண்டு வரவில்லை; ஆனால் அது ஒன்றையும் கொண்டு வராமலும் இல்லை. அதன் மூலம் அயர்லாந்து விசேஷ வளர்ச்சி அடைவதற்கு மட்டும் சுதந்திரம் கிடைத்திருந்தது.

இந்நிலையில் டிசம்பர் 9-ம் தேதி டிவேலரா பின் கண்ட கடிதம் ஒன்றைப் பத்திரிகைகளில் வெளியிட்டார்:

'ஐரிஷ் மகாஜனங்களுக்கு:

'கிரேட் பிரிட்டனோடு செய்துகொள்ளவேண்டிய உடன் படிக்கையின் வாசகம் பத்திரிகைகளில் வெளிவந்திருப் பதை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள்.

'சென்ற மூன்று வருஷங்களாகத் தொடர்ச்சியாக நடந்த தேர்தல்களின் மூலம் வெளியிடப்பட்டுள்ள இந் நாட்டாரில் பெரும்பான்மையோருடைய அபிலாஷை களோடு இந்த ஒப்பந்தத்தின் ஷரத்துக்கள் மிகவும் முரண் படுகின்றன.

'தேசத்தாரோ, டெயில் ஐரானோ; இந்த உடன்படிக் கையை ஏற்றுக்கொள்ளும்படி நான் சிபார்சு செய்ய முடியாது என்பதை உங்களுக்குத் தெரிவிக்க வேண்டியது என் கடமை என்று கருதுகிறேன். உள்நாட்டு மந்திரி யும் பாதுகாப்பு மந்திரியும் இவ்விஷயத்தில் என்னை ஆத ரித்து நிற்கின்றனர்.

'அடுத்த புதன்கிழமை டெயில் ஐரானின் பகி ரங்கக் கூட்டம் ஒன்று கூடுவதற்கு அழைப்பு அனுப்பப்

பட்டிருக்கின்றது. இதுவரை இருந்ததுபோல் இடைக்காலத்தில் கட்டுப்பாட்டுடன் இருக்கும்படி நான் ஜனங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். மந்திரி சபை அங்கத்தினர் தங்களுக்குள் அபிப்பிராய பேதங்கள் இருப்பினும், தங்களுடைய உத்யோகங்களை வழக்கம்போல் பார்த்துவரத் தயாரா யிருக்கின்றனர்.

'(நமது) படை ராஜீய நிலைமையால் பாதிக்கப்படாமல், பழைய அதிகாரிகளின் உத்தரவுகளுக்குக் கட்டுப்பட்டு இருந்து வருகிறது.

'நம் ஜனங்களுக்குப் பெருஞ் சோதனை வந்திருக்கின்றது. மனக்கசப்பும், ஒருவரையொருவர் பழித்துக் கூறுவதுமின்றி, நாம் அதைக் கண்யத்துடன் ஏற்றுக்கொள்ளுவோம். சட்ட பூர்வமாக, நம்முடைய ராஜீய வேற்றுமைகளை ஒழித்துக்கொள்ளக் குறிப்பிட்ட வழி இருக்கிறது. நாம் அதிலிருந்து விலகக் கூடாது. மந்திரி சபையாருடைய நடத்தை தேச மக்கள் அனைவருக்கும் வழிகாட்டியா யிருக்கவேண்டும்.'

ஜனங்களுக்கு டெயில் மந்திரி சபைக்குள் ஏற்பட்டு வந்த வேற்றுமைகளும் விகற்பங்களும் நன்ருய்ப் புரியவில்லை. டிவேலரா, கதால் புருகா, ஸ்டாக் கூட்டத்தாருக்கும், ஆர்தர் கிரிபித் காலின்ஸ் கூட்டத்தாருக்கும் இடையே பெரிய மனஸ்தாபம் வளர்ந்து வந்ததை அவர்கள் உணர்ந்துகொள்ள வெகு நாளாயிற்று. டிசம்பர் 14-ம் தேதி டெயில் ஐரான் கூடிய பொழுது, அவர்கள் எல்லாத் தலைவர்களையும் வேற்றுமையின்றிப் பாராட்டி வரவேற்றனர். அக்கூட்டத்தில் டிவேலரா, ஐரிஷ் பிரதிநிதிகள் உடன்படிக்கையை முடிவு செய்வதற்கு முன்ஞல், அதன் நகலைத் தம்மிடம் காட்டிச் சம்மதம் பெறுவதாய்ச் சொன்னதாயும், அவர்கள் அவ்

வாறு செய்யத் தவறிவிட்டனர் என்றும், குறை கூறினர். கிரிபித் உடனே எழுந்து தாங்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை மீறி நடக்கவில்லை என்று கூறினர். காலின்ஸ் அடுத்தாற்போல் முன்வந்து, தங்கள் பிரதிநிதிக் கூட்டத்திற்கு, ராஜிபேசவும், உடன்படிக்கையையோ உடன்படிக்கைகளையோ முடிவு செய்யவும் டெயில் ஐரான் அதிகாரம் கொடுத்துத் தீர்மானித்திருந்ததை விளக்கிப் பேசினன். மேலும், அவன் தாங்கள் செய்துள்ள உடன்படிக்கையைப் பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ளவோ, நிராகரிக்கவோ டெயில் ஐரான் உரிமை பெற்றிருப்பதையும் சுட்டிக் காட்டினன். இதன் பின்னர் டெயில் அந்தரங்கமாய்க் கூடவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

டெயிலின் ரகசியக் கூட்டத்திலும் விசேஷ முற்போக்கடைய வழியில்லை. டிவேலரா உடன்படிக்கையைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு அறிவிக்கும் முறையில் தீர்மானிக்க வேண்டினர். ஆனல், கிரிபித் உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினர். அயர்லாந்தின் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றிப் பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது:

'சென்ற சில வருஷங்களில் ஐரிஷ் மக்களின்மீது ஒரு போர் தொடுக்கப்பட்டது. ஐரிஷ் மக்களும் தங்களைப் பாதுகாத்துக் கொண்டனர். தலைவர் டிவேலரா அமெரிக்காவிலிருக்கும் காலத்தில் அப் பாதுகாப்புக்காகச் செய்யப்பட்ட காரியங்களின் பொறுப்பு எனக்கு இருந்தது. நானும் அதை ஏற்றுக்கொண்டேன். மறுபடி அதே நிலைமைகளில் நான் அப்பொறுப்பை ஏற்றுக்கொள்ளச் சித்தமாயிருக்கின்றேன். அயர்லாந்து, அப்பொழுது தன் வாழ்வைத் தாக்கியும், தன்

சுதந்திரத்தை மறுத்தும் வந்த ஒரு பகைவனுடன் போராடி வந்தது. இப்பொழுது அளிக்கப்பட்டுள்ளதை மறுப்பதால் ஏற்படும் போராட்டத்தில், உலகத்தின் அநுதாபமும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலுள்ள நாடுகளுடைய அநுதாபமும் எதிராக இருக்கும். அத்தகைய பயனற்ற போரில் மனச்சாட்சிப்படி நடக்கும் எந்த ஐரிஷ்காரனும் ஓர் ஐரிஷ்காரனுடைய உயிருக்குக்கூடப் பொறுப்பேற்றுக்கொள்ள மாட்டான் என்று நான் நம்புகிறேன்.'

உடன்படிக்கையை உறுதிப்படுத்த வேண்டும் என்னும் தீர்மானத்தை ஸீன் மக்கியோன் ஆமோதித்தான். பின்னர் காலின்ஸ் ஆதரித்தான். தன் பேச்சில் துவேஷமோ பகைமையோ புகுந்துவிடாமல், அவன் எச்சரிக்கையாகவும் தீவிரமாகவும் பேசினன். ஐரிஷ் பிரதிநிதிகள் ஆங்கிலேயரின் ஏமாற்ற வலையில் சிக்கிவிட்டதாக ஓர் அங்கத்தினர் குறை கூறியதைக் கேட்டு, அவன், சென்ற 5 வருஷ காலமாகத் தான் அவ்வலையில் சிக்காமல் இருந்ததை எடுத்துக்காட்டி, இப்பொழுதும் தான் ஏமாறவில்லை என்று கர்ஜித்தான். 'உடன்படிக்கையை இப்பொழுது ஆட்சேபிப்பவர்கள் பிரதிநிதிகளை நியமிக்கும் பொழுதே தங்கள் கருத்தை வெட்ட வெளிச்சமாக ஏன் கூறவில்லை?' என்று வினவினன்.

அடுத்தாற்போல், டிவேலரா உடன்படிக்கையை எதிர்த்துப் பேசினர். குடியரசைப் பாதுகாப்பதாகத் தாங்கள் இதுவரை ஜனங்களிடம் கூறி வந்ததைப் பொய்யாக்கக் கூடாது என்றும், முன் நடந்த தேர்தல்களிலெல்லாம் தாங்கள் குடியரசின் பெயராலேயே தேர்ந்தெடுக்கப் பெற்றதாயும் அவர் விரித்துரைத்தார்.

உடன்படிக்கையைக் குறித்துச் சாதகமாகவும் பாதகமாகவும் டெயில் ஐரானில் நிகழ்ந்த சொற்பொழிவுகள்

எவையும் போற்றத்தக்கனவா யில்லை. அங்கத்தின பலர் தனி மனிதர்களிடம் தாம் தாம் கொண்ட துவே ஷத்தை வெளிக்காட்ட அதை ஒரு சந்தர்ப்பமாக உ யோகித்துக்கொண்டனர். ஐரிஷ் போராட்டத்தின் முது கெலும்பாய் விளங்கிய காலின்ஸின் ஆதரவை கொண்டு, கிரிபித் உடன்படிக்கையை ஏற்றுக்கொண் தீரவேண்டும் என்று கூறினார். டிவேலரா தேசத்தின் முடிசூடா மன்னராயும், முற்காலத்தில் இருந்த பார்ன போன்ற தேசாபிமானிகளைக் காட்டிலும் பன்மடங் அதிகமான செல்வாக்கைப் பெற்றும் விளங்கியதால் அவர் கட்சியையும் எளிதாகத் தள்ள முடியவில்லை. அவ ருடைய நண்பர்கள் அவர் எதற்கும் விட்டுக் கொடுக்க கூடாது என்று ஆலோசனை கூறினர். இதுவரை தேசத்தில் மகத்தானதோர் அரசியல் பிரச்னை டெயில் ஐரான் தீர்க்கவேண்டிய சந்தர்ப்பம் வாய்க் வில்லை. இப்பொழுது, அயர்லாந்தின் வாழ்வை பாதிக்கக் கூடிய இப்பிரச்னையைப் பரிசீலனை செய் தில், அதன் அங்கத்தினர்கள் வல்லவர்களாகத் தோன்ற வில்லை. உடன்படிக்கையோ, டெயில் ஐரானை இரண்டாக வெட்டியது!

கடைசியாக 1922 ஜனவரி 7-ம் தேதி உடன்படிக் கையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்னும் தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டது. 64-பேர் சாதகமாயும், 57-பேர் பாதகமாயும் வாக்களித்தனர். எனவே, உடன்படிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

முடிவில் காலின்ஸ் எழுந்து நின்று, தன் உள்ளத் தில் கட்டி வைத்திருந்த உணர்ச்சிகளை யெல்லாம் தெரிந்தெடுக்கப்பட்ட அருமையான சொற் கோவையாக

வெளியிட்டான். ஆங்கிலேயர் கையிலிருந்து பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் நெருக்கடியான அச்சந்தர்ப்பத்தில் தேசத்தின் அமைதியைப் பாதுகாக்க வேண்டியது அவசியம் என்றும், எந்தக் கட்சியும் தான் வெற்றியோ தோல்வியோ அடைந்ததாக வெறிகொண்டு ஆடக் கூடாது என்றும், எதிர்க் கட்சியிலும் எத்தனையோ உத்தமர்கள் இருப்பதைத் தான் அறிந்திருப்பதாயும், டிவேலராவிடம் தான் என்றும் அன்பில் குறைந்திருக்கவில்லை என்றும் அவன் உருக்கமாகப் பேசினான்.

எவ்வாறுவது தேசத்தில் அமைதி ஏற்படுவதைக் கண்டு, பொதுஜனங்கள் களிப்படைந்து, எங்கும் ஆரவாரம் செய்தனர். ஆனால், நிலைமையை உள்ளவாறு அறிந்தவர்கள், பெரு மகிழ்ச்சிக்கு இடமில்லை என்றும், எதிர்காலத்தில் என்னென்ன அபாயங்கள் நேருமோ என்றும் கலங்கினர்.

16

சோதரர் பூசல்

[1922 ஜனவரி—ஏப்ரல்]

ஜனவரி மாதம் 9-ம் தேதி டெயில் ஐரான் மறுபடி கூடியது. கூட்ட ஆரம்பத்திலேயே, டிவேலரா, தம் தலைமைப் பதவியை ராஜிநாமா செய்வதாயும், மேற்கொண்டு அரசாங்கத்தை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படியும் கூறினர். அதன்பின்

காலின்ஸ் எழுந்திருந்து பொதுஜனப் பாதுகாப்பிற்காக ஒரு கமிட்டியை நியமிக்க வேண்டும் என்றும், அவசியமானால் இரு கட்சிகளிலிருந்தும் அதற்கு அங்கத்தினர்களை எடுத்துக்கொள்ளலாம் என்றும் ஆலோசனை கூறினான். அச்சமயத்தில் ஸ்ரீமதி கிளார்க் டிவேலராவை மீண்டும் ஐரிஷ் குடியரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று பிரேரேபித்தாள். காலின்ஸ், டிவேலராவையே மீண்டும் தேர்ந்தெடுக்கும் பட்சத்தில், பொதுஜனங்கள் தங்களைக் கேவலமாகக் கருதுவார்கள் என்று விளக்கினான். ஆயினும், உடன்படிக்கைக்கு விரோதமாயுள்ளவர்கள் டிவேலராவையே தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று பிடிவாதம் செய்தனர். முடிவில் ஓட் எடுக்கப்பட்டது. டிவேலராவுக்கு விரோதமாக 60 வாக்கும், ஆதரவாக 58-ம் கிடைத்ததால், அவர் தோல்வியுற்றார். உடனே கிரிபித் எழுந்து, அன்று அந்த முடிவு டிவேலராவுக்கு எதிராக ஏற்பட்டதாகக் கருதக் கூடாது என்றும், உடன்படிக்கைக்கு ஆதரவாகவே பெரும்பான்மையான அங்கத்தினர்கள் வாக்களித்ததாகக் கருதவேண்டும் என்றும் கூறினார். 'என் வாழ்க்கையில் நான் சந்தித்தவர்களுக்குள் தலைவர் டிவேலராவைப் பார்க்கினும் என் அன்புக்கும் மரியாதைக்கும் பாத்திரமான மனிதர் வேறில்லை என்பதை நான் இப்பொழுது கூற விரும்புகிறேன். அவருடைய தற்போதைய நிலைமைக்கு நான் முற்றிலும் வருந்துகிறேன். நாங்கள் அவரை எங்களுடன் இருக்க வேண்டுகிறோம்!" என்று அவர் கனிந்துருகும் மொழிகளால் டிவேலராவின் கூட்டுறவை நாடினார். டிவேலராவும், சமயத்திற்கு ஏற்ப, தேசாபிமானமும் வீரமும் ததும்பும்படி சொற்பொழிவாற்றினர். உடன்படிக்கை காரணமாக ஏற்பட்ட

னவால் சகோதரர்களாகிய தங்களுக்குள்ளே போராட்டம் நேரும் என்று சிலர் அபிப்பிராயப்பட்டதை அவர் அழுத்தமாய்க் கண்டித்து, ‘அதெல்லாம் அறிவீனம்!’ என்று கூறினர். அவர் சொற்பொழிவின் முக்கியமான பாகம் வருமாறு :

துரதிர்ஷ்டவசமாக உடன்படிக்கை விஷயத்தில், நாங்கள் ஒத்துழைக்க முடியாமல் இருக்கிறோம். பெரும்பான்மையோர் சார்பாக—அயர்லாந்தின் சார்பாக—நிற்கும் நீங்கள் குறிப்பிட்ட வேலை செய்யவேண்டி யிருக்கிறது. அந்த வேலையைச் செய்வதற்கும், நீங்கள் எங்களை நாடுவீர்கள். எக்காலத்திலும், வெளியிலிருந்து வரும் பகைவருக்கு எதிராக நாங்கள் உங்களுடன் நிற்போம். இடையில் நீங்கள் எங்களை ஓர் உதவிப் படையாகவும், அயர்லாந்தின் பூரண சுதந்திரமே எங்கள் குறியான கொள்கை எனவும் கருதவேண்டும். அவ்வழியில் முன்னேறுவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்வதாக எங்களுக்கு நம்பிக்கையுள்ள விஷயங்களில் நாங்கள் உங்களுக்குப் பின்னல் வரச் சித்தமா யிருக்கிறோம். ஆனல் அவ்விஷயங்களுக்காக, நாங்கள் பொறுப்பு எடுத்துக்கொள்ளவோ, எங்கள் தத்துவங்களை விட்டுக் கொடுக்கவோ மாட்டோம். சமாதானத்திற்காக நான் எவ்வளவு பாடுபட்டேன் என்பதையும், எவ்வளவு தூரம் எங்களால் போக முடியுமோ அவ்வளவு தூரம் இந்தச் சபையையும் இணங்கி வரும்படி செய்வதற்கு நான் எப்படி முயற்சி செய்தேன் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். இதற்கு எதிராக அதிகத் தொகையினரைக் கொண்ட சிறுபான்மைக் கட்சி இருக்கும் என்பதை நான் அறிவேன். அதைப் பார்க்க நான் களிப்படைவேன். நான் இந்த உடன்படிக்கைக்கு எதிராக இருப்பது ஒரே காரணத்தினல்தான்—அதாவது, நம்மால் கடைப்பிடிக்க முடியாத ஒரு வாக்குறுதியின் அடியில் நாம் கையொப்பமிடுவதுதான்.

அது ஆடவர் பெண்டிருடைய சுபாவத்திற்கு மேற்போனது; அவர்களால் அதைக் காப்பாற்ற முடியாது......ஐரிஷ் சமூகத்திற்கு நிச்சயமாக இடையூறு விளைக்கும் காரியம் எதையும் நீங்கள் செய்வதாகக் கண்டாலொழிய, நாங்கள் உங்கள் விஷயத்தில் தலையிட்டுத் தடைசெய்ய மாட்டோம். இரண்டு தீமைகளில் ஒன்றை நாங்கள் அவசியம் ஏற்றுக்கொள்ளும்படி நேர்ந்தால், ஐரிஷ் சமூகத்தின் நன்மைகளை விரும்பி, நாங்கள் குறைந்த கேட்டை விளைக்கும் தீமையையே ஏற்றுக்கொள்வோம்.'

மிகுந்த தீமையை விலக்கிக் குறைந்த தீமையை ஏற்றுக் கொள்வதாக டிவேலரா கூறினார். இதிலிருந்து அந்நியர்களுக்கும் ஐரிஷ் அரசாங்கத்துக்கும் பிணக்கு நேரின், அந்நியர்களுக்கு விரோதமாக அவர் அரசாங்கத்தையே ஆதரிப்பார் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கியது. இதைப் போலவே, காலின்ஸும் களங்கமற்ற சிந்தையுடன் பேசினான். கொள்கை சம்பந்தமாகத் தன் நண்பர்கள் பலர் மாறுபட்டிருப்பினும், அவர்கள்பால் பகைமை கொள்ளக் காரணமில்லை என்பதை அவன் மீண்டும் மீண்டும் எடுத்துரைத்தான். ஆனால், எல்லாத் தொண்டர்களும், டிவேலராவாகவும், காலின்ஸாகவும் இருக்க முடியுமா? அவர்களுக்குள் வீணான பகைமை மூண்டது. தலைவர்கள் இருவரும், தேசீயப் படை வீரருக்குள் ஒருவருடைய உதிரத்தை மற்றவர் சிந்தவேண்டிய அவசியமில்லை என்றும், உள்நாட்டுக் கலகம் தோன்ற இடமே இல்லை என்றும் உறுதியுடன் நம்பியிருந்தனர். ஆனால், அவர்கள் அறியாமலே, பெரும் போருக்கு வேண்டிய ஏற்பாடுகள் நடைபெற்றன. வெகு சீக்கிரத்தில் தொண்டர்களுக்குள் பிளவு அதிகரித்துக்கொண்டே வந்தது.

மறுநாள் டெயில் கூடும்பொழுது காலின்ஸ் ஆர்தர் கிரிபித்தைத் தலைவராகப் பிரேரேபித்தான். அத் தீர்மானத்தை யொட்டி வாக்கெடுக்கும் சமயத்தில் டிவேலரா எழுந்திருந்து கிரிபித்தின் தேர்தலை ஆட்சேபித்தார் கிரிபித் சமாதான மகாநாட்டில் ஐரிஷ் பிரதிநிதிகளின் தலைவரா யிருந்தமையால், அவர் அம் மகாநாட்டின் முடிவை நிறைவேற்றி வைக்கும் கடமை உடையவர் என்பதும், அதனால் குடியரசைக் கவிழ்த்து அதன் ஸ்தானத்தில் வேறோர் அரசாங்கத்தை அமைக்கும் பொறுப்பும் உடையவர் என்பதும், அவர் இடைக் காலத்தில் குடியரசை ஆதரிக்கவேண்டியிருக்க அதன் அழிவுக்கு வேண்டிய காரியங்களைச் செய்யவேண்டியிருக்கும் என்பதுமே அவருடைய ஆட்சேபத்துக்குரிய முக்கிய காரணங்கள். இக்காரணங்களைக் கூறிவிட்டு, அச்சமயத்தில் தாம் அங்கிருக்க முடியாது என்று டிவேலரா வெளியேறினார். உடன்படிக்கைக்கு எதிராக இருந்தவர் அனைவரும் அவரைப் பின்தொடர்ந்து வெளியேறினர். காலின்ஸ் அச்சமயம் தன் ஆசனத்தைவிட்டு எழுந்து, இடி போன்ற குரலில், 'துரோகிகளே, செல்லுங்கள்! தேசத்தைக் கைவிடுபவர்களே, செல்லுங்கள்! நாங்கள் அவள் பக்கத்தில் நிற்போம்!' என்று கூவினான்.

எஞ்சியுள்ள அங்கத்தினர்கள் கிரிபித்தை ஏகமனதாகத் தலைமைப் பதவிக்குத் தேர்ந்தெடுத்தனர். கிரிபித் உடனே ஒரு புதிய மந்திரி சபையை அமைத்தார். அதை டெயில் ஐரானும் அங்கீகரித்தது.

பிற்பகல் கூட்டத்தில் டிவேலராவும் அவருடன் வெளியேறிய அங்கத்தினரும் பிரசன்னமா யிருந்தனர். அப்பொழுது டிவேலரா, கிரிபித் கையாளப் போகும்

வேலை முறையை விளக்கும்படி வேண்டினர். கிரிபித் கூறியதாவது:

'நாங்கள் உடன்படிக்கையை விடத் தயாராயில்லை தேசத்தின் நன்மையைக் கருதி டிவேலராவை நான் எதிர்க்கிறேன். ஆரம்பம் முதலே நான் சொல்லி வருவது போல் டெயில் இருக்கப் போகிறது; பிரீஸ்டேட் ஒரு தேர் தலுக்கு ஏற்பாடு செய்யும்வரை அயர்லாந்தின் குடியரசும் இருந்துவரும். நான் எவ்வித எதிர்ப்பையும் வேண்ட வில்லை. நான் கேட்ப தெல்லாம் அது ஒன்றுதான். இதுவரை யும் எந்த ஐரிஷ்காரனின் மேலும் சுமத்தப்படாத மிகக் கடினமான வேலை நம் மேல் சுமத்தப்பட்டிருக்கிறது. ஐரிஷ் மக்களிடையே நாங்கள் சென்று, பிரீஸ்டேட்டை அவர்களுக்கு அளித்து, அவர்கள் இஷ்டம் போல் முடிவு செய்யும்படி கேட்கும்வரை, எங்களை எதிர்த்துத் தடை செய்ய வேண்டாம் என்பதே நாங்கள் கேட்டுக்கொள்வது. இது ஒன்றுதான் எனது வேலை முறை. ஐரிஷ் மக்கள் பிரீ ஸ்டேட்டை உதறித் தள்ளி, குடியரசை மேற்கொண்டால், நானும் மற்றவர்களைப் பின்பற்றுவேன். அயர்லாந்தை யும், எனக்கு விரோதமாயுள்ள தோழர்களையும் நான் கேட் டுக் கொள்வதெல்லாம் எங்கள் வழியில் தடைகளை ஏற்படுத் தாமல் இருக்கவேண்டும் என்பதே. ஐரிஷ்காரர் மேல் சுமத் தப்பட்ட பொறுப்புக்களில் தலைசிறந்த கடினமான பொறுப் பை அடுத்த மூன்று மாதங்களுக்குள் நாம் மேற்கொள்ளப் போகிறோம்.'

ஜனவரி மாதம் 14-ந் தேதி, உடன்படிக்கையை ஆதரிக்கும் அங்கத்தினர்களும் டிரினிட்டி கலாசாலைப் பிரதிநிதிகளும் ஒன்றுகூடி ஆலோசித்து, மைக்கேல் காலின்ஸ், காஸ்கிரேவ், டுக்கன், ஹோகன், லிஞ்ச், மக்ராத், மக்நீல், ஓஹிக்கின்ஸ் ஆகியவர்களைக் கொண்டு ஒரு தாற்காலிக அரசாங்கத்தைத் தேர்ந்தெடுத்தனர். ஆர்தர் கிரிபித்

டையில் ஐரானின் தலைவரா யிருந்ததால், அவரைத் தாற்காலிக அரசாங்கத்திலும் நியமித்து நிலைமையைக் குழப்பமடையச் செய்யக் கூடாது என்று அவர்கள் கருதினர். காலின்ஸ் அரசாங்கத்தின் தலைவனாய் நியமிக்கப்பட்டான். எனவே ஆங்கிலேயரிடமிருந்து அரசாங்க ஸ்தாபனத்தைப் பெறவேண்டிய பொறுப்பு பெரிதும் அவனையே சார்ந்து நின்றது. பல நூற்றுண்டுகளாய் அயர்லாந்தில் அந்நியர் ஆதிக்கத்தின் அறிகுறியாய் விளங்கிவந்த டப்ளின் மாளிகையை ஜனவரி 16-ந் தேதி பிரிட்டிஷ் அரசாங்கம் காலின்ஸின் கையில் ஒப்படைத்தது. இவ்வாறு, அயர்லாந்தின்மேல் பிணிக்கப்பட்டிருந்த பராதீன விலங்கு இரண்டாக முறிந்து வீழ்ந்தது! அடிமைப்பட்டிருந்த அன்னைக்குச் சேவை செய்துவந்த காலின்ஸ், அவள் விடுதலையடைந்த பின்னும், முந்திய ஊக்கத்தில் சிறிதும் தளராது தொண்டு செய்ய முற்பட்டான். விடுதலைப் போராட்டத்தில் அவன் செய்யாது பாக்கி வைத்திருந்த தியாகம் ஒன்றுதான். அதுவே ஆத்ம பலிதானம். அதையும் முடிப்பதற்குரிய சந்தர்ப்பம் விரைவில் விளையக் காண்போம்.

மூன்றரை வருஷங்களாய்க் காலின்ஸ் தன் சிறிய தோள்களின் மேல் மலைபோன்ற வேலைகள் பலவற்றைத் தாங்கிவந்திருந்தான். ஆனால் முன்னிருந்த நிலைமைக்கும், இப்போதிருந்த நிலைமைக்கும் மிகுந்த வித்தியாசம் உண்டு. முன்னால் தேசமனைத்தும் அவன் பக்கத்தில் நின்றது; அந்நிய அரசாங்கம் ஒன்றே அவன் குறியாக இருந்தது. இப்பொழுது அவனுடைய நண்பர்கள் பிளவுபட்டனர்; தோழர்களிலேயே மாறுபட்டவர்களுடன் போராட வேண்டியிருந்தது. அவனுடைய வயது 31 தான்.

ஆயினும், மிகுந்த பொறுப்புள்ள பதவிகளை வகிக்க வேண்டியிருந்தது. ஒரு பக்கம் ஆங்கிலேயரோடு தர்க்கம் செய்து தன் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும்; மற்றொரு பக்கம் உடன்படிக்கையை எதிர்ப்பவர்களோடு வாதாட வேண்டும். அடிக்கடி லண்டனுக்குச் சென்று ஆங்கில அரசாங்கத்தோடு கலந்து பேசவும் வேண்டியிருந்தது. லண்டனில் அவன் அல்ஸ்டர் சம்பந்தமாக ஸர் ஜேம்ஸ் கிரெய்க்கை அடிக்கடி கலந்து பேசிவந்தான்.

டப்ளின் தெருக்களிலே வசித்து, கறுப்புக் கபில ருடைய கொடுமைகளுக்குத் தப்பி, தொண்டருக்குத் தொண்டனாய் ஊழியம் செய்துவந்த காலின்ஸ், இப்பொழுது திடீரென்று மாண்பு மிக்க பதவியை அடைந்து விட்டவுடன், கர்வம் கொண்டு தலை கிறுங்கவில்லை. அன்று கண்ட காலின்ஸாகவே அவன் என்றும் விளங்கினான். பழைய நண்பர்களைச் சிறிதும் மறவாது அவர்களிடம் அன்பு நிறைந்த உள்ளத்துடன் பழகினான்.

ஒரு சமயம பத்திரிகைக்காரர் பலர்—முக்கியமாக அமெரிக்க நிருபர்கள்—அவனைச் சூழ்ந்து நின்று, சிக்கலான ஐரிஷ் பிரச்னைகளை விளக்கிச் சொல்லும்படி வேண்டினார்கள். முற்காலத்தில் அவன் வலிமை மிக்க மாற்றாரோடு போராடிய முறைகளையும், அவர்கள் கையிலிருந்து தப்பிய விந்தைகளையும் விவரிக்குமாறு அவர்கள் அவனை வற்புறுத்தினார்கள். அவனும் அவர்கள் மூலம் அயர்லாந்தின் நிலைமையை உலகத்துக்கு அறிவித்தான்; ஆனால் தன்னைப்பற்றிய கதைகளையும், தற்பெருமையாகக் கருதக்கூடிய விஷயங்களையும் சொல்ல முடியாது என்று அவன் கடைசிவரை மறுத்து விட்டான்.

ஆனால் சில நிருபர்கள், தங்கள் இஷ்டம்போல் சில கதைகளைக் கற்பித்து, அவை காலின்ஸால் கூறப் பட்டவை என்று பிரசுரித்தனர். இவ்வாறு தூர தேச மான அமெரிக்காவில் அவனைப்பற்றி உண்மையும் பொய்யும் விரவிய கதைகள் பல பரவின.

ரகசியப் புரட்சிச் சங்கம் அமைப்பதிலும், ஒற்றர் படை அமைப்பதிலும், கைதிகளை விடுவிக்க உபாயங் கள் செய்வதிலும், தேசத்தின் பொருளாதார நிலைமையை ஒழுங்குபடுத்துவதிலும், ஆங்கில ராஜதந்திரிகளோடு சரியாசனத்திலிருந்து ராஜி பேசுவதிலும் காலின்ஸ் தேர்ந்த நிபுணன் என்பதை இதுவரை நாம் கூறியவற் ருல் அறியலாகும். இவற்றுடன் நிற்காது, தேசிய விஷயங்களில் அவன் பெரிய தத்துவ ஞானியாயும் விளங்கிவந்ததைக் காட்ட அவன் எழுதிய கட்டுரைகளி லிருந்து சில குறிப்புக்களைக் கீழே தருகிறோம்:

'ஆங்கில நாகரிகம், ஆங்கில மக்களுக்கு ஏற்றதா யிருக்கலாம். நமக்கு அது அந்நியமானதாய்த்தான் இருக்க முடியும். அது அவர்களுடைய சரித்திரத்தின் விளைவாகத் தோன்றிய ஆங்கில நாகரிகமேயன்றி வேறில்லை. அது நமக்குப் பொருந்தாது. அது நாம் வெளியே போர்த்திக்கொள்ளும் ஓர் உடையேயன்றி, நமக்குள்ளே விளைந்த பொருளன்று. அதை அணிந் திருக்கையில், நாம் அற்பமாயும், ஆபாசமாயும், அகௌரவ மாயும் விளங்குகிறோம். நம்முடைய குறைகளையெல்லாம் அது அம்பலப் படுத்துகிறது. நம் நற்குணங்களைக் காட்டுவதற்கு அது சந்தர்ப்பம் அளிப்பதில்லை. ஐரிஷ் மக்களின் கெயிலிக் ஆன்மா இன்னும் ஜீவித்திருக் கிறது. அது தன்னிலேதான் அழிவற்றிருக்கிறது.

ஆனால், நம் மேல் வெளியிலிருந்து சுமத்தப்பட்ட வேறென்றினால், அதன் குணங்கள் மூடி மறைக்கப்பட்டிருக்கின்றன. கடவுள் அளித்த நமது தாய்நாட்டின் சின்னங்களா யில்லாத பலவகைப்பட்ட வெறுக்கத் தகுந்த வீடுகளும், இழிவான கடைகளும், விகாரமான மதுபான விடுதிகளும் நிறைந்திருக்கும் நகரங்களும் கிராமங்களும் அழகிய அயர்லாந்தின் நிலப்பரப்பை ஆபாசப்படுத்துவதைப் போல் மேற்கண்ட விஷயமும் இருக்கிறது.

* * * *

'நமது அந்தரங்க வாழ்க்கையும் நாம் தாறுமாருய் அணிந்துள்ள ஆங்கில நாகரிகத்தின் சின்னமாக வந்து விட்டது. நம் மக்களில் பலருக்கு இயற்கையாயுள்ள அறிவு எவ்வளவாயினும் அவர்களுடைய மனோபாவம் தினசரிப் பத்திரிகை, மதுபான விடுதி, குதிரைப் பந்தயம் முதலியவற்றின் எல்லைக்கு உள்ளடங்கிக் கிடக்கிறது. ஆங்கில நாகரிகம் நம்மை ஐரிஷ் வேஷதாரிகளாக்கி யிருக்கிறது.

'அவர்கள் நமது பாஷையை அழித்து விட்டார்கள். அவர்களுடைய பாஷையை நமக்கு அளிக்கும்போதே நம் மீது சாபமிட்டு விட்டார்கள். நாமும் அதன் அடிமைகளாய் விட்டோம். அதன் சொற்கள் நம் எண்ணங்களை வெளியிடும் கருவிகளா யில்லாமல், முடிவான விஷயங்களாகவே நமக்குத் தோன்றுகின்றன.

'இப்பொழுது நாம் முதல் வெற்றியைப் பெற்றிருக்கிறோம். பகைவன் எதனால் நம்மை இழிவுறும்படி செய்து அடிமைப்படுத்தி வைத்திருக்க முடியுமோ, அதை நம்மீது சுமத்தி வந்தான். இப்பொழுது

பகைவன் வெளியேறும் நிலைமையைப் பெற்றுள்ளோம். நாம் மீண்டும் நமது தாய்ப் பாஷையைப் பேசுவதற்கும், நம்மை நாமே ஆண்டுகொள்ளவும் தீவிரமாக முயற்சித்த பிறகுதான் இந்த வெற்றி ஏற்பட்டது. அந்த வேலையைப் பூர்த்திசெய்தால்தான் நாம் நமது பகைவனையும் மற்ற எல்லாப் பகைவர்களையும் உட்புகாமல் விலக்க முடியும்.

'நாம் இப்போது பெயரளவிலேயே சுதந்திரராயுள்ளோம். நாம் எவ்வளவுக் கெவ்வளவு மீண்டும் கெயிலியர்கள் ஆகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு உண்மையாக விடுதலையாகிச் சுதந்திரத்தை அடைவோம். அது கடினமான வேலை. நம்மை நசுக்க முயற்சித்த ஆயுதம் தாங்கிய ஆங்கிலச் சேனை என்னும் யந்திரத்தை நம் ஸ்தூலக் கண்களால் பார்க்க முடியும். அதைத் தொட முடியும், அதற்கு எதிராக நமது உடற் பலத்தையும் உபயோகிக்க முடியும். அதன் வேலைக்காரர்கள் ஒரே வகையான உடையும் ஆயுதங்களும் அணிந்து விளங்குவதைக்காணலாம். அவர்களுடைய உருக்கு ஆயுதவண்டிகளையும், கவசம் பூண்ட கார்களையும் பார்க்க முடியும்.

'ஆனால், நம்மைச் சிதைத்து, நமது பழக்க வழக்கங்களையும் நமது சுதந்திர வாழ்வையும் அழித்துவரும் சூட்சுமமான யந்திரம் அவ்வாறு எளிதாகப் புலனாகக் கூடியதில்லை. அதை நமது மனக் கண்ணாலேயே தேடிக் காண வேண்டும். நாம் ஐக்கியமாகி, ஆன்மசக்தி முழுவதையும் கொண்டே அதை எதிர்க்க வேண்டும். இவ் விஷயம் சகஜமாய்ப் போய்விட்டது.

'ஒரு வேளை நாம் அதைக் கண்டுபிடிக்க முடியாமல் இருக்கலாம். ஆனால், நாம் வேறொன்று செய்ய

முடியும். வேறொன்றை அதற்குப் பதிலாக மேற்கொள்ள முடியும். நம் உள்ளங்களைக் கெயிலிக் எண்ணங்களாலும், நமது வாழ்க்கையைக் கெயிலிக் வழக்கங்களாலும் நிரப்பி, வேறு எதற்கும் அவற்றில் இடமில்லாதபடி செய்துகொள்ளலாம்.

*　*　*　*

'பழைய அஸ்திவாரங்களின் மேல் ஒரு புதிய நாகரிகத்தை அமைக்க வேண்டியிருக்கிறது. ஜனங்களுக்காகத் தலைவர்களே அதைச் செய்துவிட முடியாது. அவர்கள் வழி காட்டவே முடியும்.

'அவர்கள் சட்டமும் ஒழுங்கும் பொருந்திய நீதியான ஆட்சியை அமைப்பதற்குத் தங்களால் இயன்றதைச் செய்ய முடியும். அவ்வாட்சியின் கீழே ஜனங்கள் தாங்களாகவே அதைச் செய்துகொள்ள முடியும்.

'ஜனங்கள் தலைவர்களை எதிர்பாராமல் தாங்களாகவே முயற்சி செய்ய வேண்டும். தலைவர்கள் தனிப்பட்ட மனிதர்களே. தனி மனிதர்கள் குறை உடையவர்கள்; தவறும் மெலிவும் அவர்கள் இயற்கை. எல்லா ஜனங்களுடைய ஆன்மபலமும் சேர்ந்தே சமூகத்தின் வலிமையாகும். நம் தேசிய குணவிசேடங்களுக்குத் தக்கபடியே நாம் ஓர் அரசியல் பொருளாதார சமூக அமைப்பைப் பெறவேண்டும்.

'நமது பாஷையைப் பழைய நிலைக்குக் கொண்டுவருவதே நமது மகத்தான வேலை. நுட்பமான கருத்துக்களையும், நுணுக்கமான உணர்ச்சிகளையும் அந்நிய பாஷையில் எப்படி நாம் வெளியிடுவது? இந்தத் தலைமுறையில்—ஒரு வேளை அடுத்த தலைமுறையிலுங்கூட—ஐரிஷ் பாஷை நமது பாஷையாக வளர்ந்துவிட முடியாது.

ஆனால், அதை நாம் மீண்டும் நாவினாலும் மனத்தினாலும் கொள்ளாத வரை, நாம் சுதந்திரர்கள் அல்லர், அழியாத இலக்கியம் எதையும் படைக்கவும் முடியாது.'

காலின்ஸின் செயல்களுக்கு அடிப்படையாக விளங்கியவை இத்தகைய தத்துவங்களே. அவன் பிரீஸ்டேட் அமைக்கவேண்டிய வேலையையே அதிகமாய்ச் செய்துவர வேண்டியிருந்ததால், 'ஐரிஷ் குடியரசுப் படை' என்ற பெயருடன் விளங்கிய தொண்டர் படையைக் கவனிக்க முடியவில்லை. அந்த நிர்வாகத்தைப் பாதுகாப்பு மந்திரியான ஜெனரல் முல்காஹியே கவனித்துவந்தான். பிரிட்டிஷ் படைகள் நாட்டைவிட்டு அகன்று வந்ததால், தொண்டர் படையே அயர்லாந்தில் ஆயுதம் தாங்கிய படையாக விளங்கியது. அப்படையில் சமாதான காலத்திலேயே சில ஒழுங்கீனங்கள் புகுந்திருந்தன. பின்னால், அரசியல் தலைவர்களுடைய அபிப்பிராய வேற்றுமைகள் படையிலும் பிரதிபலிக்க ஆரம்பித்தன. மேலும், உடன்படிக்கையை ஆதரித்தும் எதிர்த்தும் வாதாடி வந்த டெயில் ஐரான் அங்கத்தினர் பலர் தொண்டர் படையிலும் பதவிகள் வகித்து வந்ததால், அவர்களுடைய வேற்றுமைகள் அதிலும் புகுந்து விட்டன.

தொண்டர் படைத் தலைமை அதிகாரிகளில் ஒருவனான ரோரி ஒகானர் உடன்படிக்கையை எதிர்த்தவர்களில் முக்கியஸ்தன். அவன் முக்கியமான தொண்டர்களிடையே உடன்படிக்கைக்கு விரோதமாகத் தீவிரமாகப் பிரசாரம் செய்துவந்தான். பல தொண்டர்கள் உடன்படிக்கையைத் தகர்த்தெறிய வேண்டும் என்று முன் வந்தனர்.

இங்கிலையில் பாதுகாப்பு மந்திரி உடனே தொண்டர்களுடைய வருஷாந்த மகாநாட்டைக் கூட்டவேண்டும்

என்று சில அதிகாரிகள் வற்புறுத்தினர். 1918-க்குப் பின்னுல் மகாநாடு கூடவே யில்லை என்ருலும், அச்சமயம் அதைக் கூட்டுவது உசிதமாயில்லை. அப்பொழுதுதான் ஆங்கிலப் படைகள் தங்கள் படை வீடுகளையும் அதிகாரங்களையும் தேசிய அரசாங்கத்தினிடம் ஒப்படைத்துக் கொண்டிருந்தன. மகாநாடு கூடி, தொண்டர் படையிலுள்ள சூழ்ச்சிகளும் பிளவுகளும் வெளிப்பட்டால், அந்நியப் படைகள் அவற்றைக் காரணமாகக் கொண்டு நாட்டை விட்டு அகலாமல் நிற்க நேரும். எனவே, மகாநாடு இரண்டு மாதங்களுக்கு ஒத்திப்போடப்பட்டது.

ஆங்கிலப் படைகள் காலி செய்த படை வீடுகளில் எந்த நேரமும் சேவை செய்யக்கூடிய தொண்டர்கள் ஒரு படையாக வைக்கப்பட்டனர். முழு நேரமும் சேவை செய்ய முடியாத தொண்டர்களைக் கொண்டு கையிருப்புப் படை ஒன்றும் நிறுவப்பட்டது. புதிய தேசியப் படைக்கு ஜே. ஜே. ஓகானல் சேனைபதியாக நியமிக்கப்பட்டான். சேனையைப் போலவே, ஒரு போலீஸ் படையும் நிறுவப் பட்டது.

ஸின்பீன் மகாநாடு பெப்ரவரியீ கூடிற்று. பிரதிநிதிகளில் பெரும்பாலோர் உடன்படிக்கையை எதிர்ப்பவர்களா யிருந்தனர். ஆயினும், அவர்கள் தங்களுக்குள் ஏற்பட்ட பிளவு காரணமாகத் தேசத்தார்,அல்லலுருத படி நடுநிலையான முறையைக் கையாளவேண்டும் என்னும் நோக்கத்துடன் இருந்தனர். இக்காரணத்தால் டிவேலரா காலின்ஸைக் கண்டு பேசி ஒரு ராஜிக்கு ஏற்பாடு செய்தார். அதன்படி ஸின்பீன் ஸ்தாபனத்தில் உடனே மாறுதல் எதுவும் செய்யக்கூடாது என்றும், பொதுத் தேர்தலை மூன்று மாதங்களுக்கு ஒத்திப்போட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மார்ச் மாதம் 26-ந் தேதி தொண்டர் மகாநாட்டைக் கூட்ட ஏற்பாடுகள் நடந்து வந்தன. இடையில் தொண்டர்களுக்குள்ளே பகைமையும் பூசலும் வளர்ந்து வந்தன. லிமெரிக் நகரில் உடன்படிக்கைக்கு எதிரான தொண்டர்கள் போர் முறையில் இறங்கினர். அந்நகரிலுள்ள சில விடுதிகளையும் கட்டிடங்களையும் அவர்கள் கைப்பற்றினர். அவர்களுக்கும் புதிய சர்க்காரின் படைகளுக்கும் போர் மூளும் நிலை ஏற்பட்டது. சில முக்கியஸ்தர்கள் தலையிட்டு உதிரப் பெருக்கைத் தடுத்துவந்தனர்.

டெயில் ஐராவின் மந்திரி சபை மார்ச் மாதம் 15-ந் தேதி கூடி, அங்கிலையில் தொண்டர்கள் மகாநாட்டை நடத்த அநுமதிக்கக் கூடாது என்று தீர்மானித்தது. அதை எதிர்த்து நின்ற தொண்டர்கள் மார்ச் 18-ம் தேதி மான்ஷன் மாளிகையில் தாங்களாக ஒரு மகாநாட்டைக் கூட்டினர். இதனால் தொண்டர் படை நிச்சயமான இரு பிரிவாகப் பிரிந்தது.

தேசம் முழுதிலும் வருந்தத்தக்க குழப்பம் உண்டாயிற்று. சட்டத்தையும் அமைதியையும் பாதுகாக்கப் படைகளில்லை. ஆங்கிலப் படைகளும் கப்பலேறி விட்டன. எங்கும் அராஜகம் தாண்டவ மாடியது. எங்கும் மாறுபட்ட இரு கட்சியினர் அதிகாரம் செலுத்த ஆரம்பித்தனர். பிரஜைகள் இரண்டு கொள்ளிக்கிடையில் அகப்பட்ட எறும்புபோல் பரிதவித்தனர்.

எரிகின்ற நெருப்பில் எண்ணெயை ஊற்றுவது போல், பெல்பாஸ்ட்டில் மதவெறியால் பெரும் போர் ஒன்றும் மூண்டது. அதனால் மிகுந்த உதிரப் பெருக்கும் சேதமும் விளைந்தன. கத்தோலிக்கர் பலர் கொடூர

மாய்க் கொலையுண்டு மடிந்த காட்சிகள் பயங்கரமா யிருந்தன.

உடன்படிக்கையை ஏற்காத தொண்டர்களில் சிலர் தங்களுக்கு எதிராகவுள்ள பத்திரிகைகளை நசுக்கவும், தேசத்தில் தேர்தலை நடக்காமற் செய்யவும், பொதுக் கூட்டங்கள் கூடாமல் தடுக்கவும் முன்வந்தனர். காலின்ஸ் பேசுவதற்காகச் சென்ற கூட்டங்கள்கூட அவர்களால் கலைக்கப்பட்டன. 'பிரீமன்ஸ் ஜர்னல்' என்னும் பத்திரிகாலயத்திற்குள் அவர்கள் புகுந்து அச்சு யந்திரங்களை உடைத்தெறிந்தனர்.

ஏப்ரல் மாத ஆரம்பத்திலிருந்து எதிர்க் கட்சித் தொண்டர்கள் சர்க்கார் படைகளைத் தாக்கவும் ஆரம்பித்தனர். லாறிகளை மறித்துப் பிடித்துக் கொள்வதும், படைகளின் முக்கிய அதிகாரிகளைப் பிடித்துச் சிறை வைப்பதும் தினசரி நிகழ்ச்சிகளா யிருந்தன. உயிர்ச் சேதம் முதலில் சுருக்கமா யிருப்பினும், போராட்டங்களுக்குக் குறைவில்லை. டப்ளின் நகரத் தெருக்களிலேயே இருபக்கத்தாரும் பொருதிய காட்சிகள் அபூர்வமில்லை. பட்டாள லாறிகள் அடிக்கடி தாக்கப்பட்டன. நாணயச்சாலைகளும் தபால் காரியாலயங்களும் கொள்ளையிடப்பட்டன. ஆயினும், இதுவரை டெயில் ஐரான் படைகளின்மேல் போர் தொடுக்கவேண்டும் என்று எதிர்க்கட்சியார் தீர்மானித்து அறிக்கை வெளியிடவில்லை. மேலும், தொண்டர்கள் தங்களுக்குள் சண்டையிட்டு வந்த காலத்திலே, இருபக்கத்துத் தொண்டர் படை அதிகாரிகளும் ஒருவரையொருவர் சந்தித்து நட்புடன் பழகிவந்தனர்.

சமாதானத்திற்காகச் செய்த முயற்சிகள் பலிக்காமற் பாழாயின. கிரிபித், காலின்ஸ், டிவேலரா முதலியோர் மான்ஷன் மாளிகையில் ஒருமுறை கூடிக் கலந்து பேசினர். அவர்களுக்குள் எவ்வித முடிவும் ஏற்படக் காணோம். காலின்ஸ், தான்பிரீன், ஹேல்ஸ் முதலிய தொண்டர் படை முக்கியஸ்தர்கள் சிலர் கூடி ஒப்பந்தத்திற்கு ஏற்பாடு செய்தனர். அதுவும் உலைந்து வீழ்ந்தது. முடிவில் எதிர்க் கட்சியைச் சேர்ந்த லியாம் லிஞ்ச், ஸீன் மாய்லன், லியாம் மெல்லோன் ஆகிய மூவரும், சர்க்கார் படைகளின் முக்கியஸ்தர்களில் ஸீன் மக்கியோன் முதலிய மூவரைக் கண்டு பேசித் தாற்காலிகமான ஒரு சமாதானம் செய்தனர். இடையில் டெயில் ஐரான் அங்கத்தினரில் இரு கட்சியையும் சேர்ந்த பதின்மர் ஓர் ஒப்பந்தத்திற்கு வழிகாணுமாறு நியமிக்கப்பட்டனர்.

17

அழியாச் சுடர்

டெயில் ஐரானின் சமாதானக் கமிட்டியார் பன்முறை கூடியும் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை. மேலும், அவர்களில் நால்வர் உள்நாட்டுக் கலகத்தில் கொல்லப் பட்டனர். எஞ்சியுள்ளவர்களுக்குள்ளும் தேர்தலைப் பற்றி ஏகோபித்த அபிப்பிராயம் இல்லை. உடன்படிக் கைப் பிரச்னையைப் பொதுஜன வாக்கின் மூலம் தீர் மானிக்கக் கூடாது என்று அதை எதிர்ப்பவர்களே வாதாடி வந்தனர்.

இதன் பிறகு காலின்ஸ் டிவேலராவைக் கண்டு பேசி மே மாதம் 20-ம் தேதி ஓர் ஒப்பந்தம் செய்தான். அதன் படி இரு கட்சியாரும் தேர்தலுக்கு நிற்கவேண்டும் என் றும், தேர்ந்தெடுக்கப்பட்ட டெயில் ஐரான் மந்திரி சபை யின் ஸ்தானங்களில் சிலவற்றை எதிர்க் கட்சிக்குக் கொடுக்கவேண்டும் என்றும், இவ்வாறு கூட்டு அர சாங்கமாக நடப்பதற்குப் பின்னால் இடையூறு நேர்ந்தால், மீண்டும் பொதுத் தேர்தல் நடத்தவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

புதுத் தேர்தலின் மூலம் அரசாங்கக் கட்சியினருக்கு 58 ஸ்தானங்களும், உடன்படிக்கையை எதிர்த்தவர் களுக்கு 35-ம், தொழிற் கட்சியாருக்கு 17-ம், குடியானவர்

கட்சிக்கு 7-ம், சுயேச்சைவாதிகளுக்கு 7-ம் கிடைத்தன. இவற்றோடு டிரினிட்டி கலாசாலை அங்கத்தினரின் ஸ்தானங்கள் நான்குக்கும் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். மற்ற கட்சிகளெல்லாம் உடன்படிக்கையை ஆதரிப்பவை யாகையால் டெயில் அங்கத்தினரில் 100-க்கு 72 பேர் உடன்படிக்கையை ஆதரிப்பவர்களா யிருந்தனர்.

எதிர்க் கட்சித் தொண்டர்கள் பெல்பாஸ்ட் சாமான் களின் பகிஷ்காரத்தை நிறைவேற்றுவதற்காகப் பல இடங்களில் சோதனையிட்டனர். அச்சாமான்களைத் தாங் கிச் சென்ற ரயில்களும் வாகனங்களும் வழிமறித்து நிறுத்தப்பட்டன. அத்தொண்டர்கள் மீண்டும் ஆங்கி லேயருடன் போர் தொடுக்கவேண்டும் என்றும் தீர் மானித்தனர். அவர்களுக்கும் அரசாங்கப் படைகளுக் கும் பல இடங்களில் போர் நடந்தது. காலின்ஸ், இந் நாள்வரை தோழர்களாய் விளங்கியவர்களோடு எப் படிப் போராடுவது என்று திகைத்து விட்டுக்கொடுத்து வந்ததால்,மேலும் குழப்பம் அதிகரித்தது. அதனால் அவன் கடுமையான முறைகளைக் கையாண்டு தேச மக்களைப் பாதுகாக்க முனைந்தான்.

'போர் கோர்ட்ஸ்' என்னும் இடத்தில் படை வீடு கள் எதிர்க் கட்சித் தொண்டர்கள் வசம் இருந்தன. சர்க்கார் படைகள் அவற்றைக் காலி செய்யும்படி எச் சரிக்கை செய்ததில், அவர்கள் இணங்காததால், இரு கட்சியாருக்கும் சண்டை நிகழ்ந்தது. முடிவில் சர்க்கார் படைகள் அப் படைவீடுகளைப் பிடித்துக்கொண்டன இதைப் போலவே வேறு பல படைவீடுகளும் கட்டி டங்களும் பிடிக்கப்பட்டன.

கிரிஷாம் விடுதியை சர்க்கார் படை கைப்பற்ற முயற்சிக்கையில் கதால் புருகா சில தொண்டர்களுடன் அங்கிருந்தான். அவன் எதிரிகளுக்குப் பணிய மறுத்துத் தீவிரமாய்ப் போராட முன்வந்தான். தீப்போல் வெகுண்டெழுந்த அவன் உள்ளத்திற்குப் பணிவது மானக்கேடாகத் தோன்றியது. கொடிய குண்டுகள் அவன்மேல் பாய்ந்து காயம் விளைத்தன. கடைசியாக அவ்வீரன் உடம்பெல்லாம் புண்ணுகி வீழ்ந்தான். இரண்டு தினங்களுக்குப்பின் அவன் மண்ணுலக வாழ்க்கையை நீத்தான். ஐரிஷ் உள்நாட்டுக் கலகத்தில் நேர்ந்த மகா துக்ககரமான சம்பவங்கள் பலவற்றில் புருகாவின் மரணமும் ஒன்று. கடைசிவரை அவன் செய்துவந்த வீரப் போராட்டம் பகைவரும் வியந்து போற்றத்தக்கதாயிருந்தது.

காலின்ஸ் அக்காலத்தில் தன் அரசியல் வேலைகளை ஒதுக்கிவைத்துவிட்டு, மிக முக்கியமாக ராணுவத்தையே கவனித்து வந்ததோடு, சேனுபதிப் பதவியையும் மேற்கொண்டான். அவன் அப்பதவியை வகித்த ஆறு வார காலத்தில், எதிர்க்கட்சித் தொண்டர்கள் வசமிருந்து ஒவ்வொரு நகரமாய் சர்க்கார் படைகளால் பிடிக்கப்பட்டது. இரு கட்சிப் படைகளுக்கும் நடந்த போராட்டங்களையெல்லாம் இங்கு விவரித்தல் அசாத்தியம். லிமெரிக், டண்டாக், கார்க் முதலிய முக்கிய நகரங்களில் எதுவும் போராட்டத்தில் தப்பவில்லை. இரு பக்கத்திலும் தொண்டர் திலகங்களான தீரர் பலர் உயிர் துறந்தனர். எங்கணும் ஐரிஷ் வாலிபர்கள் தங்கள் சகோதரர்களையே சுட்டுத் தள்ளும் செய்திகள் பரவிநின்றன. அயர்லாந்தின் மண்மீதே ஐரிஷ் மக்களின் உதிரம் பெருக்கப்பட்டது.

ஹாரி போலண்டு ஜூலை 31-ம்தேதி சர்க்கார் படைகளால் கைதி செய்யப்பட்டான். அவன் தப்பியோட முயற்சிக்கையில், சிப்பாய்கள் அவனைச் சுட்டனர். அவன் மிகவும் காயமடைந்து, மூன்று தினங்கள் கழிந்து மரணமடைந்தான்.

சொந்தச் சகோதரர்களோடு போராடுவது காலின்ஸுக்கு உவப்பான காரியமன்று. ஆனால் வேறு வழியும் இல்லை. அவன் சர்க்கார் படையை வலிமைப்படுத்திப் புதிய முறையில் அமைத்தான். எத்தனையோ துன்பங்களிடையிலும் அவனது மலர்ந்த முகம் வாடவில்லை; பழைய உற்சாகம் தணியவில்லை. போதுமான பாதுகாப்பின்றியே அவன் எங்கும் சாதாரணமாய்ச் சென்று வந்தான். அவனுடைய பழைய நண்பர்களும் புதிய பகைவர்களுமான எதிர்க்கட்சித் தலைவர்களும் அவனிடத்தில் கொண்டிருந்த மரியாதையைக் குறைக்கவில்லை என்பதிலேயே அவனுடைய உன்னத குணங்களைத் தெரிந்துகொள்ளலாம்.

இங்கிலையில் ஆகஸ்ட் 12-ம் தேதி பழம் பெரும் ஐரிஷ் தேசபக்தரான ஆர்தர் கிரிபித் திடீரென்று தேகவியோகமானார். அந்த அரும் பெரும் தலைவருடைய மரணம் காலின்ஸை வாட்டி வருத்தியது. நெருக்கடியான சமயத்தில், இருள் சூழ்ந்த அயர்லாந்தில், கலங்கரை விளக்கம் போல் ஒளி காட்டித் தேசத்தை நல்வழியில் செலுத்தக்கூடிய அப்பெருமானை இழந்த நஷ்டம் அளவிடற்கரியது என்று அவன் கனிந்துருகினான்.

கிரிபித்தின் பிரேத ஊர்வலம் அரசாங்கத்தாலேயே ஏற்பாடு செய்யப்பட்டது. அன்று டப்ளின் நகர் முழுவதும் வேலைநிறுத்தம் செய்யப்பட்டது. அனலிடைப்

பட்ட மெழுகுபோல் உருகும் சிந்தையராகிய பல்லாயிரம் மக்கள் பிரேதத்தைத் தொடர்ந்து சென்று மரியாதை செய்தனர். மைக்கேல் காலின்ஸ் சேனபதி உடை அணிந்து ஊர்வலத்தின் முன்னணியில் சென்ருன். பொதுஜனங்கள் கண்முன்பு அவன் தோன்றியது அதுவே முதல் முறையாகும். கம்பீரத் தோற்றமும், அழகிய வதனமும் கொண்டு விளங்கிய காலின்ஸைக் கண்ணுற்ற மக்கள், அவ்வீரக் காளை எப்படியும் தேசத்தைப் புனருத்தாரணம் செய்வான் என்று உறுதியாக நம்பினர்.

கிரிபித்தின் கல்லறையின் அருகே காஸ்கிரேவ் உருக்கமான ஒரு சொற்பொழிவாற்றினுர். பின்னர் பிரேதம் அடக்கம் செய்யப்பட்டது. பிரேதப் பெட்டியின் மேல் மண் கொட்டி மூடுவதற்கு முன்னுல், காலின்ஸ் அதைக் கடைசி முறையாக உற்று நோக்கினுன். தன் ஆருயிர்த் தலைவரின் உடலைக் கடைசியாய்த் தரிசித்து நின்ற அந்த இளஞ் சிங்கமும் ஒரு வாரத்திற்குப் பின்னுல் வீர சுவர்க்கம் அடையப் போகிறது என்று ஜனங்களில் எவர்தான் எண்ணியிருக்கக்கூடும்? கிரிபித்தின் பிரேத ஊர்வலத்தில் கலந்துகொண்ட நகர மக்கள், வெகு சீக்கிரத்தில் காலின்ஸின் பிரேத ஊர்வலமே நடக்கும் என்பதை எப்படி அறிந்திருக்க முடியும்?

ஆகஸ்டு மாதம் 20-ந் தேதி காலை காலின்ஸ் லிமெரிக்கிலுள்ள படைவீடுகளைப் பார்வையிடுவதற்காக டப்ளினிலிருந்து புறப்பட்டான். அவனுக்குப் பாதுகாப்பாளராக ஸீன் ஒகானலின் தலைமையின் கீழ்ப் பதினைன்கு சிப்பாய்கள் கவசம் பூண்ட கார் ஒன்றில் பின் தொடர்ந்து சென்றனர். உடல் நலமின்மையால் காலின்ஸ் உற்சாக

யின்றிக் காணப்பட்டான். வழியெங்கும் தொண்டர்களுடைய பூசல்களால் அழிக்கப்பட்டிருந்த இடங்களைப் பார்த்தபொழுது அவன் உள்ளம் உளைந்தது. அன்று நண்பகலில் அவன் லிமெரிக்கை அடைந்தான். அங்குள்ள படைகளைப் பார்த்துவிட்டு, அவன் மல்லோவின் வழியாகக் கெர்ரிப் பகுதியிலுள்ள படைகளைப் பார்வையிடச் சென்றான். அப்பகுதியில் எதிர்க் கட்சித் தொண்டர்கள் ஆயுதம் தாங்கிக் கூட்டங் கூட்டமாக அலைவது வழக்கம். ஆனால் காலின்ஸின் காரை எந்தக் கூட்டமும் சந்திக்கக் காணோம்.

மல்லோவிலிருந்து காலின்ஸும் அவன் பாதுகாப்பாளரும் இரவு 8-30 மணிக்கு கார்க் நகரை அடைந்து இம்பீரியல் விடுதியில் இறங்கினர். அவ்விடத்திலுள்ள படைகளின் தலைவனான ஜெனரல் டால்டன் திடீரென்று முன்னறிவிப்பின்றிக் காலின்ஸ் விஜயம் செய்ததைக் குறித்து வியப்படைந்தான். கார்க் நகர மக்கள் காலின்ஸின் முகத்தை ஒரு முறையாவது கண்டு களிக்கவேண்டும் என்று விடுதியண்டை குழுமி நின்றனர். அந்தப் பகுதியில் பார்க்கவேண்டிய வேலைகளுக்காகக் காலின்ஸ் அன்றும் மறுதினமும் அங்கேயே தங்கினான்.

22-ம் தேதி காலையில் அங்கிருந்து அவன் மீண்டும் பிரயாணமானான். அவனுக்கு முன்னால் மோட்டார் சைக்கிளில் ஒரு தளகர்த்தன் சென்றான். வழியில் நேரக்கூடிய அபாயங்களை முன்கூட்டி அறிந்து விலக்கவே அவன் சென்றான். அவனுக்குப் பின்னால் படைவீரரும் தளகர்த்தர்களுமாகப் பன்னிரண்டு பேர் துப்பாக்கிகள் தாங்கி ஒரு காரில் சென்றனர். மூன்றாவதாகக் காலின்ஸின் கார் சென்றது. அதன் முன்புறத்தில் இரண்டு

டிரைவர்களும், பின்புறமுள்ள ஆசனத்தில் காலின்ஸும் ஜெனரல் டால்டனும் அமர்ந்திருந்தனர். அந்தக் காருக்குப் பின்னல் கவசம் பூண்ட கார் சென்றது.

ரஸ்தாக்களில் பல சேதங்கள் ஏற்பட்டிருந்ததாலும், பல பாலங்கள் உடைக்கப்பட்டிருந்ததாலும், பிரயாணம் செய்வது கஷ்டமாயிருந்தது. குளோனகில்டியிலிருந்து மூன்று மைல்களுக்கு அப்பால் பெரிய மரக்கட்டைகளால் வழி அடைக்கப்பட்டிருந்தது. கட்டைகளை அப்புறப் படுத்த அரை மணி நேரமாயிற்று. காலின்ஸ் எந்த வேலையையும் எக்காலத்திலும் இழிவாகக் கருதுவது வழக்கமில்லை யாதலால், அவனும் கோடரியும் ரம்பமும் ஏந்தி, கட்டைகளை அறுத்து வெளியேற்ற உதவி செய்தான். பின்னல் கார்கள் மீண்டும் புறப்பட்டன. குளோனகில்டியை அடைந்தபின், காலின்ஸ் அங்குள்ள படைத் தலைவனையும் நண்பர்களையும் கண்டு பேசினன். அது அவன் சொந்த நகரமாதலால், மிகுந்த உற்சாகத்துடன் நண்பர்கள் அவனுடன் கூடிக் குலாவினர். நகர மக்கள் அனைவரும் அவனை வரவேற்று உபசரித்தனர்.

குளோனகில்டியிலிருந்து மூன்று மைல்களுக்கு அப்பாலுள்ள கிராமத்தில் காலின்ஸ் தன் சகோதரன் ஸீனை யும் சந்தித்தான். இந்தச் சுற்றுப் பிரயாணத்தில் அவனுடைய உறவினர் பலரும் அவனைக் காணும் பேறு பெற்றனர். ஆனல், அதுவே அவனைக் கடைசி முறையாக அவர்கள் பார்த்ததாகும்.

வழியில் எல்லா நகரங்களிலும் காலின்ஸ் மிகுந்த உவகையுடன் வரவேற்று உபசரிக்கப்பட்டான். ரோஸ் கார்பெர்ரியில் பட்டாளத் தளகர்த்தருள் ஒருவன் அவனைக் கண்டு, அப்பகுதியில் எதிர்க்கட்சித்தொண்டர்கள் அதிக

மாய் நடமாடுவதாயும், அவன் அழைத்துச் செல்லும் உதவிப் படை சிறிதாயிருப்பதாயும் எச்சரிக்கை செய்தான். காலின்ஸ் சிரித்துக்கொண்டு, 'நீங்கள் செல்லக் கூடிய இடத்தில் நாங்களும் செல்லலாம்!' என்று கூறிச் சென்ருன்.

பாண்டன் நகரைக் காலின்ஸ் கடந்து செல்லும் பொழுது இரவு ஏழு மணிக்கு மேலாயிற்று. கதிரவன் ஒளி மறைந்தது. காலின்ஸ் பக்கத்திலிருந்த டால்டனிடம் பேசிக்கொண்டிருந்த பொழுது, 'என் சொந்தத் தாலுகாவில் வைத்தே என்னைத் தாக்குவார்கள் என்று நான் நம்பவில்லை!' என்று வேடிக்கையாகக் கூறிஞன். யந்திரத் துப்பாக்கிகளையுடைய காரிலிருந்து 50-கஜத்துக்கு முன்னல் மோட்டார் சைக்கிளும், அதே தூரத்துக்குப் பின்னல் காலின்ஸின் காரும் சென்றுகொண்டிருந்தன. கவசம் பூண்ட காரும் தொடர்ந்து சென்றது. வழியில் இரு பக்கத்திலும் குன்றுகள் அடர்ந்திருந்தன. இடையில் ஓர் ஓடை காணப்பட்டது. அதற்கு அடுத்தாற் போல் செங்குத்தான குன்றம் ஒன்று இருந்தது.

அக்குன்றின் அருகே காலின்ஸின் கார் ஒரு ரஸ்தாவில் திரும்பும்பொழுது, திடீரென்று அவனுக்கு முன்னல் சென்றுகொண்டிருந்த காரிலிருந்து யந்திரத் துப்பாக்கிகள் குண்டுகளை உமிழ்ந்தன. ரஸ்தாவில் குண்டுகளின் ஓசை செவியைத் துளைத்தது. ஜெனரல் டால்டன் டிரைவரைப் பார்த்து, 'காரை வேகமாய் ஓட்டு!' என்று உத்தரவிட்டார். ஆனல் காலின்ஸ், 'காரை நிறுத்தி வெளியேறுங்கள்! நாம் அவர்களோடு போராடுவோம்!' என்று கூறி வெளியே குதித்தான். மற்றவர்களும் கீழே இறங்கினர். அவர்கள் யாவரும் அருகே

யிருந்த மண் கரைக்குப் பின்னால் மறைந்து கொண்டனர். கவசம் பூண்ட காரிலிருந்தும் மறைந்து நின்ற எதிரிகள் மேல் ஏராளமான குண்டுகள் சுடப்பட்டன. சிறிது நேரத்தில் அதிலுள்ள யந்திரத் துப்பாக்கியில் ஏதோ கோளாறு ஏற்பட்டது.

ஜெனரல் டால்டனும் மற்றையோரும் பகைவரைப் பார்த்துச் சுட்டனர். அவர்கள் இருந்த இடத்திற்குச் சுமார் 60-கஜ தூரத்தில் சிப்பாய்களும் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவந்தனர். சுமார் 20 நிமிஷ நேரம் போர் நடந்தது. பின்னர் எதிரிகள் சுடுவதை நிறுத்தினர். காலின்ஸ் கவசம் பூண்ட காரின் அருகே சென்று பகைவர்கள் இருந்த இடத்தைக் கவனித்துப் பார்த்தான்.

அங்கிருந்துகொண்டு அவனும் இடைவிடாமலேயே சுட்டான். எதிரிகள் ரஸ்தாவில் ஓடுவதைக் கண்டு, அவன் "தோழர்களே, வாருங்கள்! பகைவர்கள் இதோ ஓடுகின்றனர்!" என்று கூவினான். பின்னர், அவன் அங்கிருந்து பதினைந்து கஜ தூரத்திற்கு அப்பால் சென்று, எதிரிகளைப் பார்த்துச் சுட்டான். டால்டன், டோலன், ஒகானல் முதலியோரும் ரஸ்தாவில் நின்று சுட்டனர். அந்நிலையில் காலின்ஸின் துப்பாக்கி திடீரென்று சுடாது நின்றது. 'டால்டன்!' என்று ஒரு சப்தமும் கேட்டது. நண்பர்கள் ஓடிச்சென்று பார்க்கையில், அவர்களுடைய சேனைபதி, கையில் பிடித்த துப்பாக்கியுடன், அசைவற்றுக் கீழே கிடப்பதைக் கண்டனர். அவன் மண்டை ஓட்டின் அடிப்பாகத்தில், வலது காதுக்குப் பின்னால், ஒரு பெரிய காயத்திலிருந்து செந்நிறச் சோரி பொழிந்து கொண்டிருந்தது. அவன் நிலை அபாயகரமாயிருந்ததை

யும் அவனால் பேசக்கூட இயலாதிருந்ததையும் கண்டு தோழர்கள் திடுக்கிட்டு ஏங்கினர். அக்காட்டு வழியில் அவனுக்கு என்ன சிகிச்சை செய்ய முடியுமோ அதை டால்டன் செய்தார். காயம் கட்டப்படும் பொழுதே, காலின்ஸின் மூச்சு நின்று, கண்கள் முகிழ்த்தன. மரணத்தின் சாந்தம் அவன் முகத்தில் பொலிந்தது. அயர்லாந்தின் விடுதலை வீரனின் சடலம், நடுரஸ்தாவில், கவசம் பூண்ட காருக்குப் பின்னால் கிடந்தது. உயிரினும் இனிமையாக அவனை நேசித்த அன்பர்கள் சிலர் அதைச் சூழ்ந்து நின்று பெருக்கிய கண்ணீர், அவன் தேசத்திற்காகப் பெருக்கிய உதிரத்தோடு கலந்து பாய்ந்தது. பின்னர் அவனுடைய உடல் நள்ளிரவில் கார்க் நகருக்குக் கொண்டு செல்லப்பட்டது.

மறுநாள் நாட்டு மக்கள் அனைவரும் தங்கள் வீரன் பிரிந்து சென்றதைக் கேட்டுக் கரையற்ற துயரக்கடலில் ஆழ்ந்தனர். டப்ளின் நகருக்கு அவனுடைய பிரேதம் கொண்டுவரப்பட்டுப் பல்லாயிரம் மக்கள் அதற்கு மரியாதை செய்தனர். இருபதாம் நூற்றாண்டில் எந்த ஐரிஷ்காரனுக்கும் அவ்வளவு மரியாதையும் அன்பும் காட்டப்படவேயில்லை.

காலின்ஸ் முன்னால் இடைவிடாது செய்துவந்த பெருமுயற்சியால் ஐரிஷ் அரசாங்கம் பின்னர் நிலைபெற்றுப் பணியாற்ற முடிந்தது. ஒரு பெரும் புரட்சிக்குத் தலைமை வகித்து நடத்தி, அடிமைச் சின்னங்களை அழித்து, உண்மையான கெயிலிக் அயர்லாந்தில் சுதந்திரக் கோயிலைக் கட்டி நிறுத்திய பெருமையில் அவனுக்கு மிகுந்த பங்குண்டு. அந்தப் புனிதமான கோயிலை எந்த அந்நியப் பகைவரும் அண்டவிடாதபடி, அன்றுமுதல் இன்றுவரை தீரர் டிவேலரா பாதுகாத்து

வருகிறார். இவர்கள் இருவருடைய வாழ்க்கையையும் பார்க்கும்போது, தேசத்திற்காக இறந்து-வாழ்வது மேலா, அல்லது இருந்து-வாழ்வது மேலா என்பதை நிர்ணயிப்பது கஷ்டமாயிருக்கிறது.

இந்தியாவில் சுயராஜ்ய மாளிகையை நிறுவும்போது அதன் அஸ்திவாரங்களில் தோண்டிப் பார்த்தால், எண்ணற்ற தியாகிகளின் எலும்புகளைக் காணலாம் என்று பண்டித மோதிலால் நேரு கர்ஜித்தார். அதற்கு ஏற்றாற்போலவே, காலின்ஸின் அஸ்திகள் ஐரிஷ் சுதந்திர மாளிகையின் அடிவாரத்தில் போய்ச் சேர்ந்து விட்டன.

இன்று அயர்லாந்து விடுதலையடைந்து வாழ்கின்றது! ஆனால் காலின்ஸை அங்கு காணவில்லை. 'மைக்கேல் காலின்ஸை இழந்த அயர்லாந்தில் மலர்கள் எப்படி மலர்கின்றன? இன்னிசைக் குரலில் பறவைகள் எவ்வாறு பாடுகின்றன?' என்று தேசத் தொண்டர்கள் துயருறுவார்கள். ஆனால், காலின்ஸ் போன்ற தேசபக்தர்களும் வீரர்களும் உண்மையில் மறைந்தொழியவே முடியாது; காலின்ஸ் மறையவில்லை; அவன் அழியாச் சுடர்!



கார்க் நகரம்

யுவதி

*

'ஆர்வி'

அறிவு ஒரு பக்கமும் அன்பு ஒரு பக்கமும், கருத்து ஒரு பக்கமும் காதல் ஒரு பக்கமுமாக அமுக்க அவதிப் படும் இரு உள்ளங்களின் வேதனையில் விரியும் நவீனம் இது. வெவ்வேறு தந்திகளில் பேசும் பாத்திரங் களைக்கொண்டு வாழ்க்கையில் உள்ள ருசி பேதங்களை யும் அவற்றின் ரஸானுபவங்களையும் சுவைபட விளக் கும் சிருஷ்டி இது. தங்கம்மாளுக்கும் ராமசேஷை யருக்கும் சுந்தரம் எப்படி வாய்த்தானோ அப்படியே அஞ்சலைக்கும் கண்ணப்பனுக்கும் காவேரி வந்து வாய்த்தாள். சாதாரணமான காவேரியும் சுந்தரமும் அந்த முரண்பாடான அமைப்பைக் கடக்கும்போது தான் கதையின் பிருவும் கட்டுக்கோப்பும் வாசகர் களை மெய்ம்மறக்கச் செய்கின்றன. நடையில் அமைதி யும் அழகும், தெளிவும் ஓட்டமும் கலந்து கதையை ரஸ மயமாக்குகின்றன ; புரட்சிகரமான மனநிலை அமைதியான வாழ்க்கையை இழுத்துச்சென்று அலங் கோலப்படுத்துகிறது. ஏறக்குறைய 500 பக்கங்கள்.

விலை ரூ. 5 8 0

தமிழ்ச் சுடர் நிலையம்

சென்னை-5.